
# மருத்துவ நோக்கில்
# சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்



கலாநிதி பொன்.இராமநாதன்.

# மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்.

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ மாணவருக்கான

துணைப்பாடநூல்

கலாநிதிப்பட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின்

சில பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

**கலாநிதி பொன் இராமநாதன்** M.D,Ph.D

சிரேஷ்ட விரிவுரையாளர்

சித்தமருத்துவத்துறை

யாழ். பல்கலைக்கழகம்

கைதடி.

**2009**

நூற்பெயர்: **மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்.**

ஆசிரியர்: கலாநிதி பொன் இராமநாதன் M.D,Ph.D


பதிப்பு: முதலாம் பதிப்பு, மாசி 2009

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

அச்சகம் : ஸ்ரீ சாயி ஒவ்செற் பிறிண்டேர்ஸ், கோண்டாவில்
யாழ்ப்பாணம்
ஸ்ரீலங்கா.

நூல் கிடைக்கும் இடம் : நூலாசிரியர்
"கனகதாரா" தாவடிச் சந்தி,
கொக்குவில்
யாழ்ப்பாணம்
ஸ்ரீலங்கா.

விலை ரூபா: 400/=



## அன்புக் காணிக்கை

எனது இந்நூல் ஆய்வுப்பணிக்கு ஆதாரமாக இருந்து என்னை வழிநடத்திய முன்நாள் பேராசிரியரும் இருமுறை முனைவர் பட்டம் பெற்றவரும், சித்தர்கள் பற்றி அனேக நூல்கள் எழுதியவரும் ஒரு சிறந்த சித்தமருத்துவருமான என் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய **தமிழகத்தின் பேராசிரியர் முனைவர் இரா. மாணிக்கவாசகம் ஐயா** அவர்களின் பாதங்கட்கு இந்நூலை வணக்கத்துடன் காணிக்கையாக்குகின்றேன்.

මගේ අංකය
எமது இல.
*My Number*

ඔබේ අංකය
உமது இல.
*Your Number*

දුරකථන යාපනය
தொலைபேசி: யாழ்ப்பாணம்
*Telephone : Jaffna* 2483 2006

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

තැ.පෙ. අංකය 57,
තිරුනෙල්වේලි
යාපනය.

த.பெ. எண் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

*P.O. Box 57,*
*Thirunelvely*
*Jaffna.*

## துணைவேந்தரின் அணிந்துரை

மனித சமூகங்கள் அனைத்தும் தம் வாழ்வியல் அனுபவங்கள், உலக கண்ணோட்டங்கள் ஆகியவற்றின் மரபுசார்ந்த வழக்காறுகளின் வழி பேணிவருகின்றன.

மரபுவழி மருத்துவ முறைகளின் தொடர்ச்சியும் அவைசார்ந்த அகவய (emic) புரிதல்களும் இவ்வாறே நிலை பெறுகின்றன.

இனக்குழும மருத்துவமாக (ethno medicine) இன்றைய மனுடவியல் இம்மருத்துவ மரபுகளின் தனித்துவங்களை இன்று ஆழ ஆராய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் தமிழர்களின் மருத்துவமரபாக சித்தர்களின் அறிவுத்திரளும் அதனோடிணைந்த சைவசித்தாந்த அறிவியல் கொள்கைகளும் விளங்குகின்றன.

காலனித்துவ - பின்னைக் காலனித்துவ - உலகமயமாக்க அலைகளிடை சுதேச மரபுகள் சாந்த மருத்துவ, அறிவியல் உண்மைகள் பின்தள்ளப்படும் காலத்து எங்கள் சித்தமருத்துவத்துறை கலாநிதி பொ.இராமநாதன் அவர்களின் 'மருத்துவ நோக்கில் சித்தர்கள் தத்துவ சிந்தனைகள்' என்ற நூலின் வரவு பெருமகிழ்ச்சி தருகின்றது.

சுதேச மருத்துவ பாரம்பரியத்தின் வழிவந்த இராமநாதன் அவர்கள், வரன்முறையான பட்டம் பெற்று எங்கள் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகி, துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுபவர். சிறந்த தன் ஆய்வின் வழி சித்தமருத்துவதுறையின் கலாநிதியாக பெருமை சேர்ப்பவர்.

சுய பண்பாட்டு மேன்மைகளை உணர்த்துவதுடன் இனக் குழும மருத்துவ துறைசார்ந்த ஆய்வுகளைச் செழுமைப்படுத்துதலிலும் இந்நூல் பெருந்துணையாகும்.

மென்மேலும் பல அறிவுக்கனிகளை கலாநிதி இராமநாதன் அவர்கள் சமூகத்துக்காக என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர்.நா.சண்முகலிங்கம்**
துணைவேந்தர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
05.02.2009

## நூலாசிரியர் அறிமுகம் .....

திரு.க.தேவராசா
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைநெறி,
வணிகபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

இன்றைய உலகில் மேலைத்தேய வைத்திய முறைகள் மட்டுமல்லாது சித்தமருத்துவமும் பெரிதும் பயன்படுத்தப்படும் மருத்துவ முறையாகவும் பிரபலம் பெற்று விளங்கும் என ஒரு கொள்ளப்படுகின்றது. பெருமளவு மக்கள் சித்தமருத்துவத்தை பயன்படுத்தி வருவது மட்டுமன்றி மேலைத்தேய வைத்திய முறைகளால் குணமாக்க முடியாத நோய்களைக்கூட சித்தவைத்தியத்தால் குணமாக்கி வருவதனையும் நடைமுறையில் காணமுடிகின்றது. இதன் காரணமாக இலங்கையில் சித்தமருத்துவம் பிரபலம் பெற்று விளங்குவதுடன் அது தொடர்பான பட்டத்தை வழங்க சித்தமருத்துத்துறை பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டிருப்பதனையும் காணமுடிகின்றது. அத்தகைய பட்டதாரிகளின் தேவைகளையும், பரம்பரையாக வைத்திய துறைகளில் ஈடுபட்டு வருவோர்களது தேவைகளையும் சமகாலத்தில் நிறைவு செய்ய வசதியாக எழுதப்பட்டதே வைத்தியக் கலாநிதி பொன். இராமநாதன் அவர்களால் எழுதப்பட்ட ''மருத்துநோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்'' என்ற இந்நூலாகும்.

நூலாசிரியர் வைத்தியக் கலாநிதி பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சித்தமருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து பல்கலைக்கழக மட்டத்தில் சித்தமருத்துவத்தைப் போதிப்பது மட்டுமன்றி அதனைச் செய்முறையில் பரீட்சித்துவரும் பிரபலமான வைத்தியர் ஆவார். எனது உறவினரும் ஊரவருமான வைத்தியக் கலாநிதி. இராமநாதன் அவர்களைச் சிறுவயதில் இருந்தே நான் நன்கறிவேன். எமது ஊரின் பிரபல வைத்தியராகத் திகழ்ந்த அவரது தந்தையான

திரு.பொன்னம்பலம் அவர்களின் "பரமு வைத்தியர்" என்ற செல்லப்பெயருடன் சித்தமருத்துவத்துறையில் புகழ்பெற்று விளங்கியவர் ஆவார். எமது ஊரவர்கள் எல்லோரும் எத்தகைய நோய்களுக்கும் அவரையே நாடி சிகிச்சை பெற்று குணமாகியதனை நான் நன்கறிவேன். நாடி பிடித்து வைத்தியத் பார்ப்பதில் அவருக்கு நிகராக எவரும் இல்லை என்று எனது தந்தை அடிக்கடி கூறுவதையும் நான் கேட்டிருக்கிறேன். அவரது பரம்பரையின் வைத்தித் தோன்றலான வைத்தியக் கலாநிதி பொன். இராமநாதன் அவர்களும் சித்தவைத்தியத்தில் தனக்கென தனியிடம் பெற்றுக்கொண்டவராவார். அவரை நாடி பலர் தமது தீராத நோய்களையும் சித்தமருத்துமுறை மூலம் குணமாக்கி வருவதனையும் நான் கண்டிருக்கிறேன். அவரது ஏனைய இரு சகோதரர்களும் மேலைத்தேய வைத்திய நிபுணர்களாக மாறி இலண்டனில் சேவையாற்றும் பொழுது வைத்தியக் கலாநிதி இராமநாதன் சித்தமருத்துவத்தில் ஆளுமை கொண்ட வைத்தியராக தொடர்ந்தும் எமது பிரதேசத்திலிருந்து சேவையாற்றி வருவது பாராட்டுக்குரியதாகும்.

வைத்தியக் கலாநிதி இராமநாதன் அவர்கள் கொழும்பு அரச ஆயுள்வேத மருத்துக்கல்லூரியில் கல்விகற்று பின்னர் யாழ்ப்பாண லங்கா சித்தஆயுள்வேதக் கல்லூரியில் விரிவுரையாளராகக் பணியாற்றியவர் ஆவார். அத்துடன் இருபது வருடங்களாக ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தராக கடமையாற்றி பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை திறம்பட ஆற்றிய அனுபவமுடையவர் ஆவார். பின்னர் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவதுறையில் இணைந்து இன்று சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றிவருகின்றார். சித்தமருத்துவத்துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் விரல்விட்டு எண்ணக்கூடிய சித்தவைத்தியர்களில் ஒருவர் எனக்கூறினால் அது மிகையாகாது.

பழகுவதற்கு மிக இனிமையான வைத்தியக் கலாநிதி இராமநாதன் அவர்கள் மாணவ பரம்பரையால் நேசிக்கப்படுபவர் மட்டுமன்றி அர்ப்பணிப்பான சேவையினால் எமது கிராம மக்களின்

நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர் என்பதை உறுதிபட என்னால் கூறிவிட முடியும். அவர் பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் மருத்துவத்துறையில் ஓய்வு பெறமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனையோரும் சித்தமருத்துவத்தைக் கற்றுக்கொள்ள வசதியாக மேலும் பல நூல்களை ஆக்கும் பணியும் அவருடையதேயாகும். இந்தவகையில் சித்தமருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு தமது பரம்பரையையே அர்ப்பணித்து அரும்பாடுபட்டுவரும் வைத்தியக் கலாநிதி இராமநாதன் அவர்களின் சேவை எமது பிரதேச மக்களுக்கு நீண்டகாலம் கிடைக்க எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் உடல் ஆரோக்கியத்தையும் வழங்கவேண்டுமென இறைஞ்சி எனது பாராட்டுக்களையும் உளங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.க.தேவராசா
05.02.2009

# முகவுரை

"மருத்துவ நோக்கில் சித்தர்களும், தத்துவ சிந்தனைகளும்" என்னும் இன்நூலில் காணப்படும் மருத்துவம் தொடர்பான கட்டுரைகள் யாவும் எனது கலாநிதிப் பட்ட ஆய்விற்காக எழுதப்பட்ட " சித்தர்களும் சித்த மருத்துவமும்" என்ற ஆய்வேட்டின் ஒரு பகுதியாகும்.

இன்நூலின் கண் இடம்பெற்றுள்ள விடையங்கள் யாவும் சித்த மருத்துவம் சார்ந்த ஆய்வாளர்களுக்கும், சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கும், பெரிதும் உபயோகமாக இருக்கும். இங்கு இருபகுதிகளாகப் பகுத்து இன் நூல் விடையங்களை ஆராய்கின்றது. முதலாவது பகுதியில் சித்தர்கள் ஓர் அறிமுகம் என்னும் தலைப்பில் ஐந்து பிரிவுகள் அமைந்துள்ளன. தமிழகச் சித்தர்களின் சிறப்பம்சங்களுடன் குறிப்பாக ஈழத்துச்சித்தர்கள் பற்றிய சிறப்புக்களும் இங்கு விரிவாக தரப்பட்டுள்ளது.

இந்த நூலின் இரண்டாவது பகுதியில் சித்தர்களது தத்துவ சிந்தனைகள் பலவும் சித்தமருத்துவ அடிப்படைகளை வைத்து ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் காயகற்பம், முப்பு, இரசவாதம், போன்ற புதிய விடயங்களை எடுத்து அவற்றினை சித்தர்களது அணுகுமுறைகளில் வைத்து அறிவியல் பூர்வமாக விளக்கப் பட்டுள்ளன.

மேலும் சித்தமருத்துவர்கள் எப்படி மருத்துவத் தொழிலுக்கு தம்மை தயார்ப்படுத்துதல், ஆன்மீகப்பயிற்சி பெறுதல், மருத்துவர்களுக்குரிய இலக்கணங்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல் என்பனவும் இந் நூலில் முக்கிய விடயங்களாகத் தரப்பட்டுள்ளன. சித்தர்களது பிண்ட உற்பத்திக் கொள்கையும், நாடிபரிசோதிக்கும் முறைகள் பற்றியும், முடிந்தளவு விஞ்ஞான பூர்வமாக விளக்கங் களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நவீன முறைகளுக்கேற்ப ஆராயப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறையிலே கல்வி பயிலும் மாணவர்களுக்கு “ சித்த மருத்துவ மூலதத்துவம்” ஒரு பாட நெறியாக உள்ளது. அப்பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள எல்லா விடயங்களையும் ஓரளவு இன்நூலில் ஆராய்ந்து விளக்கப்பட்டள்ளன. இவற்றிலே சித்தர்கள் சூக்குமமாக மறைமொழியில் கூறிய விடயங்கள் யாவும் அறிவியல் ரீதியாக ஆராயப்பட்டு விளக்கம் தர முயன்றுள்ளேன்.

அடுத்ததாக நன்றி நவிலல் எனும் பண்புக்கேற்ப என்னை இந் நூலினை உருவாக்குவதற்கு உதவிய எல்லாம்வல்ல திருவருளைப் போற்றுகின்றேன். தமது மிகையான வேலைப்பழுவிற்கு மத்தியிலும் என்னையும் கௌரவித்து வாழ்த்துரைதந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ந.சண்முகலிங்கம் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முகாமைத்துவ வணிக பீடாதிபதி திரு.க.தேவராஜா அவர்களும் இந் நூலிற்கு அறிமுகவுரையை வழங்கி என்னை ஊக்கப் படுத்தியுள்ளார். அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

இன்நூலினை திருத்தமாக அச்சிட்டு உதவிய ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் ஸ்தாபனத்தார்க்கும், கணனியில் அச்சுப்பதிவு செய்து உதவிய செல்வி க. சாயினி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றிற்கும் கருணை செய்யும் பரம்பொருளை வணங்கி அமைகிறேன்.

**கலாநிதி பொன்.இராமநாதன்.**
“கனகதாரா”
தாவடிச் சந்தி
கொக்குவில்.
சிறீலங்கா.

# பொருளடக்கம்

## மருத்துவ நோக்கில் சித்தர்களும் தத்துவ சிந்தனைகளும்


பக்கம்

துணைவேந்தரின் அணிந்துரை iv

நூலாசிரியர் அறிமுகம் vi

முகவுரை ix

பொருளடக்கம் xi

## பகுதி 1

சித்தர்கள் ஓர் அறிமுகம்

1.1. சித்தர்கள் 01

1.2. சித்தர்களின் பிரிவுகள் 15

1.3. சித்தர்கள் காலம் 16

1.4. பதினெண் சித்தர்கள் 31

1.5. சித்தர்களின் சிறப்பியல்புகள் 37

(அ) அட்டாங்க யோகம்

(ஆ) அட்டமா சித்து 43

1.6. ஈழத்துச் சித்தர்கள் 49

## பகுதி 2

தத்துவ சிந்தனைகள்

2.1 தத்துவ அறிவும் மருத்துவமும் 51

2.2. சித்தாந்த அளவையும் சித்தமருத்துவமும் 56

2.3. இந்திய தத்துவங்கள் 68

| | | |
|---|---|---|
| 2.4. | தொண்ணூற்றாறு தத்துவங்கள் | 82 |
| 2.5. | ஐம்பூதக்கொள்கை | 88 |
| 2.6. | (அ) அண்டமும் பிண்டமும் | 95 |
| | (ஆ) தேகம் ஐம்பூதக்கூறு | 99 |
| 2.7. | ஆறு ஆதாரங்கள் | 102 |
| 2.8. | பிராணாயாமமும் நரம்புமண்டலமும் | 114 |
| 2.9. | சித்தர்களின் கூர்ப்புக்கொள்கை | 134 |
| | அ. பரிணாம வளர்ச்சி | 138 |
| | ஆ. நால்வகைப் பிறப்பு | 139 |
| | இ. ஏழுவகைத் தோற்றம் | 139 |
| 2.10. | சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் | 141 |
| | உண்மையும் அணுக்கொள்கையும் | |
| 2.11. | முத்தொழிலில் சீவனும் சிவனும் | 162 |
| 2.12. | சித்தமருத்துவனின் இலக்கணம் | 168 |
| 2.13. | சித்தர்களின் பிண்டஉற்பத்திக் கொள்கை | 180 |
| 2.14. | சித்தர்களின் மணிமகுடமாகிய முப்பு | 201 |
| 2.15. | சித்தர்களின் இரசவாதக்கொள்கை | 209 |
| 2.16. | சித்தர்களின் காயகற்ப முறைகள் | 217 |
| 2.17. | எண்வகைத் தேர்வுகளில் ஒன்றான நாடி பாாத்தல் | 221 |
| 2.18. | சித்தர்கள் கூறும் நாடி பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் | 242 |

# பகுதி 1

## 1.1 சித்தர்கள்

நன்நெறியில் ஒழுகும் மேலோரை இரு பிரிவினராகப் பகுக்கலாம். சான்றோர் என்பர் ஒரு சாரார். பேரறிவாளர் என்பர் இன்னொரு சாரார். அறவோர் - அந்தணர் என்போர் முதல் பிரிவைச் சார்ந்தவர்கள் என்றும், ரிஷி, முனி, சித்தர் ஆகிய மூவரும் இரண்டாம் பிரிவைச் சார்ந்தவர்கள் என்றும் பேராசிரியர் இரா.மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார்.

**அறவோர் (அறம் செய்பவர்கள்)**

அறம் என்ற சொல்லுக்கு வள்ளுவர்

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

ஒருவன் தன் மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே. மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மையுடையவை என்றும்

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்காறு இயன்றது அறம்"

என விளக்கம் தருகிறார்.

இம்மை, மறுமை ஆகிய இன்பங்களைக் கொடுப்பதற்கு துணையாய பொறாமை, பேராசை, பெருங்கோபம், கடுஞ்சொல் ஆகிய இந்நான்கையும் நீக்குவதென்பது அறம் எனப் பொருளாகும்.

சைவக்கோயில்களில் நாட்பூசை முடிந்தபின் ஓதும் பஞ்சபுராணத்தின் இறுதியில் மங்களம் கூறுகையில் "வான்முகில் வழாது பெய்க" என்று தொடங்கி இறுதியில் "நான் மறை அறங்கள் ஓங்குக" என்று குறிப்பிடுவது நான்கு வேதங்கள் கூறும் பிரபஞ்ச அறத்துடன் பொதுவாகவுள்ள தானதர்மங்களையும் குறிக்குமெனலாம்.

நல்லறம் செய்வோர்க்குப் புண்ணியம் கிடைக்குமென்ற கருத்தை மணிமேகலையில்

"நல்லறம் செய்வோர் நல்லுலகடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகடைதலும்"

எனக்குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் அறவோன் என்னும் சொல் புத்தரைக் குறித்து வருகின்றதெனலாம். எனினும் நல்லறமாகிய இல்லற வழிநின்று அறம் பல ஆற்றுபவரே அறவோர் ஆவார் என்பது பொதுவாகப் புலனாகின்றது எனவும் இரா.மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார்.

**அந்தணர்**

அந்தணர் என்போர் எல்லா உயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகுவோர் எனப் பரிமேலழகர் குறிக்கின்றார்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்"

என்பது திருக்குறள். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் இயல்பு பெற்றதால் அந்தணர் என்போரும் அறவோராகக் கருதப்படுவர். எனினும் புறச்சமய நுல்களில் அந்தணர் வேறு எனக் கருதப்படுகின்றது. அந்தணர் துறவறம் பேணுபவர் அறவோர் இல்லறம் பேணுபவர் எனவும் கொள்ளலாம்.

எனவே ஆதியில் துறவோரைக் குறித்த அந்தணர் என்ற சொல் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைக் குறிக்கும் மரபு காலப்போக்கில் நுழைந்திருக்க வேண்டும். தமிழ் நூல்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், பின்னர் வந்த இலக்கியங்களிலும் பார்ப்பான், பார்ப்பார், பார்ப்பனன், பார்ப்பனமகளிர், பார்ப்பிணி போன்ற சொற்களே இடம் பெறுகின்றன.

எனவே அந்தணர் என்ற சொல் அக்காலத்தில் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரைக் குறிக்கவில்லை என்பது உறுதி. ஆதலின் அந்தணர் அறவோரின் வேறானவர் என்பது தெளிவு. இவர்கள் இருவரும் சான்றோர் எனும் பிரிவினுள் அடங்குவர்.

## ரிஷி, முனி, சித்தர்

இரண்டாம் பிரிவினைச் சேர்ந்த பேரறிவாளர்களில் மேற்கூறிய மூவரும் அடங்குவர். இவர்களைப்பற்றி சித்தர் பாடல்களில் பல குறிப்புகள் உள்ளன. அவற்றில் சில இங்கு தரப்பட்டுள்ளன.

"அரன்னகலை விட்டுநான் தட்சினத்தில் வந்து
அவையறிந்த கோடி சித்தர் முனி ரிஷிகள் பார்
பரந்த தொரு பொதிகைதனி லிருக்கும் போது
பாடினோம் வாதமொரு வயித்தியந்தான்"

-1 : அகத்தியர் குரு நூல் 80

"எண்ணிறைந்த ரிஷி சித்தர் முனிவர் தானும"

-110 : யாகோபு லோக செந்தூரம் 300

"வானனைய முனி தேவர்பாதம் போற்றி
வடிவான ரிஷிசித்தர் பாதம் போற்றி"

-1 : யூகிமுனி வாதம்

ரிஷி எனும் சொல் தமிழில் இருடி என வரும். இச்சொல் த்ர (Dhra) என்பதன் அடியாகப் பிறந்தது. சிந்தித்து அறிதல் என்பது இதன் பொருள். திருஷ்டி என்னும் சொல்லுக்கு இதுவே அடிச் சொல்லாகும். புதியனவற்றைக் கண்டுபிடிப்பவர்களுக்கு (அது கொள்கையாகவும் இருக்கலாம், பொருளாகவும் இருக்கலாம்) ரிஷி என்பது பொருள். Inventor என்னும் ஆங்கிலச்சொல் ஓரளவு இப்பொருளைக் குறிக்கின்றது.

ரிஷ் - இ எனப்பிரித்து வேதங்களைப் பற்றியும், உலகியலைப் பற்றியும் அறிவு பெற்றவர்கள் எனவும் பொருள் கூறுதல் கூடும். ரிஷ் என்பதற்கு பெறுதல் அல்லது அடைதல் (To obtain) என்பது பொருள் ஆகும்.

புவியீர்ப்பு ஆற்றலைச் சிந்தித்து அறிந்த நியூட்டன் ஒரு ரிஷி. வானொலியைச் சிந்தித்தறிந்த மார்க்கோனி ஒரு ரிஷி. ஆயுள்வேத மருத்துவத்தின் முன்னோடி எனக்கருதப்படும் தன்வந்திரி ஒரு ரிஷி. சித்த மருத்துவத்தின் முன்னோடி எனக்கருதப்படும் அகத்தியர் ஒரு ரிஷி.

அறிவியல் ரிஷிகளுக்கும் ஆன்மீக ரிஷிகளுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அறிவியல் ரிஷிகளின் கண்டுபிடிப்புக்களில் குறைகள் இருக்கலாம் அல்லது காலம் மாற கொள்கைகள் பயனற்றுப் போகலாம். ஆனால் ஆன்மீக ரிஷிகளான அகத்தியர், தன்வந்திரி போன்றவர்கள் சிந்தித்து அறிந்த மருத்துவ முறைகள் எந்தக் காலத்திலும் மாறுபாடு அடைவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**முனிவர்**

இச்சொல் "ம" என்பதன் அடியாகத் தோன்றியது. மன + அனி = முனி எனலாம். மனம் என்பதற்கு இச்சொல்லே அடியாகும். மனதிற்கு அன்னியமானவற்றை அகற்றியவர் என்பது இதன் பொருளாகும்.

முனி எனும் சொல் சினம் துன்பம் வெறுப்பு ஆகிய பொருட்களைக் குறிக்கின்றது.

"தெய்வமாலடவரை திருமுனியருள்"

எனும் இடத்தில் அகத்தியர் குறிக்கப்படுகின்றார்.

"பெருந்தவ முனிவா"

எனப் புத்தர் குறிக்கப்படுகின்றார்.

முனி, முனிவர் என்னும் சொற்கள் பண்டைய இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வெறுத்தல் என்ற பொருளைத் தரும் முனிதல் என்பதன் அடியே இம்முனி எனவும் கூறலாம். உலகியலுக்கு அடிமையாக்கும் உணர்வுகளை முனிந்தவர்கள் என்பது இச்சொல்லின் பொருள். மன் - உ - இ = முனி எனவும் பிரித்துப் பரம் பொருளைப் பற்றி அறிந்தவர்கள் எனவும் பொருள் கொள்ளுதல் கூடும். மன் என்பதற்கு அறிதல் அல்லது நினைத்தல் (To Think) என்பது பொருள்.

இவர்களைச் சமுதாய மறுமலர்ச்சியாளர்கள் எனக்கூறுதல்

பொருந்தும். ( Social Reformers) - என்னும் ஆங்கிலச் சொல் இவர்களைக் குறிப்பதாகும். சிந்திக்கும் உணர்வைத் தூண்டிப் புதிய சமுதாயத்துக்கு வழிகாட்டிய சாக்ரடீசும், காரல்மார்க்சும் கூட முனிவர்கள் எனப்படுவர் என இரா. மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார்.

பாரதம் பாடிய வியாசர் ஒரு முனி. யோக நூல் இயற்றிய பதஞ்சலி ஒரு முனி எனக் கொள்ளலாம். ரிஷிகள் புதியன கண்டு மக்கள் கூட்டத்துக்கு அறிமுகப்படுத்தும் தொண்டர்கள். முனிகள் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களில் காணும் குறைகளை நீக்கிக் களை எடுத்து நன்னெறிப்படுத்த முயலும் தொண்டர்கள் எனலாம்.

## சித்தர்

சித்தர் என்ற சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்கள் உண்டு.

I - சித்து என்ற சொல் சித்தம் என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். சித்து என்பது சித்தம், அறிவு, பூரணத்துவம், வெற்றியடைதல் முதலிய பொருள்களைக் குறிக்கும்.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய நான்கும் அந்தக்கரணங்களாகும். இவற்றில் **மனம்** ஒன்றை நினைக்கும், **புத்தி** நிச்சயிக்கும், **அகங்காரம்** முனைப்பைத் தோற்றுவிக்கும். **சித்தம்** இம் மூன்றுக்கும் காரணமாகும். அந்தக்கரணம் பற்றி

“மனம்புத்தி யகங்கார சித்தத்தாலே
வாரணமாய் நடத்திவைத்த கர்மத்தாலே
வந்ததடா நோயதுவு மனிதர்க்காமே”

என அகத்தியர் அனுபோக சூத்திரத்தில் கூறப்படுகின்றது.

இவற்றில் அசுத்த மாயையிலிருந்து தோன்றும் சித்தத்தினின்றே ஞானேந்திரியங்களான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியனவும், ஐம்புலன்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (தன்மாத்திரைகள்) ஆகியனவும் கர்மேந்திரியங்களான வாய், கை, கால், கருவாய், எருவாய் முதலிய தொழில் உறுப்புக்களும்

ஆகிய தத்துவங்கள் தோன்றி ஒடுங்குகின்றன. மேலும் சித்தத்தின் சலனமே அனைத்து தத்துவங்களின் தோற்றமாகும். ஆதலால சித்தத்தை வெல்லுதல் வேண்டும். பிராணவாயுவின் சலனம் சித்தத்தின் சலனத்தைப்பொறுத்தது. இவ் உண்மையை உணர்ந்தே சித்தர்கள் பிராணாயாமத்தை வலியுறுத்தினர். எனவே **பிராணாயாமத்தின் மூலம் பிராணனும் சித்தமும் ஒடுங்கிய நிலை சித்தர் நிலையாகும். இதுவே சிவநிலை எனலாம்.** திரையற்ற நீர் போல் சிந்தை தெளிந்த நிலை இது. இந்நிலையில் சித்தமும் இல்லை செயலும் இல்லை. இதனை மோன நிலை எனவும் கூறலாம். திருமூலர் இதனைச் செத்தார் நிலை எனக் குறிக்கின்றார்.

"சிந்தையிலே களங்கமற்றார் சித்தனாவான்"

- 50 அகத்தியர் குரு நூல் முப்பு 50.

"சிந்தை தெளிந்திருப்பவன் அவனே சித்தன்
செகமெல்லாம் சிவமற்றே யறிந்தோன் சித்தன்"

- 2 வான்மீகி சூத்திரம் 16.

"சிந்தையெனு மனம் புத்தி சித்த மூன்றும்
சிறந்ததிக ஆங்கார நாலும் போச்சே"

- 847, ஞான வெட்டியான் 1500.

"ஆச்சப்பா தத்துவத்தை யுணர்ந்தோன்"

- 108, அகத்தியர் தத்துவம்

மேற்குறிப்பட்ட நான்கு மேற்கோள்கள் மூலம் சித்தத்துக்கும் சித்துக்கும் உள்ள தொடர்பினைக் காணலாம்.

II - சித்தி என்ற சொல்லுக்கு அடைதல் என்பது பொருள். இதனைப் பேச்சு வழக்கில் "போன காரியம் சித்தியாச்சு" "சொன்னது சித்தியாச்சு" என்று கூறுவதனைக் காண்போம்.

"சீரி லுயரட்ட சித்தியாக்குஞ்
சித்திக்கு மே சிவன் செயலினால்" என வருவதும்
"குறியான சிவயோகம் சித்தயாச்சு"

என வருவதும் இலக்கிய வழக்காகும்.

எனவே பெறத்தக்க பேறு எனக் கருதப்படுகின்ற சாயுச்சிய நிலை கைவரப் பெறுதலே அல்லது அடையப் பெறுதலே - சித்தி எனவும், அதனைப் பெற்றவர் அல்லது அடைந்தவரே சித்தர் எனவும் கருதலாம்.

III - இறைவனைச் சத், சித், ஆனந்தம் எனக் குறிப்படுவர். சத் என்பது என்றும் உள்ளது (Reality), சித் என்பது பேரறிவு (Intelligence), ஆனந்தம் என்பது பேரின்பம் (Bliss). பேரறிவுப் பெரும் பொருளான இறைவனை உணர்த்தும் சித் என்ற சொல்லை அடிச்சொல்லாகக் கொண்டு சித்து - சித்தன் என்னும் சொற்கள் தோன்றியிருக்கலாம். ஆன்மாவும் அறிவுடையதே எனினும் அது தானாக அறியும் அறிவற்றது என்பர் சித்தாந்திகள். சூரியனுடைய ஒளியால் தான் சூரியனையே காணுதல் போல் இறையருள் உணர்த்த உணரும் அறிவே ஆன்மாவின் அறிவாகும். ஆதலின் இப்பேரறிவைப் பெறுவது சித்து எனவும் இவ்வறிவைப் பெற்றவன் சித்தன் எனவும் கூறலாம்.

IV - சித்தம் என்றால் தூய மனம் இதனைப் பின்வரும் பாடல்கள் மூலம் அறியலாம்.

"சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனே"

என்பது மணிவாசகர் அருளிய திருவெம்பாவையில் வருவது இதில் சித்தம் அழகியார் என்பது "துயமனமுடையவர்" எனக் கொள்ளலாம்.

"சித்த மலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன்"

என்பது திருவாசகத்தில் அச்சோப்பதிகத்தில் வருவது சித்த மலம் அறிவித்து என்பது மனத்தின் அழுக்கை அகற்றுதல் எனலாம்.

"சித்தத்திலுள்ளே சிவலிங்கம் காட்டி
சத்தத்திலுள்ளே சதாசிவம் காட்டி"

என்பது விநாயகர் அகவல் இதனில் சித்தத்தினுள்ளே என்பது தூய மனத்தினுள்ளே என்பது பொருளாகும்.

"தெய்வம் என்றதோர் சித்தமுண்டாகி"

என்பது போற்றித் திருஅகவலில் வருவது. ஞானம் என்பது சிற்றறிவினால் ஏற்படாது. பேரறிவினால் மட்டுமே ஏற்படும். ஞானத்தின்

உணர்வினால் அறிவதுதான் சித்தம். எனவே சித்தம் எனும் சொல் பலதிறம்பட்டவர்களாலும் எடுத்து இயம்பப்படுகின்றது.

V - சிவனுக்குச் சித்தன் என்ற பெயரும் உண்டு. சைவசமய நாயன்மார் நால்வருள் ஒருவரான சம்பந்தரால் பாடப்பெற்ற திருத்தலம் திருநிறையூர் சித்தீச்சுரம் என்று வழங்கப் பெறுகின்றது. அங்கு கோயில் கொண்ட சிவன் சித்தன் என்றே போற்றப் பெறுகின்றது. இதனைச் சம்பந்தர் தேவாரம் மூலம் அறியலாம்.

சேலம் மாவட்டத்தில் சித்தர்கள் வாழும் இடம் என்று கருதப்படும் கஞ்சர்மலையைச் சித்தர் கோயில் என்றும் இங்கிருக்கும் கோயிலின் சிவனைச் "**சித்தேஸ்வரன்**" என்றும் குறிக்கின்றனர். சமயம் என்ற எல்லைக்குள் நின்று சிவனைப் பாடிய பக்தர்கள் எனப்பட்டனர். சிவனைச் சித்தனாகக் கொண்டு சமய சார்பற்ற நிலையில் பாடியோர் சித்தர்கள் எனப்பட்டனர்.

இதுபற்றித் திருமூலர்

"சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தா சுத்தத்துடன் றோய்ந்தும் தோயாதவர்
மும்த ரம்முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சுத்தர் சதாசிவத் தன்மைய ராமே"

எனக் கூறுகிறார் சித்தர்கள் சிவத்தைக் கண்டவர்கள். சுத்த அசுத்த மாயைகளால் தீண்டப்பட்டாலும் எதனாலும் கறைபடாதவர்கள் (பற்றுக்களால் பற்றப்படாமல் வாழ்பவர்கள்) சீவன் முத்தர் என்ற நிலையில் உள்ளவர்கள்.

இவர்கள் சீவன்முத்தியைப் பிறர் அடைய வழிகாட்டிகளாக விளங்குபவர்கள். மூலாதாரத்தில் உள்ள குண்டலினியின் சக்தியை வசப்படுத்தியவர்களாதலால் சதாசிவத்தின் தன்மையில் இருப்பவர்களுமாகும்.

VI - சித்தி என்ற சொல்லுக்கு பேறு அடைதல் (நல்ல வாய்ப்பு அல்லது வெற்றி) எனப்பொருளும் உண்டு. சாதாரண வழக்கில்

பரீட்சைப் பெறுபேற்றில் சித்தியடைந்த மாணவர்கள் என்று கூறுவதைக் காணலாம். சித்தர்களைப் பொறுத்த வரையில் சிவப் பேறு அடைதல் எனப் பொருள்படும்.

VII - சித்தர்களே சித்தர்களைப்பற்றிக் குறிப்பட்டிருப்பதை இங்கு காணக்கூடியதாகவுள்ளது. எடுத்துக்காட்டாக

"பதமுத்தி மூன்றும் பழு தென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துறந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட்டாங்கே
திதமுற் றவர்கள் சிவ சித்தர் தாமே"

என்பது திருமந்திரம்.

நான்கு வகை முத்திகளில் சாலோபம், சாமீபம், சாரூபம் ஆகிய மூன்றும் பதமுத்தியென்றும், சாயுச்சியம் பரமுத்தி எனவும் கொள்ளலாம். ஞானபாதத்தின் மூலம் அடையும் சாயுச்சியமே சித்தியெனப்படும். இச்சித்தியை அடைந்தவரே சித்தர் ஆவர்.

சிவ சித்தர் என்ற குறிப்பில் சிவம் எனபதற்குச் செம்மை என்று பொருள். எனவே சிவ சித்தர் என்றால் செம்மை நிலையுற்றவர் அல்லது சாயுச்சியநிலை பெற்றவர் எனக் கருதலாம்.

"எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி
ஏகாமல் வாசனை யடித்தோன் சித்தன்"

இது சட்டை முனி தருகின்ற விளக்கம். வாசனை என்பது கர்ம வினையாகும். இதன் இயல்பானது பிறவிதோறும் தொடர்வது. இதனை எழும்பாமல் தடுப்பவன் ஞானி எனவும், ஏகாமலேயே தடுப்பவன் சித்தன் எனவும் குறிக்கின்றார்.

"சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்"

இது அகஸ்தியர் தரும் விளக்கம். இது சாஸ்திரம் சடங்குகளைக் கடந்தவன் எனப் பொருள்படும்.

இதேபோல் போகர் என்பவர் சித்தரைப் பற்றியும் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

“தானாக காயத்தை நிறுத்த வேண்டும்
சதாகாலம் சுக்கிலத்தைக் கட்டவேண்டும்
வேறான மும்மலத்தை யறுக்க வேண்டும்
வெளியான சிதா பாசம் நீக்க வேண்டும்
பானாக முச்சுடரை யறுக்க வேண்டும்
பாழான தூலமதை வெறுக்க வேண்டும்
மானான பராபரியை நிர்த்தனம் செய்து
மானிலத்தில் வாழ்பவனே சித்தனாமே”

வாலைப் பூசிப்பவன் சித்தன் என விளக்கம் தருகின்றனர். இதனை கொங்கணவர், கருவூரார் , சட்டைமுனி , இராமதேவர் முதலியோர் குறிப்பிடுகின்றனர்.

வாலை என்னும் சொல் இளம் பெண் என்னும் பொருளுடையது யோக மார்க்கத்தில் குண்டலினியை வாலையெனக் குறிப்பர். சித்தர்கள் வாலையைப் பூசிப்பவர்கள் என்றும் வாலையை எழுப்பி மதியமுதம் உண்டனர் என்றும் கூறலாம். இவ்விடத்தில் சித்தர்கள் குழுக்குறியாகவே வாலையைக் கையாண்டுள்ளனர்.

பண்டைய தமிழ் மருத்துவ வாகடங்களில் வாலை என்னும் சொல் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாண மருத்துவ நூலான சுதேச வைத்திய அவுடத்திரட்டு என்னும் நூலில் ஒரு மருந்துக்கு வாலை லேகியம் என பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இம் மருந்து ஆண்மையைப் பெருக்குவதற்காக உபயோகிக்கக் கூடியது. இதனை உண்டவர்களை இளம் பெண்கள் விரும்புவார்கள் என்பது இதன் மறை பொருளாகவும் உள்ளது. இவ்விடத்தில் வாலையென்பது இளம் பெண்ணைக் குறிக்கின்றது என்ற பொருள் மிகவும் பொருத்தமாகவுள்ளது எனலாம்.

### சித்தர்கள் பற்றி தற்கால அறிஞர்களின் கருத்து

சித்து என்ற சொல்லைக் குறிக்க Mysticim எனவும், சித்தர் என்ற சொல்லைக் குறிக்க Mystics எனவும் ஆங்கிலத்தில் சொற்கள் வழங்குகின்றனர். இச்சொல் 1900ஆம் ஆண்டிலிருந்து உபயோகத்தில்

வந்துள்ளது. முஸ்டஸ் (Mustes) என்னும் கிரேக்கச் சொல்லினின்று மிஸ்டிஸம் (Mysticism) என்னும் சொல் வந்துள்ளது. இது பற்றி ரிச்சர்ட் இன்ஸ் (Richard Ince) என்பவர் குறிப்பிடுகின்றார்.

சித்தன் என்ற சொல்லுக்கு உலகில் பல பெயர்கள் வழக்கத்திலுண்டு என்று வி.கலியாணசுந்தரனார் குறிப்பிடுகின்றார். அவையாவன நந்தி, நாதன், அருகன், புத்தன், குமரன், தீர்த்தங்கரன், தீர்க்கதரிசி, கிறீஸ்த்து, நபி, குரு, ஆச்சார்யன் என்பன.

சித்தர்கள் பற்றிக் குறிப்பிடும் போது நிலையற்ற மானுட வாழ்வில் மானுடராய்ப் பிறந்தும், மெய்வருந்தி வாழ்வின் நிலையாமையை உணர்ந்தவர்கள். அறிவுதான் கடவுள் என்ற கோட்பாட்டில் நின்றவர்கள் என்று சி.கோ.தெய்வநாயகம் கூறுகின்றார்.

மேலும் சித்தர் பற்றிச் சாமி சிதம்பரனார் குறிப்பிடும் போது அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தோர், விஞ்ஞானிகள் என்கிறார்.

சித்தர் என்ற சொல்லு கி.பி 5ஆம் நூற்றாண்டில் சமண நூல்களில் தான் (நீலகேசி -146) முதன் முதல் காணப்பட்டது எனப்பேராசிரியை பிரேமா குறிப்பிட்டாலும் இதே காலத்தில் எழுந்த திருமந்திரத்தில் “சித்தன்” என்ற சொல்லாட்சி இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் கி.பி 5ஆம் நூற்றாண்டுக்கு முன் சித்தர்கள் இருந்திருக்கவில்லை என்று எண்ணக்கூடாது சித்தர்களின் இயல்புகள், பண்புகள் நிறைந்தவர்கள் பலர் இருந்திருக்கலாம். ஆகையால் சித்தர் என்ற சொல்லாட்சி தொடங்கியது கி.பி 5ஆம் நூற்றாண்டு எனக்கொள்வது ஏற்புடையதாகும்.

### சங்ககால நூல்களில் சித்தர் பற்றிய குறிப்புக்கள்

சங்க நூல்களில் சித்தர் என்ற சொல்லாட்சி காணப்படவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக சில ஒத்த கருத்துக்கள் அடங்கிய விடயங்களைக் காணலாம். இது பற்றிக் குறிப்பிடும் போது சித்து என்ற சொல்லோ அல்லது சித்தர் என்ற

சொல்லோ சங்க இலக்கியங்களில் குறிப்பிடாவிட்டாலும் இச் சொல் குறிக்கும் நிகழ்ச்சிகள் இருந்தன என்பது உறுதி. இவற்றினை தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படும் **நிறைமொழி மாந்தர்** என்ற சொல் சித்தர்களைக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

தொல்காப்பியம் தரும் சித்தர் பற்றிய ஒத்த குறிப்புக்கள்.

"பார்ப்பார் **அறிவர்** என்றிவர் கிளவி"

இதனில் அறிவர் என்பதை மேலும் விளங்கும் போது

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியினாற்றிய **அறிவன்** தேயமும்"

என வரும் நூற்பா அடிகளுக்கு நச்சினார்க்கினியார் தம் உரையில் அறிவர் என்போர் இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் மூன்று காலத்தையும் அறிந்த பெரியோர் யோகிகளாய் உபாயங்களால் முக்காலமுணர்ந்த மாமூலர் முதலியோர் இவ்வறிவரில் ஒரு சாரார் என்று தமது தொல்காப்பிய உரையில் குறிப்பிடுகின்றார்.

"கலச யோகியாகிய அகத்தியன்
முதலியோரும் **அறிவரென்று** உணர்க"

என்று நச்சினார்க்கினியார் தொல்காப்பிய உரையுள் கூறுகின்றார் என கோரக்கச்சித்தர் **அருள் வரலாறு** என்ற நூலின் ஆசிரியரான இரா செல்வகணபதி குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் தரும் அறிவர் பற்றிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியார் தரும் விளக்கம் பெரிதும் பொருத்தமாக அமைகின்றது. மாமூலர் முதலியோர் இவ் அறிவரில் ஒரு சாரார் எனும் கருத்தினை ஆழ்ந்து நோக்கினால் "**சித்தர்**" என்று இன்று நாம் அழைக்கும் ஞானியரே தொல்காப்பியர் குறிப்பிடும் **அறிவர்** என்பதை ஊகிக்க முடியும்.

குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு "**அறிவுக்கண்**" என்றொரு மூன்றாவது கண் இருந்ததாகவும், இதன் மூலம் முக்காலத்தையும், பிறர் எண்ணங்களையும், தொலை நிகழ்ச்சிகளையும் அறிய முடிந்ததாகவும் ஆசிரியர் கார்வே (Harvey) அவர்கள் குறிப்பிடுகின்றார்.

குமரிக்கண்டத்து "அறிவுக்கண்"

தொல்காப்பியர் குறிப்பிடும "அறிவர்"

திருமூலர் வழிபடும் "நயனங்கள் மூன்றுடை நந்தி"

திருமூலர் சிவனை நந்தி என்று கூறும் குறிப்பு.

சிவனை முதல் சித்தன் என்று குறிக்கும் கூற்று.

இவை அனைத்துடன் பதினெண் சித்தர் பாடல்களில் பரவலாகப்போற்றப்படும் "புருவ நடு" பற்றிய செய்திகள், சங்க இலக்கியங்களில் குறிப்பிடும், "முக்கட் செல்வர்", சிலம்பு கூறும் "நூதல் விழி நாட்டத்திறையோன்" என்பவற்றை ஒருமித்து நோக்குமிடத்து ஒரே கருத்தினைத் தருவதாக டாக்டர். க. வெங்கடேசன் குறிப்பிடுகின்றார்.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் பெரிதும் போற்றியது "புருவ நடு" எனும் சோதி வழிபாடே என்பதற்குச் சான்றாக

"கண்களிக்கப் புகை சிறிதும் காட்டாதே புருவக்
கலை நடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே"

எனும் பாடல் விளங்குகின்றது.

**திருமுறை இலக்கியங்களில் சித்தர் பற்றிய குறிப்புக்கள்**

இக்குறிப்புக்களை ஆராயுமிடத்து

"பக்தரொடு **சித்தர்** பயில்கின்ற பழுவூரே"

என்கின்றது சம்பந்தர் தேவாரம்

"பக்தர் **சித்தர்** பலரேத்தும் பரமம் பழைய துரியேய,
அத்தன் ஆலங்காடன்"

என்று சுந்தர் தேவாரம் கூறுகின்றது.

"திண்டிறற் **சித்தர்களே**
கடைக் கூழை சென் மீன்கள்"

என்கின்றது மாணிக்கவாசகரின் திருவாசகம். சேக்கிழாரின் பெரிய புராணத்தில் திருமூலரின் வரலாறு காணப்படுகின்றது.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்தில்

"எல்லாம் வல்ல சித்தரான படலம்" விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. இதனில் இறைவன் தனது திருவிளையாடல்களைச் சித்தராக வந்து புரிந்தான் என்று கூறும் போது இறைவனின் திருவிளையாடல் புராண நூலுக்கு முன்பே சித்தர்கள் இருந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

மேலே கூறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து பார்க்கும் போது சித்தர்கள் பற்றி அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிறைவுச் சுருக்கத்தைப் பேராசிரியர் இரா.மாணிக்கவாசகம் தருகின்றார். "சித்தர்கள் எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் வசிக்கலாம். இன்ன காலத்தில், இன்ன நாட்டில்தான் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை மேலை, கீழை நாடுகளில் தோன்றிய எந்த ஆன்மீக நெறி நின்றவனும் சமயம், சடங்கு முதலியவற்றுக்குக் கட்டுப்படாதவனாக இருப்பானாயின் தம்முள்ளே இருக்கும் இறையை உணர்ந்தவனான இருப்பானாயின், அன்பையும் அதன் வழி அருளையும் போற்றுபவனாக இருபப்பானாயின், அவனே சித்தனாகக் கருதப்படுவான். இச்சித்தநிலை அல்லது அனுபவம் எந்த நாட்டைச் சார்ந்த சித்தனுக்கும் ஒன்றாகவே இருக்கும். இந்த அனுபவத்தில் காலமோ, நாடோ குறுக்கே நிற்க முடியாது" என்ற கூற்று மிகவும் பொருத்தமானதே.

## 1.2. சித்தர்களின் பிரிவுகள்

தமிழ்ச் சித்தர்கள் வரலாற்றைக் கூர்ந்து ஆராயின் அவர்களை கீழ்க் காணும் பிரிவினராகப் பகுக்கலாம்.

1. முதல் சித்தர் (மூலமரபு)
2. இடைச் சித்தர் (பாலமரபு)
3. கடைச் சித்தர் (கைலாயமரபு)

இதைவிட வேறு பல பிரிவுகளும் உண்டு.அவையாவன:-

நவநாத சித்தர் (வடநாட்டில்)
நவகோடி சித்தர்
நவ சித்தர்
சித்தர் கணம்
என்று டாக்டர் உத்தமராயன் குறிப்பிடும் பிரிவுகளாகும்.

**நவநாத சித்தர்**

1. சத்திய நாதர்
2. சதோத நாதர்
3. ஆதி நாதர்
4. அனாதி நாதர்
5. வெகுளி நாதர்
6. மதாங்கநாதர்
7. மச்சேந்திர நாதர்
8. கடேந்திர நாதர்
9. கோரக்க நாதர்

சித்தர் கணம் என்பது ஒரு கூட்டத்தைக் குறிப்பதாகும். இதனைத் தாயுமானவர் குறிப்பிடும்போது

"வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே" என்கிறார்.

சித்தர் கணத்தில் ஒரு கூட்டமே பதினெண் சித்தராகும்.

## 1.3. சித்தர்களின் காலம்

கிடைக்கின்ற பல ஆதாரங்களைக் கொண்டு ஆராயின் திருமூலரே மிகப்பழைமையான சித்தராகக் காணப்படுகின்றார். அகத்தியர் பற்றிய தெளிவான கருத்துக்கள் புலனாகும் வரை இக் கருத்தை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. திருமூலா் காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். எனவே சித்தா்கள் காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு இரா.மாணிக்கவாசகம் கி.பி 5ஆம் நூற்றாண்டாகலாம் என நிறுவியுள்ளாா். சித்தா் என்ற சொல் கி.பி 5ஆம் நூற்றாண்டளவில் எழுந்த சமண நூல்களிலும் திருமந்திரத்திலும் காணப்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளுக்குச் சித்தா் என்ற சொல் கி.பி 5ஆம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது என்கிறாா் டி. ஒ. ரன்ஸ் (D.O.Runes)

சித்தா்களின் காலத்தைப் பற்றி அறிஞா்கள் கூறும் வேறுபட்ட கருத்துக்களை இனிப்பாா்ப்போம். சித்தா் குமரிக்கண்டத்திலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்று கூறுகின்றாா் ஆய்வாளா். டாக்டா் க. வெங்கடேசன் சங்ககாலத்துக்கு முன்பிருந்தே சித்தா்கள் பலா் மருத்துவ நூல்களைச் செய்துள்ளனா். திருவள்ளுவா், தொல்காப்பியா், ஔவையாா் முதலியோரைச் சித்தா் என்றே கூறலாம். திரு. மு. அருணாசலம், திரு T.V சதாசிவ பண்டாரத்தாா் ஆகியவா்கள் சித்தா் காலம் கி.பி 5-6ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது என்னும் கருத்துடையவா்கள் ஆவா்.

பேராசிரியா் V. செல்வநாயகம் அவா்கள் கி.பி 6 - 9 ஆம் நூற்றாண்டு ஆகும் என்கிறாா். திரு M. S பூரணலிங்கம்பிள்ளை அவா்கள் கி.பி 8 - 14 ஆம் நூற்றாண்டுக்குள் அடங்கும் என்கிறாா். வரலாற்று ஆசிரியா்கள் சிலா் சித்தா் காலம் கி.பி 10ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுகின்றனா். பட்டினத்தாா் போன்ற சித்தா்கள் 10 - 11 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தனா் எனலாம்.

திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கி.பி 5ஆம் நூற்றாண்டு எனவும்

திரு. மு. இராதகிருஷ்னபிள்ளை அவர்கள் கி.பி 14 ஆம் நூற்றாண்டு எனவும்

திரு. நீலகண்டசாஸ்திரி திரு. டபிள்யு. ஏச். ஹன்டர் (W.H.Hunter), டாக்டர் கால்டுவேல் (DR Cald Well) முதலியோர் கி.பி 16,17 நூற்றாண்டுகள் எனவும் கருதுகின்றனர்.

இவ்வாறு அறிஞர் பலர் சித்தர் காலம் பற்றிக் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இலக்கிய வரலாறு அறிஞர்கள் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோர் சித்தர் காலத்தை கி.பி 500 முதல் 900 வரை என ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். நாயன்மார்களின் பட்டியலில் சித்தர்களும் அடங்குகின்றனர்.

பழம் பெரும் இலக்கணமாகிய தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் திருக்குறளிலும் சித்தர் என்ற சொல் இல்லையெனினும் குறிப்புப் பெயராக நிறை மொழி மாந்தர் எனக் குறிக்கப்படுகிறது. குறுந்தொகைப்பாடல் ஒன்றில் சித்தரைப் பற்றிய குறிப்பு உண்டு.

சிவனைச் சித்தனென்று சம்பந்தர் தேவாரம் குறிக்கின்றது. அதே போல் சிவனைச் சித்தனென்று நாவுக்கரசர் தேவாரமும், திருவாசகமும், குறிக்கின்றன. சிவபெருமானைச் சித்தர்கள் போற்றிப் பரவுவதாக திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. சித்தர்களின் முதல்வர் சிவனே என்று திருமூலர் கூற்று கீழ்க்கண்டவாறு குறிக்கின்றது.

"சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தா சுத்தத்துடன் தோய்ந்தும் தோயாதவர்
முத்த ரம்முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சுத்தர் சதாசிவத் தன்மையராமே"

மேலே குறிப்பிட்ட பாடல் இலக்கிய வரலாற்று அறிஞர்கள் கூற்றுப்படி தொல்காப்பிய காலத்திலிருந்து கி.பி. 14 ஆம் நூற்றாண்டு (திருமுறைகள் தொகுக்கப் பெற்ற காலம்) வரை குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

சிவனிடம் நந்தியர் நால்வர் அகத்தியர், திருமூலர், பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகிய எட்டுப்பேரும் பயின்றவர் என்று கூறப்பட்டுள்ளது. இக்கூற்று உண்மையென்று தக்க சான்றுகளுடன் நிறுவப்படின் சித்தர்கள் காலத் தொடக்கம் கி.மு.பல நூற்றாண்டுகள் எனக்கூறவேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து தெளிவான சான்றுகள் கிடைக்கும் வரை சித்தர்கள் காலத்தொடக்கம் ஏறக்குறைய கிபி. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கிஇன்று வரை தொடர்கின்றது எனக் கொள்வது ஏற்புடையதாகும்.

## அகத்தியர் பற்றி சில முக்கிய குறிப்புக்கள்

அகத்தைத் தெரிந்தவர் அல்லது தன்னைத்தான் தெரிந்து கொண்டவர் அனைவரையும் அகத்தியர் என்ற சொல்லலாம். சித்தர்களுள் அகத்தியர் என்று கூறும் போது ஒருவரை மட்டும் குறிப்பிடுவது என எண்ணுவது தவறு. இப்பெயர் பலரைப் பல காலங்களில் ஒரு கூட்டுப்பெயராகவும் வழங்கி வந்திருக்கலாம். இதுபற்றி அம்பை அருணாசலம் அவர்கள் கூறும்போது பண்டைய காலங்களில் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று அறிந்தவர்களுக்கு "புலவர்" என்று பட்டப்பெயரால் அழைப்பதுபோல் வைத்தியம் செய்த அனைவரையும் "அகத்தியர்" என்ற புனைபெயர் (Nickname) கொண்டு அழைத்திருக்கலாம் எனக் கூறுகின்றார்.

பொதுவாக அகத்தியரை வண்டமிழ் மாமுனி, கும்பமாமுனி, சங்கத்தமிழ் தந்தவர், குறியோன், பைந்தமிழ் முனிவன், அறிவன், முத்தண்டமிழ் தேர்முனி, தமிழ்நர்கோமான், ஆதிமுனி, குறுமுனி எனப் பல வேறு பெயர்களால் அழைத்துள்ளனர்.

திரு. அ. சாமிசிதம்பரனார் அவர்கள் தம்முடைய "அகத்தியர் வரலாறு" என்ற நூலில் சுமார் முப்பத்தேழு (37) அகத்தியர்கள் பல்வேறு காலங்களில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

சிவானந்தஜி கணபதி அடிகள் ஆசிரியராகக் கடமையாற்றும்

“சித்தர் செயல்” எனும் மாத இதழில் அகத்தியர் முப்பத்தேழு என்ற விபரத்தைக் குறிப்பட்டுள்ளார்.
அவையாவன -

**முப்பத்தேழு அகத்தியர் பட்டியல்**

1. பொதிகைமலை அகத்தியர் (கி.மு. 16000)
2. முத்தூர் அகத்தியர் (கி.மு. 14550)
3. வாதாபி அகத்தியர் (கி.மு. 14058)
4. உலோபா முத்திரை அகத்தியர் (கி.மு. 8000)
5. மைத்திரா வருண அகத்தியர் (கி.மு. 8000)
6. மானிய அகத்தியர் (ஆரியர்) (கி.மு. 8000)
7. கும்ப அகத்தியர் (ஆரியர்)
8. ஆவிர் பூ புத்திரர் அகத்தியர் (ஆரியர்)
9. கந்தருவன் புத்திரர் அகத்தியர் (ஆரியர்)
10. ஏழு இருடிகளுள் ஒருவரான அகத்தியர் (கி.மு. 7500)
11. புரோகித அகத்தியர் I (ஆரியர்) (கி.மு. 7000)
12. தொடித்தோள் செம்பியன் காலத்து அகத்தியர் (தமிழர் - கி.மு. 6200)
13. குடகுமலை அகத்தியர் (தமிழர் - கி.மு. 6020)
14. உலோபா முத்திரை அகத்தியர் (கி.மு. 6010)
15. கோசல நாட்டு அகத்தியர் (ஆரியர் - கி.மு. 6000)
16. பஞ்சவடி அகத்தியர் (ஆரியர் - கி.மு. 6000)
17. மலையமலை அகத்தியர் I (ஒளியர் - கி.மு 6000)
18. குஞ்சரகிரி அகத்தியர் I (தமிழர் - கி.மு. 6000)
19. புரோகித அகத்தியர் II (தமிழர் - கி.மு. 6000)
20. குஞ்சரகிரி அகத்தியர் II (ஆரியர் - கி.மு. 3110)
21. துவராபதி அகத்தியர் (ஆரியர் - கி.மு. 3100)
22. யசோமதி அகத்தியர் (ஆரியர் - கி.மு. 2000)
23. புரோகித அகத்தியர் III (ஆரியர் - கி.மு. 1900)
24. காரைத்தீவு அகத்தியர் (பௌத்தர் - கி.மு. 400)
25. போதலகிரி அகத்தியர் (பௌத்தர் - கி.மு. 274)
26. திலோத்தமை அகத்தியர் (பௌத்தர் - கி.மு. 100)
27. பாவநாச(மலையமலை) அகத்தியர் I (தமிழர் - கி.பி. 500)

28. பாவநாச(மலையமலை) அகத்தியர் II (தமிழர் - கி.பி. 500)
29 . புரோகித அகத்தியர் IV (ஆரியர் - கி.பி. 600)
30. குஞ்சரகிரி அகத்தியர் III (ஆரியர் - கி.பி. 700)
31. புரோகித அகத்தியர் V (தமிழர் - கி.பி. 700)
32. சித்த அகத்தியர் (தமிழர் - கி.பி. 1100)
33. தேவார அகத்தியர் (தமிழர் - கி.பி. 1300)
34. நூல் எழுதிய அகத்தியர் (ஆரியர் - கி.பி. 1300)
35. திருமாலைச் சிவனாக்கிய அகத்தியர் (தமிழர் - கி.பி. 1300)
36. அகத்தியபட்டர் (ஆரியர் - கி.பி. 1800)
37. பள்ள அகத்தியர் (தமிழர் - கி.பி. 1900)

இவை எந்த வரலாற்று அடிப்படையில் இவ்வாறு தொகுக்கப் பெற்றவை என எந்த விதச் சான்றுகளும் காட்டப்படவில்லை. ஆகையால் இவை மேலும் ஆய்வுக்குரியது.

அறிஞர் சுத்தானந்த பாரதி அவர்கள மூன்றுக்கும் மேற்பட்ட அகத்தியர்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்து பல்வேறு இலக்கியங்களை இயற்றியுள்ளனர் எனக் குறிப்படுகின்றார். ஏறக்குறைய இதே கருத்தைத் திரு ரா. ராகவையங்கார் இவர்களும் கூறுகின்றார். P. கேசவப்பிள்ளை அவர்கள் கீழ்க்கண்ட பத்து அகத்தியரையும் அவர்கள் பற்றிய சுருக்கமான செய்திகளையும் தருகின்றார்.

அவையாவன

**1. பொதிகைமலை அகத்தியர்**

இவரைக் குற்றால முனிவர் என்றும் குறுமுனி (குருமுனி) என்றும் பல பெயர்களால் அழைப்பர். இவருடைய காலம் வரையறுத்துக் கூறமுடியவில்லையென்றும், ஆயினும் தமிழ் இலக்கண நூலில் முதலாவதாகவுள்ள “அகத்தியம்” என்ற நூலை இயற்றினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவர் மூலர்மரபைச் சார்ந்தவர்என்றும், மேருவரம்பனிடத்தில் மந்திரியாக இருந்தவர் என்றும் இவரின் முதல் நூல் மகேந்தர சூத்திரம் என்ற கருத்தும் காணப்படுகின்றது. இவை பற்றிய தெளிவான ஆய்வுகளில்லை.

2. முத்தூரகத்தியர்

இவர் ஒளிநாடு பெருவளநாடு முதலிய நாடுகளையும் - கபாடம் (வங்காளம்) தீபத் முதலிய நாடுகளை ஆண்ட செங்கோவின் காலத்தில் வாழ்ந்தவர் எனப்படுவர்.

3. வாதாபி அகத்தியர்

வாதாபியைக் கொன்றவர் என்றும் இவர் சூரபதுமன் காலத்தில் வாழ்ந்தவர் மகேந்திர மலையை இருப்பிடமாகக் கொண்டவர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

4. குட முனி

இவரைக் குட முனி (கும்ப முனி) என்று கூறுவதுடன் இவர் காலம் பரசுராமன் காலம் எனப்படும். கரந்தன் என்னும் சோழ சக்கரவர்த்தியின் அன்பர் குடகு மலைக்கு மேற்கே சென்று கொண்டிருந்த காவேரியாற்றைக் குடகுமலையைப் பிளந்து கிழக்கே சோழநாடு வளம் பெற கொண்டு வந்தவர். கரந்தன் என்னும் அரசருக்கு இவர் மிகவும் உதவியாக இருந்தவர் எனவும் கூறப்படுகின்றது.

5. பஞ்சவடி அகத்தியர்.

இவர் காலம் இராமாயண காலமென்றும், இருப்பிடம் பஞ்சவடி என்றும் தற்போது நாசிக் என்ற ஊர் முற்காலப் பஞ்சவடி என்றும் குறிப்புக்கள் உள்ளன.

6. துவாரகை அகத்தியர்

இவருடைய காலம் பாரத காலம். இடம் துவாரகை. இவர் கண்ணபிரானுக்கு நண்பர் என்றும், இவருடைய மனைவி உலோபாமுத்திரை இவர் தமிழ்ச்சங்கத்தில் ஓர் அங்கத்தவராக இருந்தார் எனவும் கருதப்படுகின்றது.

7. பௌத்த அகத்தியர்

இவர் புத்த மதத்தைச் சார்ந்தவர் என்றும் நன்கு தமிழ் அறிவு உடையவர் என்றும் கூறப்படுகின்றது.

8. சிற்றகத்தியர்

இவர் பல சித்த வைத்திய நூல்களை இயற்றியுள்ளார் என்றும் இவரது நூல்கட்கும் பொதிகைமலை அகத்தியர் செய்த நூல்களுக்கும் நிறைய வேறுபாடு உண்டென்றும் கூறுவர்.

9. அகத்தியவேள்

இவர் பெரும் புலவர் எனப்படுவார்.

10. யசோபதி அகத்தியர்

இவர் கபோதி நாட்டவர். தமிழ் நன்றாகத் தெரிந்தவர் எனவும் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட இரு அட்டவணையிலும் முதலாவதில் 37 அகத்தியர் என்றும் இரண்டாவது அட்டவணையில் 10 பிரிவும் காட்டப்பட்டுள்ளது. இவற்றில் பொதிகைமலை அகத்தியர் எனக் குறிப்பிடும் அகத்தியர் இரண்டு பட்டியலிலும் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளன. இதுவே மிகப் பழைய அகத்தியரெனக் கொள்வதுடன் பொதிகைமலை இமயமலைக்கு முற்பட்டது எனச் சரித்திர ஆய்வாளர்கள் குறிப்பிடுவதாலும் இங்குள்ள அகத்தியரே ஆதி அகத்தியர் எனக் கொள்ளலாம். இவரையே குற்றால முனிவர், குருமுனியென்றும் வழங்குவர். இது மேலும் ஆராயப்பட வேண்டியது. குருமுனி என்பதே குறுமுனியென்று வந்ததாக இரா மாணிக்கவாசகம் குறிப்படுகின்றார். ஆனால் குள்ளமாக இருந்ததனால் “குறுகிய முனிவர் - குறுமுனி” எனப்பட்டார் என்று கூறுவாரும் உள். இந்த ரகர, றகர வேறுபாடுகள் தமிழகத்தில் இவை பொருட்படுத்தாத காலத்தில் ஏற்பட்டிருக்கலாமென்றும் கருதலாம்.

ஆனால் இதனுடைய பொருள் மாறும் போது இது தவறாக உணரப்படுகின்றது. இதேபோல் மருந்து பற்றி திருமூலர் குறிப்பிடும்போது “மருந்து” “மறுத்தல்” என்பதற்கிடையில் உள்ள வேற்றுமையைக் காணலாம்.

முத்தூரக அகத்தியர் இரண்டு அட்டவணையிலும்

இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதேபோல் வாதாபி அகத்தியர் மூன்றாவதாக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களின் காலத்தை தெளிவாக ஆராய முடியவில்லை. இரண்டாவது அட்டவணையில் நான்காவதாக் குறிப்பிடப்பட்டுள்ள குடமுனி முதலாவது அட்டவணையில் பதின் மூன்றவதாக குடகுமலை அகத்தியர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். அதேபோல் இரண்டாவது அட்டவணையில் ஐந்தாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் பஞ்சவடி அகத்தியர், மற்றைய முதல் அட்டவணையில் பதினாறாவதாக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். இதேபோல் மற்றவைகளும் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவர்களின் சரித்திரங்கள், நூற்றாண்டுகள் குறித்தமைக்கு எந்த ஆதாரங்களும் தெளிவாக தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக அகத்தியர் பிரமன் செய்த கும்பத்தில் தோன்றியவர் என்பதும், மித்திரன் ஊர்வசிமேல் மோகம் கொண்டு வீரியத்தை கும்பத்திலிடத் தோன்றியவர் என்பதும், புலத்திய முனிவரின் சகோதரியாகிய லோபா முத்திரை என்பவளைத் திருமணம் செய்தவர் என்றும், சிவன் திருமணத்தின் போது தெற்கே அனுப்பப்பட்டவர் என்பதும் வில்லவன் வாதாபி என்னும் அரக்கர்களைக் கொன்றவர் என்பதும் போன்ற வரலாறுகளை நோக்கும் போது இவ்வாறே பல கதைகள் பிற்காலத்திலும் எழுந்திருக்கலாம்.

பல்வேறு கதைகள் எழுந்தமையால் எந்த அகத்தியர் மருத்துவ நூல்களை எழுதினார் என்பது மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

முன் குறிப்பிட்டவாறு பிரம்மனுடைய கும்பத்தில் வீரியத்தை அடக்கியது என்பது நவீன காலத்தில் உள்ள "ஆய்வுகூடக் குழாய் மூலம் சிசு உண்டாதல்" (Test Tube Baby) என்னும் முறையை ஒத்திருக்கலமோ என்று சிந்தனையும் எழுகின்றது.

மேலும் அகத்தியர் வட நாட்டு ஆரியர் என்றும்,

வடநாட்டிலிருந்து விந்திய மலையைக் கடந்து மலைவாசிகளையடக்கி (வென்று) தென்னகம் வந்தவர் என்ற கதையுண்டு. மலைவாசிகளை வில்லவன், வாதாபி என்ற அசுரர்களுடன் தொடர்பு படுத்தும் புராணக்கதை இவற்றுடன் தொடர்புடையதாக எழுந்திருக்கலாம். அக்காலம் இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஹரயப்பா, மொஹஞ்சதாரோ காலத்தில் தமிழர்கள் இமயம் முதல் குமரிவரை இந்தியத்துணை கண்டம் முழுவதும் வாழ்ந்தார்கள் என்பது வரலாற்று ஆசிரியர்களால் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகவேயுள்ளது.

அகத்தியர், சிவனின் திருமணத்தின் போது தெற்கே அனுப்பப்பட்டவர் என்பது "பூமி உருண்டை வடிவானது" எனும் கோட்பாடுடைய அறிஞர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். இதனில் ஏதும் தத்துவக்கருத்துக்கள் பொதிந்திருக்கலாம் என்பது மறைபொருளாகவுள்ளது. இதன் தத்துவத்தை திருமூலர் கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

"நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுக்கின்ற தெம்பெரு மாமென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீ போய்
முடுகிய வையத்து முன்ணி ரென்றானே"

வடக்கு தெற்கு என்பன இடகலை, பிங்கலையைக் குறிக்கும். அகத்தீயான மூலாக்கினியாலே குண்டலியினை எழுப்பி மேல் அனுப்பும் யோகப்பயிற்சியால் இடகலை, பிங்கலையாகிய இரண்டும் சமப்படும் என்பது இதன் பொருளாகும். இவ்வாறாகப் புராணக்கதைகளிலும் பல தத்துவக்கருத்துக்கள் உண்டு என்பது புலனாகின்றது.

தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்தவர் அகத்தியர் என்ற மரபுண்டு. மறைந்து விட்ட வரலாறு மரபு என்ற பெயரில் தொடர்கின்றது. இவர் பெயரில் காணப்படும் வைத்திய நூற்பெயரைக்கொண்டு சித்தர் வரிசையில்முதலானவர் என்றும்

கூறப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அகத்தியரே இப்படிப்பட்ட பெருமையைப் பெற்றிருக்கலாம். அகத்தியருடைய மாணாக்கர் இடைச்சங்கத்திலிருந்த தொல்காப்பியர் என்றும், தொல்காப்பியரும் தமிழுக்கு இலக்கணம் வகுத்துள்ளாரென்றும் க.சு.உத்தமராயன் குறிப்பிடுகின்றார்.

அகத்தியர் பொதிகை மலைக்கு வந்து முருகப்பெருமானைத் திருக்கோவிலில் வழிபட்டு அடியார்களுக்குத் திருவருள் பாலித்து வருகின்றாரென்ற ஒரு ஐதீகமும் இன்றும் உண்டு. பொதிகை மலையில் உயர்ந்த சிகரம் அகத்தியர் மொட்டை (மொட்டை - முடி, சிகரம் - Peak) என்ற பெயருடன் விளங்குகின்றது. அகத்தியர் மொட்டையில் தோன்றுகின்ற தண் பொருத்தப்பேராறு, (குளிர்ச்சி பொருந்திய பெரிய ஆறு) பொதிகை மலையின் நடுவே விளங்குகின்ற வானத்தீர்த்தம் என்ற இடத்தில் அருவியாக விழுந்து மேலும் இறங்கி ஓடிவந்து பழைய பாவநாசம் என்ற இடத்திலும் அருவியாக இறங்கி, பின்னும் ஓடிவந்து மலையின் அடிவாரத்தில் இறங்குகின்றது. அவ்வடிவாரமே பாவநாசம் எனப்படும். பழையபாவநாசத்தில் முருகன் கோவிலும், அகத்தியர் கோவிலும், புதிய பாவநாசத்தில் மிகப்பெரிய சிவன் கோவிலும் விளங்குகின்றன. அங்கிருந்து சுமார் ஐந்து மைல் தாண்டி வருகையில் அம்பா சமுத்திரம் என்ற பேரூர் உள்ளது. அங்கும் அகத்தியருக்கு ஒரு பெரிய கோவில் இருக்கின்றது. அகத்தியர் மொட்டையில் தோன்றுகின்ற **தண் பொருத்தப் பேராறு** என்ற பெயர் மருவி ''**தாமிர வருணி**'' என்று வந்ததாகவும், தண் பொருத்தம் குளிர்ச்சியான நீரைக்கொண்டதென்றும் கருதப்படும்.

தாமிரவருணி ஆற்றில் உள்ள நீரில் தாமிரச்சத்து (செம்பு) இருப்பதாகவும் ஒரு கருத்துண்டு. இவை அனைத்தும் பொதிகையில் அகத்தியர் வரலாற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. இராமாயணம் குறிப்பிடும். இராவணேஸ்வரன் பொதிகை மலைக்கு வந்து அகத்தியரோடு இசைபாடிப் போட்டியிட்டவர் என்ற கருத்தும் காணப்படுகின்றது.

வேளாள அகத்தியர் என ஒருவர் இருந்ததாகவும் அவர் பெருமை பற்றி போகர் குறிப்பிடும் தகவல்கள் உண்டென்றும் எஸ்.பி.இராமச்சந்திரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தோனான அகத்தீசர் சாதிபேதம்
கொற்றவனே வேளாளன் என்னலாகும்"

\- 5903 -

"சிறந்ததொரு அகத்தீசர் உதித்த நேர்மை
சிறப்பான தனுர் மாதம் என்னலாகும்
துறந்ததொரு ஆயில்யம் மூன்றாம் காலாம்
துப்புர வாய் அவர் பிறந்த நாளுமாச்சே"

\- 5882 -

இவரைப் பிற்காலத்துக்கு உரியவராகவே கணிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இவ்வகத்தியர் சாதிப்பாகுபாடு தோன்றிய பின் வந்தவராகக் காணப்படுகின்றார். பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அகத்தியர் வேறு என்றும், அவரோடு இவரை இணைக்க முடியாது எனவும் கருத இடமுண்டு. இவை ஒருபுறமிருக்க வேறு சித்தர்கள் எழுதிய நூல்களும் அகத்தியர் பெயரால் வழங்கப்பட்டு வருவது சில குழப்பங்களை ஏற்படுத்தி விட்டது எனலாம். மேலே குறிப்பிட்ட போகர் பாடலில் வேளாளகுலம் என்றும், மார்கழி மாதம் ஆயிலிய நட்சத்திரம் என்றும் குறிப்பிட்டுள்ள விடயமே தற்போது பழனி முருகன் கோவில் தெற்கு வீதியிலுள்ள சுவரிலும் எழுதப்பட்டுள்ளது என்பது குறிப்பித்தக்கது.

குற்றாள நாதரை உண்டாக்கிய அகத்தியர் வேறு ஒருவர் என்றும் கதைகள் உண்டு. அக்காலத்திலே குற்றாலத்தில் ஒரு விஷ்ணு ஆலயமே இருந்ததாகவும் அங்கு விபூதி அணிந்தவர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அப்போது அகத்தியர் குற்றாலத்துக்கு வந்ததும் விஷ்ணுவின் ஆலயத்துக்குள் செல்ல விரும்பி அங்கிருந்த வைணவர்கள் அவரைத்தடுத்து விட்டதாகவும் கதைகள் உண்டு. பின்பு அகத்தியர் அருவியில் குளித்துவிட்டுப் பட்டையாக நாமத்தைத் தீட்டிக்கொண்டு

ஆலயத்துக்குச் சென்றபோது வைணவர்கள் தடுக்கவில்லையென்றும் உட்சென்ற அகத்தியர் விஷ்ணுபகவான் தலைமேல் கையை வைத்துக்கொண்டு "நமசிவாய நமசிவாய" என்று சொல்லிக்கையை அழுத்தினார். விஷ்ணுவின் சிலை குறுகி லிங்கமாகி விட்டது. இதனிலிருந்து அவ் ஆலயம் சிவாலயமாக மாறிக்கொண்டதாக எஸ்.பி.இராமச்சந்திரன் "சித்தர் வரலாறு" என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இவ் அகத்தியரை முப்பத்தேழு அகத்தியர் அடங்கிய பட்டியலில் முப்பத்தைந்தாவதாகத் திருமாலைச் சிவனாக்கிய அகத்தியர் குறிப்பு இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

## நான்குநேரித் தைலம்

திருநெல்வேலி மாவட்டத்தில் நான்குநேரி என்ற இடத்தில் உள்ள பெருமாள் ஆலயத்தில் உள்ள எண்ணெய்க்கிணறு அகத்தியரால் உண்டாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவ்வெண்ணெய்க் கிணறு ஆலயத்தின் முன்பகுதியில் உட்பக்கமாக வடக்குப்பாகத்தில் அமைந்துள்ளது. இங்கு இறைவனுக்குத் தைலங்களினால் அபிஷேகம் செய்வதாகவும் அவை கிணற்றில் வந்து சேரக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இக்கிணற்றில் சேரும் தைலத்தை நோயாளிகள் வந்து பெற்றுச் செல்லுகின்றனர் எனவும் அறிய முடிகின்றது. இத்தைலம் நாட்பட்ட தோல் பிணிகளுக்கு நல்ல பலனைக் கொடுப்பதாக அறிகிறோம். டாக்டர்.ஆர்.ரி. தியாகராஜன் எழுதிய "சித்த மருத்துவம் சிறப்பு" என்ற நூலில் நான்கு நேரித்தைலம் என இதன் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளனர்.

அகத்தியர் "அனந்த சயனம்" என்ற தலத்தில் சமாதியடைந்ததாகவும் அது திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாப சுவாமி கோவிலாக இருக்கலாமென்றும் நம்பப்படுகின்றது.

ஒரு சாரார் அகத்தியர் கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோவிலில் சமாதியடைந்ததாகவும் கருதுகின்றனர். இன்னும் அவர் பொதிகை மலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே நினைப்பவர்களும் உள்ளனர்.

அகத்தியர் பெயரில் ஏராளமான நூல்கள் வழங்கப்படுகின்றன. ஆயின் தமிழக அரசினால் பரிந்துரைக்கப்பட்ட சர் உஸ்மான் குழு அறிக்கையில் உள்ள மருத்துவ நூல்கள் மட்டும் கலாநிதி பொன்.இராமநாதன் அவர்களின் கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வேட்டில் இறுதிப்பகுதியில் பட்டியலாக தரப்பட்டுள்ளன.

இப்பட்டியலில் உள்ளவற்றைத் தவிர இன்னும் பல நூல்கள் **வைத்திய சில்லறைக்கோவை, யோக ஞான சாஸ்திரத்திரட்டு பத்தாம் பாகம்** உள்ளதாகவும், இவற்றைவிட பல நூல்கள் நாஞ்சில் நாடு திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளவர்களிடம் அச்சேறாத ஓலைச்சுவடிகளாக இருப்பதாகவும் வெளியே தெரியாமல் குகையில் மறைக்கப்பட்டுள்ள நூல்கள் பல இருப்பதாகவும் கூறப்படுகின்றது. ஈழத்திலும் அகத்தியர் பெயரில் பல ஓலைச்சுவடிகள் இருப்பதாகச் சில மருத்துவர்கள் மூலம் அறிகின்றோம். இவை வைத்திய வாகடம் அனைத்தும் அகத்தியர் பெயரில் வழங்கி வரும் மரபுக்கமையக் கூறப்படுவதாகவும் கருதலாம்.

யாழ்ப்பாணத்தில் உருவான செகராசசேகரம் என்ற வைத்திய நூலில் உள்ள பாடல்கள் "அகத்தியர் 2000" என்னும் பெயரில் காணப்படும் நூலிலும் காணக்கூடியதாகவுள்ளது என பா. சிவகடாட்சம் குறிப்பிடுகின்றார்.

சென்னையில் உள்ள கீழ்நாட்டுக்கையெழுத்து பிரதி நூலகம் தயாரித்துள்ள பட்டியலில் அகத்தியர் பெயரில் சுமார் 96 நூல்கள் காணப்படுவதாக இரா. மாணிக்கவாசகம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் உருவான செகராசசேகரம் என்ற நூலில் அகத்தியர் பற்றிய குறிப்புகளும் கீழ்க்கண்டவாறு உள்ளன.

"கன்னி நாள் தன்னில் வெய்யோன்
கலந்திடு காலத்தாய
மின்னிய பகல் முகத்து விளம்பு
தெக்கிணத்துக் கும்பந்
**தன்னிடம் பிறந்தோர்(கு)** அர்க்கியம்
தரணியில் வேந்தர் நல்லோர்
அன்னவர் அளிக்கில் வாழ்வும் ஆயவும்
புகழுமாமே"

அகத்தியர் பெருமைபற்றி தேவாரங்களும் சுட்டுகின்றன. எடுத்துக்காட்டாக சம்பந்தர், சுந்தரர், அப்பர் ஆகியவர்களின் தேவாரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றன.

"சீரிணார் மணியும் மகில் சந்தும் செறிவரை
வாரி நீர் வருபொன்னி வட மங்கலக்குடி
நீரின் **மாமுனிவன்** நெடுங்கை கோடு நீர்தனைப்
பூரித் தாட்டி அர்ச்சிக்க இருந்த புராணமே"
(சம்பந்தர்)

"வந்தோரிந்திரன் வழிபட மகிழ்ந்து
வானநாடு நீ ஆள்கென அருளிச்
சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச்
சகளி செய் (து) இறைஞ் (சு) **அகத்தியர்** தமக்குச்
சிந்து மாமணி அணிந்த பொதியில்"
(சுந்தரர்)

"மங்கலக் குடி ஈசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மண்ணுநேர்
சங்கு சக்கரதாரி சதுர்முகன்
அங்கு **அகத்தியனும்** அர்ச்சித்தார் அன்றே"
(அப்பர்)

அன்றாலின் கீழிருந்தங்கு அறம் சொன்னானை
அகத்தியனை உகப்பானை அயன் மால்தேட

(அப்பர்)

மேற்குறிப்பட்ட பாடல்களிலிருந்து அகத்தியர் திருமுறைகளிலும் சிறப்பிடம் பெறுவதைக் காணலாம். இன்றும் தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலே அகத்தியருக்குத் தனிக் கோவிலமைத்து வழிபடும் வழக்கம் இருந்து வருகின்றது.

பார்த்திடவே நந்தீசர், மூலத்தீசர்
பண்பான அகத்தீசர் சட்டைநாதர்
கோர்த்திடவே பதஞ்சலியும் ஊனக்கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டிகேசர்
கூர்த்திடவே இடைக்காடர் சிவாய சித்தர்
கொங்கணவர் தந்தை போகநாதர்
காந்திடவே மச்சமுனி பிண்ணாக்கீசர்
காலாங்கி சுந்தரரும் காப்புத்தானே

- கருவூரார் பல திரட்டு -

## 1.4. பதினெண் சித்தர்கள்

சித்தர்களைப் பொதுவாகப் பதினெட்டு பேர் எனக் கூறும் மரபு தொன்று தொட்டு வழக்கிலுள்ளது. ஆனால் பதினெண் சித்தர்கள் என்பதனைப் பதினெண்-அனேகம் அல்லது எண்ணில் அடங்காததென (Numerous) கருத்தும் உண்டென பேராசிரியர் அம்பை அருணாசலம் கூறுகின்றார்.

மேலும் சித்தர் தொகையில் காணப்படும் சித்தர்கள் அனைவரும் மருத்துவம் தெரிந்தவரா என்பது ஐயத்திற்குரியது. ஏனெனில் இவ்வாக்கியர், அகப்பேய்சித்தர்,கடுவெளிச் சித்தர் போன்றோர் பெயரில் மருத்துவ நூல்கள் ஒதும் காணப்படவில்லை. ஆகையால் சித்தர்களுள் ஒரு சாரார் மட்டுமே மருத்துவம் பற்றிக் கூறியுள்ளார்கள் என்பது புலனாகின்றது. ஆனால் சில சமயம் இவர்கள் மருத்துவம் பற்றி எழுதிய நூல்கள் தற்காலத்தில் கிடைக்காமலும் போயிருக்கலாம்.

பதினெண் சித்தர்கள் (பதினெட்டு) யார் யார் என்பது ஒவ்வொரு நூல்களிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இது ஆராய்ச்சியாளர்கள், பாணவர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்துகின்றது.

பதினெட்டுச் சித்தர்கள் என்ற மரபை நிலைநாட்டும் சான்றுகளைக் கவனிக்கலாம்.

"வாதறூ லத்தம் **பதினெண்பேர்** சித்தர் வசனித்த
நூல்களும் பலிதம்"

54- புலஸ்தியர் கற்பம் 300.

"பொன்னான திராவகமங் குருமுறைக்குப் புகவில்லை
**பதினெண்பேர்** சித்தரெல்லாம்"

-2 : அகஸ்தியர் வழலை 16

"சித்தர் **பதினெண்மர்** செய்கையிற் றேன்றுத அத்தனரு
ளும்புசுண்டர் யான்"

-சித்தர் ஞானக்கோவை, வால்மீகா் -11

"திட்டதாய்ப் பாணம் வைத்துத் தேவிபூனச சீர் பெற்றேர்
**பதினெட்டுச்** சித்தர் தாமே"

-சித்தர் ஞாணக்கோவை, கருவூரார் பாடல் :23

"மகத்தான **பதினெண்பேர்** வைப்புஞ்சொன்னோம்"

-அகத்தியார் சௌமிய சாகரம்1200

"வானென்ற ஒருவனெட்டில் சிக்காதப்பா மைந்தனே
**பதினெண்பேர்** எட்டும் பாரே"

-2: திரு மூலம் 8.

"உன்னியதோர் வேதாந்தப் பெருநூல் எண்ணூறு
உற்பணமாய் **பதினெட்டுச்** சித்தர் பாடல்"

-1 மச்சமுனி பெரு நூல் 800

மேல் வரும் குறிப்புக்களால் பதினெட்டுச் சித்தர் மரபை நிலைநாட்டலாமே தவிர யார் யார் அவற்றில் அடங்குவதென்பது தெளிவாகத் தெரியவில்லை.

மிகப்பலர் மறைந்து வாழ பலர் பல நூல்கள் எழுதியிருக்க, அவர்கள் அனைவரையும் குறிக்காது பதினெட்டுப்பேர் எனச் சிலரையே குறித்ததின் நோக்கம்.

1. ஒரு வேளை சித்தர் கூட்டம் எனக் கணிக்கப்பட்டகாலத்தில் குறிக்கப்பட்ட பதினெட்டுப்பேர் இருந்திருக்கலாம். அதுவே மரபாகியிருக்கும்
2. சித்தர் கூட்டத்தில் பதினெட்டு பேர் சிறப்பாக விளங்கியிருக்கலாம் அல்லது பதினெட்டுப் என்னும் சித்தர் எண்ணிக்கை ஏதேனும் தத்துவார்த்தமாகவும் மறைபொருள் கொண்டதாகவும் இருக்கலாம்.

பொதுவாக எண் சோதிடப்படி ஒன்பது (9) தெய்வீக எண் என்பர். எண் சோதிடர். பதினெட்டு என்று கூறும் போது கூட்டு எண் ஒன்பதாகவே வருகின்றது.

சித்த மருத்தவத்துடன் இவ்வெண்ணைத் தொடர்பு படுத்திப் பார்க்கும் போது இங்கு பலவற்றைக் காணலாம்.

"சூலை **பதினெட்டும்** குன்ம மெட்டும் பறந்தோடும"

-939 ஞானவெட்டியான் 1500

-266 - யாகோபு வைத்திய சிந்தாமணி 700

"குட்டம் பதினெடடுமது குடி போங் கண்டாய"

1360 : ஞான வெட்டியான் 1500

"ஓடுமேபதி னெட்டு எலிகடி"

-138 : தேரையர் வைத்தியம்

-92 : புலிப்பாணி வைத்தியம்

"அண்டக் கொம்பினீா கடுவுள்ளி நீா முருங்கப்பட்டை
நீரினிவிட **பதினெண்** தோடம் போம்"

-64 : அகத்தியர் கரிசல் 300

"சாத்தினாா் தன்வந்திரி முனிவரிந்த
தாரணியில் **கிரிகை பதினெட்டு**ந்தீர
நோ்த்தியாா் கிரிகை பதினெட்டுக்கும் நேரான குணம்
சாந்தி யந்தான்"

-தன்வந்திரி ஓமக்கிரிகை விதி

"கூண்டு குஷ்டம் குறை **பதினெட்டும்**"

-179 : தேரையர் வைத்தியம் 1500.

"குழந்தை மாந்தம் **பதினெட்டும்**"

-179 : அகஸ்தியர் குருநாடி 235.

"கூறினோ மரையாப்பு **பதினெண்** நோய்க்கும்"

-56 : அகத்தியர் கௌமதி நூல் 400

"சன்னியும் **பதினெட்டாகும்**"

-42 : அகஸ்தியர் குருநாடி 235.

"ஆரப்பா **பதினெட்டு** மேகம் தீரும்"

-252 : சுப்பிரமணியம் ஞானம் 500.

"நாயினுங்கே டாக்கு மந்திர கிரந்தி **பதினெட்டும்**"

-9 : அகஸ்தியர் வழலை 16

"மாயமென வந்தெடுக்கும் சன்னி **பதினெட்டும்**
முசலான் **பதினெட்டு** மேகும்"

-10 : நந்தி பாடல் 49

மேலும் பதினெட்டோடு தொடர்புடையன

பதினெண் புராணம் (பிங்கலம் 3444)

பதினெண் கீழ்க்கணக்கு
பதினெட்டு சிவாகமங்கள்
சபரிமலை கோயில் படி பதினெட்டு
இராமயணப் போர் பதினெட்டு மாதங்கள்
பாரதப்போர் பதினெட்டு நாட்கள்

எனப் பெரும் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

சித்தர்கள் எண்ணிக்கை பற்றிக்குறிப்பிடும் போது ஆரம்பத்தில் பதினெண் சித்தர்களே இருந்திருக்கலாமென்றும் பின்னர் அவர்களோடு பின் வந்தவர்களின் பெயர்களும் சேர்க்கப்பெற்ற நிலையில் அப்பதினெண்மர் யார் என்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கக் கூடும். என்று ஒரு சாரார் கருதுகின்றனர். அதற்கேற்ப சித்தர் நூல்கள் பதினெண்மர் பெயர்களைப் பட்டியலிட்டுத் தரும்போது நூலும் நூல் வேறுபடுவதால் பதினெண்மரில் குழப்பநிலை ஏற்படுகின்றது.

பதினெண்வகைக் குணங்கள் உடைய மனித உடலுக்கு மருத்துவம் செய்த சித்தர் என்ற தொடரே நாளடைவில் மருவி "பதினெண் சித்தர்" என்று வழங்கப் பெற்றதாக மற்றுமொரு கருத்தைப் சீத்தாராம் சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.

## பதினெண் சித்தர்களின் பட்டியல்

மருத்துவ வாதயோக ஞான சாத்திரம் என்னும் நூலின் நான்காம் தந்திரத்தில் உள்ள பாடல் மூலம் பதினெண் சித்தர்களும் அவர்கள் சமாதி படைத்த இடங்களையும் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

1. திருமூலர் - சிதம்பரம்
2. இராமதேவர் - அழகர்மலை
3. அகத்தியர் - அனந்தசயனம்
4. கொங்கணவர் - திருப்பதி
5. கமல முனி - திருவாரூர்
6. சட்டமுனி - திருவரங்கம்
7. கருவூரர் - தீருவாரூர்
8. சுந்தரானந்தர் - கூடல் (மதுரை)

9. வான் மீகி - திருவையாறு (எட்டுக்குடி)
10. நந்தி தேவர் - காசி
11. பாம்பாட்டி - சங்கரன் கோயில்
12. போகர் - பழநிமலை
13. மச்சமுனி - திருப்பரங்குன்றம்
14. கோரக்கர் - பேரூர் (கோவை)
15. பதஞ்சலி - இராமேஸ்வரம்
16. தன்வந்திரி - வைத்தீஸ்வரன் கோயில்
17. குதம்பைச் சித்தர் - மாயூரம்
18. இடைக்காடர் . - சித்தருணை (திருவண்ணாமலை)

இதைப் போலவே தமிழ் மருத்துவ நூல் எதனை எடுத்தாலும் மகாமகத்துவம் பொருந்திய பதிணெண் சித்தர்களில் ஒருவராகிய என்று தலைப்பிட்டு பதிப்பித்துள்ளனர். பதிணெண் சித்தர் பாடி சாஸ்திரம், பதிணெண் சித்தர் வாதக்கோவை, பதிணெண் சித்தர் ஞானக்கோவை, பதிணெண் சித்தர் சில்லறைக்கோவை, பதிணெண் சித்தர் மூலிகை அகராதி முதலிய தொகை நூல்களைத் தொகுத்து வெளியிட்டவர்களும் ஒரே பதியெட்டைக் கூறவில்லை. பதிணெண் சித்தர்கள் என்பது சாதாரண வழக்கத்தில் வந்து விட்டது. ஆனால் அப்பதிணெண் சித்தர்களிலொருவர் இயற்றியதென்று கூறப்படும் ஒவ்வொரு நூலிலும் வேறுவேறு பதிணெண் சித்தர்களைப் பற்றியும் கூறப்பெற்றிருப்பதால் அந்நூலை எழுதியதாகக் கூறப்படும் சித்தர் அப் பதிணெண்பரில் ஒருவரல்லர் என்று தெரியவரும். இப்படியாக எதற்கெடுத்தாலும் எல்லாப் பொருளிலும் பதினெண் சித்தர்களின் பெயர்கள் பொறிக்கப்படலாயின. ஆகவே உண்மையாகப் பதினெண் சித்தர்கள் யாவரென அறுதியிட்டுக் கூறமுடியாது.

கருவூரார் பல திரட்டு என்னும் நூலில் வரும் பாடல் வாயிலாகப் பதினெண் சித்தர்கள் பெயர் பட்டியல் ஒன்று கிடைக்கின்றது.

| | |
|---|---|
| நந்தீசர் | கண்ணர் |
| மூலத்தீசர்(திருமூலர்) | கோரக்கர் |

| | |
|---|---|
| அகத்தியர் | கமலமுனி |
| சட்டைநாதர் | சண்டிகேசர் |
| பதன்சலி | இடைக்காடர் |
| ஊனர் | சிவாயசித்தர் |
| கொங்கணவர் | போகநாதர் |
| மச்சமுனி | பிண்ணாக்கீசர் |
| காலாங்கி | சுந்தரர் |

அண்மையில் தொகுக்கப்பெற்ற சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் பதினெண் சித்தர்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அவையாவன -

| | |
|---|---|
| திருமூலர் | கமலமுனி |
| இராமதேவர் | போகநாதர் |
| கும்பமுனி (அகத்தியர்) | மச்சமுனி |
| இடைக்காடர் | கொங்கணவர் |
| தன்வந்திரி | பதன்சலி |
| வால்மீகி | நந்திதேவர் |
| போதகுரு | சட்டைநாதர் |
| பாம்பாட்டி | சுந்தரானந்ததேவர் |
| குதம்பைச்சித்தர் | கோரக்கர் |

மேலே கொடுக்கப்பட்ட பதினெண் சித்தர்களின் பட்டியல்களை கவனிக்கும் போது பலவேறுபாடுகளைக் காணலாம். இவற்றிலிருந்து சித்தர்கள் பதினெண்மார் என்றும் அனேகம் பேர் என்றும் திடமாக எண்ணத் தோன்றுகின்றது.

முன்காட்டி அட்டவனையிலிருந்து சித்தர்கள் யாவரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்லாம். ஆனால் சில சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் அண்டைய நாட்டுத் தொடர்பையும் காட்டுகின்றன. எடுத்துக் காட்டாக அழுகண்ணி, காலாங்கி, போகர் என்று மூன்று சித்தர்களும் சீனதேசத்துடனும், பூனைக்கண்ணர் எகிப்து தேசத்துடனும் நெருங்கிய தொடர்புண்டு என க.சு உத்தமராயன் கூறுகின்றார். ஆனால் தக்க ஆசிரியர்கள் கிடைக்கவில்லை.

## 1.5. சித்தர்களின் சிறப்பியல்புகள்

(அ) அட்டாங்க யோகம்

(ஆ) அட்டமா சித்து

சித்தர்களின் சிறப்பியல்புகளில் இவை முக்கிய இடம் பெறுகின்றன.

### (அ) அட்டாங்க யோகம்

சித்தர்களின் நெறியில் யோகம் குறிக்கத்தக்க சிறப்புடையது. யோகம் என்பதற்கு ஒன்று சேருதல் என்பது பொருள். இதனைப் புலன்களால் மனம் சிதறிப் போகாமல் ஒரு நிலைப்படுத்திப் பேரின்பத்தை மனத்தில் எண்ணி ஆகம விதிப்படி ஒழுகுதல் எனலாம். பரமாத்மாவுடன் ஜீவாத்மா ஒன்று சேருதல் எனவும் கூறலாம். இக் கருத்தையே உபநிடதம் கூறுகின்றது.

ஆனால் சாங்கிய யோகத்தில் யோகம் என்ற சொல்லுக்குப் பிரிதல் என்பதே இங்கு பொருளாகின்றது. பரம் பொருளைச் சேர்தலே சீவனின் குறிக்கோள் என்பதைச் சாங்கிய யோகம் ஏற்றுக் கொள்வதில்லை. அதனால் தான் யோகம் என்ற சொல் சேர்தல் என்னும் அதன் பொதுவான பொருளில் இங்கு வழங்காது, அதற்கு நேர் மாறாகப் பிரிதல் அதாவது புருடன் பிரக்கிருதியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளல் என்ற பொருளில் வழங்குகின்றது.

முதலாவதாகக் குறிக்கும் ஒன்று சேர்தல் என்னும் பொருளுக்கமைய இங்கு யோகத்தை எட்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவற்றையே அட்டாங்க யோகம் எனப்படும். அவையாவன

1. இயமம் - மனத்தூய்மை
2. நியமம் - செயல் தூய்மை
3. ஆசனம் - இருக்கை
4. பிராணாயமம் - மூச்சுப் பயிற்சி
5. பிரத்தியாகாரம் - பொறி, புலன் அடக்கல்

6. தாரணை - மனத்தை ஒரு நிலைப்படுத்தல்
7. தியானம் - இடைவிடா சிந்தனை
8. சமாதி - மனதைப் பரம் பொருளுடன் ஒன்றி நிற்றல்

இதனைத் திருமூலர் கூறுகையில்

"இயமம் நியமம்மே எண்ணில்லா ஆதனம்
நயமுறும் பிராணாயாமம் பிரத்தியாகரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்கம் ஆவது மாமே"

என்கிறார்

இனி இவற்றை சுருக்கமாகக் காணலாம்

இயமமும் நியமமும் முறையே மனத்தூய்மையும், செயல் தூய்மையையும் குறிக்கும். "நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து, நல்லவற்றை அடைவாயாக" என்று யாழ்ப்பாணச் சித்தர்களுள் ஒருவரான யோக சுவாமிகள் அடிக்கடி கூறுவார். ஔவை பிராட்டியும் 'அறம் செய்ய விரும்பு' என்று கூறியிருப்பது அறம் செய்யும் படி வற்புறுத்தாமல் அதனை விரும்பு என்று கூறியமை நல்ல மனத்தூய்மையின் அவசியத்தை பேணுவதற்காகவே எனலாம்.

மக்கள் அறிவுடையவர்கள் அத்துடன் நன்மை தீமைகளைப் பகுத்தறியக் கூடிய பகுத்தறிவாளர்கள். ஒழுக்கத்தை உயிரினும் மேம்பட்டதாக கருதினவர்கள். இதனையே தொல்காப்பியத்தில்.

"மாவும் மக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறிவு உயிரே"

என்பதில் தொல்காப்பியர் விலங்குகளும், விலங்கின் குணமுடைய மனிதர்களும், பகுத்தறிவற்றவர்கள், ஆறாம் அறிவைப் பயன்படுத்தும் அறச் சார்புடையவர்களே உண்மையான மக்கள் என்பதனையும் சுட்டுவதாகக் கொள்ளலாம். மனதையுடையவன் மனிதன் எனலாம். இதனால் நன்மை தீமைகளையறிந்து, நல்ல

மனதுடன், நல்ல செயல்களை செய்து, ஒழுக்கமான வாழ்வு வாழ்ந்தால் கவலை, துன்பம் ஆகியவற்றால் தாக்கப்படாமல் நரை, திரை, மூப்பு, பிணிகளுக்கு அப்பாற்பட்டு வாழலாம் என்பதே சித்தர்களது வாழ்க்கை நெறியாகவுள்ளது.

மனத்தின் தொழில் நினைத்தல், நினைத்தவற்றைச் செயற்படுத்துவது செயல் எனலாம். இவை இரண்டும் ஒன்றுக் கொன்று மிகுந்த தொடர்புள்ளவை.

இயம நியமத்தைப் பற்றி திருமூலர் குறிப்பிடும்போது

“கொல்லான் பொய் கூறான் கனவிலான் எண்குணன்
நல்லான் அடக்க மடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசில்லான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில் நின்றானே”

எனவும்.

“தூய்மை அருளுண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளத்தலே மாற்றிவை
காமம் களவு கொலை யெனக் காண்பவை
நேமி யீரைந்து நியமித்தனாமே”

எனவும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கொலை செய்யாமை, பொய் சொல்லாமை, களவு செய்யாமை, அடக்க குணமுடையவன், குற்றாமில்லாததும் பகுத்து உண்பவனும், கள், காமத்தை நீக்குபவனும் அனைத்தும் இயமம் என்கிறார் திருமூலர்.

சித்த மருத்துவத்தில் நல்ல மனத்தினைக் கொண்டிருப்பதும் நல்ல செயலைச் செய்வதும் கற்ப மருந்தாகும். ஒருவன் தீய செயலைப் புரிவானாயின் அவன் மனத்திலுண்டாகும் எண்ணங்களாலும் கவலைகளாலும் களைப்படைந்து, சோர்வுற்றுத் துன்புறுவான். கொடிய செயல்களைப் புரிந்தால் மனம் அவனை உறுத்திய வண்ணமாயிருக்கும் இதனைத் “தன் நெஞ்சே தன்னைச்

சுடும;" என்னும் குறள் மொழியால் அறியலாம். தீய செயல்களால் ஒருவர் பாதிக்கப்படும் போது மனப் போராட்டமும், மன வேதனையும் உண்டாகும். இவ் வேதனையால் நரையுண்டாகும். நரையால் மூப்புண்டாகும். இதனால் பிணியையும் தொடர்ந்து மரணத்தையும் உண்டாக்கும். நல்ல செயல்கள் செய்து வந்தால் அது ஒருவனைப் பன்னெடுங்காலம் நரை, திரை, மூப்பு, பிணியின்றி வாழச் செய்யும்.

நியமம் தவறி தீய செயல்களைச் செய்வதால் இருவகையான தீங்குகள் ஏற்படும். ஒன்று உடல் நோய், மற்றையது மனத்துக்கு உண்டாகும் மனநோய். மனத்துக்குண்டாகும் கேடு இயமத்துட் சாரும். உடலுக்கு உண்டாகும் கேட்டினைக் கீழ் வருவனவற்றால் தெரிந்து கொள்ளலாம். ஆகார நியதிகளும் நல்லொழுக்கமும் தவறின் அது நோயைப் பிறப்பிக்கும். குறைவான உணவு, மிகுந்த உணவு, காலந்தப்பிய உணவு, மாறுபாடுள்ள உணவு ஆகியவற்றால் உடல் பல பிணிகளுக்கு உட்படும். இது போலவே பல் துலக்கல், குளித்தல் போன்ற நாள் ஒழுக்கங்கள் தவறினும் நோய் உண்டாகும். கள் குடித்தல் போன்ற தீயபழக்கங்களாலும் உடலுக்கு கெடுதல் செய்யும். காமத்தால் பொருட் செலவும் கடும் நோய்களும் உண்டாகும். சண்டை முதலியவற்றால் உடல் கேடிறும். இவற்றால் ஆயுள் குறையும்.

உடற் தூய்மையைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடும் போது

"புறத் தூய்மை நீராண் அமையும்
வாய்மையால் காணப்படும;"

என்கிறார்.

உடம்பில் உள்ள வெளி அழுக்கை அகற்றுவதற்குத் தண்ணீர் தேவை. அதே போல் அகத்தைத் (மனதை) தூய்மை செய்ய வாய்மை என்னும் ஒழுக்கம் தேவை என்பது இவ்வரிகளின் பொருளாகும்.

ஒவ்வோர் உடல் உறுப்புடனும் இணைக்கப்பட்டிருக்கும்

நரம்பு உணர்ச்சிகளை மனதினைச் சார்ந்து இருப்பதால் அளவுக்கு மீறிய கோபம் வரும் போது கண் சிவத்தலும், உடல் சூடேறுவதும் உண்டாகின்றது. கோபம் தணிந்ததும் களைப்பும் சோர்வும் உண்டாகின்றன. மனத்தில் மாறுதல் உண்டாகிற போது உடலிலும் மாறுதல் உண்டாகின்றது. அவ்வாறே உடலிலும் உண்டாகும் மாறுதல் மனத்தையும் பாதிக்கின்றது. உள்ளம் தளர்வுறும் போது உடலும் தளர்வுறும். இதனால் உண்டாகும் நோயை உள உடல் நோய் (Psychosomatic Disease) எனலாம். ஒன்று வலிவு பெறும் போது மற்றதும் வலிமை பெறுகின்றது. இதனிலிருந்து இரண்டுக்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பை அறியலாம். மனம் தூய்மையானால் அது உடலுக்கும் நலம் விளைவிக்கின்றது. நன்மையுண்டாக்கும். உடலை நல்ல நிலையில் வைத்திருக்க மனத்துாய்மை வேண்டும்.

"மனநலம் மன்னுயிர்க் காக்கும்"

என்று வள்ளுவர் இயமத்தின் சிறப்பைக் கூறுகின்றார். மேலும் மனத்தால் உண்டாகும் காமம், வெகுளி, மயக்கம், அவா, துன்பம் ஆகியவை நீங்கப் பெறின் உடலை நோய் சேராது. இதனை

"காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும்
நாமங் கெடக் கெடும் நோய்"

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

இயம நியமத்தின் சிறப்பை

"மனமது செம்மையானால்
மந்திரஞ் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால்
வாயுவை ஒற்ற வேண்டாம்
மனமது செம்மையானால்
வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால்
மந்திரஞ் செம்மை யாமே"

என அகத்தியர் ஞானம் கூறுகின்றது.

இனி ஆசனம் பற்றிக் கவனிப்போம். ஆசனம், இருக்கை, ஆதனம் முதலிய சொற்களால் குறிக்கப்படும் யோகாசனத்தால் சித்தர்கள் சித்தியடையும் பொருட்டு தமது உடலை வலுப்படுத்திப் பேரறிவு பெற்றனர். பிராணாயாமம் போன்றே ஆசனமும் உடல் நலம் காக்கும் மருந்தாகும். பிராணாயாமம், ஆசனம், குண்டலினியை எழுப்பல், மதியமுது உண்ணல் ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உள்ளவை. இவற்றுள் மதியமுது என்பது தீர்த்தம், சிவக்குடிலை நீர் என அழைக்கப்படும் யோகமுப்பாகும். இதுவும் கற்பமாகும். ஆசனம், பிராணாயாமம் ஆகியவற்றினைப் பயிற்சி செய்வதனால் மதியமுதம் உடலிலே ஊறிக் காயத்தைக் கற்பமாக்கும்.

அட்டாங்க யோகத்தின் முதல் நான்காம் அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் ஆகியவற்றை மட்டும் சரிவரக் கடைப்பிடித்தாலேயே இவ்வுலகில் இன்புற்று வாழலாம் எனலாம். இந்நான்கையும் சரிவரப் பின்பற்றி வருகையில் மற்றைய நான்கும் படிப்படியாகக் கைகூடும் என்பது உண்மை. இவ்வுண்மையை உய்ந்துணர்தலின் மூலமாகவே அனுபவத்தினால் உணரலாம். இவற்றிற்கு விஞ்ஞான விளக்கங்கள் எதுவும் சான்றாகக் காட்டமுடியாது. ஏனெனில் ஒருவரது அறிவினைப் பரீட்சிக்கலாம் - சடப்பொருட்களைப் பரிசோதிக்கலாம். ஆனால் உணர்வுகளை அனுபவத்தால் உணரலாமேயன்றிப் பரீட்சித்து நிறுவுதலாகாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் டாக்டர் இராதாகிருஷ்ணனின் கூற்றைக் கவனிப்போம். "உலகை விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்தால் உலகு பற்றிய உண்மை அனைத்தையும் நாம் உணர முடியாது. விஞ்ஞானம் நமக்களிக்கும் அறிவுக்கும் வரம்புகள் உண்டு" என்கிறார்.

இக்கூற்றுக்கு அரணாக டாக்டர் புது ஜெயப்பிரகாஷ் நாராயணன் "சில உண்மைகளை ஆய்வுகூட பரிசோதனைகள் மூலமாக கண்டறிய முடியாது. உய்ந்துணர்தலின் மூலமாகவும் அனுபவத்தின் மூலமாக மட்டுமே கண்டறிய முடியும்". எனக் கூறுகின்றார். இவற்றிலிருந்து அட்டாங்க யோகம் பற்றி உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம்.

சித்தர்கள் அட்டாங்க யோகத்தினால் தம்மைத்தாமே வளம்படுத்தி வாழ்ந்தமையால் அவர்கள் எண்மரும் சித்திகளைப் பெற்றனர். ஆனால் சித்திகளை நோக்கி அவர்கள் செல்லவில்லை. சித்திகளே அவர்களை நோக்கிப் பின்தொடர்கின்றன எனக் கூறுவது பொருந்தும். இனி எண்பெரும் சித்திகளைப்பற்றிப் பார்ப்போம்.

## (ஆ) எண் பெரும் சித்திகள் (அட்டமா சித்து)

சித்தி பெற்றகாரணத்தினாலேயே சித்தர்கள் என்று அழைக்கப்பெற்றனர். இதனால் சித்தர்கள் இறைவனைக்கண்டு தெளிந்தவர்கள் என்றும் கூறலாம். சித்தர்கள் இவ்வுலகில் நடமாடும் மனிதர்களில் தெய்வத்தன்மையுடையவர்களாவர். இவர்கள் எண்பெரும் சித்திகள் பெற்றவர்கள் எனத் தாயுமான அடிகள் பின்வருமாறு குறிப்படுகின்றார்.

"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடி வேம் புலி வாயையும் கட்டலாம் ஒரு சிங்க
முதுகின் மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
அவந்தணலின் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறெருவர் காணாமல் உகத்துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சாந்தமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுத்தலாம்
சலமேல் நடக்கலாம் கனல் மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்"

இப்பாடலிலருந்து சித்திபெற்றவர்கள் செய்யக்கூடிய புதுமைகளை உணரமுடியும்.

திருமூலரும் எண்வகைச் சித்தி பற்றி

"குறவன் அருளில் குறிவழி மூலப்பரையின்
மணமிகு சங்கட்டம் பார்த்து
தெரிதரு சாம்பவி சேகரிசேர

பெரிய சிவ கதி பேரெட்டாம் சித்தியே''
எனக்குறிக்கின்றார்.

குருவின் அருளினால் மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தி ஜீவ சக்தியுடன் பொருந்தி சுவாதிட்டான வழியாகப் பாய்வதைத் தடுத்துத் தியான முறையில் சாம்பவி, சேகரி ஆகிய இரு நாட்டங்களில் ஏதேனுமொன்று சேருமானால் பெரிய சிவகதியைப் பெற்று அதன் பேறாகிய அட்டமாசித்திகளை அடையலாம் என்பது பொருளாகும்.

எண்பெரும் சித்திகள் பற்றிப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் அட்டமாசித்தி உபதேசித்த படலம் என்ற பகுதியில் ஏழு பாடல்களில் விளக்குகின்றார்.

**எண்பெரும் சித்திகள்**

| | | |
|---|---|---|
| 1 | அணிமா | - அணுவிலும் சிறியது |
| 2 | மகிமா | - பெரியதில் பெரியது |
| 3 | இலகிமா | - இலகுவாதல் (பாரம் குறைதல்) |
| 4 | கரிமா | - பாரம் கூடுதல் |
| 5 | பிராப்தி | - நினைத்தபொருளைப் பெறுதல் |
| 6 | பிரகாமியம் | - விரும்பிய செல்களைப் பெறுதல் |
| 7 | வசித்துவம் | - வசியமாதல் |
| 8 | ஈசத்துவம் | - இறைவனுடன் சேருதல் |

**அணிமா**

அணு என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. அணிமாவாவது அணுவாகும் தன்மை. அணுவைக்காட்டிலும் நுண்ணிய பொருள்களை ஆராய்வதற்கு இது உதவியாகவிருக்கும். தன்னை மிக நுண்ணியதாக உருவாக்கி வேறொருவர் காணாமல் உலகத்தில் உலாவுவதற்குச் செய்யும் சித்தி இதுவே. சிவனின் அருவத்திருமேனி அணிமா என்ற சித்தியைக் குறிக்கும்.
இதனை மாணிக்கவாசகர்

"அணு அணுவில் இறந்தாய் என்று
அங்கு எண்ணந்தான் தடுமாறும்
இமையோர் கூட்டம் எய்துமாறு"

அறியாத என்தாய் என்று அருளியதும் இது கருதியே. பின்பும் இறைவனுடைய தன்மையைக் கூறுமிடத்து

"அண்டங்களெல்லாம் அணுக்களாக
அணுக்களெல்லாம்
அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினும்"

என்று கூறுகின்றார்.

இக்கருத்தை விளக்கும் ஒரு கதையை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகும். ஒரு காலத்தில் தேவர்கள் சிவனைக் காணும் பொருட்டுக் கையிலைக்குச் சென்றனர். ஆனால் அங்கே இறைவனைக் காணாமல் திகைத்தனர். உண்மையில் இறைவன் அங்கு அணுவடிவாகவிருந்து அவர்களின்கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தார். இங்ஙனம் இறைவன் அவர்களின் முன் இருந்தும் கண்ணுக்குப் புலனாகாதிருந்த சித்தியே அணிமா எனலாம். மேற்குறிப்பிட்ட கதையிலிருந்து இறைவன் எங்கும் நிறைந்து இருக்கின்றான். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்ற தத்துவக் கருத்தைப் புலப்படுத்துவதாகும் எனலாம்.

மகிமா

மா என்ற சொல்லே மகிமை என்று திரிந்தது. தன்னைப் பெரிய உருவமாக்குதல். மகிமையாகும் தன்மை மகிமா எனப்படும். அணுக்களெல்லாம் அண்டங்களாக விரியுமாறு காண்பது மகிமாவாம். இச்சித்தியை விளக்க ஓர் கதையை கந்தபுராணத்திலிருந்து குறிப்பிடலாம். சூரனுடன் போர் மூழும் சமயத்தில் போர்க்களத்தில் முருகப்பெருமான் கொண்ட பேருருவக்காட்சி மகிமாவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மேலும் திருமாலின் கிருஷ்ண அவதாரத்தில் கிருஷ்ணபகவான் அஸ்தினபுரத்துக்குப் போர் மூளமுன்னர் போர்க்களத்தில் விஸ்பரூபத்தினை எடுத்து தனது சக்தியினை வெளிப்படுத்தினார். ஒவ்வொரு உயிருக்கும் முதலிற் காட்டிய அணிமாவையும் இம்மகிமாவையும் இயற்கையாகவே கொண்டுள்ளன.

எவ்வாறெனின்கரு உருவமடையும் போது மிகச்சிறியதாக இருக்கும். பின் பெரிதாகிப் பிறந்து வளர்ந்து இவ்வரிய உருவடைவது மகிமாவாகும். பின் பெரிதாகிப் பிறந்து வளர்ந்து இவ்வரிய உருவடைவது மகிமாவாகும் பின்னர் உடலைவிட்டு உயிர் பிரியும் போது அணுவுருவாகும்.

### இலகிமா

இது இலகு என்ற சொல்லில் இருந்து வந்தது. இது பாரமின்மையைக் குறிக்கும். சித்தர்கள் செய்யும் வித்தைகளான நீர் மேல் நடத்தல், விண்ணில் உலாவுதல் முதலியன இச் சித்தியின் மகிமையாலேயே ஆகும். சமணர்கள் சைவ சமயக்குருவராகிய திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லுடன் கட்டிக் கடலில் எறிந்தபோது “சொற்றுனை வேதியன்” என ஆரம்பிக்கும் தேவாரத்தைப் பாடக் கல்லானது தெப்பமாக மிதந்தது என்ற செய்தி இச் சித்திக்கு ஓர் எடுத்துக்காட்டாகலாம்.

### கரிமா

கரிமா என்றால் கனத்தைக் (பாரம்) குறிக்கும். ஒரு பொருளின் நிறையை அதிகரிக்கச் செய்வதே கரிமா எனலாம். இது கடுகைக் கூட மலையளவு கனமுடையதாகக் காட்டும். சித்தியாகும். இதற்கு எடுத்துக் காட்டாக விநாயகர் புராணத்திலுள்ள கவுண்டிய முனிவர் விநாயகரை அர்ச்சித்த சிறு அறுகம்புல்லுக்கு ஈடாகக் குபேரன் தன் செல்வம் முழுவதையும் இழந்தமையைக் கூறலாம்.

### பிராப்தி

இங்கு பெறுமதி என்பது பெறுத்தி. அதாவது பெறும் தன்மை இது பிராப்தி என மருவி நின்றது. சித்தர்கள் நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் பெறமுடிவது பிராப்தி என்ற சித்தி அவர்களுக்கு இருந்தமையாலேயேயாகும். காரைக்கால் அம்மையார் கதையில் அவர் தம் கணவர் தந்த இரு மாம்பழங்களுள் ஒன்றை அடியார் ஒருவருக்கு அளித்தார். இதை அறியாத அவர் கணவர் இரு மாம்பழங்களையும் கொண்டு வருமாறு கேட்கவே அம்மையார்

உள்ளே சென்று இறைவனிடம் வேண்டி நின்ற போது இறைவன் அருளால் பெற்ற மாங்கனி பிராப்தி என்ற சித்திக்கு சிறந்த உதாரணமாகும்.

கைலைமலை காணச் சென்ற திருநாவுக்கரசு நாயனார் இறைவனருளால் அக்காட்சியைத் திருவையாற்றில் கண்டு மகிழ்ந்தமை இப் பிராப்தியின் பயனே எனலாம்.

### பிரகாமியம்

காமம் என்பது விருப்பம் காமியம் என்பது விரும்பியவற்றைக் குறிக்கும். பெறுகாமியம் என்பது விரும்பியவற்றைச் செய்து காட்டும் ஆற்றல் அடைதல். இதுவே திரிபு அடைந்து பிரகாமியம் ஆயிற்று எனலாம். பலவகைப்பட்ட சித்தி வேறுபாடுகள் இதனுள் அடங்கும். நாம் சிவனடியார்களை அரவணைத்து அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் நாம் சில சித்திகளை அடைய முடிவதே பிரகாமியம் ஆகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக முருகப்பெருமானோடு போர் தொடங்கிய சூரபதுமன் காட்டிய பலவிதமான விந்தை செயல்களையும் பிரகலாதன் திருமாலை தூணில் தோன்றச் செய்த செயல்களையம் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

### வசித்துவம்

வசம் என்பது கீழ்ப்படிதல் வசியம் என்பது வசப்படுதல் அதாவது பிறர் உள்ளத்தை தன் உள்ளத்தால் கட்டிக் கவர்ந்து அவர்களைத் தன் எண்ணப்படி நடத்துவதே வசித்துவம் எனலாம். ஆன்மீகவாதிகள் மக்களைக் கவர்ந்து அவர்களை நல்வழிப்படுத்துவது வசித்துவம் என்ற சித்தி அவர்களுக்கு இருப்பதினாலேயே எனலாம். சிதம்பரத்திலே வாதாடிய புத்தரை மாணிக்கவாசகர் இவ்வசித்துவத்தினாலேயே வென்றார். இதே போல் வள்ளலார் ஆறுமுகநாவலரையும் வசியத்தினால் ஆட்கொண்டமையையும் கூறலாம்.

**ஈசத்துவம்**

ஈசன் கடவுள், ஈசன்தன்மை கடவுள் தன்மை. கடவுள் தன்மை பெற்று படைத்தல், காத்தல். அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெரும் செயல்களைப் புரிவது ஈசத்துவம் ஆகும். ஞானசம்பந்தர் அரவம் தீண்டி இறந்த பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பை உயிர்பெறச் செய்தது இச்சித்தியின் மகிமையே.

மேலே கூறப்பட்ட எண்பெரும் சித்திகளும் இறைவனின் மெய் அடியார்களைத் தாமே சென்றடையும். இச்சித்திகளை அவர்கள் விரும்புவதில்லை. ஆனால் இச்சித்திகளைப் பெற்ற சித்தர்கள் ஏனைய உயிர்களைக் காக்கும் பொருட்டே இச்சித்திகளை சகலநன்மைக்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

மறுப்பது உடல்நோய் மருந்து எனலாகும்
மறுப்பது உளநோய் மருந்து எனலாகும்
மறுப்பது இனி நோய் வராதிருப்ப
மறுப்பது சாவை மருந்து எனலாகும்

- திருமூலர் -

மறுப்பது மருவி மருந்தாகியதோ ?

சிந்திக்க!

## 1.6. ஈழத்துச் சித்தர்கள்

ஈழத்திலேயும் சித்தர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை வரலாற்று ரீதியாகவும், கர்ணபரம்பரைக் கதைகள் ரீதியாகவும் அறியக் கிடக்கின்றது. லெமூரியாகண்டம் இருந்த காலத்தில் அதாவது இந்து சமுத்திரம் தரைப்பரப்பாக இருந்த காலத்தில் ஈழமும், பாரதமும் ஒன்று சேர்ந்திருந்தன. சித்தர்கள் வரலாறு பற்றிப் பார்க்கும்போது நிஜானந்த போதம் என்ற நூலின் படி கோரக்கச் சித்தர் இலங்கையின் கிழக்குப்பகுதியிலுள்ள திருகோணமலையில் சமாதியடைந்ததாக அறிகிறோம். திருகோணமலையில் சரித்திரப்புகழ் பெற்றதும் பாடல் பெற்றதுமான சிவத்தலம் ஒன்று இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தலத்தைக் கோணேஸ்வரம் என்று அழைப்பர். சித்தர்கள் வாழ்ந்த இடங்களில் சிவத்தலங்கள் இருந்திருந்தன என்ற மரபுக்கேற்ப இத்தலம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈழவளநாட்டைச் சிவபூமி என்று திருமூலர் குறிப்பிடுவதாக ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் கீழ்வரும் பாடல் மூலம் விளக்குகின்றார்.

"இடைபிங்கலை யிமவானோ **டிலங்கை**
நடுநின்ற மேருநடுவாஞ் சுழுமுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர் வொன்றி யென்னும் பரமாம் பரமே"

இத்தகைய சிவபூமியில் சித்தர் பரம்பரை ஒன்று இருந்து வந்திருக்கின்றது என்றும், ஏதேச்சையாக வாழ்ந்து வந்த இவர்கள் பொதுவான சமூக வாழ்க்கையிலிருந்து விலகியிருந்தமையால் ஏட்டிலும் இலக்கியத்திலும் அதிகம் இடம்பெறாமல் போயினர் என்றும், மனத்தில் தோன்றும் சகலவிதமான ஆசைகளையும் நீக்கி ஆன்மாவில் முழுநிறைவு எய்தும் சாதுக்கள் தங்களைப்பற்றிய செய்திகளையும், தகவல்களையும் பிறருக்கும் கூறுவதில்லையென்றும், இதனால் சித்தர்களைப்பற்றிய வரலாறுகள் சரிவரத் தெரியப்படாமல் மறைந்து போயின என தமிழ் அறிஞர் அமரர் க. கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஈழத்தில் சித்த மருத்துவத்தை மேற்கொண்ட சித்துடைய மருத்துவர்கள் அனேகம் பேர் இருந்தும் அவர்களுடைய சிறப்புக்கள் பற்றி நூல்களில் குறிப்பிடாமையோ அல்லது அவர்களுக்கென நூல் உருவாக்காமல் விட்டமையோ ஒரு குறையாகவேயுள்ளது. இக்குறையை ஓர் அளவு ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் நீக்கமுற்பட்டாலும் மருத்துவத்தில் மேம்பட்ட சித்தர்களைத் தவறவிட்டு விட்டார் என்றே கூறவேண்டும். ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஈழத்தில் 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆன்மீக வாதிகளின் வாழ்க்கை வரலாறுகளைத் திரட்டி ஈழத்துச் சித்தர்கள் என்ற பெயருடன் நூல் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இருந்தும் ஈழத்து பதினாறு சித்தர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை இங்கு தந்துள்ளார்.

அவர்களின் பெயர்கள் பின்வருமாறு -

| | |
|---|---|
| 1 - கடையிற்சுவாமிகள் | 2 - பரமகுரு சுவாமிகள் |
| 3 - குழந்தைவேற் சுவாமிகள் | 4 - அருளம்பல சுவாமிகள் |
| 5 - யோகர் சுவாமிகள் | 6 - நவநாத சுவாமிகள் |
| 7 - பெரியானைக்குட்டி சுவாமிகள் | 8- சித்தானைக்குட்டி சுவாமிகள் |
| 9 - சடைவரத சுவாமிகள் | 10 - ஆனந்தகடாற்சரகுரு |
| 11 - செல்லாச்சி அம்மையார் | 12 - தாளையான் சுவாமிகள் |
| 13 - மகாதேவ சுவாமிகள் | 14 - சடையம்மா |
| 15 - நாகநாதசித்தர் | 16 - நயினாதீவுச் சுவாமிகள |

இவற்றிலிருந்து ஈழத்தில் பதினாறு சித்தர்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்று கூறும் மரபு ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையெனலாம். எனினும் இவர்களுடன் செல்வச்சந்நிதி மருதவாணர், கோண்டாவில் குடைச்சாமியார் இவர்களையும் சேர்த்து பதினெட்டு என்னும் மரபு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பகுதி 2

## 2.1. தத்துவ அறிவும் மருத்துவமும்

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மையென்பது பொருள் ஆகும்.

தத் + துவம் என்பதில் வட மொழியிலே "தத்" என்றால் "அது" எனவும், "துவம்" என்றால் " நீ", எனவும் பொருள். " தத்துவம்ஸி" என்பது உபநிடத மகாவாக்கியங்களில் சிறப்பானதொன்றாகும். "நீ அதுவாகின்றாய்" என்னும் கருத்தின் படி நீ (அது) பிரம்மமாகின்றாய் அல்லது "உண்மையை அறிந்தவன் உண்மைப்பொருளாகின்றான்" என்பதனை உணர்த்தும் மிகப்பெரிய வாழ்வியல் உண்மையினை தெரிவிக்கின்றது.

மேலும் தத்துவ ஞானம் என்பதற்கு உண்மையை அறிதல் எனலாம். உண்மை என்பதற்கு உள்ளது அதாவது என்றும் உள்ளது என்பதே கருத்து.

உலகில் கண்ணுக்குத் தெரிகின்ற ஐம்பொறி புலன்களால் உணரப்படுகின்ற எல்லாப்பொருள்களும் உண்மையல்ல. இவையனைத்தும் இடையறாது மாறிக் கொண்டிருப்பதால் இவற்றைச் சித்தர்கள் பொய்ப்பொருள் என்கின்றனர். அப்போது மெய்ப்பொருள் யாது என்று வினாவும் போது எல்லாவற்றையும் கடந்த மாறாத பொருள் ஒன்று உண்டு எனவும், அப்பொருள்தான் இவ்வுலக இயக்கத்துக்கு மூலகாரணமென்றும் அதுவே மெய்ப்பொருளாகும் எனவும், அதனை அறிவதற்குப் பயன்படும் ஆராய்ச்சியே தத்துவ ஞானம் ஆகும்.

உண்மையான என்றுமே உள்ள பொருட்களின் தத்துவத்தை ஆராய்வது மெஞ்ஞானமெனவும், அழியும் அல்லது மறையும் அதாவது பகுதிகளாகப் பிரியும் பொருட்களை ஆராய்வது விஞ்ஞானம் எனவும் கூறலாம். இதனை W. C. டேம்பியர் வேதாம் (W. C. Dampier Whetham) என்பவர் "விஞ்ஞானம் எங்கே முற்றுப்பெறுகின்றதோ, அங்கே மெஞ்ஞானம் (சமயம்) தொடங்குகின்றது" என்கிறார்.

மெஞ்ஞானக் கொள்கைகளுக்கும் மக்களது வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. பாரத தேசத்தில் சமயம் வேறு, தத்துவஞானம் வேறு என்று இல்லாமல் அவையிரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து இருப்பதாகவும், இந்திய தத்துவ ஞானம் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமன்றி, முறையாக வாழ்வதற்கும் வழி காட்டுகின்றது எனவும், கொள்கையளவில் மட்டும் நில்லாது வாழ்க்கையோடு ஒன்றாகக்கலந்து நிற்பதே இந்திய தத்துவஞானத்தின் முக்கியமான சிறப்பியல்பு எனவும் பேராசிரியர் ஹரியண்ணா கூறுகின்றார்.

நவீன விஞ்ஞானம் இவ்வுலகில் காணப்படும் பொருட்களைப்பகுத்து பௌதீகம், வேதியல், உயிரியல் (Physics, Chemistry, Zoology) என்று வகைப்படுத்துகின்றது. சித்தர்களின் தத்துவங்களிலும் மேற்குறிப்பிட்ட மூன்றினையும் காணக்கூடியதாகவுள்ளது. நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை ஆய்வு கூடங்களில் ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றனர். ஆனால் மெஞ்ஞான தத்துவங்களைப் அப்படிச் செய்யமுடியாது. மெஞ்ஞானிகளும், தத்துவஞானிகளும் தத்துவராய்ச்சிக்குத் துணையாகும் சாதனங்களை ஆராய்வதிலும் பெரிதும் ஈடுபட்டனர். சாதனங்கள் அறிவைப்பெறும் வழிகளைக்குறிக்கும். இவைகளை பாதிக்கப்படுன்றது. இதுவே நோய் என்று சொல்லப்படுகின்றது.

வளி, அழல், ஐயம் ஆகிய உயிர்த்தாதுக்களில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வால் உண்டாகும் குறி குணங்களின் மொத்தமே நோய் எனப்படும். இதனை வள்ளுவர்

“மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று”

என்கிறார்.

நோய் ஏற்பட்ட பின்னர் கொடுக்கப்படும் மருந்துகள் ஐம்பூதத்தை ஆதாரமாக் கொண்டு சுவை, வீரியம் என்பவைக்கேற்ப அமைய வேண்டுமென்பது சித்த மருத்துவ விதியாகும். இவை

அனைத்தும் தொண்ணுற்றாறு தத்துவங்களில் அடங்குகின்றன. இதிலிருந்து மருத்துவத்துக்கும் தத்துவங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது தெளிவாகின்றது.

மேலும் பிறப்பின் நோக்கமாகிய வீடுபேறு அடைவதற்குக் கருவியாக இருப்பது மெய்ஞானமாகும். அம்மெய்ஞானத்தை நல்குவது சித்தாந்தம் எனலாம். மெய்ஞானத்தின் துணைகொண்டு வீடுபேறு அடைவதற்கு விரைவில் அழியும் உடம்பை நீண்டநாள் சுகத்துடன் அழியாமல் வாழுவதற்கு வைத்திருக்கும் முறையாகிய "காய கற்பம்" என்ற துறையையும் விளக்குவது சித்தர்கள் சித்தாந்தம். எனவே சித்த மருத்துவர்கள் சித்தாந்தம் கற்க வேண்டியது அவசியம் எனலாம். இனி பொருள் தத்துவம் பற்றிக் கவனிப்போம்.

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்

- குறள் -

**பொருள் தத்துவம்**

பொருள் என்பது மூன்று வகைப்படும்.

1. முதல் பொருள்
2. கருப் பொருள்
3. உரிப் பொருள்

"முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை"

(அகத்திணை இயல்)

பொருள்தத்துவம் பற்றிப் பார்க்கையில் மூன்று என்றும், அது மேலும் விரிந்து செல்வதாகவும், அதாவது முதல் பொருள் மேலும் இரண்டாகப் பிரிவதாகவும்

"முதல் எனப்படுவது நிலம் பொழுதிரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே"

(அகத்திணை இயல்)

இவ்வாறு நிலம், காலமெனப் பிரிகின்றது எனலாம்.

I. நிலம் - நிலத்துக்குக் காரணமாகிய நீரும், நீருக்குக் காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகியகாற்றும், காற்றுக்குக் காரணமாகிய ஆகாயமும் எனலாம்.

II. காலம் - மாத்திரை முதலாக நாழிகை, சாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள். இருது, அயநம், ஆண்டு, யுகம் எனப் பலவகைப்படும்.


கருப்பொருளாவது நிலத்திலும், காலத்திலும் தோன்றும் பொருள். அவை தேவர், மக்கள், விலங்கு முதலியனவும், உணவு, செயல் போன்றனவும எனலாம்.

உரிப்பொருள் என்பது மக்கட்குரிய பொருள் என்றும் அது அகம், புறம் என இருவகைப்படும். அகமாவது உள்ளத்தில்

உணரப்படும் உணர்வுகளைக்குறிக்கும். எடுத்துக்காட்டாக இரங்கல், புறமானது மறஞ்செய்தல், அறஞ்செய்தலைக் குறிக்கும். இது பிறருக்குத் தெரிவதால் புறப்பொருள் எனலாம்.

உலகத்துப்பொருள் எல்லாவற்றையும் முதல், கரு, உரிப்பொருள் எனக்கூறி உருவத்தினால் உருவப்பொழுதினையும் செய்கையினாலும், பண்பினாலும் அருவப்பொருளையும் கூறியுள்ளார்கள்.

இவ்வுலகத்தில் காணப்படும் முதல், கருப்பொருளாகிய அருவ, உருவப்பொருட்களில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் பொதிந்து கிடக்கின்றது.



## 2.2. சித்தாந்தஅளவைகளும் சித்தமருத்துவமும்

அளவை என்று கூறுமிடத்துப் பொருட்களின் மிகநுட்பமான அறிவு எனலாம். இதனைப் பிரமாணம் என்றும் கூறுவர். கண்ணால் காணும் பொருட்களை அளத்தற்கு நீட்டல், நிறுத்தல், முகட்டல், எண்ணல் போன்ற அளவைகள் இருப்பதுபோல் கண்ணால் காணமுடியாத ஆன்மா, இறைவன் போன்றவற்றை நிரூபிப்பதற்கு ஓர் அளவுநூலாகப் பயன்படுவது அளவை எனலாம்.

இவை சித்ததத்துவங்களை ஆராய்ந்து அறிவதற்கும், சித்தமருத்துவ நோய்க்கணிப்பு முறைகளை அறிவதற்கும் அளவைகளாகவும் உதவுகின்றன. நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை ஆய்வுகூடத்தில் ஆய்ந்து உண்மையை அறியலாம். ஆனால் சித்ததத்துவங்களை ஆய்வுகூடத்தில் ஆய்வுசெய்ய முடியாது. அவற்றை ஆய்ந்து உணர்ந்தே அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு சித்தமருத்துவத் தத்துவக்கருத்துக்களை ஆய்ந்து நிரூபிப்பதற்கும் இவ்அளவைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு சித்தமருத்துவக் கருத்துக்களை ஆராய்ந்து உண்மைகளை வெளிக்கொண்டு வருவதால் மருத்துவ உலகம் இவற்றினை நன்கு வரவேற்கும் எனக் கருதலாம்.

அளவைகள் பற்றிச் சிவஞானசித்தியாரில்

“அளவை காண்டல் கருதல் உரை
அபாவம் பொருள் ஒப்பு ஆறு என்பர்
அளவை மேலும் ஒழிபுண்மை
ஐதீகத் தோடு இயல்பு என நான்கு
அளவை காண்பர், அளவை யீற்றின்
மேலும் அறைவர் அவை எல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை
என் இம்மூன்றில் லடங்கிடுமே”

எனக் கூறப்பட்டுள்ளது.

அளந்தறியும் பிரமாணமாவது காட்சி, கருதல், உரை, அபாவம், பொருள், ஒப்பு என ஆறு என்று சொல்லுவர். அவ்வாறு கூறிய பிரமாணத்தின் மேலும் ஒழிபு, உண்மை, ஐதீகம், இயல்பு என நான்கு அளவை கூறுவர். இவ்வாறு கூறிய பத்துவகை அளவைகளும் பிரமாணம் உண்டெனக் கூறுவர். ஆனால் அவையெல்லாம் காட்சி, கருதல், உரை என்ற மூன்றினுள் அடங்கும் எனலாம்.

இந்த அளவை பற்றி தொல்காப்பியம், மணிமேகலை ஆகிய பழம்பெரும் நூல்களிலும் இருப்பதைக்கொண்டு இதன் தொண்மையை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக மணிமேகலையில் கீழ்க்கண்டவாறு குறிப்புக்கள் இருப்பதைக் காணலாம். அவையாவன,

"காண்டல் கருதல் உவமம் ஆகமம்
ஆண்டய அருந்தாபத்தி யோடு இயல்பு
ஐதீகம் அபாவம் மீட்சி ஒழிபு அறிவு
எய்து உண்டாநெறி என்றிவை தம்மால்
பொருளில் உண்மை புலன் கொளல் வேண்டும்
மருளில் காட்சி ஐவகையாகும்"

இவற்றில் காட்சி, கருதல், உவமம் (ஒப்பு), ஆகமம் (உரை), அருத்தாபத்தி, இயல்பு, ஐதீகம், அபாவம், மீட்சி, ஒழிபு, எனவும் அவற்றின் பிரிவுகளும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அவைகள் பத்து

1. காட்சி (Perception)
   - (அ) இந்திரியக் காட்சி
   - (ஆ) மானதக் காட்சி
   - (இ) யோகக் காட்சி
   - (ஈ) தன் வேதனைக் காட்சி

2. கருதல் (Inference)
   - (அ) உடன் நிகழ்வு (Inference by co - existence)
   - (ஆ) பயன் (Inference by effcet)
   - (இ) முதல்நிலை (Inference by cause)

3. உரை / மேற்கோள் (Authority)
4. ஒப்பு / ஒப்புமை (Comparison)
5. பொருள் / அவாய்நிலை (Implication)
6. இயல்பு (Propriety)
7. ஐதீகம் / உலகுரை (Tradition)
8. அபாவம் (Impossiblity)
9. ஒழிபு / மீட்சி (Exception)
10. உண்மை / தொடர்பியல்பு (Association)

இனி மேற்கூறிய அளவைகள் பற்றிய விளக்கத்தையும், அவை சித்தமருத்துவத்தில் பிணியறிமுறையிலும், நோய் தீர்க்கும் முறையிலும் எவ்வாறு உதவுகின்றன என்பதைக் கவனிப்போம்.

## 1. காட்சி (Perception)

இதனை நான்கு வகையாகப் பிரிக்கலாம். இவற்றில் முதல் இரு பிரிவான இந்திரியக்காட்சி, மானதக்காட்சி பற்றிக் கீழ்க்கண்டவாறு சிவஞானசித்தியார் விளக்குகின்றார்.

"உயிரினோ டுணர்வு வாயி லொளி யுரு வாதி பற்றிச்
செயிரொடு விகற்பமின்றித் தெரிவதிந் திரியக் காட்சி
அயர்விலிந் திரிய ஞான னம்புலன் சார்ந்துயிர்க்கண்
மயர்()வற வந்த ஞான மானதக் காண்ட லாமே"

ஆன்மாவோடு சமவாயமாய் இருக்கின்ற சிற்சக்தியானது கண் முதலிய இந்திரியங்கள் ஐந்தையும் (ஐம்புலன்கள்), அக்கினியாதி பூதம் ஐந்தையும் ஐந்திரிவின்றிச் சவிகற்பமாக அறிவது இந்திரியக் காட்சியாகும். குற்றமில்லாத அவ் விந்திரிய ஞானமானது மயக்கற ஆன்மாவிடத்தில் வந்ததுவே மானதக் காட்சியாகும்.

விடயத்தை இந்திரியம் அறிந்தமையால் இந்திரியக் காட்சியென்றும். இவ் இந்திரியத்தை அந்தக்கரணம் அறிந்தமையால் மானதக்காட்சியென்றும் கூறப்பெற்றன. ஆன்மா ஒரு விடயத்தையறியும்போது பொறியில் ஒன்று, அதற்கு இறைந்த

பூதத்திலொன்று, அந்தக்கரணம் நான்கு, காலாதிகள் ஏழு, சிவதத்துவம் ஐந்து ஆகப்பதினெட்டுக் கருவிகளால் அறியும் எனலாம்.

### (அ) இந்திரியக்காட்சி

இதனைப் புலனறிவு எனவும் கூறலாம். ஐம்புலன்களும் உணரப்படுவது,

I கண்ணால் பார்த்தல்
II செவியால் கேட்டல்
III மூக்கால் முகர்தல்
IV நாவால் சுவைத்தல்
V மெய்யால் ஊறு உணர்வறிதல்

சித்த மருத்துவத்தில் பிணியறி முறைமை என்ற அடிப்படைத் தத்துவத்தில் கூறப்படும் எண்வகைத் தேர்வு இந்திரியக் காட்சியில் அடங்கும்.

எண்வகைத் தேர்வு நா, நிறம், மொழி, விழி, பரிசம், மலம், சிறுநீர், நாடி ஆகியனவாகும்.

நோயாளியைப் பரிசோதித்துக் குறிப்பேடு எழுதும் போது ஐம்பொறி, புலன் முதலியன இயல்பு நிலையிலுள்ளதா அல்லது மாறுபாடடைந்துள்ளதா என்பது பற்றிக் குறிப்பிடுவதையும் இந்திரியக் காட்சியில் அடக்கலாம. ஐம்பொறியென்பதை மெய், வாய், கண், மூக்கு, செவி எனலாம்.

நவீன மருத்துவத்தில் நோயாளியைப் பரீட்சிக்கும் முறைபற்றி கூறுகையில் கீழ் கண்டவாறு வகுத்துள்ளனர்.

1. கண்ணால் பார்த்து அறிதல் (தரிசனம்) (Inspection)
2. தொட்டு உணர்தல் (ஸ்பரிசம்) (Palpation)
3. தட்டிப் பார்த்தல் (Percussion)
4. கருவிகள் மூலம் அறிதல் (Auscultation)

உதாரணம் - (Stethoscope)

நோயாளியைப் பரிசோதிக்கும் போது நேரே உற்றுநோக்குதலால் (Inspection) கண்கள் மூலமாக பல நோய்களை நிதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக வெளுப்பு நோயாளி வெளிறியிருப்பதைக் காணலாம். அதேபோல் முகவாதம், பாரிசவாதம், கல்லீரல் நோய்கள் ஆகியவற்றால் முகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் கவனிக்கலாம்.

நாடித் துடிப்பை விரல்களால் தொட்டு உணருதல் (பரிசம் - Palpation) மூலம் அறிந்து கொள்ளலாம். நோயாளியின் தோலைத் தொட்டுப் பாரப்பதால். தோலில் கரகரப்புத்தன்மை, முடிச்சுக் கிரந்திகள், சூடாகவிருத்தல், நோவைஉணருதல் (Pain) ஆகியவற்றைக் கவனிக்கலாம்.

இருதயத் துடிப்பை செவிப்புலன்கலால் கருவி (Stethoscope) மூலம் கேட்டு நோய் பற்றி மருத்துவன் அறிந்து கொள்ளலாம். பொதுவாகச் சிறந்த மருத்துவர் ஒரு நோயாளியை நேரே பார்க்கும் போது அவனது நோயை நிதானிக்கும் வல்லமையுடையவராகத் திகழ்கின்றார். இவ்வாறு கண்டு, கேட்டு உணரும் தன்மைகளைக் காட்சியில் அடக்கலாம்.

**(ஆ) மானதக் காட்சி**

மனமானது அந்தக் கரணங்களைப் பற்றி நின்று (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) அவற்றின் மூலம் விடயங்களை அறிதல். கண்களால் கண்டவற்றை மனதில் உள்வாங்கிக் கொள்ளுதல். முன்னர் தான் கண்டவற்றை மனதில் வைத்துச் சிந்தித்து செயலாற்றுதல். ஒரு நோயாளியைப் பார்வையிடும் போது அதனை மனதில் ஆழமாகப் பதியவைத்திருந்து வேறு ஒரு நோயாளியை பார்வை இடும்போது மாற்றமின்றி இருப்பின் அதனை இலகுவில் அறிந்து கொள்ளுதல் ஆகியவை ஒரு சிறந்த மருத்துவனின் இலக்கணமாகும்.

**(இ) யோகக் காட்சி**

யோக சக்தியால் அறிந்து கொள்ளுதல் யோகக்

காட்சியாகும். சில யோகிகள் தங்களை நாடிவருபவர்கள் என்ன நோக்கத்துடன் வருகின்றார்கள் என்பதனை ஞானசக்தியால் உணர்ந்து கொள்வார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்து யோகர்சுவாமிகளைக் குறிப்பிடலாம். பழைய சில சித்தவைத்தியர்கள் நோயாளிகளைப் பார்த்தவுடனேயே தங்கள் யோகவல்லமையால் நோயைக் கணித்து மருத்துவம் செய்கின்ற வல்லமையுடையவர்களாகத் திகழ்ந்தனர். இத்தகைய நுண்ணறிவும் சித்துக்களையுமுடைய மருத்துவருக்கு எடுத்துக்காட்டாக இணுவில் கந்தசுவாமி கோவில் வீதியில் வாழ்ந்த வைத்தியர் செல்லப்பா அவர்களைக் குறிப்பிடலாம். இவர் நோயாளிகளின் கை நாடியைப் பரிசோதித்துவிட்டு என்ன உணவு காலையில் சாப்பிட்டுவிட்டு வந்ததாக சொல்லுவாரென்றும் அப்பகுதி மக்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. இத்தகைய சித்துக்களை யோகக் காட்சியில் அடக்கலாம். இவ்வாறு சித்துக்களை அடக்குவதற்கு வைத்தியர்கள் இயமம், நியமம் ஆகிய அட்டாங்கயோகங்களை அனுசரித்துவர வேண்டியது முக்கியமாகும்.

**(ஈ) தன் வேதனைக் காட்சி**

புத்தி தத்துவத்தின் ஊடாக ஒருவன் தனது இன்ப துன்பங்களையும், அதற்கான காரணங்களையும் ஆராய்ந்து அறிந்து முப்பத்தாறுதத்துவங்களையும் பகுத்து ஆராய்ந்து அறியும் அறிவே தன் வேதனைக் காட்சியாகும்.

நவீன ஆய்வுகள் மூலம் நோய்வருவதற்கும், வந்தநோய்கள் தீவிரம் அடைவதற்குமுரிய காரணங்களுள் மானசீகக் காரணங்களே முக்கியம் இடம்பெறுகின்றன. பொதுவாகத் தீராத தலைவலி (Severe Headache), வயிற்றுப் புண் (Gastric Ulcer) இதனை ஒரு வகைக் குன்மம் என்றும் கூறலாம். ஈளை நோய் (Brronchial Asthma), அதி குருதி அமுக்கம் (Hypertension) போன்ற நோய்களால் அவதியுறுவோரில் பெரும்பாலானோர் மனக்கவலை, மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டவர்களே. இதயநோய்கள் கூட (Heart Disease) மனோவிகாரங்களால் ஏற்படுகின்றது. இவை போன்றவற்றுக்கும் உளச் சிகிச்சையின் மூலம் உடல் நோய்களையும்

தீர்க்கலாம். இவ்வாறான செயல்முறைகள் யாவும் இவ் அளவையில் அடங்கும்.

காட்சியொன்றை மற்றொன்றாக தவறாக அறிதல் திரிவுக்காட்சியாகும். உடம்பில் ஏற்படும் வீக்கம் (Oedema), இருதயநோய் (Heart Disease), வெளுப்புநோய் (Anaemia), கல்லீரல்நோய் (Liver Disease), சிறுநீரகநோய் (Renaldisease) ஆகிய நோய்களால் ஏற்படுகின்றன. ஆனால் பிணியறிமுறையைச் சரியாக கவனிக்காவிட்டால் ஏறற்படுகின்ற வீக்கம் எந்த நோயால் ஏற்படுவது என்பது மாறியும் காணப்படலாம். இதனையே திரிபுக்காட்சியெனக் கூறலாம்.

## 2. கருதல் (Inference)

கண்ணால் கண்டபொருளைக் கொண்டு காணாத ஒன்றை அறிய உதவும் உள்உணர்வு முறையாகும். முன்பு அறிந்த அனுபவத்தின் துணையைக் கொண்டு காட்சியிலிருந்து பெறும் அறிவு. இதனை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

(அ) உடன்நிகழ்வு (Inference by Co - Existence)

உதாரணம் - பிளிறல் சத்தம் கேட்டதும் யானையைக் கண்ணால் காணாமலே யானை நிற்கின்றது என்பதை அறிதல்.

(ஆ) பயன் (Inference by Effect)

உதாரணம் - மழை பெய்ததைக் காணாமலேயே வெள்ளத்தைக்கொண்டு மழைபெய்துள்ளது என்பதை அறிதல்.

(இ) முதல் நிலை (Inference by Cause)

உதாரணம் - கருமேகத்தைக் கண்டு மழை பெய்யப் போகின்றது என்பதை அறிதல். இதில் மழை பெய்வதைக் காணாமலேயே முடிவுக்கு வரலாம்.

மேற்குறிப்பிட்டவற்றில் உடன் நிகழ்வுக்கு ஒரு எடுத்துக்காட்டாக ஒரு நோயாளியின் இருமல் சத்தத்தைக் கொண்டு சுவாசப்பாதையில் கோழை உண்டென்பதை அனுமானிக்கலாம்.

அத்துடன் இழுபட்ட சுவாசத்தின் சத்தத்தைக் கொண்டு சுவாசப்பாதைத் தடையையும் அறிந்து கொள்ளலாம். இதனில் மருத்துவம் கோழையையும், சுவாசப்பாதை தடையையும் காணாமலேயே அங்குள்ள பிணியியல் தன்மையை சத்தத்தைக் கொண்டு உணருகின்றான். யானையின் பிளிறலை முன்னம் கேட்டு அனுபவப்பட்டவன் அப்பிளிறலைக் கேட்டதும் யானை காட்டில் அண்மையில் நிற்கிறது என்பதை அறிவது போல் மேற்கூறிய இருமல்தொனி, சுவாசப்பாதையில் ஏற்படுகின்ற இழுபட்டசத்தம் ஆகியனவற்றை முன்னம் நோயாளியில் கேட்டு அறிந்த அனுபவ அறிவு இருக்கவேண்டும்.

அடுத்ததாகக் கூறப்படுகின்ற பயன் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு வாந்திபேதி நோயாளியை மருத்துவன் பரிசோதிக்கும்போது உடலில் நீர்த்தன்மை குறைந்திருப்பதைக் (Dehydration) காண்கிறான். அந்த நோயாளியின் வாந்தி, வயிறு கழியும் நிகழ்ச்சியைக் காணாமலே அவனுக்கேற்பட்ட குறிகுணமாகிய உடலில் நீர்த்தன்மை குறைந்திருப்பதைக் கொண்டு வாந்திபேதியேற்பட்டிருக்க வேண்டுமென்று கருதுவதைக் கூறலாம். இதற்கும் அம்மருத்துவனுக்கு வாந்திபேதியில் மேற்கண்ட குறிகுணம் ஏற்படுவது பற்றி ஏற்கனவே அறிந்திருக்கும் அறிவு பெற்றிருக்கவேண்டியது அவசியமாகும்.

அடுத்ததாகக் குறிப்பிடும் முதல் நிலைக்கு எடுத்துக்காட்டாக ஒரு நோயாளிக்கு மேல்முகமாகவும், கீழ் முகமாகவும் நாட்பட்ட நிலையில் தொடர்ந்து இரத்தம் வெளியேறிக்கொண்டிருந்தால் அவனுக்கு வெளுப்பு நோய் ஏற்படப்போவதை முதலேயே அனுமானிக்கலாம். ஆகையால் உடம்பிலிருந்து குருதி வெளியேறும் நிலையால் அவனுக்கு வெளுப்பு நோய் ஏற்படலாம் என்பதை ஏற்கனவே தெரிந்திருந்தால்தான் இதனை அனுமானிக்க முடியும்.

மேற்கூறிய மூன்று பிரிவுகளையும் கூட்டாக சித்த மருத்துவ நோக்கில் பார்க்கும் போது சித்த மருத்துவத்தில் குறிப்பிடும் நீர்குறி நெய்குறியை எடுத்துக் கொள்ளலாம். இது பற்றி தனியாக நீர்குறி

நெய்குறி என்ற தலைப்பில் இவ்வாய் வேட்டில் கூறப்படுகின்றதைக் காணலாம்.

### 3. உரை / மேற்கோள் (Authority)

சித்தர்கள் தங்கள் யோக வல்லமையால் கண்ட உண்மைகளைத் தந்திரக்கலை, மந்திரக்கலை, உபதேசக்கலை என மூன்று பிரிவுகளில் அடக்கியுள்ளனர். இந்த அறிவை உரை அளவைக்குள் அடக்கலாம். வசியத்தின் மூலம் உளநோயை நீக்குவதிலும், உளவியல் மருத்துவத்தில் அறிதுயிர் முறையில் காரணங்களை அறிதலுக்குத் தந்திரக்கலை உபயோகமாகின்றது.

மந்திர உச்சாடணங்களைச் செய்ய தியானத்தின் மூலம் மன அமைதி பெறல் மந்திரக்கலையில், அடங்கும். பலவித நோய்களுக்கான காரணங்கள், நோய்களின் குறிகுணங்கள், மருந்துகள், ஆக்குவதற்கான விதிகள் போன்ற கருத்துக்களை உள்ளடக்கியது உபதேசக்கலையெனலாம்.

### 4. ஒப்பு / ஒப்புமை (Comparison)

நமக்குத் தெரிந்த ஒரு பொருளைக் கூறி அதன் மூலம் விளங்க வேண்டிய கருத்தினை ஒப்பிட்டுத் தெளிவுபடுத்துவதாகும். சித்த மருத்துவத்தில் நாடி சாஸ்திரம் ஒரு சிறப்பு அம்சமாக அமைகின்றது. நாடி நடையைச் சீவ செந்துகளின் நடைக்கு ஒப்பிட்டு விளக்கியுள்ளனர். மருந்துகளின் அளவுகளைக் கூறும் போது அரிசிஎடை, தூதுவளம்பழம்அளவு, கொட்டைப்பாக்குஅளவு, உழுந்தளவு எனக் கூறியுள்ளனர். சில நோய்களை விளக்குகையில் நரித்தலைவாதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை யாவும் ஒப்பு அளவையில் அடங்கும்.

### 5. அவாய்நிலை / அருத்தாபத்தி (Implication)

நாம் உணருவதற்கான ஒன்றைக் கூறி அதன் மூலம் குறிப்பிட வேண்டிய கருத்தினை உணர வைப்பது அவாய் நிலையாகும். சாதாரணமான எனது வீடு செட்டிகுளத்தில் உண்டு என்று கூறினால் செட்டிகுளத்திற்கு அருகாமையில் உள்ள பகுதியையே குறிக்கும்.

அதே போல் மருத்துவ ரீதியில் பார்க்கும் போது பகலில் தூங்காதவன் விவேகியாக இருப்பான் என்று கூறும் போது பகலில் தூங்குபவன் மந்த புத்தியடைவான் என்பது கூறாமலே விளங்கக் கூடிய கருத்தாகும். இதே போல் மது அருந்தாதவனுக்குக் கல்லீரல் வீக்கம் (Cirrhosis) வராது என்றால் மது அருந்துபவனுக்கு ஏற்படும் விளைவை என்னவென்று உணரவைப்பதாகும். அதே போல் புகைக்காதவனுக்கு நுரையீரல் புற்றுநோய் வராது என்றால் புகைப்பவனுக்கு நுரையீரல் புற்றுநோய் வரும் என்பதை உணரவைப்பதாகும். இவை யாவும் அருத்தாபத்தி அளவையில் அடங்கும்.

## 6. இயல்பு (Propriety)

இது தெளிவற்ற ஒரு பொருளைப் பற்றிய ஐயம் அற்ற அறிவைத் தரும் அளவை. யானை மீது அமர்ந்த ஒருவன் பொருள் கொடு என்று கேட்டால் அது அங்குசத்தையே குறிக்கும். இலங்கையில் வன்னிப் பகுதியில் (காடு) இருப்பவன் தனக்குக் காய்ச்சல் என்றால் அது மலேரியாச் சுரத்தையே குறிக்கும். இதே போல் மருதநில நீர் நோய்களைத் தீர்க்கும் என்று கூறுவதும் இவைகளனைத்து அனைத்தும் இயல்பு அளவைச் சாரும் எனலாம்.

## 7. ஐதீகம் / உலகுரை (Tradition)

சித்தர்கள் மேற்கொண்ட வழிமுறைகளை அவற்றின் உட்பொருளை அறிந்தோ அறியாமலோ வழிவழியாக கடைப்பிடித்தலை ஐதீகம் எனப்படும்.

பொதுவாக அந்த மரத்தில் பேய் உண்டு என்பதும், அந்த கோவில் புற்றில் நல்ல பாம்பு உண்டு என்பதும் ஒரு ஐதீகமாகும். சித்தப் பிரமையுள்ளவர்களை சங்கரன் கோவிலில் கொண்டு போய் விட்டு மருத்துவம் செய்வதும், பண்டைய காலத்தில் தொற்று நோயாகிய பொக்குளிப்பான் (Chicken Pox) போன்ற நோய்கள் ஏற்படின் நோயாளியைத் தனிமைப்படுத்துதலும், பிறர் நோயாளியை நெருங்காமல் அறிவிப்பாக வேப்பிலையைச் சொருகிவிடுதலும், தெய்வங்களின் (அம்மன்) பெயர்களைக் கூறி நோயாளி சுத்தமாக

ஓர் இடத்தில் இருக்க அச்சுறுத்தி வைப்பதுவும், ஐதீகத்தில் அடக்கலாம்.

## 8. அபாவம் (Impossiblity)

ஒருகுண இயல்பு இருப்பதற்கான சாத்தியம் இல்லையெனத் தெரிந்து அது இல்லை என்று முடிவு செய்வது அபாவம் எனலாம். உதாரணமாக முயல்கொம்பு என்று குறிப்பிடுதலும், முயலுக்கு மூன்று கால் என்று கூறுவதும் அபாவம் எனப்படும். சித்த மருத்துவத்தில் சிறுநீர் பரிசோதனையில் சாதாரணதொகை அளவிலிருந்து (Amount) அதிகரிக்காவிட்டால் மதுமேக நோய் இல்லையெனக் கூறுதலை அபாவம் என்று கூறலாம். இதனிலிருந்து மதுமேக நோயில் சிறுநீர் அளவு (Amount) சாதாரண அளவிலிருந்து கூடுவது உண்மையாகும்.

## 9. ஒழிபு / மீட்சி (Exception)

நாம் காணும் பொருளைப் பற்றிய கருத்துக்களில் ஐயத்திடமானவற்றைத் தவிர்த்து மீதியைக் கொண்டு சரியான முடிவுக்கு வருவதே ஒழிபு எனலாம். எடுத்துக்காட்டாக போரிட்ட இருவரில் ஒருவன் வெற்றி அடைந்தான் என்றால் மற்றவர் தோல்வியுற்றார் என்பது ஒழிபு அளவை எனலாம்.

மருத்துவரீதியில் இதனை ஆராயும் போது ஒரு நோயாளியின் மார்புப் பகுதியைப் பரிசோதிக்கும் போது ஒரு உராய்வுச் சத்தம் கேட்பதாக வைத்துக் கொள்வோம். இத்தகைய உராய்வுச் சத்தம் சுவாசாசய கவசம், இருதயக் கவசம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிலிருந்தே உற்பத்தியாக வேண்டும். சுவாசாசய கவச உலாய்வு சத்தத்தை Pleural Rub என்றும் இருதயக் கவசத்தில் உண்டாகும் உராய்வுச் சத்தத்தை Pericardial Rub என்றும் கூறலாம். இவையிரண்டையும் பேதப்படுத்துவதற்கு ஒரு வழி முறையைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அதவாவது சொற்ப நேரம் சுவாசத்தை நிறுத்திப்பார்க்கும் போது ஒலிப் பரிசோதனையில் (Stethoscope) மூலம் உராய்வுச் சத்தம் கேட்காவிடில் அச் சத்தம் சுவாசாசயக் கவசத்தில் ஏற்படுவதாக நாம் நிதானிக்கலாம். இதனை ஒழிபு

முறை அளவை எனலாம்.

## 10. தொடர்பியல்பு / உண்மை (Association)

இதனை எப்போதும், எவராலும் மறுக்க முடியாத உண்மையெனலாம். சாதாரணமாக நீர் குளிரும், தீ சுடும் என்று சொல்வதனை இவற்றுக்கு ஒப்பிடலாம் சித்த மருத்துவ ரீதியில் வாத நோய்கள் இருப்பின் வாத நாடி மிகுந்து காணப்படும் என்று கூறுவது உண்மை அளவைக்குள் அடங்கும். இதே போல் இரத்தப் பெருக்கு ஏற்படும் போது (Haemorrhage) அங்கு இரத்தக் குழாய்கள் சேதமடைந்துள்ளது என்பது ஒருவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அளவைகள் பத்துப் பிரிவுகளாகக் கூறப்பட்டாலும் காட்சியில் அபாவம், இயல்பு, உபமானம் (ஒப்பு) ஆகியவைகள் அடங்குகின்றன. இதேபோல் அனுமானத்தில் அவாய் நிலை (அருத்தாபத்தி), உண்மை, ஒழிபு, முதலியனவும், உரையில் ஐதீகமும் அடங்கும் என்பார். நோய் நாடலில் பிரமேயத்தைச் சரியாக உணர்ந்தாலன்றி சிறப்பு அடைய முடியாது. ஆகையால் அளவை என்னும் பிரமாணம் பற்றிய தெளிவான அறிவு இருந்தாலே பிரமேயத்தைச் சரியாக உணரலாம்.

எனவே சித்த மருத்துவத்துறையில் சிறப்பாக முன்னேற்றம் காண்பதற்கு அளவைகளை பற்றிய அறிவும், ஆற்றலும் இன்றியமையாததாகும்.

## 2.3. இந்திய தத்துவங்கள்

இந்திய தத்துவங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை

I வைதீக தத்துவங்கள் (Orthodox)

II அவைதீக தத்துவங்கள் (Heterodox)

என்பனவாகும்.

இவற்றிலே வைதீக தத்துவங்களை ஆஸ்திகப் பிரிவுகள் என்றும், அவைதீக தத்துவங்களை நாஸ்திகப் பிரிவுகள் என்றும் அழைப்பதுண்டு.

ஆஸ்திகம் என்பது இறைவன் உண்டு என்ற நம்பிக்கையைக் கொண்டவர்கள் எனவும் வேதநூல்களை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்பவர்கள் எனவும் கொள்ளலாம். இதனை இந்து தத்துவம் (Hindu Philosophy) என்றும் கூறுவதுண்டு. நாஸ்திகம் என்பது கடவுள் கொள்கையை ஏற்காதவர்கள் என்றும், வேதநூல்களில் நம்பிக்கையற்றவர்கள் எனக் கூறலாம். இதனை அவைதீக தத்துவங்கள் அல்லது புறச்சமயங்கள் என்றும் கூறலாம். இதன் பிரிவுகள்

1. சமணம் (ஜைனம்)
2. பௌத்தம்
3. உலகாயுதம் (சாருவாகம்) முதலியன.

இவற்றில் சித்த தத்துவத்தோடு நெருங்கிய தொடர்புள்ள முதற்பிரிவான இந்து தத்துவங்களின் அடிப்படைகள் மட்டுமே இங்கு தரப்பட்டுள்ளன.

### வைதீக தத்துவத்தின் / இந்து தத்துவத்தின் (Hindu Philosophy) ஆறு பிரிவுகள்

இவற்றினை வட மொழியில் ஷட் தரினங்கள் என்பர். அவை

1. சாங்கியம்
2. யோகம்

3. நியாயம்
4. வைசேடிகம்
5. மீமாம்சை
6. வேதாந்தம்

என்பனவாகும்.

## 1. சாங்கியம்

வேத உபநிடதங்களை பிரமாணமாக ஏற்றுக் கொண்ட தத்துவங்களுள் சாங்கியமும் ஒன்று. சாங்கியம் என்ற சொல்லுக்குப் "பூரண அறிவு" என்று பொருள். எனவே மூலப் பொருள்கள் பற்றிப் பூரண அறிவைத்தரும் தத்துவத்துக்குச் சாங்கியம் என்ற பெயர் வைத்தனர் எனலாம். ஆறு தரிசனங்களில் மிகப் பழையது சாங்கியம் என்பர். இதனை முதலில் முறைப்படுத்தி வெளியிட்டவர் கபிலர் என்றும், இது மிகப்பழைய தத்துவமாயிருந்தும் இதைப்பற்றி இலக்கியங்கள் மிகக் குறைவாயிருப்பது சற்று வியப்பாகவுள்ளதென்றும் இப்போது கிடைப்பனவற்றுள் மிகப் பழையது கி.பி 5ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த ஈஸ்வரகிருஷ்ணர் என்பவரால் இயற்றப்பட்ட சாங்கிய காரிகை என்னும் நூலாகமென்று கி.லஷ்மணன் குறிப்பிடுகின்றார். இதனில் குறிப்பிடும் கபிலர் திராவிடர் என்று கூறுவரும் உளர்.

நிலைபேறும், மாற்றமும் உண்மை என்கிறது சாங்கியம். எது மாற்றமடைகின்றதோ அது அறிவுள்ள பொருள் ஆகாது. அதே சமயம் அறிவே சொரூபமான பொருள் எதுவோ அது மாற்றமடையாது என்ற நியதியைச் சாங்கியம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மூலப்பொருள் இரண்டு என்றும் ஒன்று புருடன் மற்றது பிரக்கிருதி என்றும், புருடன் அறிவுள்ளது (சேதனம்) என்றும், பிரக்கிருதி அறிவற்றது என்றும் (அசேதனம்) என்றும் கூறப்படுகின்றது.

உலகின் தோற்றத்துக்கு மூலம் பிரக்கிருதியாகும். பின் ஒடுங்குவதும் அதிலேயாகும். புருடன் மாற்றம் அடையாத பொருள். பிரக்கிருதி அருவமானது. இவற்றையெல்லாம் சாங்கியர்

அனுமானத்தால் அறிந்தனர்.

உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் போகப்பொருட்கள். இப்போகப்பொருட்கள் தம்மைத் தாமே அனுபவிக்க மாட்டா. ஒரு பழம் தன்னைத் தானே சுவைக்க மாட்டாது. அதனைச் சுவைத்து அனுபவிப்பது ஒரு சேதனப் பொருளாலேயே முடியும். எனவே அச் சேதனப் பொருள்கள் மூலமே அவற்றைப் பயன்படுத்தும் சேதனப் பொருட்களும் உண்டு என்று வலியுறுத்துகின்றது சாங்கியம். பிரக்கிருதியானது சத்துவம், ரஜோ, தாமசம் ஆகிய முக்குணங்களையுடையது. இவ் மூன்று குணங்களும் தொண்ணூற்றாறு தத்துவத்தில் அடங்குவதாக முன்னர் குறிப்பிடப்பட்டது. இந்த முக்குணங்களும் சமநிலை மாறுபட்டுச் சலனமேற்பட்டுப் பற்பல பொருட்கள் (பிரக்கிருதியில்) உண்டாகின்றன. புருடன் பொருட்டே உடலும், ஏனைய பொருட்களும் தோன்றுகின்றன.

ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் இருந்தாக வேண்டும். இதனைச் சாங்கியர் காரணம், காரியம் என்று இரண்டாகக் கூறுகின்றனர். காரியம் எங்கிருந்தோ புதிதாகத் தோன்றுவதில்லை. அது உற்பத்திக்கு முன்னும் உள்ளது. எடுத்துக்காட்டாக எள், நூல், மண் ஆகியன காரணம் என்றும் இவை எண்ணெய், புடவை, பானை ஆகியன முறையே காரியம் எனவும் கொள்ளலாம். எண்ணெய், புடவை, பானை ஆகியவற்றில் உற்பத்திக்கு முன்பே காரணமாகிய எள், நூல், மண் ஆகியனவற்றில் உண்டெனலாம். உள்ளது தான் வரும் இல்லாதது வராது என்று கூறும் வாதம் சத்காரிய வாதம் எனப்படும்.

புருடன் செயலற்றுக் கிடப்பவன் ஆனால் அனுபவிப்பவன். புருடன் ஒரு முடவனை ஒத்தது. அறிவற்ற பிரக்கிருதி ஒரு குருடனை ஒத்தது. இவை இரண்டும் சேர்ந்து இயங்குவது குருடன் தோளில் முடவன் ஏற இருவரும் சேர்ந்து பயணம் செய்வதை ஒக்கும். அறிவுள்ள புருடன் இயக்கமற்றது என்றும், அறிவற்ற சடப்பொருளான பிரக்கிருதி இயங்கக்கூடியதென்றும் கூறும் இக்கோட்பாடு மேலும் ஆய்வுக்குரியது.

இதனையே சாங்கியம் **இருமைக் கோட்பாடுடையது** என்கின்றனர்.

சாங்கியம் அளவைகளில் மூன்றை ஏற்ற போதிலும் கடவுட் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

சைவசித்தாந்தம் வேதத்தை ஏற்காத மதங்களைப் புறச்சமயங்கள் எனக் கருதுகின்றதென்றும், ஆயினும் சைவசித்தாந்தம் வேதத்தை ஏற்கும் எல்லா மதங்களையும் ஒரே படியில் வைப்பதில்லையென்றும் அந்த வகையில் சைவசித்தாந்தம் சாங்கியத்தைப் புறச்சமயம் என்று கருதுவதாக கி. லஷ்மணன் குறிப்பிடுகின்றார்.

**2. யோகம்**

யோகமும் சாங்கியமும் அடிப்படையில் பெரும்பாலும் ஒரே கொள்கையுடையவை. இதனால் இரண்டையும் ஒன்று சேர்த்து **சாங்கிய யோகம்** என்றும் கூறுவர். இவை இரண்டின் குறிக்கோளும் ஒன்றே. யுஜ் என்ற வடமொழிச் சொல்லிருந்து பிறந்ததே யோகம் என்ற சொற்தொடராகும். யோகமும் இருமைக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் யோகம் என்ற சொல்லுக்கு பிரிதல் என சாங்கிய யோகத்திலும், ஒன்று சேர்தல் என உபநிடதத்திலும் வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதை முன்னர் கவனிக்கலாம்.

சாங்கியம் கடவுள் உண்டென்பதை ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் யோகம் இறைவனை ஒப்புக்கொள்கின்றது. இந்த வேற்றுமையை உணர்த்துவதற்கு யோகத்தை **ஈஸ்வர சாங்கியம்** அதாவது ஈஸ்வரனை ஒப்புக்கொள்ளும் சாங்கியம் என்று அறிஞர் குறிப்பிடுவர். இவ்வாறு கூறியிருந்தும் யோகமானது தான் ஒப்புக்கொள்ளும் இறைவனுக்கு ஏனையோர் அளிக்கும் சிறப்புக்கேற்ப முக்கியத்துவம் அளிக்கவில்லை.

சாங்கியம் ஞானத்தை வற்புறுத்துகின்றது. யோகம்

தியானத்தை வற்புறுத்துகின்றது. யோகத்துக்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணி, தியானம், சமாதி ஆகிய எட்டு அங்கங்களாகும். இதனை அட்டாங்க யோகம் என்று திருமந்திரத்தில் கூறப்பட்டது. அட்டாங்க யோகமே விடுதலைக்கு வழி என்பதே யோகத்தின் முடிபாகும்.

### 3. நியாயம்

நியாயக் கோட்பாட்டினை நையாயிரம் எனவும் அழைப்பது உண்டு. மெய்மை வாதிகளுள் மிக முன்னணியில் நிற்போர்கள் இவர்களேயாவர். நியாயத்துக்கு முதன்மை கொடுத்தமையால் இவர்களுக்கு நையாயிகர் என்ற பெயரும், பிரமாணத்துக்கு முதன்மை கொடுத்தமையால் இவர்களது தரிசனத்துக்குப் பிரமாண சாத்திரம் என்ற பெயரும் ஏற்படலாயின. நையாயிகர் பிரத்தியட்சம், அநுமானம், ஆப்தவாக்கியம், உபமானம் ஆகிய நான்கு பிரமாணங்களை ஒப்புக்கொள்வர். பிரத்தியட்சத்தை விளக்குவதில் அவர்களுக்கும் ஏனையோருக்கும் வேற்றுமையுண்டு. பிரத்தியட்சதில் புலன்களுக்கும் புறத்தேயுள்ள பொருள்களுக்கும் நேரடியான தொடர்பு உண்டென்பது இவர்களின் கொள்கையாகும். இவர்கள் கடவுள் கொள்கையையும், அணுக்கொள்கையையும் ஏற்றுக்கொண்டனர். இதனில் வைசேடிகரது அணுக்கொள்கையை நையாயிகருக்கும் உடன்பாடானது ஆகும். பதார்த்தங்களின் தொகை வகையிலும் இரு சாராருக்கும் வேற்றுமையுண்டு.

### 4. வைசேடிகம்

விசேடம் என்ற தத்துவத்தைக் கொண்டதனினால் வைசேடிகம் எனப் பெயர் பெற்றது. இதனில் ஆன்மாவும் உண்மை, புறத்தேயுள்ள பொருள்களும் உண்மையென்று கருதுகின்றனர். பொருள்கள் அழியும் ஆனால் அவற்றை உற்பத்தி செய்யும் அணுக்கள் அழியா. அணுக்களே பொருள்களின் கடைசி ஒடுக்கம் என்பதை நிரூபிக்க வைசேடிகர் இரு காரணங்கள் காட்டுகின்றனர். அணுக்களைப் பற்றிய தமது கொள்கையை வைசேடிகர் கிரேக்கரிடமிருந்து பெறவில்லை என்பது தத்துவ ஆசிரியர் கி.லஷ்மணன் என்பாரது கருத்தாகும்.

அணுக்கள் பற்றிய கொள்கை இந்தியா, கிரீஸ் முதலிய நாடுகளோடு தொடர்பு கொண்ட காலத்தை அடுத்தே எழுந்தது எனலாம். எனவே வைசேடிகர் கிரேக்க விஞ்ஞானிகளைப் பின்பற்றியே தமது கருத்துக்களை அமைத்திருக்கின்றனர் எனக் கூறும் அறிஞர்களும் உளர். அணுக்கள் பற்றிய கருத்துக்களில் கிரேக்கர்களுக்கும் வைசேடிகருக்கும் உள்ள வேற்றுமைகளைக் காட்டியிருக்கின்றார் பேராசிரியர் ராதா கிருஷ்ணன். வைசேடிகர் கிரேக்கர்களுடைய கருத்துக்களைத் தழுவியிருக்கக் காரணம் இல்லை என்றும், அணுக்கள் பற்றிய சில குறிப்புக்கள் வைசேடிகர் காலத்துக்கு முன்பே இந்தியாவில் வழங்கின என்றும் பேராசிரியர் ராதா கிருஷ்ணன் குறிப்பிடுகின்றார்.

அணுவைப்பிரிக்க முடியாதென்று வைசேடிகர் நம்பினர். அதற்குக் காரணங்களும் கூறுகின்றனர். உலகில் உள்ள பொருள்கள் யாவும் அணுக்களால் ஆனவை. அவற்றுள் சில சிறியனவாகவும், சில பெரியனவாகவும் காணப்படுகின்றன. மிகப் பெரிய மலையையும் காண்கிறோம். மிகச் சிறிய கடுகையும் காண்கிறோம். இப் பொருள்களின் பருவ வேற்றுமைக்குக் காரணம் என்னவெனின் அவற்றிலுள்ள அணுக்களின் தொகையே காரணம். சிறிய தொகை அணுக்களால் ஆன பொருள் சிறிய உருவினது. பெரிய தொகை அணுக்களால் ஆன பொருள் பெரிய உருவினது. பொருள்கள் பிரியும் போது ஓர் எல்லைவரைதான் பிரியும். அந்த நிலையே அணுநிலை எனக் கொண்டால் தான் அவ் அணுக்களைப் பிரமாணமாகக் கொண்டு அவற்றின் தொகைக்கு ஏற்பப் பொருள்களின் அளவும் வேறுபடுகின்றது எனக் கொள்ள இடமுண்டு. பிரிவுக்கு ஓர் எல்லையுண்டு எனக் கொண்டால் தான் அவ் எல்லையைத் தொடக்கமாகக் கொண்டு பொருள்கள் பெரியனவும் சிறியனவுமாவதை விளக்க முடியும். அணுவை மேலும் மேலும் பிரித்துக் கொண்டு போய் அதற்கோர் எல்லை கிடையாது என்றால் உலகில் பொருள்கள் எங்ஙனம் பெரியனவும், சிறியனவுமாக தோன்றுவதை விளங்கிக் கொள்ள முடியும் என்கின்றனர். அத்துடன் இப்படித் தொடர்ந்து பிரித்துக்கொண்டு போனால் இறுதியில் ஒன்றும்

இல்லாத நிலையேற்பட்டால் அப்படியான நிலை ஒன்றுமே இல்லாத நிலையிலிருந்து ஒரு பொருள் உற்பத்தியாகுமென்பது இயலாததாகும். ஈற்றில் அணுக்களாவது இருப்பின் அவ்வணுக்கள் பல சேர்ந்து பருப்பொருள்களாக இடமுண்டு எனக் கொள்ளலாம். ஒன்றுமேயில்லாது அழிந்து விட்டதெனக் கொள்ளின் அந்நிலையிலிருந்து பொருள்கள் தோன்றுகின்றன எனக் கொள்வது சூனியத்திலிருந்து உலகை உற்பத்தி செய்யலாம் எனக் கொள்வதாகும். இது பொருந்தாததாகும். ஆகையால் இறுதியில் அணுவை மேலும் பிரிக்க முடியாது என்று கருதினர் வைசேடிகர்.

இவற்றைக் கொண்டு இவ் உலகத் தோற்றத்துக்கு மூலம் கண்ணுக்குப் புலப்படாத பரம அணுக்களே என வைசேடிகர் கருதினர். உலகத்தோற்றத்துக்குக் காரணம் அணுக்கள் எனக் கொள்வோர் வைசேடிகர் மட்டுமல்லாமல் சமணரும், பௌத்தரும் ஆவார்கள். அவர்கள் மட்டுமன்றி கிரீஸ்தேச தத்துவஞானிகளான டெமோகிறிற்றஸ், எபிகியூறஸ் (Democritus, Epicurus) என்னும் இருவரும் அணுக்களையே உலக உற்பத்திக்கு மூலமாகக் கருதியிருக்கின்றனர்.

வைசேடிகர் திரவியங்கள் ஒன்பது என்கின்றனர். அவையாவன, பஞ்சபூதம், காலம், இடம், ஆத்மா, மனம் ஆகியனவாகும். இவைகளே உலகத்தோற்ற ஒடுக்கங்களுக்கு காரணமாக அமைகின்றது என்கின்றனர்.

இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலேயே உற்பத்தியாகின்றன. பொருள்கள் அழிந்ததும் மீண்டும் அப்பஞ்சபூதங்களாகவே மாறிவருகின்றன எனப் பொதுவாகப் பலரும் கூறுவர். இப்பஞ்சபூதங்களுள் நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கும் பகுதிகளாகப் பிரிவன. எனவே அவையும் அழிவுடையவை என்பதே வைசேடிகர் கொள்கை. இந்நான்கின் பகுதிகளே அணுக்கள். அணுக்களின் சேர்க்கையிலேயே அப்பூதங்கள் தோன்றுகின்றன. பஞ்சபூதங்களுள் ஆகாயம் மட்டுமே பகுதிகளாகப் பிரியாது. இப்பூதங்கள் ஐந்தும் உலக உற்பத்தியை விளக்கப்போதும் என

வைசேடிகர் கருதவில்லை. இந்த ஐந்தோடு காலம், இடம், ஆத்மா, மனம் ஆகிய நான்கையும் சேர்த்து இதனை **நவதிரவியம்** எனவும் கூறினர்.

அணுக்களின் சேர்க்கையால் உருவாகும் ஒவ்வொரு பொருளும் அவ்அணுக்களின் சேர்க்கை என்பது மட்டுமா? அல்லது அச்சேர்க்கைக்குப் புறம்பான ஒன்றா? என வினவலாம். இரு பகுதிகள் சேர்ந்து ஒரு புதிய பொருள் உண்டாயிற்று என வைத்துக் கொள்வோம். அங்ஙனமாயின் அப்பொருள் பகுதிகள் இரண்டும் மட்டுமா? அல்லது மூன்றாவதான ஒன்றா? என்பது கேள்வி. இரு பகுதிகளுமே பொருள். அவற்றை விட வேறு எதுவும் இல்லை என்பர் பௌத்தர். ஆனால் வைசேடிகர் அங்ஙனம் கூறுவதில்லை. இரு பகுதி சேர்ந்து புதிதாய் ஒரு பொருள் உண்டாவதாயின் முன் இருந்த பகுதிகள் இரண்டு பின் தோன்றியது ஒன்று ஆக மூன்று பொருள்கள் இருக்கின்றன என்பர் வைசேடிகர். பகுதிகளின் சேர்க்கையிலேயே பகுதிகளுக்குப் புறம்பான முன்னில்லாத புதிய பொருள் ஒன்று உற்பத்தியாகின்றது என்பதே வைசேடிகரது கருத்து. இங்ஙனம் காரணத்தில் இல்லாது புதிதாக ஒரு காரியம் தோன்றும். அதாவது பகுதிகளாய் காரணத்தில் இல்லாதது அப்பகுதிகளின் சேர்க்கையாகிய காரியத்தில் தோன்றும் என்ற இக்கொள்கைக்கு "அசத்காரியவாதம்" அல்லது "ஆரம்பவாதம்" என்று பெயர். காரணத்தில் இல்லாதது காரியத்தில் தோன்றும் என்பதே இதன் பொருள். இது பௌத்தர்களின் கொள்கைக்கு நேர் மாறானது. இவ்விடயத்தில் சாங்கியர், சைவசித்தாந்திகள் போன்ற ஏனையோர் கொள்கையும் வைசேடிகரது இந்த "அசத்காரியவாதத்துக்கு" நேர் மாறானது சாங்கியரும், சைவசித்தாந்திகளும் மேற்கொள்ளும் கொள்கை "சத்காரியவாதம்" எனப்படும்.

வைசேடிகம் கடவுள் கொள்கையை சாங்கியம் போல் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் யோகம், நியாயம் ஆகியன கடவுள் கொள்கையை ஏற்றுக்கொள்ளுகின்றது எனலாம்.

## 5. மீமாம்சை

மீமாம்சை என்ற சொல்லுக்கு நேர்ப்பொருள் முறையாக விசாரித்தல் அல்லது ஆராய்தல் என்பதாகும். அதாவது ஒன்றின் உண்மையையும், பொய்யையும் நமது அறிவைக் கொண்டு ஆராய்வது என்ற பொருளாகும் என்கிறார் கி. லக்ஷ்மணன்.

வேதத்துக்குக் கொடுக்கும் இடத்தையொட்டி இந்திய மதங்களை மூன்றாகப் பிரிக்கலாம். முதற்பிரிவினர் வேதத்தை எதிர்ப்பவர்கள். இப்பிரிவுக்குச் சமணம் போன்ற மதங்களைக் குறிப்பிடலாம். இரண்டாவது பிரிவு வேதத்தை ஏற்பன. ஆனால் அதேசமயம் வேதங்கள் கூறுவன உண்மையென்பதை நமது அறிவைக் கொண்டும் நிலைநாட்ட வேண்டுமென விழைவன. இந்தப்பிரிவுக்கு எடுத்துக்காட்டாக நியாய வைசேடிக தத்துவங்களைக் கூறலாம். மூன்றாவது பிரிவு வேறு எந்த ஆதாரத்தையும் வேண்டாது வேத வாக்கை ஒப்பற்ற முழுமுதற் பிரமாணமாக ஏற்பது. இப்பிரிவில் மிக முன்னணியில் நிற்பதே மீமாம்சை என்னும் கோட்பாடாகும்.

வேதம் கூறுவது எதுவும் பொய்யல்ல. வேதத்திலே கூறப்பட்ட எதையும் நமது சிற்றறிவைக் கொண்டு ஆராய வேண்டிய அவசியமில்லை எனக் கருதும் தரிசனத்துக்கு ஆராய்தல் என்று பொருள்படும் சொல் பெயராக இடப்பட்டமை வியப்பே எனலாம்.

இப்பெயர் இத்தரிசனத்துக்குப் பொருந்தாத போதும், இப்பெயர் இந்திய மதங்களின் பொதுவான போக்கில் ஒன்றைப் புலப்படுத்துகின்றது எனக் கொள்ளலாம். இப்பொதுப்போக்கு யாதேனில் எந்த உண்மையையும் அது வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றது என்ற ஒரு காரணத்தை மட்டுமே கொண்டு ஏற்றுக் கொள்ளாது. அது நமது பகுத்தறிவுக்கும் பொருந்துகின்றது என நிரூபித்துக்காட்டுவது. வேதத்தைத் தழுவும் மதங்கள் இத்தகைய ஒரு போக்கை மேற்கொண்டமைக்கு அக்காலத்தில் பௌத்த, சமண மதங்கள் வேதத்தை எதிர்த்தமையே காரணம் என்கிறார் டாக்டர். றண்டிலா (Dr Randila)

இம்மதத்துக்கு ஆராய்ச்சி அல்லது விசாரணை என்றும் பொருள்படும் எனவும் அது வேதத்தில் கூறப்படுவன உண்மையா? பொய்யா? என்று ஆராய்கின்றது என்பது அல்லவென்றும், வேதத்திலே காணப்படும் விதிகளுக்கு நாம் கொடுக்கும் விளக்கம் சரியா? என்பதை ஆராய்வதில் பெரிதும் ஈடுபடுவதனாலேயே இம்மதத்துக்கு இப்பெயர் ஏற்படலாயிற்று என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

இனி அணுக்கொள்கை பற்றிப்பார்க்கும் போது இங்கு மீமாம்சகரை நியாய வைசேடிகரோடு ஒப்பிடுவது நலம். பஞ்சபூதங்கள் அணுக்களால் ஆகியவை. அணுவைப் பிரிக்க முடியாது. அது பருமன் இல்லாதது. எனவே கண்ணுக்குப் புலனாகாதது. கண்ணுக்குப் புலனாகாத அணு உண்டு என்பதை அநுமானத்தால் அறிகின்றோம். இவையே அணுவைப்பற்றி நியாய வைசேடிகர் கூறுவனவாகும். பஞ்சபூதங்கள் அணுக்களால் ஆனவை என்பது மீமாம்சகருக்கும் உடன்பாடே. ஆனால் அணுவுக்குப் பருமன் கிடையாது, அதனைப் பிரிக்க முடியாது. அதனைக் கண்ணால் காண முடியாது. ஊகித்தே அறிகின்றோம் என்பதை மீமாம்சகர் ஏற்பதில்லை. கண்ணுக்குப் புலனாகாத அளவு தூரத்துக்கு மீமாம்சகரது அணு ஆராய்ச்சி செல்லவில்லை. நியாய வைசேடிகர் கொள்கைப்படி கண்ணுக்குப் புலனாகாத அணுக்கள் இவ்விரண்டு சேர்ந்து ஈரணு ஆகும். இந்த ஈரணு நிலையிற் கூட அணு நம் கண்ணுக்குப் புலனாகாது. ஈரணு மூன்று சேர்ந்து மூவிணை அணுவாகும். அப்போதுதான் அது நமக்குப் புலனாகும். நியாய வைசேடிகரது மூவிணை அணுவை மட்டுமே மீமாம்சகர் ஒப்புக் கொள்வர். அதற்கு மேல் கண்ணுக்குப் புலனாகாத இரட்டை அணு, ஒற்றை அணு இவ்விரண்டையும் அவர்கள் ஏற்பதில்லை. வேதத்தில் அத்தகைய அணுக்கள் பேசப்படவில்லை என்பதுதான் காரணம். மீமாம்சகர் வேதவாக்கில் அபார நம்பிக்கையுடையவர்கள்.

வேதங்கள் கூறும் கிரியை நெறிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து கிரியை ஒன்றுதான் ஆன்ம விடுதலைக்கு வழி என ஏற்றுக் கொண்டவர்கள் மீமாம்சகர் எனலாம். ஆன்மா பற்றி மீமாம்சகர் கொள்கையைப் பார்க்கும் போது நியாய

வைசேடிகர் போலவே ஆன்மாக்கள் என்றும் உள்ளவை, எங்கும் நிறைந்து உள்ளன எனக் கருதுகின்றனர். ஆனால் வேற்றுமை என்னவெனின் நியாய வைசேடிகர் கொள்கைப்படி ஆன்மாவுக்கு அறிவு ஒரு குணம் என்றும் மீமாம்சகர் கொள்கைப்படி ஆன்மாவுக்கு ஒரு தொழில் எனவும் எனவே தொழில் நிகழும் போது செய்வோனும் பாதிக்கப்படுகின்றான் தொழிற்படும் பொருளும் பாதிக்கப்படுகின்றது என்கின்றனர்.

கடவுட்கொள்கை பற்றிப் பார்க்கையில் நியாய மதத்தினர் ஆன்மா பற்றிப் பேசும் போது, அவற்றுக்கெல்லாம் தலையாய பரமான்மா ஒன்றையும் குறிப்பிடுகின்றனர். அப்பரமான்வாவே கடவுள். ஆனால் மீமாம்சகர் அத்தகைய பரமான்மா ஒன்று உண்டு என்பதை ஒப்புக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆகையால் இவர்கள் ஆத்திகரா? அல்லது நாத்திகரா? அவர்கள் ஈஸ்வரவாதிகளா? அல்லது நிரீஸ்வரவாதிகளா? என்பதில் அறிஞர்கள் மத்தியில் சற்று அபிப்பிராயபேதம் உண்டு எனக் குறிப்பிடுகின்றனர்.

மீமாம்சகருள் முதன்மை பெற்றவராகிய சைமினி தமது நூலிலே இறைவனைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிடாமையைக் கொண்டு மீமாம்சகர் நாத்திகர் என முடிவு செய்தல் கூடாது எனவும் அவர் கடவுளைப்பற்றிக் குறிப்பிடவில்லையேயொழிய கடவுள் இல்லையெனக் குறிப்பிடவில்லை எனவும் டாக்டர். ராதா கிருஷ்ணன் கூறுகின்றார்.

### 6. வேதாந்தம்

வேதாந்தம் என்ற சொல்லின் பொருளை கவனிக்குமிடத்து வேதத்தின் அந்தமே வேதாந்தமாகும். வேதம், அந்தம் ஆகிய இரு சொற்களும் சேர்ந்து வேதாந்தம் ஆனது. வேதம் என்ற சொல் "வித்" என்னும் அடியிலிருந்து பிறந்தது. "வித்" என்ற சொல் அறிவு, அல்லது உண்மையென்பர். அந்தம் என்ற சொல்லுக்கு கடைசி அல்லது சாரம் எனலாம். வேதங்களை இரு பிரிவாக வகுப்பர். அவை கருமகாண்டம், ஞானகாண்டம் எனப்படும். இதிலே ஞானகாண்டம் இவ்வேதங்களின் இறுதிச்சாரம் அந்தம் எனப்படும்.

இதனை வேதத்தின் சாரம் அல்லது உட்பொருள் வேதாந்தம் என்று பொருள்படும்.

இந்திய தத்துவ சாஸ்திரத்திற் கூறப்படும் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம் ஆகிய மதங்களுக்கும் வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய மதங்களுக்கும் இடையில் ஒரு பெரும் வேற்றுமையுண்டு. முன்னவை பெரும்பாலும் நூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. அவை வழக்கில் உள்ளன அல்ல. அம்மதங்களைக் கைக்கொள்ளுவோரை இன்று காண்பது அரிது. ஆனால் வேதாந்தம் சித்தாந்தம் அத்தகையன அல்ல. இவை நூலளவோடு மட்டுமே நிற்காமல் நடைமுறையிலும் உள்ளன. இவற்றைப் பற்றி இவை பேசும் ஆசாரங்களை நடைமுறையில் அனுசரிப்போரே இந்துக்களில் பெரும்பாலோராகும்.

வைதிக மதங்கள் யாவும் வேதாந்தம் என்ற பெயருக்கு உரியன எனலாம். "சிவப்பிரகாச" ஆசிரியரான உமாபதிச்சிவாச்சாரியார் சைவசித்தாந்தத்தைக் குறிப்பிடும் போது "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" எனக் கூறுவது சிந்திக்கப்பாலது.

வேதாந்த சூத்திரம் எனப்படும் பிரம்மசூத்திரத்தை எழுதியவர் பாதராயணர் என்பவர் ஆவார். வியாசர் எனப்படுவாரும் அவரே எனச் சிலரும், அவர் வேறு வியாசர் வேறு எனச் சிலரும் கருதுவதுண்டு. அவரே வேதாந்தம் என்ற சொற்தொடரையும் முதன்முதல் உபயோகித்தவர் என்றும் அறியக்கிடக்கின்றது.

வேத உபநிடதக் கருத்துப்படி மூலப்பொருள் ஒன்றா அல்லது இரண்டா என்பது வாதத்துக்கு உள்ளானது. சாங்கியர் மூலப் பொருள் இரண்டு என வாதித்தனர். பாதராயணர் தமது வேதாந்த சூத்திரத்தில் சாங்கியரது கொள்கையை மறுத்து மூலப்பொருள் ஒன்றே என நிலைநாட்ட முற்படுகின்றார். வீடு பேற்றைப் பெற ஞானம் முக்கியமா? அல்லது கன்மம் முக்கியமா? என்பது வாதத்துக்குரிய மற்றொரு முக்கிய விடயமாகவிருந்தது. மீமாம்சகர்

கன்மமே முக்கியம் என வாதித்தனர். பாதராயணர் இவர்களையும் மறுத்து ஞானமே முக்கியமென வற்புறுத்தியிருக்கின்றார். பாதராயணர் தமது நூலிலே ஏழு பெரிய வேதாந்த ஆசிரியர்களைக் குறிப்பிடுகின்றார். அவர்கள் அனைவரும் விளக்கமற்றிருந்த வேத உபநிடதக் கருத்துக்களை விளக்கியுள்ளனர் எனலாம். இவ் அறிஞருள் தலை சிறந்தவர் சங்கரர் எனப்படுவர். இவர் தென் இந்தியாவில் காலடி என்னும் இடத்தில் பிறந்ததாகவும் இவரது காலத்தை 6 ஆம் நூற்றாண்டு எனச் சிலரும் 8 ஆம் நூற்றாண்டு எனச் சிலரும் கூறுவர்.

வேததாந்திகள் உபநிடதம் கூறும் தத்துவக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதுடன் உலகைப் பொய் என்றும். இறுதியான உட்பொருள் பிரம்மம் ஒன்றுதான் மற்றைய அனைத்தும் பிரம்மத்தின் (பரம் பொருள்) தோற்றம் என்றும் கூறுவர்.

அடுத்து புறச்சமயப் பிரிவுகளைக் காணலாம்.

## II அவைதீக தத்துவத்தைக் கொண்ட புறச்சமயப் பிரிவுகள்

இப்பிரிவினுள் சமணர், பௌத்தர், உலகாயுதர் முதலியோர் அடங்குவர். இவர்கள் அனைவரும் கடவுள் கொள்கையை நிராகரிப்பவர்கள் ஆவார்கள். ஆகையால் இவர்களை நிரீஸ்வரவாத, அல்லது நாஸ்திகவாத கோட்பாட்டினர் எனலாம்.

சமணர், பௌத்தர் ஆகியவர்கள் அறக்கோட்பாட்டுக்கு முதன்மை கொடுப்பவர்கள். தர்மம், சேவை இவையிரண்டாலும் தான் ஒருவன் விடுதலை அடையலாம் என்று நம்புபவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

உலகாயுதர் உலகம் ஒன்றுதான் உண்மை என்றும், காட்சிப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்றும் அதாவது கண்ணால் தெரிவது தான் உண்மையென்றும் கருதுகின்றனர். இவர்கள் இன்பம் என்றும் கூறும் போது மது, மாதுவென்றும் கருதவேண்டியுள்ளது.

இங்கு வைதீக தத்துவங்கள் மட்டுமே விபரிக்கப்பட்டுள்ளன. சித்தமருத்துவக் கோட்பாட்டுடன் புறச்சமயப் பிரிவுகள் அதிகம் தொடர்பில்லையாகையால் அதனை இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இனிச் சித்தர்களின் சித்தாந்தம் பற்றிக் காணலாம்.

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம் மருந்து போல் வாரு முண்டு

- மூதுரை -

## 2.4. தொண்ணூற்றாறு தத்துவங்கள்

தத்துவங்களை இருபத்தைந்து என்றும், முப்பத்தாறு என்றும், தொண்ணூற்றாறு என்றும் பலவாறு பிரித்துக்கூறியுள்ளனர். இவற்றில் சித்த மருத்துவ உடல் தத்துவம் சார்ந்த நூல்களில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் இவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். இதுபற்றித் திருமூலர்

"நாலொரு கோடியே நாற்பத்தெண்ணாயிர
மேலு மோரைந்நூறு வேறாயடங்கிடும்
பாலவை தொண்ணூறோடாறுட் படுமவை
கோலிய ஐயந்து ளாகுஞ் குறிக்கிலே"

எனக் குறிப்பிடுகின்றார்.

நான்கு கோடியே நாற்பத்தெண்ணாயிரத்து ஐநூறு (400 48500) தத்துவங்கள் சிறப்பாகவுண்டு என்றும், அவை அனைத்தும் தொண்ணூற்றாறென்று கூறப்படும் தத்துவங்களில் அடங்கும் எனவும், மேலும் அவற்றை அடக்கிக் கூறினால் இருபத்தைந்து என்கிறார்.

நமது உடம்பில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் அடங்கியுள்ளன என்பதை திருமூலர்

"முப்பதும் முப்பதும் முப்பத்தாறு வரும்
செப்ப மதிலுடைய கோயிலுள் வாழ்பவர்
செப்பும் மதிலுடைக் கோவில் சிதைந்த பின்
ஒப்ப அனைவரும் ஒட்டெடுத்தார்களே"

என்கிறார்.

கோயிலுக்குச் சமமான உடம்பில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் அடங்கியுள்ளன வென்றும், கோயிலான உடம்பு சிதைவு அடைந்த பின் அனைவராகிய தத்துவங்களும் அதனை விட்டு ஓட்டம் பிடித்துவிடுவார்கள் எனலாம்.

"ஆகின்ற தொண்ணூறோடாறும் பொது என்பர்
ஆகின்ற வாறாறருஞ் சைவர் தத்துவம்

ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறையைந்து மாயாவாதிக்கே"

என்பது வேறு ஒரு பாடல் இதில் பொதுவாகத் தொண்ணூற்றாறு தத்துவங்கள் எனினும் அவை சைவர்களுக்கு முப்பத்தாறு தத்துவங்களென்றும், இருபத்தெட்டு வேதாந்திகளுக்கும் (வைணவர்) இருபத்தைந்து மாயாவாதிகளுக்கும் ஆகும் என்பது இதன் பொருள்.

இனி மருத்துவத்துடன் தொடர்புடைய தொண்ணூற்றாறு தத்துவங்கள் பற்றி யூகி முனிவர் வைத்திய சிந்தாமணி எனும் நூல் கூறுவதை இங்கு பார்க்கலாம்.

1. அவஸ்த்தைகள் ஐந்து
   (1) விழிப்பு நிலை (2) கனவு நிலை
   (3) உறக்கம் (4) பேருறக்கம்
   (5) உயிர்ப்படக்கம்

2. ஆதாரங்கள் ஆறு
   (1) மூலாதாரம் (2) சுவாதிட்டானம்
   (3) மணிபூரகம் (4) அனாகதம்
   (5) விசுத்தி (6) ஆக்ஞை

3. மண்டலம் மூன்று
   (1) அக்கினி (2) ஞாயிறு
   (3) திங்கள்

4. மலம் மூன்று
   (1) ஆணவம் (2) கன்மம்
   (3) மாயை

5. தோடம் மூன்று (குற்றம்)
   (1) வளி (வாதம்) (2) அழல் (பித்தம்)
   (3)ஐயம் (கபம்)

6. ஈடான மூன்று (பற்று)

(1) பொருட் பற்று (2) புதல்வா் பற்று

(3) உலகப் பற்று

7. குணம் மூன்று

(1) சத்துவம் (2) இராஜோ (3) தமோ

8. இராகம் எட்டு

(1) காமம் (2) குரோதம் (பிணக்கு)

(3) உலோபம் (பிடிபாடு) (4) மோகம் (பிரியம்)

(5) மதம் (கா்வம்) (6) மாச்சரியம் (உட்பகை)

(7) இடும்பை (இகழ்தல்) (8) அகங்காரம் (கோபம்)

9. நாடி பத்து (தசநாடி)

(1) இடகலை (2) பிங்கலை

(3) சுழுமுனை (4) சிகுவை

(5) புருடன் (6) காந்தாரி

(7) அத்தி (8) அலம்புடை

(9) சங்கினி (10) குகு

10. வாயு பத்து (தசவாயு)

(1) பிராணன் (2) உதாணன்

(3) வியானன் (4) சமானன்

(5) அபானன் (6) நாகன்

(7) கூா்மன் (8) கிருகரன்

(9) தேவதத்தன் (10) தனஞ்செயன்

11. அந்நதக்கரணம் நான்கு

(1) மனம் (2) புத்தி

(3) சித்தம் (4) அகங்காரம்

12. அறிவு ஒன்று

(1) அறிவு (ஆன்மா)

13. கன்மேந்திரியம் ஐந்து

(1) வாய் (2) கால்
(3) கை (4) எருவாய்
(5) கருவாய்

14. தன்மாத்திரை ஐந்து

(1) பேசல் (2) நடத்தல்
(3) செய்தல் (4) மலம், நீர் கழித்தல்
(5) விந்து கழித்தல்

15. ஐம்பொறிகள்

(1) மெய் (2) செவி
(3) கண் (4) நாக்கு
(5) மூக்கு

16. ஐம்புலன்கள்

(1) ஊறு (2) ஓசை (கேட்டல்)
(3) ஒளி (பார்த்தல்) (4) சுவை (ரசம்)
(5) நாற்றம் (கந்தம்)

17. ஐம்பூதங்கள்

(1) விண் (ஆகாயம்) (2) வளி (வாயு)
(3) தீ (தேயு) (4) நீர் (அப்பு)
(5) மண் (பிரிதிவி)

18. ஆசயம் ஐந்து

(1) இரைக்குடல் (ஆமாசையம்)
(2) செரிகுடல் (பக்குவாசயம்)
(3) சலவாசயம் (சலப்பை)
(4) மலவாசயம் (மலக்குடல்)
(5) சுக்கிலவாசயம் (வெண்ணீர்க்குடல்)

19. கோசம் ஐந்து

(1) பருவுடம்பு (அன்னமய கோசம்)

(2) வளியுடம்பு (பிராணமய கோசம்)

(3) மனவுடம்பு (மனோமய கோசம்)

(4) அறிவுடம்பு (விஞ்ஞானமய கோசம்)

(5) இன்பவுடம்பு (ஆனந்தமய கோசம்

20. வினை இரண்டு

(1) நல்வினை (2) தீவினை

வைத்திய சதக நாடி என்ற நூலிலும் இதே தொண்ணூற்றாறு தத்துவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எல்லாமாக தொண்ணூற்றாறு தத்துவங்களும் அணு வடிவில் பரந்து அசைந்த வண்ணம் உள்ளன.
இதனைத் திருமூலர்

"சிவமாடச் சக்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்த சித்தாந்தத்துள்ளே"

எனக் குறிப்பிடுகின்றார்.

சிவமாட மெய்களாகிய தத்துவங்களை இயக்கும் சக்தியும் ஆடுகின்றது. ஒளி வடிவாய்த் தத்துவம் கடந்த வியக்கத்தகு புதுமைசேர் தத்துவம் ஆடுவதாயிற்று. அத்திரு ஆடலினாலேயே ஏனையவையும் ஆடுவதாயிற்று. இவ்வுண்மையெல்லாம் வேதாந்த சித்தாந்த மெய்மையினுள் காணலாம். இந்த வியத்தகு புதுமை சேர் சக்தி தத்துவம (Atomic Energy) ஆடுவதை திருக்கூத்து எனவும் வர்ணிக்கின்றனர்.

மேலும் திருமூலர்

“ஆதி நடஞ் செய்தான் என்பார்கள் ஆதர்கள்
ஆதி நடஞ் செய்கை யாரும் அறிகிலர்
ஆதி நடமாட லாரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாமருட் சத்தியே”

என்கிறார்.

மேலே கூறப்பட்ட உண்மையை நுண்அறிவு இல்லாதவர்கள் (புல் அறிவாளர்கள்) ஆதியாகிய சிவபெருமானை பாதித் திருமேனியாகப் பிரிந்து நடனம் புரிகின்றார் என்கின்றனர். இவர்கள் சிவமானது, தானேயாய் நின்று திருக்கூத்துப் புரியும் உண்மை நுண்மைச் செய்கையினை அறிவதில்லை. சிவத்தின் திருக்கூத்தை அறியும் பேறு பெற்றபின் அவ்வாடல் சக்தியினால் நிகழ்வதென்னும் உண்மையை உணர்ந்தனர் எனக்கூறுகின்றார்.

இனி தொண்ணூற்றாறு தத்துவத்திலுள்ள ஐம்பூதம் பற்றி காண்போம்.

## 2.5. ஐம்பூதக்கொள்கை

ஆதியாகிய கடவுள் முதலில் ஐம்பூதங்களையும் தோற்றுவித்து, பல உலகங்களைப் படைத்தான். எண்ணற்ற தேவர்களைப் படைத்தான் எல்லாவற்றையும் அவனே தாங்கி நின்றான் இதனைத் திருமூலர்

"ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணில்பல் தேவரை
ஆதி படைத்தவை தாங்கி நின்றானே"

எனக் கூறுகின்றார்.

ஐம்பூதம் பற்றி யூகிமுனி குறிப்பிடுகையில்

"நிகழ்ந்த சீரப் பிரிதிவி அப்புதானும்
நேரான தேயுவோடு வாய்வு மாயும்
அகழ்ந்த காயத்தோ டைந்தாம் பூதம்"

எனப் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என ஐந்து பூதங்களைக் கூறுகின்றார்.

தொண்ணூற்றாறு தத்துவங்களில் ஐம்பூதங்களும் ஓர் அங்கமாக அமைகின்றது. ஐம்பூதங்களில் யாதாவதொரு பூதம் நிலை சக்தியிலிருந்து சலன சக்தியை அடைகின்றதோ அந்தப்பூதம் அணுவாக, பெரிதாகி உருவமாக மாறுகின்றது. அப்பொழுது மற்றைய தொண்ணூற்றைந்து தத்துவங்கள் அப்பூத அணுவில் பொதிந்து மறைந்து இருக்கின்றன.

இனி ஐம்பூதங்கள் அருவநிலையில் இருந்து உருவநிலை பெறுவதைக் கவனிப்போம். இதனையே பஞ்சபூத பஞ்சீகரணம் எனச்சித்தர்கள் இயம்பினர். ஐம்பூதங்களின் தோற்றம் பற்றிக் கவனிக்கையில் விண், வளி, தீ, நீர், மண் ஆகியன முறையே தோன்றின எனலாம்.

**விண் (ஆகாயம்)**

பல நூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி, சூரியன் போன்ற கிரகங்கள் தோன்றாத காலத்தில் எங்கும் பரந்து இருள் மயமான வெட்ட வெளியிருந்தது. இந்த வெட்ட வெளியிலேயே இன்று எல்லாக் கிரகங்களும், நட்சத்திரங்களும் காணப்படுகின்றன. கோள்கள் எல்லாம் உருண்டையாக இருப்பதைக்கண்ட சித்தர்கள் பூமியையும் உருண்டை வடிவமானது எனக்கூறினர். அண்டவெளியில் கோள்கள், விண்மீன்கள் ஆகியன சுற்றிக்கொண்டு அசைந்த வண்ணம் இருக்கின்றன. இவை அனைத்தும் தங்களை தாங்களே தட்டாமல் சுற்றுகின்றன. இவை ஒரே இடத்தில் ஒரு கணநேரம் கூட நிற்காமல் சுழன்று கொண்டே வருகின்றன. இவையெல்லாம் இவ்வாறு யாத்திரை செய்யும் வெட்ட வெளியைத்தான் ஆகாயம், விண், வான். வெளி, விசும்பு என்று பல பெயர்களால் குறிப்பிடுகின்றனர். இந்த வெட்ட வெளியில் சஞ்சரிக்கும் அனைத்தும் சேர்ந்தே **பிரபஞ்சம்** என்றும் **பேரண்டம்** என்றும் கூறுவர்.

ஆகாயத்தில் மிதந்துள்ள அணுக்கள் யாவும் சதா ஒன்றோடு ஒன்று மோதலும், பிணங்குதலும், பிரிதலும் என்ற மாயா காரியங்களைப் புரிகின்ற காலத்தில் ஒலி பிறக்கின்றது. இதனையே நம் முன்னோர்கள் ஓம் என்ற தத்துவமாக் கொண்டார்கள். இவ்வாறே மற்ற சக்திகளாகிய ஒளி, தீ போன்றவையும் சிறு அளவிலாகத் தோன்றுகின்றன. இதனையொட்டியே ஆகாயம் ஒளிமயமானது எனக் கூறினர்.

**வளி (காற்று)**

விண் அணுக்களின் மாயா காரியத்தால் அணுத்திரளைகள் தோன்றின. வளி அணுத்திரள்கள் எப்போதும் நிலையாக இருப்பதில்லை. இவையும் சதா சலனமுற்றுக் கொண்டேயிருக்கின்றன. இவ்வாறு இவ்வாயு அணுக்கள் ஒன்றோடு ஒன்று மோதலும், இணைதலும், பிணங்குதலும், பிரிதலும் போன்ற காரியங்களால் ஒளி பிறக்கின்றன. ஒளியின் தொகுதியில் விண்மீன்கள் ஆகாய மண்டலத்தில் மிதக்கின்றன. விண் மீன் தொகுதிகளில் நட்சத்திர மண்டலங்கள் தோன்றின. அவ்வாறு ஏற்பட்ட நட்சத்திரங்களுள்

சூரியனும் ஒன்றாகும். இம்மாதிரியான சூரியனைக் கொண்ட நட்சத்திர மண்டலங்கள் அதிகம் உண்டு. இந்த நட்சத்திரங்களுக்கு இடையில் விண்மீன்கள் இயங்குகின்றன. ஆகவே சூரிய நட்சத்திரங்கள் ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டு வளி அணுக்களை வெளி நோக்கித் தள்ளுகின்றன. அவ்வாறு தள்ளப்பட்டு அடர்த்தியான வாயு மண்டலம் தோன்றின.

## தீ (தேயு)

வாயுக் கோளத்தின் மத்தியில் அடர்த்தி அதிகமாயும் அவற்றைச் சுற்றி அடர்த்தி குறைவாகவும் இருந்தது. வாயுக் கோளங்கள் திரண்டு எழும்போது அடர்த்தியும், அழுத்தமும் அதிகமாகி அவற்றின் மத்தியில் ஒருவித ஈர்ப்புச்சக்தி ஏற்பட்டது. இச்சக்தியால் வாயுக்கோளத்தின் மேல்பரப்பிலுள்ள வாயு உள்ளிழுக்கப்பட்டு அக்கோளம் வரவரச் சுருங்கிக் கொண்டே போனது. இந்தச் சுருக்கத்தின் போது சூடும், ஒளியும் ஏற்படுகின்றது. இதே சமயத்தில் இதே காரியம் வாயுக்கோளங்களுக்கு இடையேயும் ஏற்பட்டு அக் கோளங்கள் நன்கு இறுகாதபடி சிதறியும் விடுகின்றன. சிதறிய துண்டுகள் ஆகாய வெளியில் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் தனித்தனியே இறுகி அழுத்தமடைந்து பிரகாசிக்கத் தொடங்குகின்றன. இவ்வாறு தனியே வெளியே வந்த பின்பு சூடு பன்மடங்கு அதிகரித்துக் கற்பனைக்கு எட்டாதளவு உயர்ந்து விடுகின்றது. சூட்டினால் அந்தக் கோளங்களிலுள்ள பொருள்களின் அணுக்கள் சிதைந்தும், சிதைந்த அணுக்கள் ஒன்று சேர்ந்தும் புதிய வாயு அணுக்கள் உண்டாகியும அப்போது அவ்வாயுக் கேளங்களிலிருந்து வெப்ப சக்தியும் ஒளிச்சக்தியும், ஆகாய வெளியில் வீசப்படுகின்றன. இவ்வாறு ஏற்பட்டதுதான் சூரிய மண்டலமாகும். எனவே இந்தப் பரந்த வெட்ட வெளியில் வளி, ஒலி, ஒளி, தீ என்ற ஆற்றல்களும் எரிப்பிளம்பாய் நிற்பது **சூரியன்** எனலாம்.

## நீர் (அப்பு)

மேற்குறிப்பிட்ட ஆவிப் பொருள்களில் நீர்ப்பொருள்கள் நிறையவுள்ளன. அவ்ஆவிப் பொருள்கள் உருகிய கனமான

பொருள்களாய் உருண்டைவடிவின் மத்தியில் சென்றடைந்து லேசான பகுதிகள் மேலே படிந்தும் பின்பு ஆகாய வெளியின் குளிர்ச்சி உருண்டை வடிவத்தைப் பாதித்துக் கொண்டேயிருந்தது. அதன் குளிர்ச்சியால் மேல் பகுதியெல்லாம் திடமான கெட்டிப்பொருளாக இறுகிவிட்டன. இறுக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியாலும் வாயுவினால் வெப்பம் ஏற்பட்டதன் காரணமாக உள்ளே தங்கிவிட்ட கனமான பொருள்கள் நீர் நிலையிலேயே இருந்து விட்டது (Liquid Magna) இவ்வாறு இறுகியதே பூமியாகும்.

பூமி பிறந்து பல ஆயிரம் வருடங்களுக்குப் பின்பும் சூரிய வெப்பத்தால் சூடடைந்து கொண்டே வந்தது. அதே சமயம் ஆகாய வெளியின் குளிர்ச்சி அதை இறுக்கியது. பூமி அக்குளிர்ச்சியைத் தாங்குமளவுக்குச் சிறிய வெப்பத்தைக் கிரகித்துக் கொண்டு ஆகாய வெளியில் வீசியது. சூரியனுடைய வெப்பம் தொடர்ச்சியாகக் கிடைத்துக்கொண்டேயிருந்த காரணத்தால் பூமியின் மையப்பகுதி மேலும் சூடாகிகொண்டே வந்தது. பூமிக்கு அடியில் உள்ள வாயுக்கள் மற்றும் பொருட்கள் அடைபட்டுக்கிடந்தன. இவ்வாயுக்கள் எல்லாம் உட்புற வெப்பத்தால் விரிவடைந்து பூமியைஉள்ளிருந்து அழுத்தின. மையத்தை விட மேற்பரப்பு இளகியிருந்ததால், அவ்விளகிய மேற்பரப்பினைப் பிளந்து கொண்டு வாயுக்கள் தள்ளப்படும்போது பூமிக்குஅடியில் உருகியிருந்த பாறை, உலோகங்கள் முதலியன வெளியே தள்ளப்பட்டு, இதனால் பூமியின் மேல் மலைகள் தோன்றவும், உலோகங்கள் காணவும், அதைச்சுற்றி வாயு மண்டலங்களும் ஏற்பட்டன.

இது பற்றி கலாநிதி குணராசாவின் கருத்து நோக்கத்தக்கது. பூமியின் வளி மண்டலத்தோற்றம் பற்றி இரு கருத்துக்கள் உள்ளன. முதலாவதாக பூமி தோன்றிய வேளையிலேயே வாயுப்படை வளிமண்டலமாகவிருந்தது. இரண்டாவதாக பூமியின் உட்பகுதிகளிலிருந்து வெளிப்பட்ட வாயுக்களே வளி மண்டலமாக மாறினவென்றும் கூறுகின்றார்.

இவர் தொடர்ந்து கூறுகையில் மேல் உள்ள

இரண்டாவதாகக் குறிப்பிட்ட பூமியின் உட்பகுதியில் இருந்து வெளிவந்த வாயுக்கள் நீராவி, காபனீரொட்சைட், நைதரசன், கந்தக ஒக்சைட்டு ஆகியனவென்றும் இவற்றில் முதல் மூன்றும் இன்றைய புவி வளிமண்டலத்தில் அதிகம் காணப்படுகின்றன வென்றும், இன்றைய புவி வளி மண்டலத்தில் உள்ள ஒட்சிசன் (Oxygen) எரிமலையிலிருந்து வந்த நீராவி சூரியனின் கதிர் வீச்சால் நீர் மூலக்கூறு பிரிபட்டு ஒட்சிசனைத் (Oxygen) தோற்றுவித்ததெனவும், தாவரங்களின் ஒளிச்சேர்க்கையால் வளி மண்டலத்தில் ஒட்சிசன் மேலும் சேர்ந்தது என்றும், இச்செயற்பாடு தொடர்ந்து நடைபெற்று வருவதால் வளிமண்டலத்தில் ஒட்சிசன் அளவு குறையவிடாது பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுகின்றார்.

பூமியைச் சுற்றியுள்ள வாயுக்கள் சூரிய வெப்பத்தால் இலேசாகி மேலே சென்றன. அங்கு நீராவி குளிந்ததால் நீராக மாறிற்று. நீர் பூமியின் ஈர்ப்புச் சக்தியால் கீழே இழுக்கப்பட்டு மழையாகப் பெய்ய ஆரம்பித்தது. மழைநீர் பூமியில் பட்டவுடன் அது பூமியின் சூட்டினால் மறுபடியும் ஆவியாகி மேலே சென்று குளிர்ந்தவுடன் மழையாகப் பெய்தது. நாளா வட்டத்தில் ஆகாயத்தில் ஆவிப்பொருள்கள் வாயு மண்டலத்தில் சேர்ந்து பெரியதொரு மேக மண்டலம் பூமியைச் சூழ்ந்து கொண்டது. இந்நிலையில் பூமியின் மேல்பரப்பு குளிர ஆரம்பித்தது. இடைவிடாமல் மழைபெய்யவும் மழைநீர் பூமியில் விழுந்து நிலப்பரப்புக்களில் ஆறுகளாகவும், நதிகளாகவும் ஓடிக் காலம் செல்லச்செல்ல பள்ளத்தாக்கில் நீர் தேங்கி நின்று கடல்களாக விளங்கின.

**மண் (பிரிதிவி)**

இவ்வாறு எரிப்பிளம்பாய் உருண்டை உருவாய் வந்த பூமி காலக்கிரமத்தில் ஆகாய வெளியில் ஏற்பட்ட வாயு மண்டலங்களாலும், ஆவிமண்டலங்களாலும் குளிர்ச்சியடைந்து நானாவித உலோகங்களும், காரசாரங்களும் சேர்ந்ததொரு உருண்டைப்பகுதியாகிய தன்னையும் சுற்றிக்கொண்டு இன்று நாம் வாழும் மண்பூதமாக விளங்குகின்றது.

"ஐம்பூதத் தோற்றம் பற்றிப் பண்டைய தமிழ் இலக்கியங்களில்

நிலந்தீ நீர்வாயு விசும் போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதரின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழா அமைத்
திரிவில் சொல்லொடு தழா அல் வேண்டும்"

"மண் டிணிந்த நிலமும்
நிலமேந்திய விசும்பும்
விசும்புவதைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூததியற்கை போல"

இவை முறையே தொல்காப்பியத்திலும் புறநானூறிலும் காணப்படும் குறிப்புகள் ஆகும்.

இதுபற்றித் திருமந்திரம்

"மண்ணினில் ஒன்று மலர் நீரு மங்காகும்
பொன்னினில் அங்கி புகழ்வழி யாகாயம்
மன்னு மனோ புத்தி யாங்காரம் ஒரோன்றாய்
உன்னின் முடிந்த தொரு பூத சயமே"

"விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கரமாக
விரிந்த எழுத்தது மேல் வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே"

என்கிறது.

இங்கு ஐம்பூதங்கள் தோன்றியது பற்றி எல்லோரும் குறிப்பிட்டுள்ளனர். தொடர்ந்து திருமூலர் குறிப்பிடுகையில் இவ்வுலகம் இறைவனின் படைப்பு என்றும் இங்கு குயவன் சக்கரத்தில் வைக்கப்பட்ட மண்ணையே விரும்பியபடி பலவகை மண்பாண்டங்களாக வனைவது போல் இறைவன் உயிர்களைக்காத்து அவை இருப்பதற்கு உலகத்தையும் படைத்தான் என்பதை

"குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப்போல எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இது வாமே"

எனவரும் பாடலில் கூறுகிறார்.

| |
|---|
| சீரியரிருவரும் சிறந்த மூவரும்<br>வாரிய கடலமுதுண்ட மாயரும்<br>கூரிய ரொருவருங் கொடிய காயரும்<br>நேரிய றெண்மரும் நெருப்போடொக்குமே<br>- அட்டசூரணம் - |

## 2.6. (அ) அண்டமும் பிண்டமும்

ஆகாய வெளியாகிய அண்டத்துக்கும் நமது உடம்பாகிய பிண்டத்துக்கும் இடையில் உள்ள தொடர்பைக் கவனிக்கும் போது அண்டத்தில் உள்ள பொருள்கள் பிண்டத்திலும் உண்டு என்று சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை

"அண்டத்தி லுள்ளதே பிண்டம்
பிண்டத்தி லுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே"

எனச் சட்டமுனிஞானம் கூறுகின்றது.

பஞ்சபூதத்தினால் உருவாகும் உடலுக்குத்(பிண்டம்) தேவையான அனைத்தும் வாயு ரூபமாக அண்டத்தில் உள்ளன. இதனை இன்றைய நவீன விஞ்ஞானப்படி உயிர் தோற்றத்துக்குத் தேவையான வாயுக்களான பிராணவாயு (Oxygen), நைதரசன் (Nitrogen - நீர்துருசவாயு), ஐதரசன் (Hydrogen - நீர்வாயு), காா்பன் (Carbon - கரி) ஆகியவை அண்டத்தில் உண்டென்று கூறுகின்றனர். மேற்கூறிய அனைத்தும் பேரண்டவெளியில் வாயு ரூபமாக உலாவிக்கொண்டு இருக்கின்றன. தாவரத்தின் ஒளிச்சேர்க்கைக்குக் (Photo Synthesis) கரியமில வாயுவும், சூரிய ஒளியும் தேவை. இத்தகைய ஒளிச்சேர்க்கையால் தாவரங்கள் கரியமில வாயுவைப் பெற்றுக் கொள்வதால் பவனத்தில் உள்ள மாசு நீங்குகின்றது. இதன் அடிப்படையிலே மரங்களையும் பண்டைய தமிழர் தெய்வமாகக் கருதினர். இதனில் வேம்பு அரசு போன்றவை முக்கிய இடம் பெறுகின்றன. தாவரங்களின் வளர்ச்சிக்கு நைதரசன் (Nitrogen - நீர்துருச வாயு) தேவை. இந்த நைதரசன் வாயுவை சில தாவரங்கள் அண்ட வெளியிலிருந்த எடுத்து தங்கள் வேர்களில் முடிச்சுக்களாக (Leguminaceng) சேமித்து வைக்கின்றன.

பிராணவாயுவும் ஐதரசன் வாயுவும் சேர்ந்து ($H_2O$) நீர் உண்டாகின்றது. உயிர் வாழ்வதற்கு பிராணவாயு இன்றியமையாதது.

சுவாசிப்பதற்கும் பிராணவாயு தேவை. அதேபோல் தாவரங்களும் மற்றும் உயிரினங்களும் நீரின் உதவியால் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும், கரைக்கவும், செரிப்பிக்கவும் செய்கின்றது. இவை அனைத்தையும் கொண்டு உயிருக்கு ஆதாரமான பொருட்கள் யாவும் அண்டத்திலிருந்து மாறிப்பிண்டமாகப் பரிணமிக்கின்றன. இதனையே தேரையர் சித்தர் **"வாதமாய் படைத்துப் பித்தவன்னியாய்க் காத்துச் சேட்ப சீதமாய்த் துடைத்துப் பாராந்..............."** என்ற பாடல் மூலம் கூறினார். ஆகாய பூதமும், வாயு பூதமும் சேர்ந்து வாதமாகும். எனவே படைப்புக்கு ஆதாரம் ஆகாயமும் வாயுவும் சேர்ந்த வாதமாகும்.

இவ்வாறு அண்டத்திலுள்ள வாயுக்களின் சேர்க்கையின் மாறுபாடுகளால் பிண்டமாகிய உடல் பரிணமித்தது. எடுத்துக் காட்டாக ஒரு கலம் (One Celled) உள்ள அமீபா என்ற தாவரமே முதன் முதலில் நீரில் தோன்றிய உயிர் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. இதனைச் சித்தர்கள் முதல் சீவராசி நீரிலேயே தோன்றியதென்றும் அதுவே பாசி, அது ஒரு தாவர வர்க்கம் அதன் பிறகு கடல் பஞ்சு என்றும், இவ்வாறாகச் சின்னஞ்சிறு புழுக்கள் போல் உண்டாகி மேலோடுகளுடன் காணப்பட்டவை என்றும், அவ்வாறு தோன்றியது முத்துச்சிப்பி காலக்கிரமத்தில் சிறு செடிகள் உண்டாயிற்று எனவும், பலகோடி வருடங்களில் ஏழுவகை உயிரினங்கள் தோன்றியதெனவும் கூறுகின்றனர்.
இதனை மணிவாசகர்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
..........................................................................
..........................................................................
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்
.........................................................................."

எனக் குறிப்பிடுகின்றார்.

இந்து மதத்தவர்கள் இறந்தவர்களின் உடலைத் தீயில்

எரித்துப் பின்னர் அந்தச் சாம்பலை நீரில் கரைப்பது வழக்கமாகவுள்ளது. இதனை ஒரு சடங்காகவும் செய்து வருகின்றனர். இதனில் ஆழ்ந்த தத்துவக்கருத்து உண்டு. அதாவது ஐம்பூதங்களால் உண்டான உடம்பை இறுதியில் அக்கினியால் எரித்து எங்கிருந்து வந்தனவோ அங்கேயே அதாவது ஐம்பூதங்களிடம் ஒப்படைத்து, உயிர் எங்கு தோன்றியதோ அங்கு அதனையும் ஒப்படைப்பதாகக் கருதி நீரில் சாம்பலை கரைத்து விடுகின்றனர். இதனிலிருந்து இந்துமதமும், உயிர் முதன் முதல் தோன்றியது நீரிலேயே எனக் கருதுகின்றது எனலாம்.

பரிணாம தத்துவப்படி நீரில் உள்ள பல்லாயிரம் தாவரங்கள் நீர் நிலம் ஆகியவற்றால் வாழும் சீவராசிகளாகப் பரிணமித்தன. அண்டத்தில் உள்ள ஐம்பூதங்களே அனைத்து பொருள்களுக்கும் ஆதாரம். எனவேதான் அண்டத்திலுள்ளதே பிண்டத்திலும் என்று சொல்லுவது பொருத்தமாகி விட்டது. பொருட்களில் உள்ள ஐம்பூதச்சேர்க்கையைக் கவனிக்கும்போது அதாவது ஐந்து பூதங்களில் ஏதாவது ஒரு பூதத்தின் தன்மை மிகுதியாகவும் மற்ற நான்கு பூதங்களின் தன்மை உள்ளடங்கியும் இருக்கும். ஒரு பொருளுக்கு எந்தப் பூதத்தின் தன்மை அதிகமாக இருக்கின்றதோ அந்தப்பூத அம்சமுடைய பொருள் என்று அதனைக் கூறலாம். இதனைச் சித்த மருத்துவ நூல்களில் எடுத்துக் காட்டாக் கூறும் போது தங்கம் மண்ணின் கூறை உடைய தென்றும், வங்கம் நீரின் கூறை உடைய தென்றும், தாமிரம் (செம்பு) நெருப்பின்கூறை உடையது எனவும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு அண்டவெளியில் தோன்றிய பெரும் பூதங்கள் ஒன்றோடு ஒன்றும் பலவுமாகச் சேர்ந்து பலதரப்பட்ட பொருள்கள் தோன்றின. இப்படியாக ஐந்து பூதங்களும் பலவிகிதங்களில் சேர்ந்து பல பொருட்களாகப் பரிணாமிப்பதைத்தான் **“பஞ்சபூதப் பஞ்சி கரணம்”** என்று கூறுவர். இதனைச் சைவசித்தாந்தம் உலக உற்பத்திக் கோட்பாட்டில் விளக்கியுள்ளது. அதாவது நுண்நிலையிலுள்ள பஞ்சபூதங்கள் பல விகிதங்களில் சேரும் போது அருவ நிலையிலிருந்து உருவநிலையடைகின்றன. இதனைக்

கைவல்ய நவநீதம்

“ஐந்து பூதமும் பத்தாகி அவை பாதி நன்னான் காக்கி
நந்துதம் பாதிவிட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூதம் மகாபூத மிவற்றினின்றும்
தந்தன நான்காள் தூல தனுவண்ட புவன போகம்”

என இவ்வாறு குறிப்பிடுகின்றது.

அண்ட வெளியில் உண்டாகின்ற பருவமாற்றங்களும் பிண்டமாகிய உடலைப் பாதிக்கச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக வெயில் காலங்களில் சூரியனுடைய அனல் கதிர்கள் பூமியை வந்தடைந்து சூடாகி திரும்பவும் அண்டத்தை நோக்கி பூமியிலிருந்து அனல் கதிர்கள் மேலே செல்லுகின்றன. இந்நேரத்தில் மழையை தருவிக்கும் கரு மேகங்கள் அண்டத்தில் உருவாகினால் அது பூமியிலிருந்து செல்லும் அனல் கதிர்களை மேலே செல்ல விடாமல் தடுத்து திரும்பவும் கீழே பூமிக்கு அனுப்புகின்றன. இதனால் வெப்பம் மேலும் கூடி உடலில் வியர்வையைப் பிறப்பிக்கின்றது. எனவே உடம்பில் வியர்வை ஏற்படுவதைக் கொண்டு மழை வரப்போகின்றது எனக் கூறும் உலக வழக்கையும் காணலாம். இதனிலிருந்து அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் காணலாம் என்று கூறுவது பொருத்தமாகின்றது.

இதைவிட சில நோய்கள் அண்டத்தில் வெப்பம் அதிகரிக்கும் போது உண்டாவதைக் கூறலாம். இவற்றுக்கு எடுத்துக்காட்டாகப் பெரிய அம்மை, சின்ன அம்மை, செங்கண்மாரி போன்ற நோய்கள் இக்காலங்களில் தோன்றுவதைக் காணலாம். இன்றைய நவீன விஞ்ஞானம் இத்தகைய நோய்களுக்கு வைரஸ் என்ற கிருமியே காரணம் என்கின்றனர். அறிவியல் ரீதியா இவற்றை நாம் ஏற்றுக்கொண்டாலும் கூட இத்தகைய நோய்கள் பரவுவதற்குப் பவனத்தில் ஏற்படுகின்ற வெப்பம் சாதகமாகவே இருக்கின்றது. இதைச் சித்தமருத்துவ நூல்களில் பருவகாலங்களுக்கேற்ப ஏற்படும் நோய்களாக விபரிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு அண்டத்தில் தோன்றிய ஐம்பூதங்களின்

விரிவுத்தன்மையாகவே தொண்ணூற்றாறு தத்துவங்களும் தோன்றின. எனவே அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் எனச் சித்தர்கள் கூறினர்.

### (ஆ) தேகம் ஐம்பூதக்கூறு

நுண்ணிய நிலையிலுள்ள பஞ்சபூதங்கள் பல விகிதங்களில் சேரும்போது பரு நிலையை அடைகின்றன. இவ்வாறு தோன்றிய உயிரினங்களில் உயர்ந்ததாகக் கருதப்படுவதான மானிட உடலும் ஐம்பூதக்கூறுபாட்டை உடையது எனலாம்.

மனித உடலில் பிருதிவி / மண் பூதம்
தசை, மயிர், தோல், என்பு, நரம்பு ஆகியவை

மனித உடலில் அப்பு (நீர்) பூதம்
சிறுநீர், சுக்கிலம், செந்நீர், கொழுப்பு, மூளை முதலியன

மனித உடலில் தேயு பூதம்
மனித உயிர்கட்கு காணப்படும் இறுமாப்பு, சோம்பல், தூக்கம், பார்வை முதலியன.

மனித உடலில் வாயு பூதம்
ஓடுதல், இருத்தல், நடத்தல், கிடத்தல் ஆகியன.

மனித உடலில் ஆகாய பூதம்
ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை ஆகியன.

இவையன்றி மனித உடலிலுள்ள தத்துவங்கள் அனைத்தும் இயற்கைக்கு மாறாகச் செயற்படும்போது பிணியை உண்டாக்குகின்றன. இந்த சக்திகள் கூடுதலாகவும் உச்சமாகவும் பரவும்பொழுது உலகிற் குறிப்பிட்ட பாகங்களில் சில தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு பகுதி நிலத்தை (Area) தாக்கும் தொற்றுநோய்களைக் குறிப்பிடலாம். அங்ஙனமே இச்சக்திகள் பிரபஞ்சத்திலும் (அகிலம்) பரவும்போது உலகத்தில் குறிப்பிட்ட பாகங்களில் அழிவை உண்டாக்கும் இது நோய்களாகவோ (கொள்ளை நோய்) அழிவை உண்டாக்கும் சந்தர்ப்பங்களாகவோ (பூகம்பம், புயல், பெருமழை, வெள்ளம்) இவற்றினால் அழிவு ஆகியவைகள் ஏற்படும்.

மற்றும் மனிதனது குருதியில் அடங்கியுள்ள மூலப்பொருட்களுக்கும், செவ்வாய்க் கிரகத்திலிருந்து வெளிப்படுத்தப்படும் சூட்சுமமான சில சக்திகளுக்கும் ஒற்றுமையுண்டு. சுக்கிரன் எனும் கிரகம் உயிர்கள் உய்வதற்கு ஏதுவான சக்தியை பரப்புகின்றது. இச்சக்தியானது மேற்குறிப்பிட்ட செவ்வாய்க் கிரகத்திலிருந்து வெளிப்படுத்தும் சக்தியை தடைசெய்யும் இயல்புடையது. இவ்வண்ணம் இல்லையேல் உலகத்தில் மனித வர்க்கமும் தத்தம் இனங்களைப் பெருக்கும் இயல்பு அற்றுப்போகும். உலகிலுள்ள உயிர்ப்பொருட்களுக்கும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாய் இருக்கும் நிலமை மேற்கூறிய சுக்கிரன் எனும் கிரகத்தின் சக்தியினால் விளைவெனவாகும். இதனாலேயே ஆண், பெண்களுக்குள்ளே பிரேமையும், அனுராகமும் (அன்பு) என்ற பாசமும் உருவாகின்றன.

பிரேமை - இலட்சியமாய் எடுக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு தன் நாயகனிடம் மட்டும் ஏற்படும் கற்பின் அடிப்படையான பாசம்.

அனுராகம் - ஆண்மகனுக்குத் தன் மனைவியிடம் ஏற்படும் அன்பு.

ஆன்ம உடலின் அமைப்பை நாம் அறிவதற்கும் வையகம் அனைத்துக்கும் முதற் கருவாய் நின்ற பொருளின் தத்துவத்தை அறிவதற்கும் ஏதுவாகின்றான். மனிதன் உலகிலுள்ள தாவரப்பொருட்கள், சங்கமப்பொருட்கள் எல்லாமுண்டாவதற்கு ஏதுவாய் நின்ற ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்ட சிறியதொரு உலகம் என்று அறியத்தக்கவன். மனித உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் வையகத்தில் பரவிநிற்கும் சில தத்துவங்களின் பொதுவான சக்தியால் உண்டானதாகும். இந்த சக்திகளின் சேர்க்கை இவற்றின் வாயிலாக உண்டான உறுப்புக்களை ஆட்டுவிக்கும் தன்மை உடையன என்பது இதனால் புலனாகின்றது.

உதாரணமாக தமரகம் (இதயம்) எனும் உறுப்பு சூரிய சக்தியில் இயங்குவதாகவும், மூளை சந்திரனால் இயக்கப்படுவதாகவும், பித்தப்பை

செவ்வாய்க் கிரகத்தோடு சம்பந்தப்பட்டதாகவும், சிறுநீரகம் (Kidney) சுக்கிரனுடன் தொடர்புடையதாகவும், நுரையீரல் புதனுடன் தொடர்புடையதாகவும், கல்லீரல் (Liver) குருவோடும் (வியாழன்), மண்ணீரல் (Spleen) சனிக்கிரகத்துடன் சம்பந்தப்பட்டதாகவும் சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

ஆகவே மனித உடல் அமைப்பில் வெளியில் உள்ள கிரக நட்சத்திரங்களை அசைவிக்கும் சக்தி பொதிந்து கிடக்கின்றது என்பது நன்கு புலனாகின்றது. ஆன்மசக்தியின் பெருக்கால் மேற்சொன்ன நட்சத்திரம், கிரகம் முதலியவைகளை ஒரு ஞானி இயக்க வல்லனாகின்றான். இதனாலேயே சித்தர்கள் புலனை அடக்கு புவனம் உன்னுள் அடங்கும் என்று கூறியுள்ளனர். ஆன்மசக்தி அற்றவர்கள் இந்த நட்சத்திர கோளங்களின் சக்தியால் இயக்கப்படுகின்றார்கள் எனலாம். இவ்வாறு தோன்றிய ஐம்பூதங்களின் விரிவுத்தன்மையாகவே தொண்ணூற்றாறு தத்துவங்களும் உருவாகின. எனவேதான் அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் என நமது சித்தர்கள் கூறியிருக்கின்றார்கள்.

## 2.7. ஆறு ஆதாரங்கள்

தொண்ணூற்றாறு தத்துவங்களில் ஆறு ஆதாரங்களும் ஒரு பிரிவாகும். இது சமய தத்துவக்கோட்பாட்டுடன் கூடுதலாகத் தொடர்புடையது. யோகப் பயிற்சியில் ஈடுபடுகின்றவர்கள் உடம்பின் அடிப்பாகமாகிய மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி படிப்படியாக சிரசிலுள்ள சஹஸ்ராரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு படியையும் ஓர் ஆதாரமாக யோகிகள் குறிப்பிடுகின்றனர்.

சித்தர் உடல் தத்துவ நூலின்படி எல்லா நரம்புகளும் முதுகுத்தண்டின் வழியாகவே மூளையை அடைகின்றன. இந்த நரம்புப் பின்னல்களை அடக்கிய முதுகுத்தண்டு ஆறு ஆதாரங்களுக்கும் அடையாளம் காட்டும் யோகத்தண்டாகவும் விளங்குகின்றது. முதுகுத்தண்டின் அடிப்பாகம் உடம்புக்கு ஆதாரமாகவுள்ளது. எதையும் ஆரம்பிப்பது என்றால் அடியிலிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும்.

இத்தகைய நரம்புத்தண்டைச் சுற்றி முதுகெழும்புகள் மோதிரங்களைப் போன்ற வளையங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு ஒரு கோர்வையாகவே உள்ளது. எலும்புகளை அடுக்கும்போது நடுவில் ஏற்படும் துவாரத்தின் வழியாகவே நரம்புகள் செல்கின்றன. இந்நரம்புகளில் உணர்வு நரம்புகளும் இயக்க நரம்புகளும் சேர்ந்து உள்ளன. வெளியில் உள்ள உணர்வுகள், உணர்வு நரம்புகள் மூலம் உட்சென்று மூளையை அடைகின்றது. மூளையில் இடும் கட்டளைக்கு ஏற்ப இயக்க நரம்புகள் தமது வேலையை ஒழுங்காகச் செய்துவருகின்றன. இந்நரம்புத்தண்டில் அமைந்துள்ள ஆறு ஆதாரங்களை எங்கெங்கு எனச் சுட்டிக்காட்டியிருந்தும் சுப்பிரமணியர் ஞானத்தில் “ஆறாதாரங்களும் ஒன்றென்று அறி” எனக் கூறப்பட்டிருப்பது மேலும் சில விடயங்களை அறிவிப்பதாக உள்ளது. யோக சாதனையில் பல படிகளைக் கடந்தவர்களுக்கு ஆறாதாரங்களும் ஒன்றேதான் என்றும் ஆரம்பநிலையிலுள்ளவர்களுக்கு ஆறாக வகுத்துள்ளதென்றும் எஸ்.பி.இராமச்சந்திரன் கூறுகின்றார்.

ஆறாதாரங்கள் பற்றி யூகிமுனிவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"
.....................................................................................

குறிப்பான ஆதாரம் ஆறாங் கேளாய்
முந்தான மூலாதாரஞ் சுவாதி ட்டானம்
முதிர்ந்தமணி பூரகமுமனா கதமும் விசுத்தி
அந்தலாக் கினையுமா தார மாகும்
அடுக்கான ஆதாரத் தாண்மை கேளே"

என்பன அவ்வரிகள்.

ஆறு ஆதாரங்களைப் பற்றிய குறிப்பைக் கேட்டுக்கொள்வாயாக அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அனாகதம், ஆக்ஞை என்பவைகளாகும். அடுக்காக ஒன்றின்மேல் ஒன்றாக உள்ள ஆதாரங்களின் ஆட்சியைக் கேட்பாயாக என்பது இதன் பொருள்.

இதுபற்றி திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார்.

"நாளும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறுங்
கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலங்கண் டாங்கே முடிந்து முதல் இரண்டுங்
காலங்கண் டானடி காணருமாமே"

அக நிலைகள் ஆறும் வருமாறு நான்கிதல் உள்ள (மூலாதாரம்), மூலமும் ஆறிதழ் உள்ள (சுவாதிட்டானம்), கொப்பூழும் பத்து இதழ் உள்ள(மணிபூரகம்), மேல் வயிறும், பன்னிரண்டிதழ் உள்ள (அனாகதம்), நெஞ்சமும் பதினாறு இதழ் உள்ள (விசுத்தி), மிடறும் இரண்டு இதழ் உள்ள (ஆக்ஞை), புருவநடுவும் ஆகிய ஆறு இடங்களும் ஆறாதாரங்கள் என்பது இவற்றின் பொருளாகும்.

நவீன மருத்துவ நோக்குடன் இவ் ஆறு ஆதாரங்களைச் சிந்திக்கும்போது நமது உடம்பில் உள்ள நரம்புமண்டலத்துடன் (Nervous System) இதனை ஓரளவு ஒப்பிடலாம். உடல் உள்ளுறுப்புக்களுக்கும் நரம்புத்தூண்டல்கள் சரியாக வேலை செய்தாலேயே அவ்வுறுப்புக்களும் தமது வேலையைச் செம்மையாகச் செய்யமுடியும். அதேபோல் உடம்பின் வெளிப்பகுதிகளிலும் நரம்புப் பின்னல்கள் பரவிக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக வயிற்றின் அடிப்பாகத்தில் ஜனன

உறுப்புகளுக்கு மேலான பகுதியில் நரம்பு நார்கள் பின்னல்களாக பரவிக் காணப்படுகின்றன. இதனை Zolar Plexus எனலாம். இவ்விடத்தில் திடீரென ஓர் அடி விழுந்தால் அத்தாக்கம் மயக்கத்தை உண்டாக்கும். சில சமயம் உயிருக்கு ஆபத்தும் ஏற்படலாம். இவற்றைச் சித்தமருத்துவத்தில் எமது உடம்பில் 108 மர்மஸ்தானங்கள் (வர்மம்) உண்டு என்றும் விபரித்துள்ளனர். இவற்றில் சில இடங்களை மிக முக்கிய இடங்களாகவும் அதாவது உயிராபத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். உடம்பில் உள்ள நரம்புமண்டலத்தில் முள்ளந்தண்டுப் பகுதியில் உள்ள நரம்புக்கட்டுக்கள் மிக முக்கியமானதாகக் கருதலாம். அவை உடம்பில் பல பாகங்களில் இருந்தும் உணர்வுகளை எடுத்து முள்ளந்தண்டு ஊடாக மூளைக்குச் செலுத்துகின்றன. மூளையிலிருந்து இயக்க நரம்புகள் முள்ளந்தண்டு ஊடாக வந்து உடம்பின் பல பாகங்களுக்கும் இயக்கத்தைக் கொடுக்கின்றன. இந்தவகையில் முள்ளந்தண்டு முக்கியம் எனக் கருதப்படுகின்றது. குண்டலினி சக்தி முள்ளந்தண்டின் அடியிலிருந்து மேலே எழும்பி சிரசு வரை செல்வதற்குப் பாதையாக இந்த முள்ளந்தண்டு நரம்பைப் பயன்படுத்துவதாகக் கருதலாம்.

இனி ஆறு ஆதாரங்கள் பற்றிக் கவனிப்போம்.

1. மூலாதாரம் (குதத்துக்கும் லிங்கத்துக்கும் இடையிலுள்ள நடுப்பாகம்)
2. சுவாதிட்டானம் (கொப்பிழ்)
3. மணிபூரகம் (மேல் வயிறு)
4. அனாகதம் (இதயக்கமலம்)
5. விசுத்தி (கண்டதானம்)
6. ஆக்ஞை (லலாடத்தானம்)

**மூலாதாரம்**

முதலாவதாகக் கூறப்பட்ட மூலாதாரம் பற்றி யூகிமுனி குறிப்பிடும்போது

"கேளேமு லாதாறங் குதங்குய்யத் துக்கும்
கொடியாம நடுவிருக்கும பானத்தின் மேல்
வேளே வீணாத்தண்டின் கீழாயிருக்கும்
மிக்க நடுவே ஒரங் குலப்பிர மாணம்
முளேமுக் கோணநாலி தழ்க் கமல மாகி
முனிந்தநா விதழ்தனிலா லட்சரத்தை யுடைத்தாய்
வாளே முக் கோண நடு மந்திரம் ரீங்காரம்
வல்லபையாஞ் சக்தி வலப் பக்கமாமே"


மூலாதாரம் குதத்துக்கும் குய்யத்துக்கும் இடையில் கொடியாக இருக்கும். இது உடலின் நடுக்கோட்டில் முள்ளந்தண்டுக் கொடியின் கீழ் நுனியில் அமைந்துள்ளது. இது முக்கோண வடிவமுடையதாய், நாளிதழ் கமல அமைப்பு, இதனுள் காணும் நாலு இதழ்களிலும் நாலு அட்சரம் இருக்கும். நடுவில் ஓங்காரம் நிற்கும். ஓங்காரத்தின் வலது பக்கம் வல்லபை என்ற சக்தி காணப்படும்.

மேலும் யூகிமுனி தொடர்ந்து கூறுகையில்
"பக்கமா மந்திரமும் ஓங்கார மாகும்
பகரான தெய்வம் விக்கினே சுரந்தான்
வக்கமா மூலத்தில் வங்கொன்று நிறுத்தி
வாசியை நீ மறவாமல் மாட்டி யூதி
ஒக்கமா மூலத்தின் கீழடியிற் றானும்
ஓங்காரக் கம்பமதி லடியிற் கட்டி
இக்கமா இருவரையும் தெரிசித் தக்கால்
இகபரமும் வெளியாகி யேறலாமே"

ஓங்கார மந்திரத்தின் தெய்வம் விக்கினேஸ்வரன். இம்மூலாதாரத்தில் வாசியை நிறுத்தி விக்கினேஸ்வரனையும் வல்லபையையும் கண்டால் குண்டலினி சக்தி எழுந்து இதனால் அனைத்தும் அறிந்து சிறக்கலாம். இவ்விடத்தில் குண்டலினியின் அமைப்பு பாம்புபோல் சுருண்டு இருப்பதாகக் கூறப்படும்.

குய்யத்துக்கும் குதத்துக்கும் இடைப்பட்ட இடம்

முக்கோணம்
நாளிதழ் கமலம்
மாணிக்க நிறம்
கணபதி
குண்டலினி சக்தி
ஓங்காரம்




**சுவாதிட்டானம்**

இதுபற்றி யூகிமுனி குறிப்பிடும்போது -

"ஏறவே பளிச்சென்று மூலத் தீதான்
இதற்குமேலி ரண்டாமங் குலத்தின் மேலே
கூறவே நால்வட்ட மாறி தழ்த்தான்
குறித்தசுவா திட்டமான மின்னொலித்தான்
ஆறவே யாராமட் சரமுடைத்தாய்
அதற்குள்ளே பிரிதிவுதான்குடி யிருப்பான்
வேறவேவே தந்தானி ருக்கோ டெல்லாம்
விளங்கியதோ ரட்சரமு நகார மாமே"

"நகாரமா மெழுத்ததுவும் பிரமனாகும்
வவ்வான பீசமது பிரிதிவுக் காகும்
உகாரமா மந்திரத்தை யுன்னிக் கொண்டு
உயர் வாய்வைக் கும்பிக்கில் அறிவு தோன்றும்
சிகாரமா முப்புரிநூற் சிரசா நாலும்
சிறந்த சரஸ் வதியுமங்கே தெளிவாய் காணும்
பகாரமாய்த்தெ ரிசித்துப்பழக்கம் பண்ணப்
பாருலக மயக்கமெல்லாம் பண்பதாமே"


என்கிறார்.

இதனால் அறிவு ஒளி பளிச்சென்று தோன்றும். அவ்வாறு தோன்றுவதற்குக் காரணம் மூலத்தீ ஆகும். இம்மூலாதாரத்துக்கு இரண்டங்குலம் மேல் நாற்சதுர, வட்டவடிமாக ஆறு இதழோடு உள்ள

இடமே சுவாதிட்டானம் ஆகும். இது ஆறாவது அட்சரமுடையதாக உள்ளது. இது நகாரமாகும். இதற்குள்ளே பிரிதிவி என்ற மண் கூற்றுப்பொருள் குடியிருக்கும். இதற்கு இருக்குவேதம் முதல் நான்கு வேதங்களும் கூறும் எழுத்து நகாரமாகும்.

நகார எழுத்தின் அதிதேவதையானது பிரம்மாவாகும். அது பீசாட்சரம் "வவ்" வாகும். பூதப்பிரிவு பிரிதிவியாகும். இதற்கு மூலமந்திரமான "உ" காரத்தை உன்னிக் கும்பித்தால் பேரறிவின் ஒலி தோன்றும். இதற்குத் தலை என்று நான்கு நரம்புகள் உண்டு. அதன் பக்கத்தே வெண்நரம்பு ஒன்று உண்டு. அதில் கும்பத்தின் சக்தியால் அறிவுதோன்றி சகல கலைகளும் தோன்றுவதால் அதுவே சரஸ்வதி என்று கூறுவர். இதனைப் பழக்கத்தில் செய்துவர உலக மாயையாகிய மயக்கம் நீங்கும்.

கொப்பூழ்




நாற்சதுரம்
ஆறு இதழ்கமலம்
செம்பொன் நிறம் (பிரிதிவி)
பிரமன்
சரஸ்வதி
நகாரம்

**மணிபூரகம்**

இதுபற்றி யூகிமுனி

"பன்மையா மாறங் குலத்தின் மேலே
பதிந்த பிறை போல மணிப் பூரகந்தான்
தொன்மையாஞ் சுற்றிலும் பத்திதழ தாகிச்
சுயம்பான லட்சரமும் பத்துந் தானாய்
அன்மையா மப்புதனுக் கிடமதாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விஷ்ணுவாகித்
தன்மையாம் பக்கத்திற் சக்திலட் சுமியாம்
தயங்காத லட்சரந்தான் மகாரமாமே"

"மகாரமா மட்சரந்தான் விஷ்ணுவாகும்
மகத்தான மவ்வதுவு மப்பு பீசம்
விகாரமாம் வேதமது வேயசுர் வாகும்
மெய்நிறைந்த கவத்தமணி பஞ்சாயுதம்
நிகாரமாம் லட்சுமிதான் பாகமாகி
நேர்மையாம் வாசியைத்தான் மங்கென நிறுத்தி
உகாரமாயூ தினா னுலக வாழ்க்கை
ஒரு நொடியில் வெளியாகு முணிப்பாரே"


எனக்குறிப்பிடுகின்றார்.

முன்னே சொல்லப்பட்ட சுவாதிட்டானத்துக்கு ஆறு அங்குலத்திற்கு மேல் பிறைபோல் இருப்பது மணிபூரகம் ஆகும். இதனைச் சுற்றி பத்து இதழ் கமலம் போல் உண்டு. இது அப்பு பூதம் ஆகும். இதன் தெய்வம் விஷ்ணுவாகும். இதன் பக்கத்தில் சக்தியாக இலக்குமிதேவி அமர்ந்திருப்பாள். அதன் அட்சரம் "ம" காரமாகும்.

மகார அட்சரமே விஷ்ணுவாகின்றார். இதன் பீஜாட்சரம் "மவ்" என்பதாகும். அப்புவின் பூதப்பிரிவாக யசுர்வேதத்தின் உட்பொருளாகிய உடலெங்கும் துளபமணி நிறையப்பெற்று வலப்பக்கத்தே இலக்குமிதேவியை வசங்கொண்ட திருமாலை இடகலையில் இரேசகம் செய்து உடன் கும்பகம் செய்து பின் பூரகம் செய்தால் ஒரு நொடியில் அவரருள் சித்திக்கும் என்பதாம்.

மேல்வயிறு (உந்திக்கமலம்)

மூன்றாம் பிறை
பத்திதழ் கமலம்
படிக நிறம்
(மரகத நிறமெனக் கூறுவாரும் உளர்) -
அப்பு பூதம்
விஷ்ணு
இலக்குமி
மகாரம்



அனாகதம்


இதுபற்றி யூகிமுனி -

"ஊணியிதன் மேலிரு நாலங்குலந்தான்
உத்தம மாமனாகதத்தின் வீடு மாகும்
தோணிய திரிகோணம் பனிரண்டாமிதழ் தான்
சுற்றிலுமே பனிரண்டட்சர முடைத்தாய்
சேணியே தேயுவுக்கங் கிருப்பு மாகிச்
சிகார மாமெழுத்தாகிச் சிறப்பு மாகிப்
பூணியே பூதபீசம் "சிவ்" வுமாகிப்
புகழான ருத்திரனும் புரிந்தார் பாரே"

எனக் கூறுகின்றார்.

மணிபூரகத்துக்கு மேல் எட்டங்குலத்திலுள்ள இதயத்தானத்துக்கு அனாகதவீடு என்று பெயர். இது முக்கோண, வட்டமாக பன்னிரண்டு இதழ்களோடு சுற்றிலும் பன்னிரண்டு அட்சரமுடையதாகவும், தேயு பூதமாகவும் அக்கினியிருப்பிடமாகி சிகார எழுத்தை சிறப்பாகக் கொண்டு அதன் பீஜாட்சரம் "சிவ்" வாகி வலப்பக்கத்தில் பார்வதியைக் கொண்ட அதிதேவதை ருத்திரனுமாகும்.

இதயக்கமலம்




முக்கோண வட்டம்
பன்னிரண்டு இதழ்கமலம்
அக்கினி நிறம் (தேயு)
உருத்திரன்
பார்வதி
சிகாரம்

விசுத்தி

“புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்திரன் ருத்திரியும்
புகழாகவாசி வைத்துச்சிங் கென்று
கரித்திருந்த காயமுமோ வாலை யாகும்
கனிசாமவேதத்தின் கருத்துத் தோன்றும்
பரிந்திருந்த விதற்கு மேல் பனிரெண்டங்குலந்தான்
பார்வையாய் மேலேறி விசுத்தி வீடு
அறிந்திருந்தவறு கோண சோடசமாமிதழ்தான்
அதிலேதா னீரெட்டட் சுரமுமாமே”


“ஆமெனவெவ காரந்தானறு கோணநடுவே
அமர்ந்திருந்தார் மகேசுவரன் மகேசுவரியுமாக
வேமென வேயதர்வண வேதத் தோடொக்க
மிக்கான வாயுவது மிதழுக்குள்ளே
போமெனவே பீசந்தான் யவ்வுமாகும்
புகழாகக் கும்பகஞ் செய்து திவூதி
வாமெனவே வங்கெனவுமிரு திப் பார்க்க
வயசெல்லா மொரு நாளாய் மனதிற்காணே”

என யூகிமுனி கூறுகின்றார்.

அந்த அனாகதமாகிய சிகார வீட்டில் ருத்திரனோடு ருத்திரியும் அமர்ந்திருப்பார்கள். இங்கு வாசியைச் சிங் என்று பிடிக்க பால வயதாகும். அப்போது சாமவேதத்தின் உட்ப்பொருள் தோன்றும். இதற்குமேல் பன்னிரண்டங்குலத்தில் இருப்பதே விசுத்தி வீடாகும். இது அறுகோணமாக பதினாறு இதழ்களுடைய கமலம் போல் தோன்றும். இதற்கு பதினாறு அட்சரங்கள் உண்டு.

அந்த அறுகோண வீட்டின் நடுவே வகாரவெழுத்து உண்டு. அங்கு மகேஸ்வரனும், மகேஸ்வரியும் இருக்கும் இடமென அதர்வணவேதம் கூறுகின்றது. இது வாயு பூதமாகவுள்ளது. இதன் பீஜாட்சரம் “யவ்” வாகும். வாசி யோகம் பயில்வோர் வங்கென்று கும்பகம் செய்தால் இந்த ஆதார சித்தியின் பயனாக ஒரு வருடத்தை ஒரு நாளாகக் காண்பர்.

அறுகோணம்
பதினாறு இதழ்கமலம்
மேகநிறம் (வாயு பூதம்)
மகேஸ்வரன்
மகேஸ்வரி
வகாரம்




**ஆக்ஞை**

இதுபற்றி யூகிமுனி பின்வருமாறு -

"காணவி தன்மேலீ ரெட்டங்குல ந்தாந்
கண் மாரு தம்புருவ மளவாயாகி
ஊனவே யிரண்டித ழாயோங்கி நிற்கும்
உற்று நின்ற வட்சரமு மிரண்டு மாகும்
ஆனவே நடுவுக்குள் யகாரம் நிற்கும்
ஆக்கினை பின் வீடாகுமாகச மிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வுமாகும்
புகழான மாணிக்கப் பிரவை யவ்வே"

எனவும்

"யவ்வுக்குட் சதாசிவமுஞ் சக்தி நின்றும்
யங்கென்று கும்பித்தால னேக சித்தியாகும்
மவ்வு பரமானந்த மருவி நின்று
மகிழ்ச்சியாங் கருவிகளினிட மதாகி
அவ்வுடலைம் புலன்றனையு மறியப் பண்ணி
அறிவோடு நினைவு தனின் மயக்கங் காட்டி
உவ்வுமுள்ளபடி நடத்திக் காண்பன கேட்பனவாய்
உகந்து குரு வெழுந்தருளி வியார்த்திருப்பாரே"

எனவும் கூறுவர்.

இதற்கு மேல் எட்டங்குல உயரத்தில் புருவ மையத்தின் அளவுவதாகி இரண்டிதழ்கள் கொண்டதாகவும் இதழுக்கு ஒரு எழுத்தாக இரண்டே எழுத்துக்கள் கொண்டதாகவும் ஆக்கினை என்ற வீடு அமைந்திருக்கும். அதன் நடுவே யகாரம் வீற்றிருக்கும் இது ஆகாய (விண்) பூதத்தின் இருப்பிடமாகும். அப்பூதத்தின் பூஜாட்சரம் யவ்வாகும். இதன் ஒளி மாணிக்கம் போன்றது. இங்குள்ள இரண்டு இதழ்களிலும் உள்ள எழுத்துக்கள் ஆவன வருமாறு


"மேலேறி...............................................

...........................வளையமொன்றி ரண்டிதழ்தான் ஹளவாகும்..."

எனப்போகர் குறிப்பிடுகின்றார்.

அந்த யகாரத்தின் (பீடம்) மேல் சதாசிவமும் மனோன்மணி சக்தியும் வீற்றிருப்பர். "யங்" என்ற கும்பகத்தில் வீற்றிருந்தால் உண்டாகும் சித்திகள் பலவாகும். நிலையான களிப்பு (பரமானந்தம்) நிலையை அடைவர். ஐம்புலன்களின் விஷயங்களை அறியச்செய்யும் அறிவு, நினைவு என்ற இரண்டும் மயக்கத்தை உண்டுபண்ணி வைக்கும். இருள் அகன்றும் குரு எழுந்தருளி அறிவு விளக்க விவாதம் நிகழ்த்துகின்ற இடம் இதுவேயாகும் எனக்கூறப்பட்டுள்ளது.


ஆகாய பூதம்




ஆறு ஆதாரம் பற்றி போகர் ஏழாயிரத்திலும் கொங்கணவர் பாடல்களிலும் காணப்படுகின்றன. ஆனால் இங்கு யூகிமுனியின் பாடல்களையே எடுத்தாளப்பட்டுள்ளன. இங்கே நவீன மருத்துவத்திலுள்ள நரம்புப் பின்னல்களை ஆறு ஆதாரங்களுடன் இயன்றளவு ஒப்பிடமுடியும் என்பதை கீழே காணலாம்.


புருவ நடு

ஆகாய பூதம்





ஆறு ஆதாரம் பற்றி போகர் ஏழாயிரத்திலும்,[54] கொங்கணவர் பாடல்களிலும்[55] காணப்படுகின்றன. ஆனால் இங்கு யூகிமுனியின் பாடல்களையே எடுத்தாளப்பட்டுள்ளன. இங்கே நவீன மருத்துவத்தில் உள்ள நரம்புப்பின்னல்களை ஆறு ஆதாரங்களுடன் இயன்றளவு ஒப்பிட முடியும் என்பதைக் கீழே காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 6. | ஆக்ஞை | - | Hypothalamus plexus |
| 5. | விசுத்தி | - | Cervical plexus |
| 4. | அனாகதம் | - | Cardiac plexus |
| 3. | மணிபூரகம் | - | Epigastric plexus |
| 2. | சுவாதிட்டானம் | - | Hypogastric plexus |
| 1. | மூலாதாரம் | - | Sacral plexus |



56



## 2.8. பிராணாயாமமும் நரம்புமண்டலமும்

பிராணாயாமத்தை மூச்சுப்பயிற்சி, வாயுதாரணை, வாரசாரம் அல்லது சரப்பழக்கம், வாசி எனப்பல பெயர்களால் அழைப்பர் இப்பிராணாயாமம் அட்டாங்கயோகத்தில் ஓர் அங்கமாகும். இதனைத் திருமூலர்

"இயமம் நியமமாமே எண்ணில்லா ஆதனம்

நயமுறும் பிராணாயம் பிரத்தியாகாரம்" எனக்கூறுகின்றார். பிராணாயாமம் என்பது ஒரு வடமொழிச்சொல்லாகும். இதனை பிராண+அயாமா எனலாம்.

பிராணா - உயிர்மூச்சைக் குறிக்கும்

அயாமா - கட்டுப்பாடு

எனப்பொருள்.

இதனைச் சுவாசக்கட்டுப்பாடு எனக்கூறலாம். சித்தர்கள் இக்கலையை கைவரக்கற்று அட்டமாசித்துக்களைப் பெற்றனர். அறிவியல் முறைப்படியும் பிராணாயாமம் உடலுக்குத் தேவையான ஆற்றலைக் கொடுத்து ஒழுங்காக நிர்வகிக்கும் திறனை வழங்குகின்றது எனவும் குறிப்பாக நரம்பு மண்டலத்தை பலப்படுத்துவதாகவும் கூறப்படும்.

அனைத்து உயிரினங்களுக்கும் பிராணவாயு (Oxygen - உயிர்க்கால்) மிக இன்றியமையாதது. மூச்சுத்தொழிலால் நம் உடலுக்குத் தேவையான பிராணவாயுவை நாம் பெற்றுக்கொள்கின்றோம். இப்பிராணவாயு நாசித்துவாரம் வழியாக உள்ளெடுத்து மூச்சுக்குழல் வாயிலாக நுரையீரலுக்குச் (Lungs) சென்று அங்கிருந்து இதயத்திற்குச் சென்று இதயத்திலிருந்து உடம்பு முழுவதும் குருதிச் சுற்றோட்டம் மூலமாக சகல திசுக்களுக்கும் ஊட்டமளிக்கின்றது. இதனையே **ஜீவசக்தி, உயிர்சக்தி** எனக்கூறுவர். இந்த உயிர்க்கால் நரம்பு மண்டலத்துக்கும் மூளைக்கும் மிக முக்கியமான சத்தாக அமைகின்றது. இதனை உயிர்காலின் அசைவு எதுவோ அது சித்தத்தின் அசைவு என்றும் உயிர்காலின்

அசைவை வென்றால் சித்தத்தை வசப்படுத்தலாம் என்றும் சித்தர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஓர் உயிர் கருவுற்ற சமயத்திலிருந்தே பிராணன் செயல்படத்தொடங்குகின்றது. பிராணன் உணவைச் செரித்து திசுக்களாக்கி இரத்தமாக்கி மூளைக்கும் இதயத்துக்கும் அனுப்பி வைக்கின்றது.

பிராணன் என்பது பிரபஞ்ச சக்தியின் ஜீவதத்துவம் எனலாம். அது எங்கிருந்தும் வரவில்லை. அது பிரபஞ்ச வெளியில் அநாதி காலம் தொட்டு என்றைக்குமே இருந்துகொண்டிருக்கின்றது. சாதாரணமாக ஒருவரின் உயிர் போய்விட்டது என்றால் அவனுடைய உயிர்க்கால் வெளியேறிப் பிரபஞ்சம் எங்கும் பொங்கி ததும்பிக்கொண்டிருக்கும் பிராணசக்தியோடு மீண்டும் இணைந்திருக்கின்றது என்று கூறலாம். இதனைப் புதிய மாற்றங்களை அடைந்திருக்கின்றது எனவும் கூறலாம். இதுபற்றி பதஞ்சலிமாமுனிவர் குறிப்பிடும்போது "பிராணன் எங்கும் நிறைந்தவன் எங்கும் உள்ளவன் இதனால் தான் காற்றுப் பரவுகின்றது, கிரகங்கள் சுழல்கின்றன, அண்டசராசரங்கள் தென்படுகின்றன, நிலைபெறுகின்றன, ஒரு லயத்திற்கு வசப்பட்டிருக்கின்றன. சூரியன் எரிவதும் சந்திரன் குளிர் நிலவைப் பொழிவதும் இதனாலேயே. பூமியில் ஓங்கி நிற்கின்ற ஜீவநிலை இதனால் நிகழ்கின்றது. இயந்திரங்கள் இயங்குகின்றன. மின்னாற்றல் பிறக்கின்றது. தாமசம், ராஜசம், சத்வம் என்ற முக்குணங்களையும் உட்கடந்துசென்று அவற்றை தனித்தனியே பிரித்து ஆட்சி செய்வதும் இதுவே ஆகும்" என்கிறார்.

உலகிற் பிராணனால் மலர் மலர்வதும், காய் கனிவதும், மழை, புயல், பூகம்பம், பிரளயம், ஊழிக்கனல் ஆகியன திகழ்கின்றது என்கின்றனர். மனித உடலில் இது காற்றாகவும், உணவாகவும் உள் நுழைந்து உடலின் ஜீவத்துடிப்புக்களால் (ஜீவநாடி) இயங்கி உணவைச் செரித்து இரத்த அணுக்களாகின்றது; திசுவாகிறது; கலங்களாகின்றது; விந்தணுவாகி யோனியில் நுழைந்து கருப்பையில் பிரவேசிக்கின்றது;

இந்தப் பிராணன் மனிதன் மரணமடையும்போது முற்றுப்புள்ளி அடைவதில்லை. அதாவது அதுவும் மாண்டுபோவதில்லை. பெய்தமழை வெள்ளமாகி நதியாக உதித்து மலை இறங்கி நாடு கடந்து சமுத்திரத்தில் சங்கமிப்பது எவ்வாறு நீரின் மரணமாகாதோ அவ்வாறே உடலைவிட்டுப் பிரிந்து அடுத்த மாற்றத்திற்கு தயாராகின்றது. இதனைத் திருவள்ளுவர்

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்கிறார்.

எங்கெங்கும் என்னென்றும் பொங்கித் ததும்பிக்கொண்டிருக்கின்ற அந்த மகாசக்தி எனும் பிராணன் என்கின்ற பிராணவாயுவை சித்தர்கள் **கால் பசு** என்றும் பாடியுள்ளனர். இத்தகைய பிராணவாயுவை ஒழுங்குநெறியோடு நம் உடலுக்குள் கட்டுப்படுத்தி வைப்பதே பிராணாயாமம் என்கிறார் யோகேஷ்மித்ரா.

சுவாசம் மூக்கின் இரண்டு தெளைகளின் வழியாக உட்செல்லுவதும் வெளிச்செல்லுவதுமாய் இருக்கும். இம்மூக்கின் இடதுபக்கத்தொளையை இடகலை என்றும், வலப்பக்கத் தொளையைப் பிங்கலை என்று கூறப்படும். இடகலை, பிங்கலைகளாகிய இரண்டு தொளைகளிலும் ஒரே காலத்தில் மூச்சு உள் நுழைதலும் வெளியில் செல்வதும் நிகழ்வதில்லை. ஒவ்வொரு மூச்சுத்தொளையிலும் ஐந்துநாழிகையே (இரண்டுமணிநேரம்) மூச்சுநடக்கும்

அவ்வாறு நடப்பதும் திங்கள், புதன், வெள்ளிக்கிழமையில் இடமூக்குத் தொளையில் விடியற்காலை நான்கு மணிக்குத் தொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத்தொளையாக மாறி மாறி நடக்கும். இதேபோல் செவ்வாய், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வலமூக்குத்தொளையில் விடியற்காலை நான்கு மணிக்குத்தொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத்தொளையாக மாறி மாறி நடக்கும். வியாழக்கிழமைகளில் வளர்பிறையில்

இடமூக்குத்தொளையிலும், தேய்பிறையில் வலது மூக்குத் தொளையிலும் விடியற்காலையில் நான்கு மணிக்குத்தொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையிலும் மாறிமாறி நடக்கும் என சித்தமருத்துவ நூல்கள் கூறுகின்றன.

சுவாசம் சரியாக நடைபெற்றால் நாடிகள் மூன்றும் சரியான மாத்திரை அளவோடு நடைபெறும். இதனால் மானிடருக்குப் பிணியும் இல்லை என்கிறார் யூகிமுனி.

"சொல்லுவேன் மானிடர்க்கு நாழி யொன்றில்
சுவாசமது முந்நூற்று றோடறுபதாகும்
வெல்லு வேன் இருபத் தோராயிரந் தான்
விளங்கிநிற்குஞ் சுவாசமது அறுநூறாக
புல்லுவேன் கலைமூன்று நாடி மூன்றாய்
புகழான மாத்திரையுஞ் செப்பலாகும்
மல்லுவேன் நாடியது சரியா யோடில்
மானிடர்க்குப் பிணி யுமது மருங்கிடாதே"

என்பது அவர் பாடல்.

மானிடர்க்கு நாழிகை ஒன்றிற்கு 360 சுவாசமாக நாள் ஒன்றுக்கு 21600 சுவாசமும் பூரக, கும்பக, ரேசகமாக நடைபெறுகின்றது. இம்மாதிரி நடைபெறுவதற்கு கலை மூன்று, வாயுக்கள் மூன்று, நாடி மூன்று இவற்றின் தத்துவம் ஒழுங்காக நடந்தால் சுவாசமும் சரியாக நடைபெறும். நாடிகளின் மாத்திரை அளவும் ஒழுங்காக இருக்கும். மானிடர்க்குப் பிணியும் இல்லை என்பது இதன் பொருளாகும்.

பிராணாயாமம் ஒரு கற்ப மருந்தென்றும் யூகிமுனிவர் நுணுக்கமாகக் குறிப்பிடுவதை பின்வரும் பாடலின் இறுதி வரியிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

"..........................................................................
..........................................................
ஏளொன்றி யிதனையே யுட்சாதித்தால்
எப்போதும் பாலாராயிருக்கலாமே"

- யூகி சிந்தாமணி

மேலும் இதுபற்றி அகத்தியர் உயர்ஞானம் -
"உண்ணும் போதுயி ரெழுத்தை உயரவாங்கு
உறங்குகின்ற போ தெல்லா துவேயாகும்
பெண்ணின் பாலிந்திரியம் விடும் போ தெல்லாம்
பேணி வலம் மேல் நோக்கி அவற்றில் நில்லு
தின்னுங் காயிலை யருந்தும் போ தெல்லாமதுவே யாகும்
தினந்தோறு மிப்படியே செபிக்க வல்லார்
மண்ணூழி காலம்மட்டும் வாழ்வார் பாரு
மறலிகையில கப்படவு மாட்டார் தானே"

இவ்வாறு குறிப்பிடுகின்றது.

பிராணாயாமம் பழகுவோர் உண்ணும்போதும், உறங்கும்போதும், பெண்ணோடு கூடும் காலத்திலும், இலைகாய் முதலியவற்றை உண்ணும்போதும், மற்றும் எல்லாக் காலங்களிலும் உயிர் எழுத்தைச் செபித்துப் பயிற்சியை செய்துவந்தால் அவர் நீடூழிகாலம் வாழலாம் எனவும் எமன் கையில் அகப்படமாட்டான் என்றும் கூறப்படுகின்றது.

**சுவாசத்தின் அளவுகள்**

வாழ்வில் எல்லாவற்றுக்கும் கால அளவு என்பது உண்டு. எழுதும் எழுத்தை உச்சரிக்கும்போதும் கால அளவு உண்டு என்று அறிந்த நமது முன்னோர்கள் அதற்கு மாத்திரை என்று அழைத்தனர்.

கைநொடிக்கும் நேரமும், கண்சிமிட்டும் நேரமும் மாத்திலை எனப்படும். குறில் எழுத்தை உச்சரிக்க ஒரு மாத்திரையும், நெடில் எழுத்தை உச்சரிக்க இரு மாத்திரைகளும், மெய்எழுத்தை உச்சரிக்க அரைமாத்திரையும் தேவையென இலக்கணம் தெரிவிக்கின்றது.

அவ்வாறே பேசுதல், ஓடுதல், பாடுதல், தொழில்புரிதல், சண்டையிடல், அமர்ந்திருத்தல், உடல்உறவுகொள்ளல் ஆகிய ஒவ்வொரு செயலின் போதும் சுவாசம் சுவாசயத்துக்குள் செல்வதும், சுவாசாயத்திலிருந்து வெளிவருவதிலும் ஒரு காலஅளவு உண்டு.

இக்காலஅளவு பிராணசக்தியாகிய சுவாசத்தின்போது அங்குலக்கணக்கில் மூக்கினுள் செல்வதிலும், மூக்கிலிருந்து வெளிபடுதலிலும் புலனாகின்றது என முன்னோர்கள் கண்டு அதற்கென ஒரு வாய்பாடு வகுத்துள்ளனர்.

அதன்படி ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யும்போது நாம் நம்மைச்சுற்றியுள்ள காற்று, வெளியிலிருந்து குறிப்பிட்ட அங்குலக்கணக்கில் காற்றை உட்கொள்ளுகின்றோம். உட்கொண்டு உரிய செயலைச் செய்ததும் குறிப்பிட்டளவு வெளியிடுகின்றோம்.

சாதாரணமாக ஒரு சுகதேகிக்கு நிமிடத்திற்கு 16முறை சுவாசம் நடைபெறும். இது மௌனமாகவும், சகஜமாகவும் இருக்கும்நிலை. அப்போது 16அங்குல சுவாசம் உள்ளே செல்லுகின்றது. எட்டு அங்குலசுவாசம் வெளியே வருகின்றது. ஆகையால் எட்டங்குல சுவாசம் உடம்பிற்கு இலாபமாகின்றது. இந்த வகையில்

நடக்கும்போது -

8 அங்குல சுவாசம் உள்ளே வருகின்றது.
16 அங்குல சுவாசம் வெளியேறுகின்றது.
8 அங்குல சுவாசம் நட்டமாகின்றது.

ஓடும்போது -

27 அங்குல சுவாசம் உள்ளே வருகின்றது.
54 அங்குல சுவாசம் வெளியேறுகின்றது.
27 அங்குல சுவாசம் நட்டமாகின்றது.

தொழில்புரியும் பொழுது -

10 அங்குல சுவாசம் உள்ளே வருகின்றது.
20 அங்குல சுவாசம் வெளியேறுகின்றது.
10 அங்குல சுவாசம் நட்டமாகின்றது.

சண்டையிடும்போது -

12 அங்குல சுவாசம் உள்ளே வருகின்றது.
24 அங்குல சுவாசம் வெளியேறுகின்றது.
12 அங்குல சுவாசம் நட்டமாகின்றது.

உடலுறவின் போது -

24 அங்குல சுவாசம் உள்ளே வருகின்றது.
64 அங்குல சுவாசம் வெளியேறுகின்றது.
40 அங்குல சுவாசம் நட்டமாகின்றது.

பேசும்போது -

08 அங்குல சுவாசம் உள்ளே வருகின்றது.
12 அங்குல சுவாசம் வெளியேறுகின்றது.
04 அங்குல சுவாசம் நட்டமாகின்றது.

இவ்வாறு சுவாசத்தின் இலாபநட்டக் கணக்கை வகுக்கின்றார் யோகேஷ்மித்ரா.

மேற்குறித்த செயல்கள் தவிர்ந்த மீதியுள்ள நேரங்களில் நாம் மௌனமாகவும், சகஜமாகவும், சுவாசிக்கின்ற காற்றை வைத்துக்கொண்டு அந்த நட்டத்தை ஈடுசெய்யவேண்டும். இவற்றுக்கும் சுவாசப்பயிற்சி சிறந்த பலனைக் கொடுக்கும்.

இதுபற்றித் திருமூலர் -

“ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே”

சுவாசத்தின் வரவுசெலவுத்திட்டத்திற்கு நமது முன்னோர்கள் சில சொற்களை குறியீடாக வகுத்துத் தருகின்றார்கள். அவையாவன

1. பூரகம் - காற்றை உட்கொள்வது
2. கும்பகம் - காற்றை வெளியிடாமல் நிறுத்தி வைப்பது
3. ரேசகம் - காற்றை வெளிவிடுதல்

பொதுவான நிலையில் நாம் உள்வாங்கும் மூச்சில் (பூரகம்) வருகின்ற உயிர்க்கால்(பிராணவாயு) முழுவதும் நம் உடலில் கலந்துவிடாமல் வெளிமூச்சில் ஏனைய கால்களுடன் (காற்று) வீணாகின்றது. இதனைப் பாடல்களில் பாழாகின்றது என

குறிக்கின்றனர். இவ்வாறு வீணாகும் உயிர்க்காலை (மூச்சுக்காற்றை) பிராணாயாமப் பயிற்சி செய்து அதிகநேரம் சுவாசாயத்தில் நிறுத்தி வைத்து உடம்பிற் கலக்கச் செய்தனர். இம்மூன்று நிலைக்குரிய காலஅளவை பின்வருமாறு வகுக்கும்படி டாக்டர் ம.சண்முகவேலு குறிப்பிடுகின்றார்.

பூரகம் - 16
கும்பகம் - 32
ரேசகம் - 16

இக்கணக்குப் பற்றி திருமூலர்

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்தி நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின் கண் வஞ்சகமாமே"

என குறிப்பிடுகின்றார்.

ஏறுதல் - பூரகம், உள்இழுத்தல் 16 மாத்திரையாகவும், ஆறுதல் - கும்பகம், நிலைப்பித்தல் 64 மாத்திரையாகவும், ஊறுதல் - ரேசகம், வெளிவிடுதல், 32 மாத்திரையாகவும் இயங்கவேண்டும் என்று கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட இரு கூற்றுக்களும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். நவீன மருத்துவக்கருத்தின்படி உட்சுவாசம் ஒரு பிரயத்தன அசைவான செயல் (Active Movement) என்றும், வெளிச்சுவாசம் பிரயத்தனமற்ற மெதுவான அசைவு (Passive Movement) என்றும் உட்சுவாச காலஅளவிலும் பார்க்க வெளிச்சுவாச காலஅளவு கூடிக்காணப்படுவதாகவும் குறிப்பிடுவதைக் கவனிக்கக் கூடியதாகவுள்ளது. இவற்றிலிருந்து திருமூலரின் கூற்றையே நவீன மருத்துவத்துடன் ஒப்பிடக்கூடியதாகவுள்ளது.

## பிராணாயாமம் செய்யும்போது கவனிக்கவேண்டியவை

சாத்வீக குணத்துடன் நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில், ஈரமற்ற தரையில் பனியும் குளிரும் இல்லாத காலத்தில் ஆற்றங்கரை, ஏரிக்கரை, தோட்டம், வெளி, மலைப்பகுதி போன்ற இடங்களில்

பிராணாயாமத்தை மேற்கொள்ளலாம். மனதை ஒருமைப்படுத்தி இயமநியமங்களை கடைப்பிடித்து நாள்தோறும் செய்யவேண்டும்.

மூச்சுப்பயிற்சி செய்பவர் அரிசி, கோதுமை, நெய், பால், தயிர், மோர் இவற்றை உண்ணலாம். அரைவயிறு அன்னமும் கால்வயிறு நீரும் உண்டு, மீதி கால்வயிறு வெறுமையாக இருக்கவேண்டும். புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு பொருள்களை கூடுதலாக தவிர்த்தல் நன்று அத்துடன் மது, ஊன் நீக்குவதும் நன்று. இல்லறத்தார், துறவறத்தார் யாராயினும் இருபாலரும் இதனைச் செய்யலாம். சூரியன் உதிக்கமுன் மூன்று நாழிகையும், சூரியன் படுவதற்கு முன்னும் பின்னுமாக இரண்டு முகூர்த்தமேனும் நாலு நாழிகைகளுக்கு இடையில் ஒரு நாளைக்கு இருமுறையாவது செய்துவருதல் சிறந்தது (நாழிகை - 24 நிமிடம்). பொதுவாக பிரம்ம முகூர்த்தமான காலை நாலுமணிக்கும் ஆறுமணிக்கும் இடையே அதேபோல் மாலையிலும் இதனை செய்துவருதல் நல்லது எனலாம். வேளை ஒன்றுக்கு இருபது முதல் எண்பது வரை பிராணாயாமம் செய்யலாம். ஆனால் ஆரம்பிக்கும்பொழுது குறைவாகச் செய்து பின்பு படிப்படியாகக் கூட்டிக்கொண்டு செல்லலாம்.

மூச்சை வெளிவிடுவதையும், உள்வாங்குவதையும் மெதுவாகவும் நிதானமாகவும் செய்யவேண்டும். இதற்குப் பத்மாசனம் ஏற்றது. துறவறத்தாருக்குச் சித்தாசனம் ஏற்றது. பத்மாசனம் போடமுடியாதவர்கள் சாதாரணமாக இருந்துகொண்டு (சப்பணங்கோல் போடுதல்) செய்யலாம்.

பிராணாயாமம் செய்வதற்கு முன் நாடிசுத்தி செய்யவேண்டியது அவசியமாகும். பத்மாசனம் அல்லது சாதாரணஇருக்கை ஆசனத்திலிருந்துகொண்டு கண்களை மூடி, மனம் புருவமத்தியில் நிலைக்க வைக்கவேண்டும். இடதுநாசியை ஒருவிரலால் மூடி வலது நாசியால் காற்றை முடிந்தளவு இழுக்கவும் மூச்சை சற்றும் நிறுத்தாமல் இடதுநாசி மூலம் வெளியேற்றவேண்டும். பின்பு இடதுநாசியால் சுவாசத்தை இழுத்து வலதுநாசியால்

வெளியேற்றவும். இவ்வாறு பத்து நிமிடங்கள் நாள்தோறும் காலை மாலை செய்தல் உகந்தது என யோகேஷ்மித்ரா குறிப்பிடுகின்றார்.

நாடிசுத்தி பற்றி யோகி இராமையா அவர்கள் குறிப்பிடுகையில் இரு மூக்கினாலும் உட்சுவாசத்தைப் பலமாக இழுத்து வாயினால் அதனை வெளியேற்ற வேண்டுமென்று குறிப்பிடுகின்றார். இதனை அட்டசுத்திப் பிராணாயாமம் என்று குறிப்பிடுகின்றார்.

இந்த நாடிசுத்தியினால் மூக்கடைப்பு நீங்குதல், இரத்தசுத்தி, ஒழுங்கானசுவாசம், இலகுவான உடலுணர்வு, சுறுசுறுப்பு ஆகியவை ஏற்படும்.

நாடிசுத்தி செய்தபின் பிராணாயாமம் செய்ய ஆரம்பிக்கலாம். நாடிசுத்தி செய்யும்போது சிறுகுழந்தைகளை பக்கத்தில் வைத்திருப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் யோகி இராமையா கூறுகின்றார்.

### பிராணாயாமப் பயிற்சிமுறை

காலையில் கிழக்கு நோக்கியவாறு முன்குறிப்பிட்ட ஆசனத்தில் இருந்தவாறு கண்மூடி இறைவனையே குருவாகப் பாவித்து பிராணாமத்தை ஆரம்பிக்கலாம்.

இவற்றில் ஆறு நிலைகள் உண்டு. அவையாவன

1. வலக்கை கட்டைவிரலினால் வலநாசித்தொளையை மூடிக்கொண்டு, இடத்தொளையால் மெதுவாகக் காற்றை உள்ளே இழுக்கவேண்டும். (பூரகம்) முடிந்தளவு செய்யலாம்.

2. பின்பு இடதுநாசித்தொளையை மோதிரவிரல், சிறுவிரல்களால் மூடிக்கொண்டும் மூச்சை அப்படியே அடக்கம் செய்யவேண்டும். (கும்பகம்) முடிந்தளவு அடக்கினால் போதுமானது. சிரமப்பட்டு அடக்கக்கூடாது

3. வலக்கைக் கட்டைவிரலை எடுத்துக்கொண்டு மிகமிக மெதுவாக வலநாசித்துவாரம் வழியாக காற்றை வெளிவிடவேண்டும். (இரேசகம்)

4. இனி முன்போலவே வலமூக்குத்துவாரம் வழியாக காற்றைப் பூரகம் செய்யவேண்டும்.

5. சற்றுநேரம் கும்பிக்கவும்

6. இடதுநாசித்துவாரம் வழியாக இரேசகம் செய்யவேண்டும். இவை ஆறும் சேர்ந்தது ஒரு பிராணாயாமம் ஆகும். ஆரம்பத்தில் பிராணாயாமத்தைக் கற்றுக்கொள்ளும்போது முடிந்தளவு நேரத்தை எடுத்துவந்து பின்பு முறையே பூரகம் 10எண்ணிக்கை நேரம், கும்பகம் 10எண்ணிக்கை நேரம், இரேசகம் 10எண்ணிக்கை நேரமாகச் செய்தல்வேண்டும். (1:1:1) இதற்குச் சமவிருத்திப் பிராணாயாமம் என்று பெயர். பிராணாயாமப் பயிற்சியில் பிறந்த சிசு போன்ற எளியநிலை இது. இதனைப் 10 நிமிடங்கள் செய்துவரலாம்.

இந்த ஆரம்பநிலையில் ஒருவாரம் பயிற்சி செய்யலாம். அடுத்தவாரம் முன்குறிப்பிட்டதுபோல் பயிற்சியைக் கீழ்க்குறிப்பிடும் காலஅளவு அதாவது பூரகம் 10 எண்ணிக்கை நேரம், கும்பகம் 20எண்ணிக்கை நேரம், இரேசகம் 10 எண்ணிக்கை நேரமாக செய்யவேண்டும். இதன் விகிதம் 1:2:1.

இவ்வாறு 15 நாட்கள் பழகியபின் அடுத்தகட்டத்திற்குச் செல்லலாம். இது ஒரு குழந்தை தவழத்தொடங்கியதற்குச் சமமான நிலையாகும். இதனைப் 10 நிமிடங்கள் செய்துவரலாம்.

அடுத்து 16ஆம் நாள் பூரகம் 15எண்ணிக்கை நேரம், கும்பகம் 30எண்ணிக்கைநேரம், இரேசகம் 20எண்ணிக்கை நேரம் என்றளவில் பிராணாயாமத்தைச் செய்யவேண்டும். இதன்விகிதம் 3:6:4.

இவ்வாறு 15 நாட்கள் அல்லது ஒரு மாதம் பயிற்சியைச் செய்யலாம். இப்படி செய்துவரும் பிராணாயாமப் பயிற்சிளை மூன்று படிநிலைகளாகப் பிரிக்கின்றனர்.

அவையாவன

1. உத்தமம்

| | |
|---|---|
| பூரகம் | 20 விநாடி |
| கும்பகம் | 80 விநாடி |
| இரேசகம் | 40 விநாடி (விகிதம் 1: 4: 2) |

2. மத்திமம்

| | | |
|---|---|---|
| பூரகம் | 16 | விநாடி |
| கும்பகம் | 64 | விநாடி |
| இரேசகம் | 12 | விநாடி (விகிதம் 4: 16: 3) |

3. கடைத்தரம்

| | | |
|---|---|---|
| பூரகம் | 12 | விநாடி |
| கும்பகம் | 48 | விநாடி |
| இரேசகம் | 24 | விநாடி (விகிதம் 1: 4: 2) |

என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று தரத்திலும் முதலாவதும், இறுதியும் திருமூலர் குறிப்பிடும் அளவுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஒரே விகிதத்தில் 1: 4: 2 என அமைந்திருப்பதைக் காணலாம்.

அடுத்து பிராணாயாமம் செய்யும்பொழுது உச்சரிக்கும் மந்திரம் பற்றிக் கவனிக்கலாம். மந்திரம் என்ற சொல் ஒரு கூட்டுச்சொல்லாகும். (மன்ூ அந்திரம்) மனத்துள் இருத்தல் மனத்துள் உச்சரித்தல் என்ற பொருள்வரும் என்கிறார் யோகேஷ்மித்ரா. மந்திரம் என்ற சொல் தமிழ்ச்சொல் என்றும் மனதின் தரம் எனப்பொருள்படும் என்றும் க.ந.குப்புசாமி முதலியார் குறிப்பிடுகின்றார்.

ஐம்புலனை அடக்கி, மூச்சடக்கி மனதை ஓர் நிலைக்கு கொண்டுவந்து உடலை வளர்த்து சிவகதியடையும் பொருட்டு செய்யும் மந்திர உச்சாடனத்தைக் கடைப்பிடிப்பவரே வேதாந்திகள் எனக்கொள்வர். இவ்வாறு இன்றி சைவர்கள் தங்கள் திறத்தால் (தம் திறத்தால் - Will power) ஐம்புலன்களைச் சிதறவொட்டாமல் நம் நாட்டத்திற்கு ஒரு நிலையில் வைத்து மந்திரத்திற்கான எழுத்துக்களை ஓதாமலே ஆறு நிலைகளையும் தமது வழியாக்குவர். இவ்வழியை தந்திரம் என்பர். இதனையே மந்திரமும் தந்திரமும் எனக்கூறுவர்.

இதனையே திருமூலர்

“வாய்த்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்த்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்த்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடின் கோழையு மாமே”

எனக்கூறுகின்றார்.

மந்திரம் தந்திரம் என்னும் இவ்விரண்டினில் மந்திர வழக்கப்பழக்கங்களை நம் மக்கள் எளிதில் செய்து அதனால் உண்டாகும் நற்பயனைப் பெற்றுள்ளனர். வந்த நோயை நீக்கவும் இனி நோய் வராதிருக்கவும் இம்மந்திரங்களை வாயுறை (சொல்மருத்துவம்) ஆக உபயோகித்துள்ளனர். எனவே இதனை காயகற்பம் என்றும் கூறுகின்றனர்.

பஞ்சாட்சர மந்திரத்தைத் திருமூலர் குறிப்பிடுகையில்

“சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவற நாடி
ஞகார முடனே ஒருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்துநி ன்றானே”

இவ்வாறு கூறுகின்றார்.

நமசிவய என்பதை நகாரம், மகாரம், சிகாரம், வகாரம், யகாரம் என்று குறிப்பிடுவதாக உள்ளது. மேற்குறிப்பிட்ட கருத்துக்களுக்கு அமைய திருமூலரும் மூவாயிரம் பாடல்களையும் எமக்கு கற்ப மருந்தாகத் தந்தமையால் அதற்குத் **திருமந்திரம்** என்று பெயர் வைத்துள்ளார் போலும்.

சரம் பற்றி விளக்குகையில் சில நூல்களில் இடது மூக்குத்தொளையை இடகலை என்றும், வலது மூக்குத்தொளையைப் பிங்கலை என்றும் நடுவில் நிறுத்துதலை சுழிமுனை என்றும் இவற்றுக்கு முறையே சோம, சூரிய, அக்கினி என்றும் அல்லது மதி, ரவி, அங்கி என்றும் அல்லது சந்திரகலை, சூரியகலை, சுழிமுனை என்றும்ட கூறுவர்.

மேலும் பூரகம், கும்பகம், இரேசகம் ஆகியவற்றுக்கு அதிதேவதைகளாக முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியவர்களையும் வகுத்து வைத்துள்ளனர்.

பிராணாயாமம் செய்யும்போது உச்சரிக்கவேண்டிய திருவைந்தெழுத்தை பிரணவத்தோடு **"ஓம் சிவாயநம"** என உச்சரிக்கவேண்டும். இம்மந்திரத்தை ஒருமுறை செபிப்பதற்கு எட்டு மாத்திரை எனக்கணித்துள்ளனர். இவற்றுக்கு அமைய கணக்கிட்டு மந்திரத்தைச் செபிக்கலாம். எடுத்துக்காட்டாக திருமூலரின் கணக்கின்படி -

| | | |
|---|---|---|
| பூரகம் | - 16 மாத்திரை | - இருமுறை மந்திரம் |
| கும்பகம் | - 64 மாத்திரை | - எட்டுமுறை மந்திரம் |
| இரேசகம் | - 32 மாத்திரை | - நான்குமுறை மந்திரம |

இவ்வாறு வகுத்து மந்திரத்தை உச்சரிக்கலாம் வேறு சில நூல்களில் பிராணாயாமம் செய்யும்பொழுது காயத்ரி மந்திரத்தைச் செபிக்கலாம் என்றும் அதனை கும்பக நேரத்தில் உச்சரிப்பதே முறை எனவும் கூறப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட திருவைந்தெழுத்து மந்திரத்தை உச்சரிக்கும்போது உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் உள்ள நரம்புத்தொகுதிகள் தூண்டப்பட்டு நரம்பு மண்டலம் பலமடைகின்றது. இவற்றின் விபரங்கள் ஆறாதாரங்கள் பற்றிக் கூறுமிடத்திலே விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

ஓம், காயத்ரீ எனும் மந்திரச் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதால் உடலில் உள்ள நரம்பு மண்டலத்தில் ஏற்படும் மாறுதல்களை கலிபோனியா பல்கலைக்கழக ஆய்வு மூலம் வெளிப்படுத்துகின்றார் டாக்டர் க.வெங்கடேசன்.

சித்தமருத்துவக் கோட்பாட்டின்படி உடலியல் அமைப்புப் பற்றிக் கூறுகையில் உடல் இயக்கத்துக்காகத் தோன்றிய எழுபத்தீராயிரம்

நரம்புகள் உடல் முழுமையும் உள்ளதேயாயினும், உடலின் இடப்பக்கம், வலப்பக்கம் இயங்கும் நரம்புகள், வீணாதண்டின் (Spinal Cord) அடி வழியே மேல்நோக்கி கழுத்தின் பின் சென்று ஒன்றை ஒன்று சுழன்று மேல்நோக்கி மூளையின் இரு பகுதியில் பதியும்போது, கீழ் உறுப்புக்கான கால், தொடை முதலிய நரம்புகள் மேலும், நடு உறுப்புக்கான (முண்டம்) நரம்புகள் நடுவிலும், மேலுறுப்புக்கான தலை, கழுத்து, முகம், நாக்கு, கீழுமாக உருமாறி, பதிந்து நிற்கும் எனக்குறிப்பிட்டிருப்பதைக் கீழ்வரும் பாடல் மூலம் அறிந்துகொள்ளலாம்.

"உறுமுடிக் கீழ்மேலும் பதிந்துநிற்கும்
உகவையாந் தலைதனிலே யீசுரந்தான்
செறிவினையெய் வினைப்பயன் முன்னும்மறிந்து
..............................................................................
.............................................................................................."

என இதனை யூகிமுனி கூறுகின்றார்.

மேலும் இதே கருத்தை ஔவையாரும் கீழ்க்கண்டவாறு
"உந்திமுத லாகி உருமுடிக் கீழ் மேலாய்
பந்தித்து நிற்கும் பதிந்து"
எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வகை நரம்புகள் இரண்டிலும், இடப்பாக உறுப்புக்களை இயக்கச் செய்யும் நரம்பினை இடகலை என்றும், வலப்புறமுள்ள உறுப்புக்களை இயக்கச் செய்யும் நரம்புகள் இடப்புற நரம்பின் பின்புறம் சென்று சுழன்று மாறி வந்தால் பிங்கலை (பின் + கலை) என்றும் இடகலையும், பிங்கலையும் (கத்தரிக்கோல் போன்று மாறுவதுபோல்) சுழன்று வருமிடத்திற்குச் சுழுமுனை என்றும் பெயர் அமைந்தது எனப்படும். பின்கலை என்பது பிங்கலை என மாறியிருக்கலாம். இதன் அமைப்பு அடுத்து வரும் படத்தில் காணலம்.

மேற்குறிப்பிட்ட நரம்புகள் கத்தரிக்கோல் போன்று மாறுவதை குருநாடி இருப்பிடம் பற்றிக்கூறுமிடத்து பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

“பாரேதான் பம்பரம்போற் கிறுகிறுத்துப்


..............................................................

செழித்த கத்தரிக்கோல் மாறலெனவே சேர்ந்து

வாரேதான் ........................................”

(திருமந்திரம் மருத்துவப்பாடல்)


**இடகலை பிங்கலை நாடி**



மேற்குறிப்பிட்டவற்றை நவீன மருத்துவத்தில் இயக்க நரம்புத் தொகுதிக்கு ஓரளவு ஒப்பிடலாம். அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ள படத்தில் நவீன மருத்துவ நூல்களில் இயக்க நரம்புகள் **கத்தரிக்கோல்** போன்று மாறுவதை குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.

**மூளையில் இயக்க நரம்புத்தொகுதி**

**PYRAMIDAL TRACTS**




1 - Crossed Pyramidal tract
2 - Direct Pyramidal tract
3 - Uncrossed cerebro - spinal fasciculus
4 - Crossed Pyramidal tract from the other side

(Ref. - Chatterjee, Human Physiology, 1960, P. 591.)

மேலும் நரம்புமண்டலம் பற்றிக் கவனிக்கும்போது உந்திமுதலாகக் கொண்டெழுந்து உடலின் உறுப்புக்களை இயக்குவதற்காகத் தோன்றிய நரம்புகள், மயிர்க்கால், சதை, குருதிநாளம், கை, கால், வயிறு, குடல், எருவாய், கருவாய், தமரகம், நுரையீரல், கழுத்து, வாய், நாக்கு, மூக்கு, கண், செவி முதலியவைகளை இயங்கச் செய்வதற்கு வீணாத்தண்டின் (Spinal Cord) அடியிலிருந்து (Coccyx) மேல்நோக்கி தலைக்குச் சென்று (கபாலம்) இருப்பினும் அதனை இயங்க வைக்கும் அறிவுடைய நிலை (ஸ்தானங்கள் - Centres) மூளையில் உள்ளது.

கீழிருந்து மேல்நிலை வரையுள்ள இடங்களை ஆறு நிலையாக (ஆதாரமாக) வகுத்து, கீழ்நிலையில் (மூலாதாரம்) இருந்து யோகமுறையைக் கையாண்டு ஒன்றன்பின் ஒன்றாய் கடந்து மேல்நிலையாகிய ஆக்ஞை (Higher Centre) அடையுமாயின் "சீவனென்னச் சிவனென வேறில்லை" எனத் திருமூலர் கூறியுள்ளவாறு சிவநிலை எய்தச் செய்யும் எனலாம்.

கீழ்நிலையான மூலாதாரத்தில் அமைந்திருக்கும் நரம்புக்கூட்டத்தில் அங்கிருந்து எழும்பும் ஒரு தூண்டுதல் அல்லது எழுச்சி ஒரு பெரும் சக்தி எனவும் அதனைக் குண்டலினி அல்லது குண்டலி சக்தி என்றும் கூறுவர். இனி இக்குண்டலினி பற்றிப் பார்ப்போம்.

### குண்டலினி சக்தி

குண்டலினி சக்தி என்பது எல்லா மனித உடல்களிலும் உள்ள தெய்வீகப் பேராற்றல் எனலாம். எல்லா மனித ஜீவனும் ஈஸ்வர அம்சமாகவே படைக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த மனித ஜீவனுக்கு ஈசத்துவத்தை அடையும் தகுதியையும் இறைவன் அளித்துள்ளான். அதன் சின்னமே குண்டலினி சக்தியாகும். யோகநிலையில் பரிபூரணத்துவத்தை அடைந்த ஒருவருக்கே குண்டலினி சக்தி எனும் சித்தி கிட்டும்.

குண்டலினி சக்தி ஒரு பாம்பின் வடிவில் முதுகுத்தண்டின்

கீழ் மூன்றரை சுருளாக முறுக்கிக் கொண்டிருக்கிறது. அது உறக்கநிலையில் இருக்கிறது. குண்டலினி சக்தியை பிராணாயாமங்களாலும் பிற யோகப் பயிற்சியாலும் விழிப்புறச் செய்யலாம். குண்டலினி சக்தி கீழே இருந்து மேற்புறமாக சிரசிற்கு மூளையிலுள்ள "மெடுல்லா ஒபிளங்கேற்றா" (Medulla oblongata) உள்ள பகுதி ஊடாகச் செல்கின்றது. குண்டலினியின் பாதை ஊடாக ஏழு நிலையங்கள் அமைந்துள்ளன. அவற்றையே ஆதாரச் சக்கரங்கள் எனலாம்.

இடகலை, பிங்கலை, சுழுமுனை பற்றி முன்னர் தெரிந்துகொண்டோம். இடகலை மனிதனின் வலது பீஜயத்திலிருந்தும், பிங்கலை நாடி இடது பீஜத்திலிருந்தும் தொடங்குகின்றது என யோகேஷ்மித்ரா கூறுகின்றார். இவை இரண்டும் மூலாதாரச் சக்கரத்தில் சந்திக்கின்றன. இடநாடி இடநாசித் துவாரத்திலும் பிங்கலை நாடி வலநாசித் துவார வழியாகவும் சஞ்சரிக்கின்றது. இடநாடி குளிர்ச்சியானது, பிங்கலை நாடி வெப்பமானது.

குண்டலினி சக்தி தன் யோகநித்திரையிலிருந்து விழித்தெழும்போது நேரடியாக சக்ஸ்ராரத்துக்குப் பாய்ந்து சென்றுவிடுவதில்லை. பிராணாயாமம் மற்றும் இதுபோன்ற யோக முயற்சியினாலேயே ஒவ்வொரு சக்கரத்திலிருந்து மற்றொன்றுக்கு ஒருவர் உந்தித் தள்ளவேண்டும்.

பிராணாயாமத்தின்போது ஒரு யோகி முன் குறிக்கப்பட்டுள்ள சக்கரங்களின் ஸ்ருதியை நினைத்துத் தியானிக்கும்போது குண்டலினி சக்தி பற்றிய சகல ஞானத்தையும் பெறுவார். அதை எப்படி எழுப்பது என்ற வழியும் அவனுக்குப் புலப்படும்.

குண்டலினி சக்தி விழிப்புற்றவுடனே தடியால் அடிபட்ட பாம்புபோல் நிமிருகிறது. இது ஆதாரங்கள் வாயிலாக அசைந்து மேலே ஏற்றிவரும்போது அவனுக்குத் தரைமீதிருந்து உயர எழும்பும் வலிமையும் சித்திக்கும். சுவாமி விவேகானந்தர் உட்பட பலர் இவ்வனுபவத்தை உணர்ந்து விபரித்திருக்கின்றார்கள். மேலே ஏறிய

குண்டலினி அமிர்தநிலை அடைந்து சுழுமுனையின் மேற்பாகத்தில் சோமநீா் ஒழுகிக் கொண்டிருக்கும் என்றும் அதனை மதியமுதம் என்றும் அதனைச் சித்தர்கள் உண்டும் நீடூழி வாழ்ந்தனா் எனவும் அறியக்கிடக்கின்றது.

குண்டலினி சக்தி மேலே எழும்பி வருவதை ஆலயத்துடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார் ஆ.சொக்கலிங்கம். அதாவது ஆலயக் கொடிமரத்தில் கொடிப்பட்டம் சுற்றி ஏறுவது போன்று முதுகுத்தண்டின் வழியாகப் பாம்பு போல வளைந்து வளைந்து மேலேறி நாபி, வயிறு, இதயம், கழுத்து, நெற்றி, (ஆதாரங்கள்) இந்த ஐந்து சக்கரங்களிலும் சீறி வெளிக்கிளம்பும் சக்தியே குண்டலினி ஆகும். இதுவே ஐந்து தலை நாகம் (மேற்குறிப்பிட்ட ஐந்து நிலையங்கள்) எனவும் விபரிக்கின்றனர். இதனையே பாம்பாட்டிச் சித்தர் "நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே" எனப்பாடுகின்றார். இதனில் ஜீவான்மா பரமானந்தப் பேற்றைப் பெற்று நிற்கும் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றார்.

மேற்குறிப்பிட்ட பிராணாயாமம், மந்திரம், குண்டலினி ஆகியவற்றுடன் நரம்பு மண்டலம் நெருங்கிய தொடா்பு கொண்டது என்பதை இதுகாறும் கூறியவற்றிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது. எமது உடலில் நரம்பு மண்டலமே முக்கியமான பகுதியாக இருப்பதனால் அதனை யோகப்பயிற்சியால் பேணிப்பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

## 2.9. சித்தர்களின் கூர்ப்புக் கொள்கை

சித்தர்களின் கூர்ப்புக் கொள்கை பற்றிப் பேராசிரியர் அம்பை அருணாசலம் பின்வருமாறு கூறுகின்றார்.

ஆரம்பம் வெறுமை (Vaccum) அவற்றிலிருந்து பரப்பிரம்மம் தோன்றி (Creativeve Power) அதனிலிருந்து ஐந்து நுண்பூதங்கள் தோன்றியதாக குறிப்பிடுகின்றார். நுண்பூதங்கள் முறையே விண், வளி, தீ, நீர், மண் ஆகியன உண்டானதென்றும் மண்ணிலிருந்து கனிமம் மற்றும் தாதுப்பொருள்கள் தோன்றியதாகவும், பின்பு தாவரங்களும் அதற்குப்பின் விலங்குகளும், மனிதர்கள் தோன்றியதாகியும் விவரிக்கின்றனர்.

**கூர்ப்புக்கொள்கை**

(Evolutionary Theory)

ஆரம்பம் - வெறுமை (State of Emptiness)
(Vaccum)

↓

பரப்பிரம்மம் (Creative Power)

↓

ஐந்து நுண்பூதங்கள் (Subtle five Elements)

விண் - (Ether)

↓

வளி - (Air)

↓

தீ - (Fire)

↓

நீர் - (Water)

↓

மண் - (Earth)

↓

கனிமம் மற்றும் தாதுப்பொருட்கள்

(Mineral and Metals)
தாவரங்கள் - (Plants)
விலங்குகள் - (Animals)
மனிதர்கள் - (Human Beings)

இதனில் உயிரின் தோற்றம் தாவரங்களில் தான் என்பதை அண்டமும் பிண்டமும் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டதைக் கவனிக்கலாம்.

சித்தர்கள் அருவுருவப் பொருள் என்று குறிப்பிடும் போது அதனில் சித்துப் பொருள், அசித்துப் பொருள் என இரண்டாகப் பிரிக்கின்றனர். அதனைச் சேதனப் பொருள், அசேதனப் பொருள் எனக் கூறுபவரும் உளர். உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் "உயிர்" என்ற மெய் நித்தியமாக உளது என்று ஆகம நூல்கள் பகர்கின்றன.

"சித்துப் பொருளின் மூல அலகு சித்து அணுவாகும். அசித்து பொருளின் மூல அலகு அசித்து அணுவாகும். இவ்விரு மூல அலகுகள் உலகில் அருவுருவப் பொருளாக விளங்குகின்றன" என்று பேராசிரியர் பு. மு. வேணுகோபால் குறிப்பிடுகின்றார்.

சித்துப் பொருள்களுக்கு அறிவுப் பொருள் என்றும். அசித்துப் பொருளுக்கு அறிவற்ற பொருளென்றும் பிரித்துக் கூறுகின்றனர். சித்து அணு, அசித்து அணு என்பவைகள் முக்காலமும் உள்ளன. உயிர் எல்லா அணுக்கள் தோறும் அகத்தேயுள்ளது. உயிர் அறிவுற்றிருந்தால் அறிவுற்ற அணுவென்றும், உயிர் அறிவற்று இருந்தால் அறிவற்ற அணு என்றும் பரிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு அணுக்களும் உயிரைக் கொண்டுள்ளவை. எனவே உருவமுள்ள பொருள்களின் அருவுருவப் பொருளாகிய உயிர் அகத்தேயுள்ளது. புறத்தே உள்ளதன்று.

உயிர்களின் தோற்றம் நீரில்தான் ஆரம்பித்தது என்பதை முன்னர் கண்டோம். நீரினில் உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தவுடன்

அவற்றின் எண்ணிக்கை பெருகின. அதற்கேற்ப அவற்றுள் வாழ்க்கைப் போராட்டம் ஏற்பட்டது. அந்த நிலையில் பூமியின் அடிப்பாகத்திலிருந்து அப்போதைக்கப்போது வெளியே பிதுங்கி வந்த பொருள்கள் பூமியின் மேல் படிந்து மண்ணாகிப் பெரிய பெரிய நிலப்பரப்புகளையும் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. நீரில் வாழும் சீவராசிகள் போராடிப் போராடி பல உயிர் நீத்தன. சில வாழ்ந்தன. இன்னும் சில நிலத்தின் மேல் ஏறித்தஞ்சம் புகுந்தன. நீரில் இருக்கும் போது சூழ்நிலைகள் வேறு, நிலத்தின் சூழ்நிலைகள் வேறு. இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப அந்த உயிரினங்களின் உடலில் வியக்கத்தக்க மாறுதல்கள் தோன்றின. அவ்வாறு நீரில் இருந்து நிலத்தை அடைந்து பரிணமித்த உயிரினம்தான் ஆமையாகும். சீதோஷ்ன நிலைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் மழை, காற்று முதலிய இயற்கை அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் தன்னைப்போல நீரிலிருந்து நிலத்துக்குள் வந்து தஞ்சம் புகுந்த பிராணிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் அந்த ஆமைக்கு உறுதியான மேலோடு உண்டாயிற்று.

காலப்போக்கில் அதன் உடலில் மேலும் சில மாறுதல்கள் பரிணமித்தன. மெதுவாக ஊர்ந்து செல்லும் ஆமைக்கு நான்கு கால்கள் முளைத்தன. பின்னும் மேலோடு போய் முதுகெலும்புடன் கூடிய எலும்புக்கூடு ஏற்பட்டது. அதன் அங்க அவயவங்களைச் சுலபமாக அசைத்துத் துரிதமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு செல்வது சாத்தியமாயிற்று. இவ்வாறு பரிணமித்த புது உயிரினமே பன்றியாகும்.

பன்றியின் தோற்றத்துக்குப் பின்பு மிருகத்துக்கும், மனிதனுக்கும் இடையே நிகழ்ந்த ஒரு பரிணாம நிகழ்ச்சியாகக் கொள்ளலாம். இந்த இடைக்காலத்தில் மிருகமும் அல்லாத மனிதனும் அல்லாத ஒரு உருவம் கொண்ட பிராணியாக உயிர் தோன்றியது. அதனையே நரசிம்ம அவதாரமாக் கொள்ளலாம்.

மனித இனம் முதன் முதலில் குள்ள உருவம் காணப்பட்டது. அதுவே வாமனன் என அறிமுகமானது.

லெமூரியாவில் காணப்பட்ட தேவாங்கு மனிதனிலிருந்து மனிதனது உருவம், உள்ளம், அறிவு இம்மூன்றும் வளர்ச்சியடைந்தன. சரித்திரநிபுணரான ஹால்டென் (Hallden) என்பவர் இப்பரிணாம தத்துவங்கள் பற்றி வியந்து பேசியுள்ளார்.

உயிர் அல்லது சீவன் என்பது ஊனக் கண்களுக்குப்புலப்படாத ஒரு மகத்தான சக்தி. அந்தச் சக்தி சடமயமான பூமியில் சேர்ந்து ஓர் உருவத்தைப் பெறும்போதுதான் இவ்வுலகில் அந்த உயிரினுடைய ஆற்றல் வெளிப்படுகின்றது. அந்த உயிர்ச் சக்தியையே சித்தர்கள் பரமாத்ம சொரூபமாகப் பார்த்தார்கள். அந்த நேரம் பிரகிருதியான பூமியிலுள்ள பொருள்களுடன் சேர்ந்து உயிரினங்களில் பரிணாம வளர்ச்சியினை ஏற்படுத்தி பல திருப்பங்களை உருவாக்கியது. இவை ஆண்டவனின் அற்புதமான அவதாரங்களாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இப் பிரபஞ்சம் எங்கும் நிறைந்திருக்கும் அந்தச் சீவ சக்தியை ஆண்டவனாகக் கருதும் மரபும் ஏற்பட்டது. இந்த வகையில் திருமூலர் கீழ்க்கண்டவாறு சீவன் என்றும் உயிர் என்றும் கூறுகின்றார்.

“அறிவறியாமையை நீவி யவனே
பொறிவா யொழிந்தேங்குந் தேங்குந் தானாக போது
அறிவா யவற்றினுப் தானாயறிவின்
செறிவாகி நின்றவன் சீவனுமாமே”

அறிவு அறியாமை ஆகிய இரண்டையும் கடந்து நிற்பது மேலான முற்றறிவு. அதுவே பொறி வழிச் செல்லா நெறி நிற்கும். பொறி வழி நீங்கினவுடன் எங்கும் தானாக விளங்கும். தானான போது நல்லறிவாகிய சிவம் சிவவுணர்வாய் அவற்றினுள்தான் ஒடுங்கி நிற்பது. ஆதலின் அறிவின் செறிவாகி நீங்கும் அதுவே உயிருக்குயிரான சீவனுமாகும்.

மேலும் திருமூலரின் இன்னொரு பாடலில்

“உடலும் உயிரும் ஒழிவற்ற ஒன்றி
படருஞ் சிவசக்தி தாமே பரமாம்
உடலை விட்டிந்த உயிரெங்கு மாகிப்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே”

எனக் கூறுகின்றார்.

உடலும் உயிரும் நீக்கமற ஒன்றியிருந்தன. தேனும் இன்னமுதமும் தேக்கி கல்லையும் ஒழிவற நிற்பது வானும் விழையும் மானுடர் பருகுவதற்கேயாகும். அவை பருகப்பட்ட பின் அக்கல்லும மண்ணொடு மாய்ந்து மறைந்துபோம். அதுபோல் உடம்பகத்துள்ள ஆருயிரும் சிவத்தினை அடைந்ததும் அவ்வுடம்பும் நுண் மெய்யுடன் கரைந்து கலக்கும். கலக்கவே அவ்வுயிர்க்குச் சிவமும் சிவசக்தியாகிய சிவையும் புகலிட மெய்யாகும் எனலாம்.

ஒரே உயிர்ச்சக்தி பற்பல சூழ்நிலைகளில் பற்பல உருவங்களை எடுத்துக்கொள்ளும் என்ற பேருண்மையையும் கண்டறிந்தனர் சித்தர்கள் எனலாம்.

**அ.பரிணாம வளர்ச்சி - தசாவதாரம்**

1. மீன் மச்ச அவதாரம் - நீர்வாழ்வன
2. ஆமை கூர்ம அவதாரம் - நீர் நில வாழ்வன
3. பன்றி வராக அவதாரம் - நில வாழ்வன
4. மனிதனும் மிருகமும் சேர்ந்த உருவம் நரசிம்ம அவதாரம்
5. குள்ள மனிதன் வாமன அவதாரம்
6. வில்வலிமைபெற்ற மனிதன் பரசுராம அவதாரம்
7. நற்குணம் பெற்ற மனிதன் இராம அவதாரம்
8. உழவுத் தொழில் வன்மை பெற்ற மனிதன் பலராம அவதாரம்
9. உடல், உள்ளம், அறிவு பெற்ற மனிதன் கிருஷ்ன அவதாரம்
   கல்கி அவதாரம்

இவற்றிலிருந்து உயிர்த்துவத்தின் பரிணாம வளர்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

சித்த மருந்துகள் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை

(1) தாதுப் பொருள்
(2) சங்கமப் பொருள்
(3) தாவரங்கள்

இம்மூன்றையும இயங்கும் பொருள், இயங்காப்பொருள் என இரு வகையில் அடக்கலாம்.

தாதுப்பொருள்களை இரசம், உபரசம், உப்பு, பாடானம் என நான்காகப் பகுக்கலாம். தாவரங்களை மரம், செடி, கொடி, புல், பூண்டு என ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

இவற்றுள் இயங்கும் பொருள்கள் சங்கமம் எனப்படும். அவை ஊர்வன, நடப்பன, பறப்பன செயல் கொண்டிருப்பன என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

**ஆ.நால்வகைப் பிறப்பு**

1. அண்டஜம் - முட்டையிலிருந்து பிறப்பன - மீன், தவளை, பறப்பவைகள், பல்லி,பாம்புகள் முதலியன
2. சுவேதஜம் - வியர்வையிலிருந்து பிறப்பன கண்ணுக்குப் புலப்படாத நுண் கிருமிகள் பேன் போன்றவை
3. உத்பீஜம் - வித்திலிருந்து பிறப்பன தாவரங்கள் எல்லாம்
4. சராயுஜம் - பையிலிருந்து பிறப்பன - பசு, குரங்கு, மனிதன் முதலாகனவை

என்பனவாகும்.

**இ.ஏழுவகைத் தோற்றம்**

இவற்றை

1. தேவர்
2. மக்கள்
3. விலங்கு
4. பறவை
5. ஊர்வன
6. நீர் வாழ்வன
7. தாவரம்

எனலாம்.

சங்கமப் பொருள்கள் தோன்றுவதற்கும், தோன்றிய பின் நிலைத்திருப்பதற்கும் தாதுப் பொருள்களும், தாவரப் பொருள்களும் ஆதாரமாக இருக்கின்றன.

இவற்றிலிருந்து தாவரப் பொருள்களிலிருந்து சங்கமப்

பொருள் பரிணாமம் அடைந்தது என்பது தெளிவாகின்றது.

நால்வகைப் தோற்றத்து ஏழ் வகைப பிறப்பினுள் எண்பத்து நான்கு நூறாயிர வேறுபாட்டுடன் கூடிய உடம்புகளை இறைவன் படைத்தான் என்று கீழ்வரும் பாடலில் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

"அப்பரி செண்பத்து நான்கு நூறாயிரம்
மெய்பரி செய்தி விரிந்துயிராய் நிற்கும்
பொய்பரி செய்திப் புகலும் மனிதர் கட்
கிப்பரி சேஇருள் மூடி நின்றானே"

மேற்கூறியவற்றிலிருந்து பரிணாமம் அல்லது கூர்ப்பு ஒரு இறை சக்தி எனக் கருதலாம்.

மிகினும் குறையினும் நோய் செய்யும்
வளி முதலாய் வெண்ணிய மூன்று
- திருக்குறள் -

## 2.10. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையும் அணுக்கொள்கையும்

சைவசித்தாந்தம் என்பது மூன்று திறப்பட்ட அடிப்படை பொருள்களிலிருந்து வளர்ந்து வந்துள்ள ஒரு விஞ்ஞானமே ஆகும். அதுவே மெஞ்ஞானமும் எனலாம். அப்பொருள்களே உலகு இறை உயிர் என்பன. இவற்றை ஆகமங்கள் பதி, பசு, பாசம் என்றும் கூறுவதாகப் பேராசிரியர் முருகேசன் குறிப்பிடுகின்றார்.

திருவைந்தெழுத்தில் இம்மூன்று பொளுள்களும் இந்த வரிசையில்தான் அமைந்துள்ளன. நம - சிவா - ய எனவரும் மூன்று கூறுகளால் அதனைத் தெரிந்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஆக்ஞை | ய - | பசு (உயிர்) - | சதசத்து |
| விசுத்தி | வா | பதி (இறை) - | சத்து |
| அனாகதம் | -சி | | |
| மணிபூரகம் | -ம | பாசம் (உலகு) - | அசத்து |
| சுவாதிட்டானம் | -ந | | |
| மூலாதாரம் | -ஓம் | | |

முப்பொருளுண்மை

மேற்கூறப்பட்ட பாசம், பதி, பசு எனப்பட்ட மூன்று பொளுள்களும் தனித்தனிப் பொருள்களாம். அவை ஒன்றிலிருந்து ஒன்று ஆனது என்றோ, ஒன்று திரிந்து இன்னொன்றானது என்றோ கருதக் கூடாது. அவையென்றும் உள்ள பொருள்களாம் என்றே சாத்திரங்கள் நம்புகின்றன.

இதனைத் திருமூலர்

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற் பதியினைப் போற் பசு, பாசம், அனாதி " என்கிறார்.

இதினிலிருந்து முப்பொளுள்களும் அனாதியானவை என அறியலாம்.

இம் மூன்று பொளுள்களில் இறைபொருள் (பதி) ஒன்றே தலையாய

முதற் பொருள் என்றும் அது ஏனைய இரண்டையும் இயக்கி நிற்பது என்னும் சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனை

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என் மனார் புலவர்"

எனவும்

"அவையே தானேயாய் இரு வினையிற்
போக்குவரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்குமன்றே"

எனவும் வரும் சிவஞானபோத முதலிரு சூத்திரங்களால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

முப் பொருள்களில் ஒன்றான உலகு (பாசம்) என்பது அசத்து எனவும், இறை (பதி) சத்து எனவும், உயிர் (பசு) சத்துமின்றி அசத்துமின்றி அவ்விரண்டையும் சார்ந்து வாழும் இயல்பு உடையதால் சதசத்தாம் எனவும் மெய்கண்டார் சிவஞானபோதம் விளக்குகிறது. இனிப் பாசம், பதி, பசு எனப்பட்ட முப்பொருள் உண்மை பற்றிய வரலாறுகளைத் தெளிய உணர்த்துவதே சைவசித்தாந்தமாகும்.

பாசமாகிய உலகம் பதியாகிய இறைபொருளுக்கு முன்னால் விளங்கித்தோன்றாத சூனியமே ஆனதால் உலகம் இறையை அனுபவியாது. இறையும் உலகை அனுபவியாது. அவ்விரண்டும் ஒன்றை ஒன்று அனுபவியாதாகவே அவ்விரண்டும் பசுவாகிய உயிர்ப் பொருளுக்கே அனுபவப் பொருள்களாக அமையும் என அறிதல் வேண்டும்.

உயிருக்கு (பசு) இரு திறப்பட்ட அறிவு உண்டு என்றும் ஒரு திறப்பட்ட அறிவினால் உலகை அறிந்து உலகையே சார்ந்து வாழும் என்றும், மற்றொரு திறப்பட்ட அறிவினால் இறையை அறிந்து இறையையே சார்ந்து வாழும் என்றும் அதனால் இரு திறன் அறிவுள


திருண்டலா ஆன்மா என்றும் சொல்லப்படுகின்றது.

உயிர் உலகை அறிந்து உலகைச் சார்ந்து அனுபவிக்கும் போது அந்த அனுபவம் **பெத்த** காலத்து அனுபவம் என்றும் அது இறையை அறிந்து இறையைச் சார்ந்து அனுபவிக்கும் போது அந்த அனுபவம் **முத்திக்** காலத்துஅனுபவம் என்றும் உணர்தல் வேண்டும். பெத்தம், முத்தி ஆகிய இவ்விரண்டையும் பிறப்பு, வீடு என்றும், சகலம், சுத்தம் எனவும்ச ாத்திரங்கள் கூறுகின்றன.

சகலநிலை சுத்தநிலை என்ற இந்த இரு நிலைகளைத் தவிர வேறு ஒரு நிலையும் உயிருக்கு இருந்தது அதுவே கேவலநிலையாகும். கேவலநிலையென்பது உயிர்கள் பிறவிக்கு வருவதற்கு முன் அவற்றுக்குள்ள இயல்பான நிலையேயாகும். அதனை உறக்க நிலை எனவும் கூறுவர். உயிர்கள் கேவலநிலையில் உறக்கத்தில் ஆழ்ந்து அறிவை முற்றுமாய்த் துறந்து சடம் போலவே கிடந்தனவென்றும் அறிய வேண்டும். இத்தகைய மூன்று நிலைகளையும் முற்றாக அறிந்து கொள்வதே சைவசித்தாந்தமாகும்.

ஆதியில் உறக்கத்தில் ஆழ்ந்து சடம் போலக் கிடந்த உயிர்கள் இறைவனுடைய அருளால் பிறவிக்கு வந்து உலகை முற்றுமாய்ப் புசித்துத் தீர்த்த பிறகு உலகை வெறுத்துஇறைபொருளைச் சார்ந்து வாழ்ந்து முடிவில் உலகையும், உடம்பையும் உதறி எறிந்து இறையருளில் கலந்து பிறப்பை அறுத்துக் கொள்ளுதலையே சைவசிதை்தாந்தம் நிறைவாகப் போதிக்கிறது. உயிர்களது இந்த நீண்ட நெடிய பயணவரலாற்றை முற்றாகவும் தெரிந்து கொண்டாலே சைவசித்தாந்தத்தை ஓர் அளவு கற்றவர்களாகி விடலாம்.

## ஆன்மாவின் நிலைகள்




சடப்பொருள்களாகிய பௌதீகப் பொருள்களின் மூலத்தைஅறியப் புகுந்து அவற்றை அணு அணுவாய் தேய்ந்து சென்று பற்பலவாறாகச் சோதனை செய்து பலதுறைகளிலும் மிகவும் முன்னேறி வந்துள்ள தற்கால விஞ்ஞானம் உயிர் பொருள்களின் மூலத்தை இன்னும் உணராமலேதான் இருந்து வருகின்றது. எனினும் விஞ்ஞானி ஒருவரின் கூற்றுப்படி உயிரானது சடப்பொருளின் வேறானதே என்றும் அது அநாதியில் புல், மரம் முதலான முதற் பிறப்பை அடைவதற்கு முன்னதாக உறக்கநிலையில் சடம் போலவே கிடந்தது என்று கூறியுள்ளார்.

அடுத்து முன்னர் குறிப்பிட்ட திருவைந்தெழுத்துப் பற்றிக் கவனிக்கலாம். இது ஒரு **சிவ மூலமந்திரம்** என்றும் **பஞ்சாட்சரமந்திரமென்றும்** பெரியோர் கூறுவர். அது **"நமசிவாய"** என்பதாகும்.

நமசிவாய என்பதற்கு வெளிப்படையான பொருள் சிவனுக்கு வணக்கம் என்பதேயாகும். ஆனாலும் இம் மந்திரத்தைப் பற்றி சாத்திரங்களிலும் பலவாறு விரித்தும் கூறியுள்ளனர். இம் மூலமந்திரத்தில் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மை

அடங்கியிருப்பது முன்னர் கூறப்பட்டது.

நாயன்மார்கள் நால்வரும் இம் மந்திரத்தின் பெருமை குறித்துப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

" காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
..........................................................................
..........................................................................
நாதன் நாமம் **நமசிவாயவே"**

என ஞானசம்பந்தரும்

"செற்றுணை வேதியன் சோதிவானவன்
..........................................................................
..........................................................................
நற்றுணையாவது **நமசிவாயவே"**

என அப்பரும்

"மற்றுப்பற்றெனக் கின்றி நின் திருப்பாதமே மணம் பாவித்தேன்
..........................................................................
..........................................................................
நற்றவா உணை நான் மறக்கினும் சொல்லும் நா **நமச்சிவாயவே"**

எனச் சுந்தரரும்

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"

என மாணிக்கவாசகரும் அருளிச்செய்துள்ளனர்.

இவற்றிலிருந்து இம்மந்திரத்தினை நமசிவாய என உச்சரிப்பதே இவ்வுலகில் லௌகீக வாழ்க்கையுள்ளோர் மேற்கொள்வது சிறந்ததாகும். இதனை ஸ்தூல பஞ்சாட்சரம் என்றும் கூறுவார்.

திருவைந்தெழுத்தைச் "**சிவாய நம**"என்ற வடிவில் வைத்து எச்சரிக்கும் வழக்கமும் இருந்து வருகிறது. நம சிவாய என்பதைப் பிரணவ எழுத்தை (ஓம்) சேர்க்காமல் தொடர்ந்து உச்சரிக்கும்

கால் அங்கு சிவயநம என்ற தொனியும் இல்லாமல்ப் போகாது. ஆகவே முறை எதுவாகினும் அங்கு நம என்பதை மெலிந்தும் சிவாய என்பதை வலிந்தும் உச்சரித்து வந்தாலே போதுமானது என்பது பெரியோர் கருத்தாகும்.

நம - சிவாய என உச்சரிக்கும் போது மலநீக்கம் பெற்று பசுவெழுத்து பதியெழுத்துக்களைச் சார்ந்து ஒரு பக்கம் நிற்றலையும் ஆன்மாவால் கழிக்கப்பட்ட நம என்னும் பாசவெழுத்துக்கள் பதிப் பொருட்கு நிவேதனமாய் (வணக்கம் என்று சொல்வது) மற்றொரு பக்கம் நிற்றலையும், அவ்விரண்டுக்கும் நடுவே நாயகத்தன்மை பூண்டு சிவமும் சக்தியுமாகிய பதியெழுத்துக்கள் நிற்றலையும், கூர்ந்து நோக்கினால் ஆன்மா பாசங்களைவிட்டொழித்துப் பதியைச் சார்ந்து இருக்க வேண்டும் என்பதையே அவ்வடிவம் நமக்குப் புலப்படுத்துகின்றது. ஆதலால் பாசங்களையறுத்து விடுதலை பெற விரும்புவோர் நம சிவாய என்று உச்சரிப்பது நன்றெனக்கருதலாம்.

சிவாய நம என்பதை சூக்கும பஞ்சாட்சரம் எனலாம். இதனில் சி. வா என்பது பதி எனவும் ய என்பது பசுவாகவும் நம என்பது பாசம் எனவும் கொள்ளலாம்.

| சிவா | ய | நம |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| பதி | பசு | பாசம் |

இது பற்றி திருமூலர் குறிப்பிடுகையில்

"சிவாய நமவெனச் சித்த மொடுக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்
"சிவாய சிவசிவ" வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க வானந்த மாமே"

என்கிறார்.

உலகிற்கு ஓர் கடவுளும், உடலுக்கு ஓர் உயிரும் ஆக உள்ளது. இவற்றுள் உடலில் உள்ள உயிர் சிவத்தைப்

போன்றதேயாயினும் அது தன் பாசத்தால் தன்னை உணராதிருக்கையில் தன்னை உணருமாறு "சிவாய நம"என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிச் சித்தத்தை ஓர் நிலையில் நிறுத்தி ஆசைகளை (பற்றுக்களை) அறுத்து அடிமையை நீக்கி சிவானந்தத்தில் மூழ்கியிருக்கலாம் என்பதாகும்.

அனேக நூல்களில் பதி, பசு, பாசம் என்ற ஒழுங்கிலே இருப்பதையே காணக்கூடியதாகவுள்ளது. இவற்றில் பதிக்கும் பாசத்துக்கும் இடையில் பசு இருப்பதை காணலாம். அந்தப் பசுக்கு ஒருபக்கத்தில் பாசமும் கவர்ந்து கொண்டு இருக்கிறது. அதே போல் மறுபக்கத்தில் பதியின் கவர்ச்சியும் உண்டு. இவ்விடத்தில் பாசத்தை அறுத்து பதியுடன் சேருவதே முத்திநிலையாகும்.

இதனையே மாணிக்கவாசகர்

"பாசமாம் பற்றறுதிதுப் பாரிக்கும் ஆரியனே"

பாசத்தை நீக்குவது இறைவனின்தொழில் என இறைவனை நாடி பாடுகிறார்.

இந்தச் சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாய நம என்பதனை ஞானிகள், துறவிகள், சித்தர்கள் உச்சரிப்பதற்கு உகந்தது எனக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் இவர்கள் பாசமாகிய உலகில் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் பாசத்துக்கு அடிமையாகாமல் அதாவது பாசத்தை விட்டு விலகி சீவன்முத்தர்களாகவே வாழ்ந்து வருவதாலேயேயாகும்.

ஆன்மாவுக்குச் சைவ சித்தாந்திகள் வழங்கும் பசு என்ற சொல்லைக்கவனிக்கும் போது ஆன்மாவின் கட்டுண்ட நிலையையே பசு என்ற சொல்குறிக்கும் என்கிறது மெய்கண்டநூல்.

இவ்விடயத்தில் எதனால் கட்டுண்டது என்ற வினா எழுவது இயல்பு. இதற்குக் கிடைக்கும் விடை மூலம் சைவசித்தாந்திகள் கூறும் மூன்றாவது பொருளான பாசத்தினால் கட்டப்பட்டது என்பது புலப்படும். ஆன்மாவின் பரிபூரணத்துவத்துக்குத் தடையாகவுள்ளது

பாசமென்றும் ஆன்மாவைப் பசுவாக்குவது இப்பாசமே எனலாம்.

சைவசித்தாந்தத்திலே பாசம் என்னும் சொல் மூன்று பொருள்களைக் குறிக்கும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவற்றை மும் மலங்கள் எனவும் கூறலாம்.

இவற்றில் மாயைபற்றிக் கவனிக்கும் போது ஆன்மா உறையும் உடலும் அவ்வுடல் உறையும் இவ்வுலகும் ஆன்மாவுக்குப் பாசமாகும். ஆனால் உடலையும் உலகையும் நேரேபாசம் என்ற சொல்லாற்குறிப்பிடுவது குறைவு. உடலும், உலகும் உற்பத்தியாகும்போது எப்பொருளிலிருந்து உற்பத்தியாகின்றனவோ, பின் ஒடுங்கும் போதும் எப்பொருளில் ஒடுங்குகின்றனவோ அப்பொருளே பாசம் என்ற சொல்லால்குறிப்பிடப்படுகின்றது. உடல், உலகம் ஆகியவற்றின் உற்பத்திக்கும் ஒடுக்கத்திற்கும் மூலகாரணமாயுள்ள பொருள் மாயை எனப்படும். இம் மாயை என்ற சொல் 'ம்' 'யா' என்ற இருபகுதிகளால் ஆனது 'ம்' என்றால் ஒடுக்கம் என்பது 'யா' என்பது விரிவு எனப்படும். இதுவும் ஒரு பாசமாகும். இந்த அடிப்படையிலேயே சித்தர்கள் உலகத்தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில் மாயா காரியத்தால் உலகம் தோன்றி ஒடுங்கும் என்றும் குறிப்பிட்டனர்.

ஆன்மா உடலோடு சேர்ந்த பின் தான் அதற்கு அறிவு ஏற்படும். அதற்கு முன் அது அறிவற்றுக்கிடக்கும். ஆன்மாவுக்கு மாயை ஒரு பாசம் என்னும் போது ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஆன்மா அறிவு பெற துனை செய்யும் மாயையைச் சித்தாந்திகள் பாசம் என்கின்றனர். ஏனெனில் மாயையிலிருந்து தோன்றும் உடலாலும், ஞானேந்திரியங்கள், அந்தக்கரணங்கள் ஆகியவற்றாலும் கிடைக்கும் அறிவு பூரண அறிவு அல்ல. இது நிலையில்லாத உலகைநிலையானது என எண்ணச்செய்வது. அதில் ஆன்மாவைப் பற்றுவைக்கச் செய்யும் மயக்கஅறிவு. இதனாலேதான் மாயையும் பாசம் எனப்படுகிறது. மிகுதியும் துன்பத்துக்கே இடமான உடலுள்ளும் உலகிலுள்ளும் ஆன்மா புகுந்து அல்லற்படுவதற்கு இரு காரணங்கள் உள. ஒன்று ஆன்மாவோடு அநாதியாகவுள்ள ஆணவம் எனப்படும்

ஓர் அறியாமை. இதுவே மூல மலம் எனப்படும். மற்றது ஆன்மா பிறவிதோறும் செய்யும் கன்மங்கள். எனவே இவையும் ஆன்மாவுக்குப் பாசங்களாகும்.

## முப்பொருளும் அணுக்கொள்கையும்

இதுவரை சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மை பற்றிக் கூறப்பட்டது. இனி அணுக்கொள்கைபற்றியும் அவற்றுக்கும் பதி பசு பாசத்துக்கும் உள்ள தொடர்பையும் கவனிப்போம்.

அணு என்ற சொல் இன்று சர்வ சாதாரணமாக எல்லோராலும் பேசப்படும் பொருளாகும். பண்டைய கிரேக்கர்களின் நம்பிக்கையின்படி ஒரு பொருளை மேலும் மேலும் உடைத்துச் சிறிய துண்டுகளாக்கிக் கொண்டேபோனால் இறுதியில் பிரிக்க முடியாத ஒன்று இருக்கும் அதுவே அணுவெனலாம். ஆங்கில வார்த்தையான Atom என்பது A - Tomos என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து தோன்றியது. அதற்கு பொருள் "பிரிக்க முடியாதது" என்பதாகும். இத்தகைய மிகச்சிறிய பொருளான அணுவை நாம் எலக்ட்ரான் உருப்பெருக்கி மூலம் தனிப்பட்ட அணுக்களை ஒளிப் புள்ளிகளாகப் பார்க்க முடிகின்றது. இதனை ஜீன்ஸ், ரூதர்போர்டு முதலிய விஞ்ஞான மேதையர் ஒவ்வோர் அணுவும் ஒரு குட்டிச் சூரியமண்டலமென்றே கூறுகின்றனர். ஓர் அணுவை உருவாக்கும் முக்கிய பொருள்கள் நியூட்ரான் (Neutron), புரோட்டன் (Proton), எலக்ட்ரான் (Electron) ஆகியவையே. இந்த அணுக்கள் சேர்ந்தும் பிரிந்தும் பொருள்களை உருவாக்குகின்றன. காலமுறை அட்டவணையின்படி (Periodic Table) அணுவிற்கு ஓர் அமைப்பு இருப்பதும் அணுவின் அதிகரிப்பை ஒட்டிக் காலமுறைப்படி அந்த அமைப்பு மாறுபடுவதும் நிரூபிக்கப்பட்டன. ரூதர்போர்டு என்ற விஞ்ஞானி இது பற்றி தீவிரமாக ஆராய்ந்து அணுவிற்கு ஓர் அடிப்படை உருவம் இருப்பதையும், அதனைச் சுற்றி எலக்ட்ரான்கள் (Electron) சுழன்று வருவதையும் கண்டுபிடித்து ஓர் அணுவின் அமைப்பு கதிரவனின் கோள அமைப்புமுறை (Solar System) யின்படி உள்ளதாகத் தெரிவித்தார். இதனை இன்னொரு விஞ்ஞானி ஸ்பெக்ட்ரோஸ்கோப் (Spectro

scope) என்னும் கருவி மூலம் அணுவின் உட்புற அமைப்பை ஆராயமுடியுமென்று அதனிலும் வெற்றி கண்டார்.

அணுவினையும் அணுவிலுள்ள நுணுக்குகளையும் ஆகமவாதிகள் வரலாற்றுக் காலத்துக்கு முன்பே கண்டறிந்தார்கள். இதனை சமயவாயிலாக பறைசாற்றவே சித்தாந்த நூல்களில் இடம் பெறச்செய்தனர். மேற்குறிப்பிட்ட அறிவியல் கருத்துக்களை சித்தாந்தக் கருத்துக்களுடன் பொருத்திப் பார்க்கும் போது பல உண்மைகளை காணமுடியும்.

அணுக்கொள்கைகளை வேதகாலத்திற்க்கு முன்பிருந்த ஆரியரல்லாத அனுபூதிமான்கள் (சுமார் கி. மு 3000) கூறியுள்ளனர். என்ற சான்றை ஆகம நூற்களில் காணலாம். இவற்றை ஆதியில் உலகில் தோன்றிய துகள்களைப் பூதாதிகள் என்றனர். கண்ணுக்கு எட்டாத துகள்களான இவை உரு, பண்பு முதலிய இயல்புகள் இல்லாதன. இத்துகள்கள் ஆற்றனை மேற்கொண்டு தன்மாத்திரைகள் எனும் துகள்களாக மாறுகின்றன. பல தன் மாத்திரைகள் ஒன்று கூடி ஒரு பரமணுவாகத் திரள்கின்றன. நாம் காணும் பொருள்கள் பரமணுக்களின் தொகுதிகளாம். தன்மாத்திரைகள் விரைவாகத் துடிப்பதால் ஒளியும் வெப்பமும் தோன்றுகின்றன. இந்த வகையில் ஐம்பூதத் தோற்றம் பற்றி முன்னர் விபரமாகக் காணலாம்.

அணுமுதல் அண்டம் வரையுள்ளயாவுமே உயிருள்ளன என்பது இந்துமதக் கொள்கை. ஆகவே உலோகங்களில் உயிர் உறங்குகின்றது என்றும், தாவரங்களில் கனவு நிலையிலும், விலங்குகளில் நனவு நிலையிலும், மக்கள் வேரிடத்தில் விழிப்பு நிலையிலும் உள்ளன எனவும் அறியப்படும்.

இதனைத் திருமூலர்

“அணுவின் துரியத்திலான நனவும்
அணுவசைவின் கண்ணான கனவும்
அணுவசை விற்பரா தீதுஞ் சுழுத்தி
பணியிற் பரதுரியம்பர மாமே”

(திருமந்திரம் 2242)

என ஆருயிராகிய அணுவின் பேருறக்க நிலையாம் எனவும் துரியத்தில் உண்டாகும் விழிப்புநிலையும், ஆருயிரின் புடைப் பெயர்ச்சியில் உண்டாகும் கனவும், அப்புடைப் பெயர்ச்சியின் கண் தன்னை இழப்பதாகிய உறக்கமும் பொருந்திய இடத்து அப்பால் நிலைஎய்தும். எய்தலே சிவம் ஒன்றாம் சிறப்பு எய்தும் என்பது இதன் பொருளாகும்.

கடுகினும் பல கோடிப் பங்கு நுணுகியதான அளவையுடையதாம் அணுவென்பது. பத்துக் கோடி அணுக்களை வரிசையாக அடுக்கினால் ஓர் அங்குல நீளத்துக்குப் போகாது என்கின்றனர். இவ்வளவு நுண்ணிய அணுவை கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அதனுடைய செய்கைகளால் அணுவை உணரலாம். (தன்மாத்திரை போல்) இத்தகைய ஒவ்வோர் அணுவிலும் நடுவில் சூரியன் போல் நியுக்கிளியஸ் (Nucleus) என்ற அணுக்கரு ஒன்றும் அதனால் வசீகரிக்கப்பட்டு அதனைச் சுற்றி ஓய்வின்றி சுழன்று கொண்டிருப்பன என்றும் இதனை ஒரு சிலந்திப் பூச்சி தன் வலைக் கூட்டில் நடு மையத்தில் வீற்றிருப்பது போல ஒவ்வோர் அணுவின் மையத்திலும் அதன் கரு வீற்றிருக்கின்றது. சூரியனைச் சுற்றி மற்றக் கிரகங்கள் ஓடி வருவது போல் கருவைச் சுற்றி மின்னுருக்கள் (எலக்ட்ரோன்) சுழன்று கொண்டு இருக்கின்றன. இத்தகைய உண்மைகளை எல்லாம் சாதாரண மக்களுக்குச் சமயத்தில் புகுத்தி அணுவின் உருவத்தை ஆனந்தக் கூத்தனாகும் நடராஜர் வடிவத்திலும் ஆண், பெண் அணுக்களாக (Positive And Negative Atoms) தம்முள் திருமணம் செய்து கொள்ளும் முறைமையைச் சிவலிங்க வடிவத்திலும் அண்டபிண்டங்களிலுமுள்ள உண்மைகளையும் தத்துவங்களையும் ஆலய அமைப்பிலும் ஆக்கித்தந்துள்ளார் எனலாம்.

அறிவியல் ரீதியில் அணுவைப் பிரிக்க முடியாது என அன்று கூறியிருந்தமையை முன்னர் பார்த்தோம். ஆனால் இன்றைய அறிவியல் விஞ்ஞானம் அணுவை பிரிக்க முடியும் என்று கூறுகின்றது. ஆனால் என்றோ ஆகம வாதிகள் அணுவைப் பிரித்துக்

கூறிவிட்டார்கள் என்பதும் இவற்றால் புலப்படும்.

உலகம் உயிர் உள்ளதும் (சித்து), உயிர் அற்றதும் (சடம்) என்பவற்றால் ஆனது என்றும் இவற்றில் உயிர்களின் "அறிவினைப்" பற்றி முடிவாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லையென்றும் ஆனால் உயிரற்றதாகக் கிடக்கும் சடத்தினைப்பற்றியே அறிவது எளிதாயிற்று. சடத்தினை உண்மையில் என்னவென்று கூற முயன்றபோது தத்துவ ஆராச்சியாளர்களில் ஒருவர் கூறுவது போல் மற்றவர் கூறாமல் 'சூன்யம்' என்றும் 'உள்பொருள்' என்றும், மாறுவது என்றும், இல்பொருள் என்றும், மாறாதது என்றும், சித்து (உயிருள்ளது) என்றும், அசித்து என்றும் பலவாறாகக் கூறிப் பண்டைநாளிலிருந்து ஒருவரோடொருவர் முறன்பட்டு பல சமயதத்துவங்கள் தோன்றுவதற்கு ஏதுவாகின. ஆனால் ஆகமவாதிகள் பதி, பசு, பாசம் என்ற மூன்று நித்திய பொருள்கள் சேர்ந்ததுவே அணு என்று அன்றே அறுதியிட்டுக் கூறிவிட்டனர்.

உலகம் (பாசம்) சடம் என்றும் உலகில் உருவமாகக் காணப்படும் பொருட்கள் என்றும் கூடிய வரையில் மாறாமலே தோன்றுகின்றது எனவும் அவற்றிலிருந்து சக்திகள் பிறந்து இயங்கவும் செய்கின்றனவென்பதனையும் கண்டனர். எடுத்துக்காட்டாக சூடு, ஒளி, காந்தம், மின்சாரம் முதலிய சக்திகளைக் கூறலாம். உறைந்து கிடந்தால் பனிக்கட்டி, உருகி வழிந்தால் தண்ணீர். நீராவியானால் இருஅணுக்கள் (ஐதரசன், ஒட்சிசன்) என்பது போல் சக்தி உறைந்து கிடப்பதையே சடம் என்றும் சடம் ஆற்றலாகி வழிவதே சக்தி என்றும் கூறப்பட்டது.

இதனையே சிவவாக்கிய சித்தர்

"உயிராவ தேதடா? உடம்பாவதேதடா
உயிரையு முடம்பையு மொன்று வியப்பதேதடா
உயிரினாலுடம்பு தானெடுத்த உண்மை.........."

என்று கூறுகிறார்.

பல்லாயிரம் ஆண்டுகளில் செய்த யோக வல்லமையால் (ஆராச்சியில்) அக் காரண காரியப் பொருளை அணுவினுள் அணுவாக உள்ளதென்று மாபெரும் சித்தன் சிவபெருமான் கண்டுபிடித்து முதன் முதல் உபதேசிக்கத்தொடங்கினார். பொதுவாகக் கண்டுபிடிக்கப்பெற்ற விஞ்ஞானிகளின் பெயர்களைக் கொண்டு அவர்கள் கண்டுபிடித்தவற்றுக்கு பெயர் சூட்டுவது வழக்கமாகவிருந்தமையால் அக்காலத்திலும் அதேவழக்கத்தைப் பின்பற்றிக் கண்டுபிடித்த அணுவைச் சிவன் என அழைத்திருக்கலாமென்று கருத இடமுண்டு. இதன் அடிப்படையாகவே முதல் சித்தன் என்றும் அழைத்திருக்கலாம் எனவும் கருதலாம்.

பிற்காலத்தில் அவர் வழிவந்த யோக சித்தமாணக்கர்கள் சிவம், பதி, ஆதிபிரான்,ஆதிபகவன் கடவுள் என்ற பலபெயர்களால் போற்றி வந்துள்ளனர்.
இதனைத் திருமூலர்

"அணுவில் அணுவினை ஆதிப்பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலு மாமே"

என்று கூறுகின்றார்.

அணுவாகிய ஆருயிர்க்கு உயிராய் நுண்ணியதாய் விளங்கியது ஆதியாகிய சிவமாகும். அச் சிவத்தை உணர்வில் அளவின்றி நுணுகி ஆராய வல்லாரிக்கு அணுவிற்கு அணுவாய் திகழும் சிவத்தை அணுகுவது கூடும் என்பது பொருளாகும். எனினும் இன்றைய நாளில் பதி என்றாலும், சிவம் என்றாலும் மாபெரும் சித்தனாகிய சிவபெருமானையே உருவமாகக் கண்முன் நிறுத்தி சமயப்பான்மையோடு நோக்குகின்றார்களே தவிர மெய்கண்டார் நூலில் ஆகமவாதிகள் உஒணர்த்தியவாறு காணுகின்றார்கள் இல்லை. அதற்கும் ஒரு காரணம் இருக்கலாம். அதாவது சமயக்கொள்கையாக இல்லாமல் வெறும் விஞ்ஞான தத்துவமாகப் போதிக்க முற்பட்டால் சாதாரண மக்களிடையில் உண்மைப் பொருளின் வல்லமையும், பெருமையும், சிறப்பும் குன்றி விடுமோ என்ற அச்சத்தினாலும்,

அணுவினால் ஏற்படும் அழிவுச் சக்திகளைக் கட்டுப்படுத்தவும், ஆக்க சக்திகளை அதிகரிக்கவும் அணுசக்தியை 'சிவசக்தி'என சித்தரும், ஞானியரும் உருவகப்படுத்தியிருக்க வேண்டும் என எண்ணுவதில் தவறில்லை.

எவ்வாறாயினும் அணுவில் பதி என்ற பரம அணுவைத் த்துவருபமாகக் கற்றுணர வேண்டுவது சித்த மருத்துவர்கள், சித்தமருத்துவ மாணவர்களின் கடமையாகும்.

முதல் சித்தராகிய சிவபெருமான் அணுவின் பதி, பசு, பாச தத்துவத்தை நந்தி எம் பெருமானுக்கு உரைக்க நந்தி தேவர் கைலாயத்தில் திருமூல வர்க்கத்தாருக்குப் போதித்தார்.

இதனைத் திருமூலர் திருமந்திரத்தில்

"பதி பசு பாசம் பயில்வியா நித்தம்
பதி பசு பாசம் பகர்வோர்க் காறாக்கிப்
பதி பசு பாசத்தை பற்றற நீக்கும்
பதி பசு பாசம் பயில நிலாவே"

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அணுவினுள் மெய்ப்பொருள், பொய்ப் பொருள், அறிவுப்பொருள் ஆகிய மூன்றும் உண்டென்பர். இதனைப் பதியாகிய மெய்ப்பொருள் என்றும், பாசமாகிய பொய்ப்பொருள் என்றும், பசுவாகிய அறிவுப்பொருள் எனவும் கூறுவர். இவை நித்திய பொருட்களாகும்.

இவற்றை நித்திய பொருட்கள் என கீழ்குறிப்பிடும் சான்றுகளால் நிரூபிக்க வேண்டும். அவையாவன ஒருபொருளை உண்டென நிரூபிக்கப் பொதுவாக மூன்று வழிகள் உண்டு. வழிகளை பிரமாணங்கள் அல்லது அளவைகள் எனக்கூறலாம். (இது பற்றிய விபரத்தை அளவை என்னும் தலைப்பின் கீழ் காணலாம்.) இவற்றுள் ஒன்று ஆகமம் அல்லது சுருதி எனலாம். அதாவது அனுபவத்தால் அறிந்த மகான்களின் வாயிலாக அறிதல். இந்த ஆகமப் பிரமாண

மூலம் இறைவன் (பதி) உண்டெனக் கூறலாம். இதைவிட மற்றைய பிரமாணங்களால் கடவுள் உண்டு என்பதை பரிபூரணமாக நிருபிப்பது கடினமாகும். அடுத்ததாக அநுமானப் பிரமாணத்தைக் கொண்டும் கடவுள்உண்டு என்பதை நிருபிக்க முற்பட்டனர். அதாவது ஆகமப்பிரமாணத்தை ஏற்காதவர்கட்கே அனுமானப் பிரமாணத்தால் நிருபிக்க முற்பட்டனர்.

ஒரு பாணையைக் காணும் எவரும் அதை வனைந்தவனை நேரில் காணாவிடினும் வனைந்தவனும் உளன் என்பதை ஆட்சேவிப்பதில்லை. இதேபோல் காட்சிக்குப் புலனாகும் இந்த உலகத்தைக் கொண்டு காட்சிக்குப் புலனாகாத அதனைப்படைத்தவன் ஒருவன் உளன் என்பதை உறுதியாகக் கொள்ளலாம் எனச் சைவசித்தாந்திகள் கூறினர். இதற்கு உலகம் என்ற ஒரு பொருள் உண்மையிலேயே இருக்கின்றது என்பதை ஒப்புக்கொண்டால்தான் அதைப் படைத்தவனைப் பற்றிப் பேசவேண்டுமென்றும் உலகம் உண்மையென்றதற்க்கு என்ன ஆதாரம் என்றும் இவர் வினா எழுப்பினார். இதற்கு சைவசித்தாந்திகள் உலகம் அழிந்து அழிந்து தோன்றுகின்றது என்றும் உலகமே பொய் எனக் கூறும் வேதாந்திகள் இல்லாதது அல்ல என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்றும் உலகம் அழிந்து தோன்றுவதற்கு ஒரு சக்தி அல்லது காரணம் வேண்டுமென்றும் அதுவே பதியெனவும் காரணம் கூறினர்.

இவற்றிலிருந்து உலகம் அழிந்து அழிந்து தோன்றுவதால் பொய்ப்பொருளாக அன்றி அவை நித்தியமானவையெனவே கொள்ளவேண்டும் எனலாம்.

உலகம் உண்மையென ஒப்புக்கொண்டாலும் அது என்றைக்கோ படைக்கப்பட்டது என்று கொள்ளாது, என்றுமே ஒரே நிலையில் உளது எனவும் கொள்ளலாகாது. அது அழிந்து அழிந்து தோன்றுகின்றது எனச் சைவசித்தாந்திகள் கொள்வது போலக் கொண்டாலேயே அதனை அழிக்க ஒருவனும், பின்னர் படைக்க ஒருவனும் தேவை. ஆனால் அங்ஙனம் உலகம் முழுவதும் அழிந்து

தோன்றுகின்றது. இதற்கு சான்றாக ஓரினப் பொருட்கள் ஒரு காலத்தில் தோன்றி பின் அவை முற்றிலும் அழிந்து பின்னும் தோன்றுவது என்கின்றனர். எடுத்துக்காட்டாக மழைகாலத்தில் ஈசல்ப்பூச்சிகள் தோன்றுவதைக் கொள்ளலாம். மேற்கூறியவற்றிலிருந்து வாழும் இவ்வுலகுக்கும் ஒரு நாள் அழிவு ஏற்படும் என்பதை யூகித்து அறியலாம். இதனை புவியியல் கலாநிதி குணராசா தனது பூமித்தாய் என்ற நூலில் "இப்பூமிக்கு ஒரு வயது உண்டு என்றும் அது என்றோ ஒருநாள் அழிந்தே தீரவேண்டுமென்றும்" குறிப்பிட்டிருப்பதைக் கூறலாம்.

எனவே உலகம் உண்மை. அது படைக்கப்பட்ட பொருள். அதனைப் படைத்தவனும் இருந்தேயாக வேண்டும். இவ்வாறெனின் படைத்தவன் ஏன் படைத்தான்? எங்ஙனம் படைத்தான்? என்ற இரு வினாக்களும் எழும்.

இறைவன் அல்லது பதி உலகை மட்டுமே படைப்பவன். உலகோடு சேர்த்து உண்டான உயிர்களையும் அவன் படைப்பவன் அல்லன். அதாவது அநாதிப் பொருளாகிய அணுவுக்குள் இருக்கின்ற பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களும் அநாதி நித்தியப் பொருள்கள் என்றுமே உள்ளவை. எனவே பதி பசுவாகிய உயிரைப் படைக்கின்றான் என்பது பொருந்தாது. அதுமட்டுமன்றி பசுவையும் இறைவன் படைத்தால், அப்படைப்புக்கு ஒரு காரணமும் இல்லாது போய்விடும். அன்றியும் படைக்கப்பட்டவை யாவும் அழியும் என்பது நியதி. உயிர்களைப் படைக்கப்பட்டவை என்று கொண்டால் அவை அழிவுடையவை என்று ஆகிவிடும். ஆனால் சித்தாந்திகள் கொள்கையின் படி உயிர்கள் நித்தியமானவை.

எனவே படைப்பு என்பது நுண்மை நிலையிலிருக்கின்ற அணுக்களிலுள்ள பசுவாகிய உயிரையும் பாசமாகிய சடத்தையும் இணைத்துப் பலவகையான பொருள்களாகவும் சீவராசிகளாகவும் உலகிலே நடமாடவிடுவதாகும் எனக் கருதலாம்.

இனி இப்படைப்பின் நோக்கம் பற்றிக் கவனிப்போம்.

**படைப்பும் அதன் நோக்கமும்**

அநாதி காலந்தொட்டே பாசம் என்ற ஓர் கவர்ச்சிப் பொருளினால் பசு என்ற ஆன்மா கட்டுண்டு கிடக்கின்றது. அந்தப் பாசத்திலிருந்து பசுவை நீக்கவே இறைவன் உலகைப்படைக்கின்றான். இதுவே படைப்பின் நோக்கமாகும்.

இறைவன் சித்துப்பொருள். இந்த உலகம் சடப்பொருள். ஆகையால் உலகுக்கு மூலம் சடப்பொருளாகுமேயொழிய சித்துப்பொருளாகாது. இவற்றில் இருந்து சித்துப்பொருளால் சடப்பொருள் எப்படித்தோன்றும் என்ற கேள்வி உருவாகின்றது.

இவற்றை விளக்குவதற்கு எடுத்துக்காட்டாக மண்ணிலிருந்து பானையை வனையும் போது மண் பலவிதமாற்றங்களை யடைகின்றது. இறைவனிலிருந்து உலகம் உற்பத்தியாகின்றது எனில் இறைவனும் பல மாற்றங்களை அடையவேண்டி நேரிடும். ஆனால் இறைவன் எக்காலமும் எவ்விகாரமும் அடையாதவன் என ஆகமங்களும் வேதங்களும் கூறுகின்றன. எனவே இவ்வுலகம் இறைவனிலிருந்து அன்று மாயை அல்லது பாசத்திலிருந்து தான் உற்பத்தியாகின்றது எனச் சித்தாந்திகள் கொள்கின்றார்கள்.

இறைவன் தானே நேரே மாயையை இயக்குவதில்லை. தனது சித்சக்தியால் மாயையை தொழில்படுத்துகின்றான். இவ்விடத்தில் இறைவன் வேறு சித்சக்தி வேறு எனச் சந்தேகிக்கலாம். ஒரு விதத்தில் இறைவனும் அவனது சித் சக்தி ஒன்று என்றும், இன்னொரு விதத்தில் அவையிரண்டும் வேறு எனவும் கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டாக இறைவனும் அவனது சித்சக்தியும் சூரியனும் ஒளிக்கதிர்களும் போன்றவையாகும்.

சூரியன் இன்றி ஒளிக்கதிர்கள் இருக்க முடியாது. ஆயினும் ஒளிக்கதிர்கள் தான் சூரியன் எனக்கொள்வதில்லை. எனவே பதி அல்லது இறைவன் என்ற அருவப்பொருளால் உலகில் காணும்

பொருள்களெல்லாம் மூன்றுவித தோற்றத்தை அடைகின்றன. அவையாவன ஆக்கல் அல்லது உற்பத்தி, அழித்தல் அல்லது மறைத்தல், காத்தல் அல்லது வாழுதல். எனவே உலகின் தோற்றத்துக்கு முதற்காரணம் பதி. துணைக்காரணம் பதியின் ஆற்றலாகிய சக்தி, நிமிர்த்த காரணம் பாசம் எனப்பட்டது.

உலகில் எண்ணற்ற ஆன்மாக்களும், எண்ணற்ற பாசங்களும், இருந்தபோதிலும், உயிர்அறிவுப் பொருளாக இருந்தபோதிலும் அந்த உயிரும் பாசமும் தாங்களே இயங்கிக்கொள்ள முடிவதில்லை. பதி என்ற பரம்பொருளால்தான் அவை இயங்க முடியுமாதலால் பதி முதற்காரணமாயிற்று.

பதி தானே உலகை இயக்காது தன் சித்சக்தியாகிய ஆற்றலைக்கொண்டு உலகை இயக்குவதனால் சக்தி துணைக்காரணமாயிற்று.

அநாதி காலந்தொட்டே உயிர்களைப் பிணைத்திருக்கின்ற பாசங்களை நீக்குவதன் நிமித்தம்,பாசத்தைப் பதியானது இயக்குவதனால் பாசம் நிமித்த காரணமாயிற்று எனலாம்.

மேற்குறிப்பிட்ட பதி தனது சக்தியால் இயங்குவதையும், அதற்கு மூலகாரணத்தையும், காரியத்தையும் உள்பொருள் ஒன்று இருப்பது என்பதையும் சிவஞானபோதத்தில் விளக்கப்பட்டுள்ளன முற்பகுதியில் காணலாம்.

இதே கருத்தைத் திருமூலர்

"தாங்கிய தன்மையும் தானணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்து ..............................................."

(திருமந்திரம் 650)

இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

உயிர் யோகப்பயிற்சியால் அணுவாக நின்று பல உயிர்களோடும் செறிந்து அவைகளைத் தாங்கிய காலத்தும்,

அவற்றை அழித்த காலத்தும், அதற்கோர் மாறுதலில்லை என்பது இப்பாடலின் பொருளாகும்.

அணு பற்றி கி.பி 200 இல் சங்கப்புலவருள் ஔவையார் தன் அகவலில்

“அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி”

எனக் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி 700 இல் வாழ்ந்த சிவவாக்கியர் என்னும் திருமழிசை ஆழ்வார்

“அணுத் திரண்ட கண்டமா யனைத்தும் பல்லி யோனியாய்
மனுப் பிறந்தோதி வைத்த நூலிலே மயங்குகிறீர்
..........................................................................................
.........................................................................................”

எனவும்

நீலகேசி என்னும் சிறுகாப்பியத்தில் 674, 675, 676, 677 ஆகிய பாடல்களிலும் அணுபற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

கி.பி 1200 இல் மாபெரும் கவி கம்பர் அணுபற்றிக் குறிப்பிடுகையில்

“..................................................................
..................................................................
மக்களில் ஒருவன் கொல்ல
மாள்பவன் வானே மேரு
உக்கிட அணு ஒன்று கூடி
உதைத்தது போலு மம்மா”

இவ்வாறு காணப்படுகின்றது.

கி.பி 14 ஆம் நூற்றாண்டில் அருணந்தி சிவச்சாரியர் பல இடங்களில் ஆருயிரை அணுவைக் குறிக்கோளாக வைத்து பல

பாடல்களில் கூறியுள்ளார். அவற்றுள் எடுத்துக்காட்டாக

"மூவகை யணுக்களுக்கும் முறைமையின் விந்து ஞானம்
..........................................................................................
.........................................................................................."

என்பதனைக் குறிப்பிடலாம்.

சுப்பிரமணியபாரதியார் அணுபற்றிக் குறிப்பிடுகையில்

"இடையின்றி அணுக்களெல்லாம் சுழலுமென
இயல் நூலார் இசைத்தல் கேட்டோம்
..................................................................
.................................................................."

என கலைமகள் தோத்திரம் வாயிலாக அணுவின் பெருமையைக் கூறுகின்றார்.

அணுவில் காணப்படும் நுட்பத்தன்மையிலும் வியக்கத்தக்க நுட்பமானவன் இறைவன் எனத் திருவாசகம் பின்வருமாறு சுட்டுகின்றது.

"அணுத்தரும் தன்மை இலையோன் காண்க
இணைப்பரும் பெருமையிலீசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
..................................................................
.................................................................."

என்பது அக்கருத்தாகும்.

மேற்கண்டவாறு அணுக்கொள்கை பற்றியும் அதன் சிறப்புப்பற்றியும் பல நூல்களில் கூறியுள்ளதை இங்கு அவதானிக்கமுடியும்.

இன்றைய நாளில் அறிவியல் ரீதியாக மூலகங்களில் மூன்று முக்கிய அணுக்கள் இருக்கின்றனவென்றும், அவை சாதாரண அணுக்கள், நிலையான அணுக்கள், நிலையில்லா அணுக்கள்

எனப் பகுக்கலாம் என்றும் கூறுகின்றனர். இதனில் நிலையில்லா அணுக்களை அணுக்கதிர்கள் என்றும் குறிக்கின்றனர். நிலையில்லாத அணுக்கள் சேர்க்கையில் சிதைந்து பிரிந்து அழிந்து போகின்றன மற்றைய நிலையான அணுக்கள் எந்த மாற்றத்திலும் நிலை மாறாமல் இருக்கின்றனவென்றும் கூறுகின்றனர்.

மேற்கூறிய கோட்பாட்டைத் தழுவியே திருமூலர்

“அறிந்தணு மூன்றுமே யாங்கணுமாகும்
அறிந்தணு மூன்றுமே யாங்கணுமாக
அறிந்த அநாதி வியத்தனுமாவன்
அறிந்த பதி படைப் பானங்கவற்றை யே”

இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இதுவரை சைவசித்தாந்த அடிப்படையில் அணுக்கொள்கை பற்றி ஆராயப்பட்டது.

மேலும் அணுக்கொள்கை பற்றி வைசேடிகர் ஆராய்ந்து எடுத்துக்கொண்ட முடிவுகளை இந்திய தத்துவமுறைகள் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டிருப்பதால் இங்கு அவை குறிப்பிடப்படவில்லை.

## 2.11. முத்தொழிலில் சிவனும் சீவனும்

சிவன் என்ற சொல் முதன்முதல் எந்த நூலில், எந்த மொழியில் காணப்படுகின்றது என்பது ஆராயவேண்டியதாகும். புறநானூறு போன்ற மிகப்பழைய நூல்களில் சிவன் என்ற சொல் காணப்பெறவில்லை. வேதகாலத்தில் தோன்றிய இருக்கு வேதகாலத்தில் காணப்படவில்லை. எனினும் சிவன் என்ற சொல் இல்லாத போதும் சிவபெருமானைக் குறிக்கும் "நீலமணிமிடற் றொருவன்", "கறை மிடற்ண்ணல்" போன்ற அநேக சொற்கள் உபயோகத்திலிருந்ததை புறநானூறு மூலம் காணலாம்.

சைவசித்தாந்தமும், ஆகமநூலும் தமிழுக்கே உரியதாவிருந்தும் "சிவன்" என்ற சொல் பழைய தமிழ்ச்சங்க நூல்களில் காணப்படாமை ஆராய வேண்டியதாகும். இதுபற்றி க.சு.உத்தமராயன் கூறுகையில் தென்னகத்தில் ஆகமநூல்கள் தமிழ் அறிஞர்கள் இடையே மனப்பாடமாக இருந்ததது என்றும் அவை ஏடுகளில் எழுதப்படவில்லை என்றும், கடல் கோல்களினால் தமிழர்கள் நான்கு பக்கமும் சிதறி ஓடினார்கள் என்றும், தமிழர்களும், நாகர்களும் சிந்து கங்கை நதிக்கரைக்கு சென்று மனப்பாடமாக இருந்த ஆகமநூல்களை அங்கு ஒலைச்சுவடியில் எழுதப்பட்டன என்றும், அங்கே சொல்லாச்சி வடமொழியான படியால் காலக்கிரமத்தில் ஆகமநூல் வடமொழியில் பதிந்துவிட்டது என்கின்றார். அவர் மேலும் கூறுமிடத்து தமிழர், நாகர் பரம்பரையில் உதித்த அரசர்களிடையே சைவசித்தாந்தம் மிகவும் சிறப்புற்று வளர்ந்திருந்து என்றும் அம்மன்னர்களின் ஆட்சிகலைய அவர்கள் தெற்கு வந்தார்கள் என்றும் அவ்வாறு வரும்பொழுது வாகடர்களும், பல்லவர்களும் தங்கள் சாஸ்திரங்களை கொண்டுவந்து தெற்கில் குறுநிலமன்னர்களாக இருந்து பின்பு பெரியதொரு அரசை நிறுவி சைவசித்தாந்தத்தினையும் சிறப்பாக வளர்த்தார்கள் எனலாம். பின்னர் தமிழகத்தில் புறச்சமயங்கள் எழுச்சிபெற்ற காரணத்தால் ஆகமநூல்களும் சைவசித்தாந்த முறைமையும் வளர்ச்சி

குன்றிக்காணப்பட்டன.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு வழக்கத்திலிருந்த ஆகமநூலின் கருத்துக்களைத் தென்னகத்தில் திருவாவடுதுறையில் முதல் முதலாக இனிய தமிழில் திருமூலர் தனது திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்களாக வகுத்துப்பாடினார். அவ்வமையம் பிறமொழி ஆட்சியானபடியால் திருமந்திரமும் கி.பி 600 வரையில் மறைந்துகிடந்தது. பின்னர் திருமந்திரம் செல்வாக்குப் பெற்ற காலத்தில் சிவன், சைவசித்தாந்தம் எனும் சொல்லாட்சிகள் மீண்டும் வழக்கிலே வெளிவந்தன.

மேலும் சிவனைக் கடவுள் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். கடவுள் என்ற தனித்தமிழ்ச் சொல்லின் பொருளிலேயே சைவசித்தாந்தக் கருத்து பெரிதும் அடங்கியுள்ளது. கடவுள் என்பது தனித்தமிழ்ச்சொல். அது புறநானூறு, தொல்காப்பியம் போன்ற மிகப்பழைய தமிழ்நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடவுள் என்ற சொல்லுக்கு பொதுவாக மூன்றுவிதமான பொருள் கூறலாம். ஒன்று கடவுள் என்றால் இயக்குதல் அடுத்தது கடவுள் என்பதற்கு உள்ளத்தை கடந்தவர் என பொருள் கூறுவதும் உண்டு. மூன்றாவது விதம் கடவுள் உலகைக் கடந்தவர் அதேசமயம் உலகுள்ளும் உள்ளவர் எனக்கொள்வது. உலகிலுள்ளும், உயிர்களிலுள்ளும் வியாபித்து நிற்கும் நிலையை **உள்** என்ற சொல்லும், அவற்றைக் கடந்து நிற்கும் நிலையைக் **கட** என்ற சொல்லும் குறிக்கும். உலகை இயக்குபவன் இறைவன் அவன் உலகமெங்கும் நிறைந்தவன் அதேசமயம் அவன் உலகைக் கடந்து நிற்பவனும் ஆவான். கடவுள் என்ற சொல்லிலே அடங்கியிருக்கும் கருத்துக்கள் யாவும் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்கள் ஆகும்.

**சீவன் எனும் சொல்**

சீவன் எனும் சொல்லின் மருத்துவப்பொருளை உயிர்த்தாது, நாடிபற்றி விளக்குகையில் அறிந்துகொள்ளலாம்.

சைவசித்தாந்த நோக்கில் சிவன் முத்தொழிலைப் புரிபவர். "சிவம்" எனும் பரம்பொருள்தானே பிரம்மா, விஷ்ணு, உருத்திரனாக நின்று முறையே படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களை செய்யும் பொருட்டு உருவத்திருமேனிகளைக் கொள்கின்றது.

சித்தமருத்துவத்தில் கூறப்படும் தொண்ணூற்றாறு தத்துவத்தில் முக்கிய உயிர்த்தாதுவாகிய வளி, அழல், ஐயம் ஆகியவையும் முத்தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல்) செய்துவருகின்றன. உயர்த்தாதுவைச் சீவன் என்று குறிப்பிட்டிருப்படை முன்னர் காணலாம். இதனைச் சிவம் உயிருக்கு உயிராகி நிற்கும் நிலை எனலாம்.
இத்தத்துவத்தை தேரையர்

"வாதமாய்ப் படைத்துப் பித்தவன்னியாய்க் காத்து சேட்ப
சீதமாய்த் துடைத்துப் பாராந் தேக்கத்திற்குடியா மைந்து
பூதவிந்தியாமைவர் பூசை கொண்டவர் பால்விந்து
நாதமாங் கிருட்ண மூர்த்தி நமக்கென்னும் துணையாவாரே"

என்கிறார்.

இறைவன் தனது மூன்று சக்திகளால் பிரம்மா, மகேஸ்வரன், உருத்திரன் ஆகியவர்களால் படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைச் செய்வதுபோல் உயிர்த்தாதுவாகிய சீவன் மூன்று தத்துவங்களாகப் பிரிந்து வளி, அழல், ஐயம் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைச் செய்வதாகக் கூறப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட உயிர்த்தாதுவின் தொழில்களை இன்னொரு கோணத்தில் இருந்து பார்க்கும்போது குருதி நுண்அணுக்களைத் தோற்றுவித்தல் அதனை நிலைக்கச் செய்தல், பின்பு அழிக்கச் செய்வதுமான தொழில்களை உடலில் உயிர் உள்ளவரையில் உலகப் பொருள்கள் தோன்றுவதும், நிலைத்திருப்பதுவும் அப்பால் அழிவதுமாகிய தன்மையைப்போல் தொழில்கள் புரியும் எனவும் சித்தமருத்துவ நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இரத்த அணுக்களின் உற்பத்தி அவை உடலுக்கு ஆதாரமாக நிலைத்திருத்தல், இறுதியில் குருதி அணுக்கள் அழிதலையும் நவீன பார்வையில் நோக்கும்போது இரத்தஅணு உற்பத்தி எலும்புகளிலுள்ள மச்சைகளிலேயே உற்பத்தியாகின்றது என்கின்றனர். இதனை சித்தமருத்துவம் எலும்புகளில் வாதம் சஞ்சரிக்கும் இடமாகவும் குறிப்பிடுகின்றது. இவற்றிலிருந்து இரத்த உற்பத்தியை உயிர்த்தாதுவாகிய வாதம் ஆற்றுவதாகக் கொள்ளலாம். நவீன மருத்துவம் இரத்த அணு உற்பத்திக்கு இரும்புச்சத்து அவசியம் எனக்கூறுகின்றது. சித்தமருத்துவம் தேயு பூதத்திற்கு செம்பைக் குறிப்பதுபோல் வாயுவுக்கு அயத்தை குறிக்கின்றது. வாதமானது வாயுவும், ஆகாயமும் சேர்ந்துள்ளது என்பது தெரிந்தவிடயமாகும். ஆகவே அயத்தை உண்ணக்கொடுக்கும்பொழுது இரத்த அணுக்களின் உற்பத்திச் செய்கை தூண்டுகின்றது. இதனால் உயிர்த்தாதுவாகிய வாதம், ஆக்கல் தொழிலைச் செய்கின்றது எனலாம்.

நவீன மருத்துவத்தில் உற்பத்தியான இரத்த அணுக்கள் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு உடம்பில் பரவித்திரிந்து அவைகளின் காலம் முடிய அழிகின்றது. உதாரணமாக செவ்வணுக்கள் நான்கு மாதம் வரை சீவிக்கக்கூடியது. இத்தகைய முறையில் உடலில் இரத்த அணுக்கள் ஓடித்திரிவது பித்தத்தின் செயலாக சித்தமருத்துவம் கூறகின்றது. சித்தமருத்துவ நூல்களில் குருதிஅழல்நோய் (இரத்தபித்தம்) எனவும் இரத்தத்துடன் தொடர்பான நோய்களை பித்தநோய் என்று கூறுவதையும் காணலாம்.

நவீன மருத்துவத்தில் இரத்த அணுக்கள் அழிவுக்குப்பின் அவற்றில் ஒரு பகுதி உடலில் சலியாக வெலியேறுவதாகவும் அங்கு சீழாக (Pus) இருப்பதையும் குறிக்கின்றது. சித்தமருத்துவத்தில் கபம் உடம்பிலுள்ள தூவாரங்கள் ஊடாக வெளியேறுவதைக் குறிக்கின்றது. உதாரணமாக சுவாசமண்டல வியாதிகளைக் குறிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட முறையில் இரு மருத்துவ முறைகளையும்

ஓரளவிற்கு ஒப்பீடு செய்யலாமே தவிர முழுக்க ஒப்பீடு செய்தல் எல்லாவகையிலும் பொருத்தமாக அமையாது.

சுதேச மருத்துக் கோட்பாடுகளில் உயிர்த்தாது அல்லது முத்தோடங்களின் காலம் பற்றிக் குறிப்பிடுகையில் காலையில் வாதமும், மதியம் பித்தமும், மாலையில் ஐயமும் எனவும் அதேபோல் முறையே இளமை, நடுவயது, முதுமையாகவுள்ள காலங்களில் மேற்குறிப்பிட்டபடி உயிர்த்தாது இருப்பதை சித்தமருத்துவம் குறிப்பிட்டுக் கூறுகின்றது. ஆனால் ஆயுள்வேத மருத்துவம் காலை கபமும், மதியம் பித்தமும், மாலை வாதமும் அதேபோல் இளமை, நடுவயது, முதுமை ஆகியவற்றிலும் இதேபோல் முறையே அமைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இக்கொள்கையில் இருமருத்துவமும் வேறுபட்டுக் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட தேரையரின் ஆக்கல், காத்தல், அழித்தல், தத்துவக்கொள்கையை ஆராயுமிடத்து சித்தமருத்துவக் கோட்பாட்டில் கூறிய வாத, பித்த, ஐயம் என்ற ஒழுங்குமுறை சரியானது என நிரூபனம் செய்வதாக அமைகின்றது. எனவே சித்தமருத்துவக்கோட்பாடே இவ்விடத்தில் மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இரத்தஅணுக்களிலுள்ள ஆக்கல், காத்தல், அழித்தல் தத்துவத்தை ஏற்க முடியாது என்கிறார் டாக்டர் ம.சண்முகவேலன் அவர் அதற்குக் கொடுக்கும் விளக்கம் யாதெனில் எமது உடலில் ஏழு உடற்தாதுக்களும் தேகத்தில் ஏழு கருவிகளாக இருந்து தொழில்களைப் புரியும்போது குருதியில் மட்டும் ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்கள் ஒருமிக்க இருப்பதாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும், எங்ஙனம் சாத்தியமாகும் எனக் கேள்வி எழுப்புகின்றார். இக்கேள்விக்கு தகுந்த பதில் கூறுவதில் இடர்பாடு இருப்பினும் சில விடயங்களை இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. நாம் எடுக்கும் உணவானது ஆமாசயத்தில் செரிப்புநீருடன் கலந்து பாகுவாகிச் சென்று சிறுகுடலில் இருந்து

உறிஞ்சி எடுக்கப்பட்டு அன்னரசமாக கல்லீரலுக்குச் செல்கின்றது. அங்கு பின் இரத்தமாக மாற்றப்பட்டு உடல் பூராகச் சென்று மற்றும் தாதுக்களைப் போஷிக்கின்றது. இக்கோட்பாட்டை நவீனமருத்துவம் ஏற்றுக்கொள்கின்றது. இவற்றை அடிப்படையாக வைத்து சித்தமருத்துவம் பித்தத்தின் இருப்பிடம் இதயத்திற்கும் நாபிற்கும் இடைப்பட்டது என்கின்ற கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்ளலாம். உணவு பக்குவமடைந்து (பக்குவாசயம்) கல்லீரலுக்கு வந்துசேரும் அன்னரசம் பின்னர் இரத்தமாக மாற்றம்பெறுவது ஆக்கல் தொழிலைக் குறிக்கின்றது என ஏன் நாம் கருதக்கூடாது? இவற்றிலிருந்து முன்னர் குறிப்பிட்ட ஏழு உடற்கட்டுக்களில் இரத்ததாது முக்கியம் பெறுவதை அறியலாம். ஆகவே இரத்ததாதுவைப் பிரதானமாகக் கொண்டு இத்தத்துவம் உருவானது என்றும் எண்ணஇடமுண்டு.

இனி நாம் மேற்கூறிய ஆக்கல், காத்தல், தொழிலை பிண்டஉற்த்தியிலும் (கருஉற்பத்தி) காணக்கூடியதாக இருப்பதைக் காணலாம்.

பிண்ட உற்பத்தியில் விந்து நாதத்துடன் சேரும்போது பித்தமும் வாயுவும் உட்செல்வதாகக் கருதப்படுவதால் இவற்றில் இருந்து உற்பத்திக்கு வாயுவும் அவை நிலைத்திருப்பதற்குச் சூடாகிய பித்தமும் உதவுகின்றன எனக்கொள்ளலாம். எமது உடலில் உயிர் நிலைத்திருக்கும்வரை சூடு இருக்கும். உயிர் பிரிந்தால் சூடு வெளியேறி உடல் குளிர்ந்துவிடும். இதனிலிருந்து காத்தல் தொழிலுக்கு பித்தம் அவசியம் என்பதை அறிந்துகொள்ளலாம். இவற்றிலிருந்து கரு உற்பத்தியில் ஆக்கல், காத்தல் ஆகிய தத்துவத்தைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்கூறிய சிவனின் முத்தொழில்களை எமது உடம்பிலுள்ள உயிர்த்தாதுக்களும் ஆற்றுவதால் சிவனே சீவனாகவும் இருந்து ஆன்மாவைச் செயல்ப்படுத்துகின்றது என்பது புலனாகின்றது.

## 2.12. சித்தமருத்துவனின் இலக்கணம்

மருத்துவனின் இலக்கணம் பற்றி அறிவதற்கு பிணிகளைப் போக்கும் வழிமுறைகளை அறிவது அவசியமாகும். மனிதன் உடலை நெடுங்காலம் பேணிக் காப்பதற்குரிய நெறிகளைக் கடைப்பிடித்து நடக்கத் தவறுவானாயின் வளி முதலிய மூன்று நோய்களால் துன்பமடைவான். அப் பிணிகளைப் போக்கும் விதிகளே "நீக்கம்" எனப்படும்.

நீக்கம் நான்கு பகுதிகளை உடையதாகும். இதனை மருத்துவத்தின் பாதம் நான்கு எனவும் கூறுவர். இதனைக் கீழ் வரும் பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"நோயாளி பண்டிதனந் நோய்க்கு மருந்திடைய
னேயனே நால்வரிடமாகும் - தூய மருந்
தின் குண மென் றாதி யியம்பினா ராக மத்தின்
நண் குணமா யோதுகின்றேன் நான்"

1. நோயுற்றவன் (நோயாளி)
2. நோய் தீர்ப்பவன் (மருத்துவன்)
3. மருந்து
4. உபசாரம் செய்பவன் மருத்துவனுக்கும் நோயாளிக்குமிடையில் நின்று உபசாரம் செய்பவன்.

மேற்கூறிய நான்கு கூறுகளாக நடைபெறும் மருத்துவ முறை யொன்று மருத்துவ ஆகமத்தில் முன்னோர் கூறியுள்ளனராதலின் யான் அதனை நல்ல எண்ணத்துடன் கூறுகின்றேன். நான் என்பது இப் பாடலின் பொருளாகும்.

இது பற்றித் திருவள்ளுவர் கூறுமிடத்து

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செவ்வானென்
அப்பால் நாற் கூற்றே மருந்து"

எனக் குறிப்பிடுகின்றார்.

இவற்றில் நோய் தீர்ப்பவனை மருத்துவன், பண்டிதன், பரிகாரி, பரனுக்கு ஒப்பானவன், வைத்தியன், பிடகன் எனப் பல பெயர்களால் வழங்கப்படுகின்றது. இவற்றைவிட மருத்துவனுக்கு "அகதங்காரன்" என மற்றொரு பெயருமுண்டு. இதற்குப் பொருள்

அகதம் - உடலுக்கு

காரன் - நலத்தைச் செய்பவன்

உடலுக்கு நலத்தைத் தரும் காரியங்களைச் செய்பவன் எனலாம்.

மருத்துவன் பொதுவாக மொழிப் புலமையுடன், கணித நூலிலும் வல்லமை உடையவனாக இருத்தல் வேண்டும். மொழிப் புலமை இருந்தாலேயே பல மொழி மருத்துவ நூல்களைக் கற்று அறிவதற்கும் பல மொழிகளைப் பேசும் சமூகங்கள் மத்தியில் நோயாளியிடம் நோய்களைக் கேட்டறிதற்கும் முடியும்.

மருத்துவர்களை இறைவனுக் கொப்பாக மூன்று கண் உடையவர்கள் எனக் கூறப்படுகின்றது. இதனைக் கீழ் வரும் பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"மூன்று கண்ணுளோ ரிருவராம்
அன்னவரியா ரெனில்
ஆன்ற லோகமீன் றளிப்பவன்
ஆகிய வரனும்
தோன்று மக்கடம் துயரினைப்
போக்கிடு வோனாம்
ஏன்ற மாமருத் துவனுமே
என வியம்புவரே"

உலகத்தில் மூன்று கண்கள் உள்ளவர்கள் எவர்களாயின் எல்லாவுலகங்களையுந் தோற்றுவித்துக் காத்தளிப்பவனாகிய இறைவனும், உயிர்களுடைய நோய்களை நீக்க வல்லவனாகிய மருத்துவனும் ஆகிய இவ் இருவர்களுமே ஆவார்கள் என்று பெரியோர் கூறுவர்.

இறைவனுக்கு மூன்று கண்கள் உண்டு அவையாவன ஞாயிறு, திங்கள், தீ என்பனவாகும். இவற்றைச் "சோமசூரியாக்கினி" என்பர்.

மருத்துவனுக்கு மூன்று வகையான அறிவு இன்றியமையாததெனக் கூறுவர். அவையாவன

1. மருந்துகளைத் தூய்மை செய்யும் வகை
2. நோய்களை நிதானிக்கும் முறையில் தேர்வு உள்ளவனாகவிருத்தல்.
3. மருந்துகளின் பல்வேறு பெயர்களையும் அறிந்து கொள்ளும் தன்மை.

இதனையும் மூன்று கண்கள் எனச் சித்த மருத்துவாங்கச் சுருக்கம் என்ற நூல் கூறுகின்றது.

"மருந்து சுத்தி குண நிகண்டு கண்கள் மூன்றாம்" என்பது கல்லரி.

மருத்துவனின் இலக்கணங்கள் பற்றித் திருமூலர் குறிப்பிடுகையில்

"மூன்று கண் திலை நான்கு முகங்கள்
அன்று ஐந்து இங்கு அறுகை உடல்
சான்ற எட்டு கால் பத்து எய்தி
மாண்ட மருத்துவன் மாற்றுவான் நோயே"

என்கிறார்.

கண்கள் மூன்று -

1. அழிப்பு
2. காப்பு
3. நிரைப்பு

அழிப்பு - நோயினை அழிக்கும் மருந்து
காப்பு - நோய் வராமல் காக்கும் மருந்து
(உ + ம் - கற்ப மருந்து)

நிரைப்பு - உடலில் குன்றிய சத்துக்களை நிரப்புதல்.

தலை நான்கு - நோயாளியின் நாடி நடைகளாகிய

1. வாதநாடி
2. பித்த நாடி
3. ஐய நாடி
4. தொந்த நாடி

தொந்த நாடிகள் அனைத்தையும் ஒன்றாகவே கருதியுள்ளனர்.

முகம் ஐந்து

1. ஐம்பூதங்களின் இயக்கம் அறிதல்
2. கருத் தோற்றம், உள் உறுப்புக்கள் பற்றி அறிதல்
3. நோயின் குறி குணங்களையும், தக்க மருந்துகளையும் அறிதல்
4. மரணநிலை, மரணமில்லாநிலை அறிதல்
5. உடலில் உள்ள சத்துப் பொருள்களையும், கழிவுப் பொருள்களையும் அறிதல்

கைகள் ஆறு - சுவை பற்றி அறிதல்

1. கைப்பு
2. கார்ப்பு - வாதம்
3. துவர்ப்பு
4. புளிப்பு - பித்தம்
5. இனிப்பு
6. உவர்ப்பு ஐயம்

மருத்துவனின் உடல் எட்டு

எண்வகைத் தேர்வு - இது பற்றி முன்னர் தரப்பட்டுள்ளது.

மருத்துவனின் கால் பத்து

தசவாயுக்களை அறிதல் - இது பற்றி உயிர்த் தாதுக்கள் என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

மருத்துவன் இயல்பு பற்றித் தேரையர் குறிப்பிடுகையில்

“தெய்வவுபா சனைபல நூல் எல்லை காண்டல்
திரிகரண சுத்தி பன்நோய் தீர்த்தல் நாளும்
நைவ கன்ற தீர மதி நுட்பம் சான்றோர்
நட் பொழுக்க மேன்மைகுண மன்புள்ளனாய்
மெய்வதை விகலையணங் குறைப தார்த்த
விதியுடற்கா தாரமட வங்கி மாந்தல்
கைவருமெண் பேத மெலா முணர்ந்துற்றானாய்க்
காணிலந்த மருள்து வன்கைக் கரணி யுண்ணே”

எனக் கூறுகின்றார்.

இதே கருத்தினை அகத்தியரும் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

“உத்தம குணங்க ளுள்ளோன்
உயர் பெருங் கீர்த்தி யுள்ளோன்
புத்தியா லாய்ந்து சொல்வோன்
பொருள்களை யாய வல்லோன்
சத்திய வார்த்தை யுள்ளோன்
தருமசிந் தனையே யுள்ளோன்
குத்திர வார்த்தை பேசாக்
குணன்பரி காரி யாமே”

இது பற்றிச் சித்தமருத்துவ நூல் கூறும் இலக்கணத்தையும் ஈண்டுச் சுட்டுதல் நலம்.

“தெய்வம் தன்னை வழிபடு சிந்தையும்
பொய்யி லாமொழி யுந்நற் புடமையும்
ஐய மற்ற வறிவும் பெருமையும்
வெய்ய கோபம் வெறுப்பு மிலாமையும்”

"உயிர்கள் மீது கிருபையு மூவகையும்
செயிர கற்றிடு சிந்தையும் ஈகையும்
அயர்வி லாமையு மன்பும் நிறைந்துளன்
உயர்வ தாகிய வொப்பில் மருத்துவன்"

கடவுள் நம்பிக்கை, பல நூல்களை ஐயம் திரி புற ஆராய்ந்த அறிவு, மனத் தூய்மை, செயல் தூய்மை, பல நோய்களைத் தீர்க்கும் வல்லமை, நோய்களைக் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதி, நுண் அறிவு, பெரியோர்கள் நட்பு, அன்றாடம் கடைப்பிடிக்கும் நல்லொழுக்கம், மேண்மைக் குணம், பல உயிர்களிடத்தும் அன்புடமை இவைகளைக் கொண்டவனாகவும் இருத்தல் வேண்டும். அன்றியும் உடல், நாடு, காலம், நோய், மருந்து முதலியவற்றை அறிதல், நோய்க்குத் தக்க உணவுப் பொருட்களின் விதியுணர்தல், உடலுக்கு வன்மை தரும் பொருள் இன்னவையெனத் தெரிதல். அவரவர் உடல் வன்மை யுணர்தல், நோயாளியின் பசித்தீயின் அளவறிதல், உணவு கொடுக்கும் விதியறிதல் ஆகியவற்றை யெல்லாம் நன்குணர்ந்தவனாய் இருத்தல் அவசியமாகும் எனக் கூறுகிறது சித்த மருத்துவாங்கச் சுருக்கம்.

இனி மருத்துவனுக்குரிய நற்பண்பு பற்றி யூகிமுனி

"பார்க்கவே பண்டிதர் நிலையைக் கேட்கில்
  பழிப்பான வார்த்தைகளும் பகர மற்றான்
சேர்க்கவே தேகமது பொறையி லாமல்
  செழிப்பான வார்த்தையது மிகவ னாகி
ஏற்கவே குழல் மடவார் தங்கை போல
  எண்ணிய தாய் தந்தைக் கொப்பதாக
ஆர்க்கவே எண்ண முடன் நடப்பானாகில்
  அவனியிலே வைத்தியனா யாகுவானே"

எனக் கூறுகின்றார்.

வெறுக்கத்தக்க கெட்ட பேச்சுக்கள் கூறாமலும், இனிய சொற்களை உடையவனாகவும், மற்றைய பெண்களைத் தங்கை

தாய் போல் எண்ணியும், வயதுக்கு மூத்தோர்களைத் தாய் தந்தையாக எண்ணி நடந்து கொண்டானாகில் அவனே நல்ல மருத்துவன் ஆவான் என்கிறார்.

**மருத்துவன் அறிய வேண்டிய நூல்கள்**

இது பற்றித் பதிணெண் சித்தர் நாடி நூல் குறிப்பிடுகையில்

"சோதிடம் பஞ்ச பட்சி
துலங்கிய சரநூல் மார்க்கம்
கோற்று வகார வித்தை
குருமுனி ஓது பாடல்
தீதிலாக் கக்கி ஷங்கள்
செப்பிய கன்ம காண்டம்
ஈதெல்லாங் கற்று ணர்ந் தோர்
இவர்களே வைத்தியராவர்"

என்கிறது.

கிரகங்களைப் பற்றிய சோதிட நூல்கள், ஐந்து பட்சிகளைப் பற்றிக் கூறும் நூல், விளக்கமான சரநூல் மார்க்கம் அதாவது நாசி வழியாகச் சுவாசம் விடுவதினின்று நடந்த நடக்கிற, நடக்கவிருக்கும் முக்கால விஷயங்களைப் பற்றியும் கூறும் நூல், குற்றமற்ற வேதைநூல் (முப்பு) குரு முனியாகிய அகத்திய முனிவரால் கூறப்பட்டுள்ள மருத்துவப் பாடல்கள், குற்றமற்ற மந்திர நூல்கள், அகத்திய முனிவரால் கூறப்பட்ட கன்மகாண்டம் எனும் நூல், இவை அனைத்தையும் கற்று உணர்ந்தோர் வைத்தியராவர் என்பது இப் பாடலின் பொருள்.

மருத்துவன் ஔவைக்கு சமமானவன் எனத் தேரையர் பின்வரும் பாடல் மூலம் கூறுகிறார்.

"ஔவைக்கு நேராகி ஔவைக்கு நேராய்
ஔவைப் பருவமெய்தி ஔவைப்பினாடி
ஔவிய மோவுதல் ஆயுள்க் கியல்பே"

கடவுள் வழிபாட்டிலும் பல நூல்களை நன்கு ஆராய்ந்தறிதலும் ஔவைக்குச் சமமாயும், தன் சொந்தப் பிள்ளைக்கு நோய் வந்தவிடத்து நற்தாயானவள் அந் நோயைத் தீர்க்க எவ்வளவு கவலை, எவ்வளவு அன்பு உடையவளாக இருப்பாளோ அவ்விதமே நோயாளியிடத்தில் அன்பு, கவலை, அக்கறை ஆகியனவற்றைக் கொண்டவனாக இருப்பான். ஔவையின் வயது முதுமைக்கு ஒப்பாக முதிர்ந்த அறிவு மருத்துவனுக்கு இருக்க வேண்டுமென்றும் உத்தம மருத்துவர்களாக இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

**மருத்துவனின் வயது**

இது பற்றி அகத்தியர் சூத்திரம் 21000 எனும் நூல்

"பண்டிதனுக் காயுள் சத மாக வைத்துப்
பாலாக்கி யதை பிருபான் பரித்திக் கொண்டு
தண்டவைம்பா னறு பானுத் தமமாம் ; முன்னர்ச்
சாரெழுபா னெண்பான்மத் திமமாம் ; பின்னர்க்
கொண்ட முப்பா னாற் பான்மே லதம மாகும்
கூறு தொண்ணூறுடனுறு மேலதேயாம்
விண்ட பத்து மிருப·து மேலே தேயாம்
விலக்கெனினு மமையுமிது வேத மேற்றே"

எனக் கூறுகிறது.

மருத்துவனுக்கு ஆண்டு நூறாய் வைத்து அதை இரண்டிரண்டு பத்தாய்ப் பிரித்துக் கொண்டு அவற்றில் ஐம்பதும் அறுபதும் உத்தமமென்றும், எழுபதும் எண்பதும் மத்திமம் என்றும், முப்பதும் நாற்பதும் அதமம் என்றும், தொண்ணூறும் நூறும் அதமாதமும் என்றும் பத்தும் இருபதும் கூடாது என்பது இப்பாடலின் பொருள்.

மருத்துவனுக்கு முதுமையும், சோதிடனுக்கு இளமையும் உத்தமமென்று பொதுவாகக் கூறும் மரபு ஒன்று உண்டு.

**மருத்துவனின் உடை**

இது பற்றிச் சித்தமருத்துவ நூலானது

"காங்கு சிவப்பும் பல புள்ளி
கமழும் பட்டு மரவுரிகள்
நீங்க வேண்டுந் துகிலுடுக்க
நேரே யாகா மருத்துவர்க்கே
ஓங்கும் வெள்ளைத் துகிலுடுத்தி
யுண்மை நினைந்து மருந்து செய்யின்
பாங்கு பெறவே பிணிதீரும்
பாரிற் யாரும் பண்டிதரே"

எனக் கூறுகிறார்.

நீலம், சிவப்பு, பல புள்ளிகள் உள்ளவை, பட்டு, விலங்கின் தோல்கள் ஆகிய இவைகள் மருத்துவன் உடுக்கத்தகாத உடைகளாம். ஆகையால் வெள்ளையுடைகளைத் தரித்து உண்மையான உள்ளத்துடன் மருந்து கொடுத்தால் பிணிகள் எல்லாம் தீரும் என்பது இப் பாடலின் பொருள்.

மேற் கூறிய கருத்தினையே யூகிமுனிவரும் பாடல் மூலம் உறுதிப்படுத்துகிறார்.

"பண்டிதமாஞ் சிவப்புடனே புள்ளி வத்திரம்
பாங்கான பட்டு மரவுரிகள் யாவும்
கண்டிதமாய்க் கறுப்புடனே துகிலுமாகா
காசினியில் வைத்தியருக் கிடையே நேரும்
வெண்டிதமாம் வெண்துயிலு முடுத்தியேதான்
விணைதீர நினைந்து மருந்தருள் செய்வோரும்
துண்டிதமாம் பண்டிதரே யாகுந் கண்டீர்
துறையான நூலெல்லாம் தோர்ந்தோர் தாமே"

என்பது இப் பாடல்.

## மருத்துவனின் உயர்வு

மருத்துவனின் உடையும் உள்ளமும் மட்டும் தூய்மையாக இருந்தால் மட்டும் போதாது. அவனைக் காணும் தோறும், அணுகும் தோறும், பழகும் தோறும் பிணியானரின் உடலும் உள்ளமும் புத்துணர்வு பெறவேண்டும் என்பது சித்த மருத்துவனின் சிறப்பு. இதனை

"சந்தனப் புனுகுப் பிச்சு
சடத்தினிற் பூசிப் பின்னர்
அந்தணர் கிரியை போல
வாசிரி யரடிவ ணங்கிச்
சிந்தையிற் குருவை வாழ்த்திச்
சிவபதம் நெஞ்சி லுன்னி
வந்ததோர் பிணிகள் தீர்க்கும்
வைத்தியன் முறை யென்நோரே"

எனச் சித்தமருத்துவ நூல்கள் கூறுகின்றன.

சந்தனம், புனுகு, இவைகளை உடம்பிற் பூசி பின்பு இழகிய தன்மையுடைய பெரியார் செயலைப் போல ஆசிரியன் திருவடிகளை வணங்கி, வாழ்த்திச் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, தன்னை வந்து அணுகிய நோயாளர்களுக்கு உள்ள பிணிகளைத் தீர்க்க முயல்வது வைத்தியன் கடமையாகும்.

மேலும் இது பற்றி யூகிமுனிவர்

"தேர் திடவே பரிமளங்கள் புனுகுச் சட்டம்
செடத்தினிலே பூசியா சீர்மத் தோடே
கூர்ந்திடவே அந்தணர்கள் ஆசாரம் போல்
குளிக்கைடயுன் திரிகால பூசை வேண்டும்
நேர்ந்திடவே ஆசிரியர் குருவுணக்கம்
நேராக சிவனைத்தான் தியானம் செய்து
சேர்ந்துமே பிணியாளர் விசனந் தீர்ப்போர்

செகத்தினிலே பண்டிதரு மாவார் பாரே"

எனக் கூறுகிறார்.

குளித்தல், மூன்று வேளை பூசை செய்தல், ஆசிரியர், சிவன் இவர்களை வணங்கி உடலின் மேல் புனுகுச் சட்டம் போன்ற நறுமணப் பூச்சுக்களைப் பூசி, வருகின்ற நோயாளர்களைப் பரிசோதித்து மருத்துவம் செய்பவன் நற் பண்டிதராவார் என்பது இப் பாடலின் பொருள்.

மருத்துவன் பொதுமக்களுடன் தினமும் பழகுவதால் மேற் கூறியவாறு புறத்தோற்றத்தாலும் மக்களைக் கவரக் கூடிய முறையில் இருக்க வேண்டுமென்பது இக் காலத்திலும் பொருத்தமுடையதாகவே உள்ளது.

இவையாவும் பொதுச் சுகாதாரத்தைப் பின்பற்றுபவர்கள் கைக் கொள்ள வேண்டிய விதிகளாகும். இதனைத் தொற்று நோய் உடையவர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டுமெனலாம். இம் முறைகள் தற்காலத்துக்கும் ஏற்றவை எனக் கூறுதல் மிகவும் பொருத்தமாகும்.

இது வரை மருத்துவன் இலக்கணம் பற்றி ஆராயப்பட்டது.

**மருத்துவன் நோயாளியின் கைநாடி பார்த்த பின் செய்ய வேண்டியவை**

நோயாளியை மருத்துவன் கைநாடி பார்த்து பரிசோதித்த பின் நீராடுதல் அல்லது கை கால்களைச் சுத்தம் செய்தல் அல்லது அவ் விரல்களைப் பூமியில் தட்டுதல் ஆகியன செய்யலா மென்றும், அப்படிச் செய்யத்தவறின் எல்லாத் தீவினைகளையும் ஒழிக்கும் கங்கையை ஒத்த மருத்துவனுக்கும், பக்குவம் செய்யப்பட்டிருக்கும் மருந்துகட்கும் தீமை உண்டாகும் எனக் கூறுப்படுகின்றது.

"கருமி யேபினி யாளனா மவன் கரம்
வருவ தாந் தொடக் கென்றனர் ; மாற்றிடும் வகைதான்
பெருகு நீரினால் மும்முறை பெட்புற மூழ்கல்

தருகை தாள்கமு வல்தரை விரல்களைத் தட்டல்"
என்கிறார்.

**நோயாளியின் வினை நீங்க மருத்துவன் செய்ய வேண்டிய வினையொழி முறைகள்**

நோயாளியின் வினையை மாற்றிய பின் அவனுக்கு மந்திர நீா் தெளித்தல், அவன் துணியை அகற்றி வேறொரு துணி கொடுத்து தனியாக ஓா் இடத்தில் இருக்கச் செய்து நீராடவைத்து, மஞ்சள் நீா் தெளித்தல் ஆகிய இந் நான்கு வகைப் பரிகாரங்களைச் செய்து வைத்தல் மருத்துவனின் கடமை எனக் கூறப்பட்டுள்ளது.

"ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டு மென்றால்
ஊற்றைச் சடலம் விட்டே என் கண்ணம்மா
உன் பாதம் சேருவேனோ"

- அழுகணிச் சித்தர் -

## 2.13. சித்தர்களின் பிண்ட உற்பத்திக் கொள்கை

கரு உற்பத்தி பற்றியும், கருப்பையை விண் பூதத்துக்கு ஒப்பிட்டும் சித்தர்கள் கூறியிருப்பது பற்றியும் மிகப் பழைய காலத்திலிருந்தே காணக்கூடியதாகவுள்ளது. இது பற்றித் திருமூலர்

“உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவு மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிய சமனாய் வளர்க்கு முதகமே”

எனக் கூறுகின்றார்.

கரு உற்பத்தியாவதற்கும், அதன் வளர்ச்சிக்கும் கருப்பையே ஆதாரமாகவுள்ளன என்றும் அத்துடன் ஐம்பூதங்களின் சேர்க்கையும் காரணமாகவுள்ளது என்றும் சுருக்கமாக விளக்குகின்றார்.

கர்ப்பக்குழி என்பது கருப்பையே என்றும் இதனை வெளி என்றதால் இது விண்ணாகும். விண்ணின் தன்மை சகல சீவராசிகளுக்கும், பொருள்களுக்கும் இடமளிப்பதாகும். ஆகையால் கரு வளர்ச்சிக்கு இடமளிப்பது கருப்பை என்பது விளங்குகின்றது. நாதத்தை மண் (பிருதிவி) எனக் கூறுவதால் மண்ணானது எப்படிப்பல சீவராசிகளைத் தோற்றுவித்து அவைகளுக்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ உணவு அளிக்கின்றதோ அப்படியே நாதமும் கருவைத் தோற்றுவித்து அதற்கு உணவை அளிக்க வேண்டுமென்பது அறியப்படுகின்றது. இத்தத்துவக் கோட்பாட்டைக் கொண்டே நாம் பிறந்த நாட்டுக்குத் (மண்) தாய்நாடு என வந்திருக்கலாமென எண்ண முடிகின்றது.

“வன்னியும் வாயுவு மாயுறும் சுக்கிலம்”

என்றதால் தீ, வாயு (தீ = வன்னி) (வாயு = கால்) இவைகளின் தன்மைகளை விந்து பெற்றுள்ளது என்பது தெரிகின்றது.

“தேயு வோடு வாயு நின்று திரட்டும் பாரு”

என்பதால் வளர்ச்சிக்கு வேண்டிய சூட்டையும், வாயுவையும் இது நாதத்துக்குத் தந்து தொழில் புரிவதற்கும் இடம் விட்டு இடம் விரைந்து செல்வதற்கும் காரணமாகுமென்பது விளங்குகின்றது. அன்றியும் விந்து இன்றேல் சூடும் வாயுவுமில்லை. ஆகையால் நாதம் கருவாக வளர முடியாது என்பது நன்கு புலப்படுகின்றது.

"சமனாய் வளர்க்கும் முதகமே"

என்றது உதகமாகிய நீர் யாவற்றையும் போசனைசெய்து செழிப்பாகவும் வளரச்செய்யும் என்பதாம். இந்நீர் எங்கிருந்து கிடைக்கின்றதென்பது கூறப்படாததால் கருப்பை, விந்து, நாதம் ஆகிய மூன்றிலிருந்தும் பெறப்படுகின்றதெனக் கொள்ளலாம்.

அதேயிடத்து "அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில்" என்றதிற்கிணங்க விண்ணிலிருந்து நீர் மழையாகவும், மண்ணிலிருந்து ஊற்று நீராகவும் கிடைக்கின்றதோ அதேபோல் விண்ணாகிய கருப்பையிலிருந்தும் மண்ணாகிய நாதத்திலிருந்தும் உதகமாகிய நீர் கிடைக்குமென எண்ணலாம்.

கரு உற்பத்தி பற்றி அகத்தியர் வைத்திய வல்லாதி 600 நூல் கூறுகையில்

"ஆண்மையென்று மங்கையர்கள் பூக்கும் காலம்
அன்றுமுதல் பதினாலு நாளும் அந்தத்
தாண்மையன்றிப் பதினாறு இதழாய் நின்ற
தாமரை போல் மலர் திருக்குஞ் சாற்ற கேளு
காண்மை யன்றித் தின மொன்று இதழ்தா னொன்று
கருவான கருக்குழிதான் இந்நாட்குள்ளே
பான்மை என்ற விந்தங்கே யூரும் போது
பாயுமப்பா வன்னியொடு வாயு தானே"

என்கிறார்.

ஒரு நங்கை மாதவிடாய் ஏற்பட்ட நாளிலிருந்து முதல் பதினான்கு அல்லது பதினாறு இதழ்களையுடைய தாமரைப் பூப்போல அவளது ஜனன இந்திரியம் மலர்ந்திருக்குமெனவும், அன்று முதல்

பதினான்கு அல்லது பதினாறு நாட்கள் வரை தினம் ஓர் இதழாக மூடிக் கொள்ளும் எனவும், இத்தினங்களுக்குள் தீயும் வாயுமாகிய விந்தும் உட்சென்று நாதத்துடன் சேர்ந்தால் அவ்விதழ்கள் யாவும் உடனே மூடிக்கொள்ளும் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு கூறியிருப்பதால் மாதவிடாய் ஏற்பட்டு பதினான்கு அல்லது பதினாறு தினங்களுக்குள் ஆணும், பெண்ணும் கூடின் கருத்தரித்துக் கருப்பையில் தங்கி வளர வசதியாகும் எனவும் அதன்பின் கூடின் கருவுண்டாகாது எனவும் ஒருகால் உண்டாகினாலும் அது தங்கி வளர வசதிஇராது எனவும், மாதவிலக்கு ஏற்பட்ட பின் கருப்பையிலும் அதன் உறுப்புக்களிலும் (ஜனன இந்திரியத்தில்) சில மாறுதல் உண்டாகின்றன எனவும், இம் மாதிரியான மாறுதல்கள் கருத்தரித்தால் சீக்கிரத்தில் தோன்றுமெனவும் அறியலாம். மாதவிடாய் அல்லது மாதவிலக்கைச் சித்த மருத்துவ நூல்களில் பூப்படைதல் எனவும் கூறப்பட்டுள்ளது. பூப்படைந்த பன்னிரண்டு நாட்களுக்குள் புணர்ந்தால் கருத்தரிக்கும் என்பதை இறையனார் அகப்பொருள் சூத்திரத்தின் மூலம் தெரிய வருகின்றது.

“பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பாடீராறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறததாறன்றே”

பூப்பு புறப்பட்ட நாள்முதற் பன்னிருநாளும் தலைமகன் தலைமகளை விட்டுப்பிரிந்து உறைதல் அறநெறி என்பது இவ்வரிகளின் பொருள்

மேற்குறிப்பிட்ட அகத்தியரின் பாடலில் ஏழாவது வரியைக் கவனிக்கும்போது

“விந்தங்கே யூரும் போது”

என்றதால் விந்தானது கருப்பையில் ஊர்ந்து செல்கின்ற தென்பது (Motility - அசைதல்) தெரிகின்றது. இப்படி ஊர்ந்து செல்லும் போது

“பாயுமப்பா வன்னியொடு வாயுதானே”

என்றதால் தீயும் வாயுவும் விந்துவுடன் செல்கின்றன என்பதை உணரலாம்.

நாதமும் விந்துவும் பரமஅணுவைப் போன்றவை நாதம் விந்து சேருவதை யூகிமுனி கூறுகையில்

"முனையறுகு பனிபோல் சுரோணிதத்தில் சேர்ந்து
தாக்கவே சுரோணிதந்திரண்டு தன்ரூபமாகித்
தமர் வாசல் தனைமூடும் வாயு தானும்"

இவ்வாறு குறிப்பிடுகின்றார். விந்துவை அறுகுநுனியில் உள்ள பனிக்கு ஒப்பிடுவதாகவும் அது ஊர்ந்து சென்று நாதத்துள் பாய்கின்றதென்றும் அப்படி நாதத்துள் விந்து புகுந்தஇடம் தமர் (தொளை) போல இருக்குமென்பது விளக்கமாகின்றது. தொளை வழி சென்ற விந்து நாதத்துடன் சேர்ந்து கலந்து உறவாகித் திரண்டு தன்ரூபமாகித் தமர்போன்ற வாயிலை மூடும் எனவும், இச்செயலை வாயுவே ஆற்றுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. யூகிமுனி தொடர்ந்து கூறுகையில்

"வேர்க்கவே வேலிபோல் வளைந்து காக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்க லாமே
விளங்குகின்ற அபாணவாயு வெளியினிற்கும்
விந்துவுடன் பிராணவாயு பின்னங்களாகும்
கலங்குகின்ற உதாணனது கருவ ளர்க்கும்
கருவதற்குள் வினைமூன்றும் கலக்கும் பாரு"

என்கிறார்.

தோட்டத்தைச் சுற்றி அமைக்கப்படும் வேலி எப்படி எதுவும் உள்ளே நுழையாதபடி தோட்டத்தைப் பாதுகாக்கின்றதோ அப்படி திரண்ட சுரோணிதத்தைச் சுற்றி வாயு வளைந்து கொண்டு வேறு விந்து எதுவும் உட்செல்லாதவாறு அதனைப் பாதுகாக்கின்றது என்பதை உணர்த்துகின்றன. இதனை மேற்கத்திய மருத்துவத்திலும் இதே கோட்பாடு கூறப்பட்டுள்ளதைக் காணலாம். அதேநேரத்தில் அபானவாயு வெளியில் இருப்பதாகவும், பிராணவாயு விந்துவுடன் உட்செல்லுவதாகவும், அது திரண்ட நாதத்தைப் பல பின்னல்களாக்குவதாகவும், கருவை உதானவாயு வளர்ப்பதாகவும், கருவில் வினைகள் மூன்றும் கலக்கின்றன எனக் கூறுகின்றார். வினைகள் மூன்றாவன சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பனவாகும்.

1. சஞ்சிதம் - சென்ற பல பிறவிகளில் செய்யப்பெற்ற கன்மப் பொதியாகச் சேமித்து வைத்துக்கொண்டுள்ள கன்மம் சஞ்சிதம் எனப்படும்.
2. பிராரத்தம் - முற்பிறவிகளில் செய்த கன்மங்களின் சேர்க்கையானது இப்பிறவிக்குக் காரணமாய் அமையுமாயின் அக்கன்மங்களைப் பிராரத்த கன்மங்களென்று கூறுவர்.
3. ஆகாமியம் - இனி வரப்போகின்ற கன்மங்கள் ஆகாமியம் எனப்படும்.

இவ்விடத்தில் யூகிமுனி குறிப்பிடும் "கருவதற்குள் வினை மூன்றும் கலக்குமாமே" என்பதில் சித்தாந்த சாஸ்திரங்களின் சிந்தனை முரண்படுவது போலவுள்ளது. சித்தாந்த இருவினைக் கோட்பாட்டின்படி முன்னர் பல பிறவிகள்தோறும் ஈட்டியவை சஞ்சித வினைத்தொகுதியாகும். அதிலிருந்து இனி வரப்போகின்ற பிறவிக்கு அளவானவகையில் ஒரு மனிதனின் ஆயுள், போகம், குலம், மனைவி, மக்கள், பெற்றோர், கல்வி, தொழில், மாடு, மனையாவும் தீர்மானிப்பதே பிராரத்துவமாகும். அதுவே உயிரின் கருவில் கலந்து பிறக்கும் எனவும், ஆகாமியவினை என்பது ஒரு ஜீவன் பிறந்த பின்னர் ஆற்றும் வினை எனவும் கூறப்படுவதால் அது எதிர்வினை எனப்படும்.

எனவே எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வினையும் கருவில் கலக்கும் என்ற யூகிமுனியின் கருத்து இவ்விடத்தில் தெளிவாகவில்லை. இது மேலும் ஆய்வுக்குரியது.

"தன்வந்திரி நாடி எனும் நூல்
பின்னுமாம் சுக்கிலத்திற் பிராணவாயு தான் சென்று
பின்னமாம் இரத்தம் சூழ்ந்து உதானவாயு வளர்க்கும்"

எனக் கருஉற்பத்தி பற்றிக் கூறுகின்றது.

சுக்கிலத்துடன் பிராணவாயு உட்செல்லுமென்றும் அங்கு கருவைப் பல பிரிவுகளாக்குமென்றும், உதானவாயு கருவை வளர்க்குமென்றும் இதனால் அறியலாம்.
மேலும்

"சுக்கிலத்தில் சுரோணிதங் கலக்குமென்று
பூத்திடும் வியாதி மூன்றும்"

என்கிறார் தன்வந்திரி.

சுக்கிலத்தில் சுரோணிதம் கலக்கும்போது நோய்கள் மூன்றும் புகுந்து விடுகின்றன எனக் கூறப்படுகின்றது. இந்த மூன்றும் தோடங்களான (குற்றங்கள்) வளி, அழல், ஐயம் என எண்ண இடமுண்டு.

திருமூலர் கர்ப்பக் குழியாகிய கருப்பையையும் நாதம், சுக்கிலம் பற்றிக் குறிப்பிட்டபின், சுக்கிலத்திலுள்ள தீ, வாயு ஆகிய இருதன்மையான ஐம்பூதங்களும் விண்ணாகிய கருப்பையில் உண்டாகும் உதகமும் (நீர்) குருதி உண்டாவதற்கு ஆதாரமாகவுள்ளது எனக் கீழ்வரும் இரு அடிகள்மூலம் புலப்படுத்துகின்றார்.

"உதக முதிர முறுங்கனல் வாயுவால்
சித குறு மங்கங்கள் செய்து முடிந்திடும்"

உதகமான நீர், தீயின் தன்மையாலும், வாயுவின் தன்மையாலும் செந்நீராக (இரத்தமாக) மாறி அங்கங்களையுண்டாக்கி அவற்றைச் சமமாக வளர்த்துப் பூர்த்தி செய்யும். இதனால் நீர் போன்ற இரசதாதுவிலிருந்து இரத்ததாது முதலில் உண்டாகி, பின்பு மற்றைய தாதுக்கள் ஒழுங்காகத் தோன்றின என்பது புலனாகின்றது.

இனிக் கருஉற்பத்தி பற்றி அகத்தியர் வைத்தியவல்லாதி 600 நூலில் முன்னர் குறிப்பிட்ட பாடலுக்கு அடுத்த பாடலை நோக்கும் போது

"வாயுவொடு விந்து சென்று மலர்க்குட் சேர்ந்தால்
மலரிலுள்ள இதழ்களெல்லாம் மூடிக் கொள்ளும்
தேயுவொடு வாயு நின்று திரட்டும் பாரு
செப்பியதாந் தினமொன்றில் கடுகுபோலாம்
சாயுமடா நாளிரண்டில் மல்லிபோலாம்
தப்பாமல் நாள்மூன்றில் மிளகு போலாம்

சேயுமடா நாலாநாளவரை வித்தாம்

சேர வைந்தாம் நாள் குமிழி போலாகுமே”

எனக் கருஉற்பத்தியும் நாள்தோறும் அதன் வளர்ச்சியும் அறிய முடிகின்றது.

மேற்குறிப்பிட்டபடி விந்து உட்சென்றதன் பின்

முதலாம் நாளில் -

சுரோணிதம் திரண்டு தன் ரூபமாகி என்றதாலும், கடுகுபோல் உருட்சியாயிருப்பதே நாதத்தின் வடிவம் என்றும் அது விந்துவுடன் கூடித்திரண்ட அன்று உருண்டை வடிவத்தையே பெறும் என்று கருதக் கூடியதாகவுள்ளது.

இரண்டாம் நாளில் -

“சாயுமடா நாளிரண்டின் மல்லி போலாம்”

இரண்டாம்நாள் கொத்தமல்லி விதையைப்போல் தோன்றுமெனலாம். மல்லியின் மீதுள்ள கதிர்களைப் (Spindle) போன்று வரிகள் இதன்மீது காணப்படும் எனக் கொள்ளல் வேண்டும்.

மூன்றாம் நாள் -

“தப்பாமல் நாள் மூன்றில் மிளகு போலாம்”

மூன்றாம்நாள் மிளகு போலத் தோற்றமளிக்கும். அதாவது மிளகின் மேல் நேர் வரிகள் குழப்பமாகவும், பல வட்டங்கள் இருப்பதாகவும் தோன்றும். கருவானது பிராணவாயுவால் பல பின்னங்களாக மாறிக் காணப்படும்.

நான்காம் நாள் -

“சேயுமடா நாலாம் நாளவரை வித்தாம்”

நான்காம்நாள் அவரை வித்தைப்போல் மாற்றமடையும். இதுவரையும் கடுகு, மிளகு போலச் சற்றேறக்குறைய உருண்டையாய் இருந்தது. இப்போது சற்று நீண்டு முனைகள் சிறிதுமழுங்கி நடுவிற் கனத்து இருக்குமெனக் கூறலாம்.

ஐந்தாம் நாள் -

"சேர வைந்தாம் நாள் குமிழி போலாகுமே"

ஐந்தாம்நாள் நீர்க்குமிழியைப் போலாகும் என்பதால் வளரும் நாதத்துள் வெளியுண்டாகும் என்பது புலனாகின்றது.

இனி முன் குறிப்பிட்ட அகத்தியர் வைத்திய வல்லாதி 600 எனும் நூலின் பாடல்களை தொடர்ச்சியாகக் கவனிப்போம்.

"ஆகுமே ஆறாநாள் நெல்லிக் காய் போல்
ஆன நாள் ஏழுக்குப் புன்னைக் காய் போலாம்
ஏகுமே எட்டாம் நாள் பஞ்ச பூதம்
இதிலுண்டாம் பஞ்ச வர்ணம் அதில் தோன்றும்
போகுமே நவதினத்தில் காக்கை முட்டை
போலாகும் பத்துமுத லைந்து நாளும்
வேகுமே கோழியண்ட வடிவமாகும்
விள்ளுகிறேன் திங்களொன்றில் வாழைப்பூவே"

என்கிறார் அகத்தியர்.

ஆறாவது நாள் -

ஆறாவதுநாள் நெல்லிக்காய்போல் தோன்றும் என்பதால் வெளிப்புறம் தெளிவாகவும் உட்புறம் தெளிவின்றி கலங்கலாகவும் தோற்றமளிக்கும் என உணரலாம். அன்றியும் மிளகு, குமிழி இவைகளுக்கு மேல் ஒரு புரைபோன்ற தோல் உண்டு. ஆனால் நெல்லிக்கனிக்கு அம்மாதிரியான தோல் இல்லை. அங்ஙனமே வளரும் நாதமும் எவ்விதமான புரையினாலும் மூடப்படாமல் இருக்குமென்பது புலனாகின்றது. இந்நிலையை மேற்கத்திய மருத்துவ முறையிலும் காணலாம்.

ஏழாம் நாள் -

"ஆன நாள் ஏழுக்குப் புன்னைக் காய் போலாகலாம்"

ஏழாம் நாள் புன்னைக்காயைப் போலாகிவிடும் என்பதால், அக் காயின் கருவாகிய பருப்பைத் தோல்மூடிக் கொண்டிருப்பதுபோல, நாதத்திலும் கருத்தோன்றி ஒரு புரையால் மூடப்படும் என்பது

தெரிகின்றது. ஏழாம் நாளே கரு, புரை என்கின்ற பேதம் உண்டாகி விடுகின்றது. கருவே குழவியாகவும், புரையே நஞ்சுக் கொடியாகவும் மாறுகின்றது.

எட்டாம் நாள் -

"ஏகுமே எட்டாம் நாள் பஞ்ச பூதம் அதில்
இதிலுண்டாகும் பஞ்ச வர்ணம் தோன்றும்"

எட்டாம் நாள் ஐந்து பிரிவுகள் கருவில் தெரியுமெனவும், ஐந்து நிறங்கள் அதில் தோன்றுமெனவும் கூறியதால் கருவில் அம்மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

ஆறாம் நாள் நெல்லிக்காயைப் போல் புரையின்றி இருப்பதாகவும் ஏழாம் நாள் புன்னைக் காயைப போல் புரையால் மூடப்பட்டு இருப்பதாகவும் சொல்லியிருப்பதால் கருவுக்கும், புரைக்கும் உள்ள வேறுபாட்டை அறியக் கூடியதாகவுள்ளது.

ஒன்பதாம் நாள் -

"போகுமே நவதினத்தில் காக்கை முட்டை போலாகும்"

என்றதால் உள்ளிருக்கும் கரு ஒன்பதாம் நாள் காக்கை முட்டையைப் போலச் சற்றேறக்குறைய உருண்டையாக விருக்குமெனலாம்.

பதினைந்தாம் நாள் -

"பத்து முதல் ஐந்து நாளும் வேகுமே
கோழி அண்ட வடிவமாகும்"

பத்தாம்நாள் முதல் பதினைந்தாம் நாள் வரை பல மாறுபாடுகள் உண்டாகி கருவானது கோழி முட்டை வடிவத்தைப் பெறும். இதனை நவீன மருத்துவத்திலும் அவ்வமைப்பைக் காணலாம். இதே கருத்தை யூகிமுனியும்

"ஈரைந்தாம் நாள்தனிலே திரளும் பாரு
மூவைந்தாம் நாள் முட்டை போலாகும்"

என்ற அடிகளால் அறியலாம்.

முதலாம் மாதம் - (திங்கள் ஒன்று)

"திங்கள் ஒன்றில் வாழைப்பூவே"

கருவானது ஒரு மாதத்தில் வாழைப்பூ வடிவமாக மாறும் என்பதால் அது நீண்டும் இருமுனைகளில் தலைப்புறம் சற்றுக்கனத்தும், அடிப்புறம் சற்றுக் கூராகவும் மாறுமெனக் கொள்ளல் வேண்டும்.

"ஒரு மாதத்தில் பொருந்திய சென்னி யுண்டாம்"

எனப் பரராசசேகரம் கூறுகின்றது. ஆகையால் முடி, அடி என்கிற பேதம் முதல் மாதத்திலேயே தோன்றுமென்பது விளங்குகின்றது.

இது பற்றி அகத்தியர் வைத்திய சாரம் குறிப்பிடுகையில்

"உறையான கருப்பையில் சுக்கிலம் பாய
உத்தமனே சுரோணிதந்தான் உறைந்து கொள்ளும்
கறையாகப் பாய்ந்த வெளி தமர்தான் போலக்
கழற் கொடியாய் போற்றிரண்டு சிரசுமாமே"

கருப்பையில் சுக்கிலம், சுரோணிதத்துடன் சேரும்போது தமர் வழியாகப் பாய்ந்து விந்துவுடன் கலந்த நாதம் எனக் குறிப்பிட்டு கழற்சிக் காய்போல வளர்வது திரண்ட நாதம் என்பது புலனாகின்றது.

வாழைப்பூப்போல வடிவத்தைப் பெற்றுள்ள கருவில் தலை தோன்றுவதற்கு முன்பு திரண்டநாதம் கழற்சிக்கொடிக் காய்போல இருப்பதால், அதனைச் சுற்றித் தோல்போன்ற பகுதி இருப்பதாகவும் புரையினுள் வாழைப்பூ அமைந்திருப்பதுபோல் காணப்படும். கழற்சிக் கொடிக் காயின்மீது நீண்ட மிருதுவான பல முட்கள் இருக்கின்றன. அதுபோலவே இக்கருவை மூடிக்கொண்டிருக்கும் புரையின்மீதும் இருக்குமென்பதை அறிந்து கொள்ளலாம்.

இனித் தொடர்ந்து அகத்தியர் வல்லாதி 600 எனும் நூலில் நான்காவதாகக் காணப்படும் பாடல்மூலம் கருவின் தொடர்ந்த வளர்ச்சியைத் தெளிவாக அறிய முடிகிறது.

"பூவிலே இரண்டு திங்கள் கழுத்துண்டாம்
புகழ் சிரசும் உறுப்பாகும் மூன்றாம் திங்கள்
தாவிலே சந்துகால் கையுண்டாகிச்

சட்டகம் போல் வடிவாகி விரலுமுண்டாம்
நாவிலே வாய் நாக்கு மூக்கு முண்டாம்
நவிலுகிறேன் மாத மைந்தில் செவியுண்டாம்
பாலிலே ஆறு திங்கள் குய்யத் துவாரம்
பாலுக்கு மேழுக்கும் நரம்பு தானே”

இரண்டாம் மாதம் -

மேற்குறிப்பிட்ட பாடலின் முதல் இரு வரியுடன் யூகிமுனியின் கூற்றாகிய

“ஆகுமே இரண்டாம் திங்கள் தலை முதுகு தோன்றும்”

என்பவற்றையும் சேர்த்துப் பார்க்கும் போது இரண்டாம் மாதம் தலை தோன்றுமென இருவரும் கூறுகின்றனர். ஆனால் யாழ்ப்பாண நூலான பரராசசேகரம் அங்காதிபாதத்தில் முதல் மாதத்திலேயே தலையுண்டாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இம்மாதத்தில் பிடரி, தோள், முதுகு என்னும் உறுப்புகள் உண்டாகுமெனக் கூறப்பட்டுள்ளது. இதே கருத்தைத் தன்வந்திரியும் கொண்டுள்ளார். இவற்றிலிருந்து இந்த மாதத்தில் சிரசு, கழுத்து, முதுகு, தோள், இவைகள் உண்டாகும் என்பது புலப்படுகின்றது.

மூன்றாம் மாதம் -

“மூன்றாம் திங்கள் தாவிலே சந்துகால் கையுண்டாகிச்
சட்டகம் போல் வடிவாகி விரலுமுண்டாம்”

மூன்றாம் மாதம் இடுப்பு, கால் கைகள், விரல்கள் உண்டாகும் என்பதனை யூகிமுனியும் மேற்கத்திய மருத்துவ முறையும் கூறுகின்றதைக் காணலாம்.

இதனைத் தன்வந்திரியார்

“மூன்றாம் திங்கள் உடல், விரல், அரை காலாகும்”

என்கிறார். இதனையே பரராசசேகரமும் கூறுகின்றது.

மேற்குறிப்பிட்ட அகத்தியர் வைத்திய வல்லாதியில் குறிப்பிடும் “சட்டகம் போல வடிவாகி” என்பது கரு இம்மாதத்தில் உடல் வடிவத்தை அடையும் என்பதையும் கூறுகின்றது எனலாம்.

நான்காம் மாதம் -

"நாலிலே வாய் நாக்கு மூக்கு முண்டாம்"

என்கிறது அகத்தியர் வைத்திய வல்லாதி 600.

இரண்டாம் மாதம் தோன்றிய தலையில் நான்காம் மாதம் வாய், நாக்கு, மூக்கு ஆகிய இவை பூரணமடையும்.

"நாலாந் திங்க ளுதித்த தோர் மூக்குண்டாமே"

எனத் தன்வந்திரியாரும்

"நாலாந் திங்கள் பாதம் மூக்குண்டாம்"

என யூகிமுனியும் கூறுகின்றார்.

பெரும்பாலார் மூக்கு இம்மாதத்தில் உண்டாகும் என்பதால் அதனையே ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. மற்றைய நாக்கு அல்லது வாய் அடுத்தமாதம் தோன்றுமென மற்றைய நூல்கள் கூறுகின்றன.

ஐந்தாம் மாதம் -

"நவிலுகின்றேன் மாதம் ஐந்தில் செவியு ண்டாகும்"

என அகத்தியர் வல்லாதியும்

"ஐந்தாந் திங்கள் தனில் நாச் செவி கண்ணும்"

என யூகி ஜனனக் கூறும்

"திங்களைந்திற் செவிநாசி வாயு முண்டாம்"

என பரராசசேகரமும்

"அஞ்செனும் திங்கள் தன்னிலாகிடும் செவியு நாவும்"

எனத் தன்வந்திரி நாடியும் கூறுகின்றன. நாசியாகிய மூக்கு நான்காம்மாதம் தோன்றுமென யாவரும் கூறப் பரராசசேகரம் மட்டும் ஐந்தாம்மாதம் அது தோன்றுமெனக் கூறுகின்றார்.

ஐந்தாம் மாதத்தில் செவியுண்டாகும் என்பதை யாவரும் நவீன மருத்துவம் உட்பட ஒப்புக்கொள்ளுகின்றனர். நான்காம் மாதத்திலேயே நா, வாய் உண்டாகுமெனக் கூறிய அகத்தியர் வல்லாதி தவிர மற்ற நூல்கள் நா அல்லது வாய் இம்மாதத்தில் தோன்றுமெனக் கூறுகின்றன. கண்ணும் இம்மாதத்திலேயே தோன்றுமென யூகிமுனி கூறுகின்றார். மற்றெவரும் இதன்

தோற்றத்தைக் கூறவில்லை.

ஆறாம் மாதம் -

"ஆறாங்திங்கள் குய்யத் துவாரம்"

என அகத்தியரும்

"ஆறாங்திங்கள் பொதிந்திடு நகமே யெய்தும்
உஞ்சிய மலசலங்கள் ஒத்ததோர் நரம்பு முண்டாம்"

எனத் தன்வந்திரியும்

"ஆறாங்திங்கள் வரு நகங்களாம்"

என யூகிமுனியும்

"மலசலத் துவாரம் பெரிதுண்டாம் திங்களாறில்"

எனப் பரராசசேகரமும் பகர்கின்றன.

மலசலங்கள் கழியும் துவாரங்கள் ஆறாம் மாதம் அமையு மென்பது பெரும்பாலார் கருத்து

"நகங்கள் உண்டாம்" என்பது யூகி, தன்வந்திரி என்பவர்களின் கருத்தாகும்.

"நரம்புகளும் உண்டாம்"

என்று தன்வந்திரியார் மேலும் கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட அகத்தியர் வைத்திய வல்லாதி 600 என்னும் நூலில் உள்ள பாடல்களில் நான்கு பாடல்களை இதுவரை பார்த்தோம். இனி ஏனைய இரு பாடல்களையும் பார்ப்போம்.

"நரம்புதான் எழுபத்தீராயிரந்தான்
நாடி யெட்டாந் திங்களுக்கு மயிருண்டாகும்
உரம்பவே தாய் புசிக்கு மன்ன சாரம்
உச்சிவழித் தானிறங்கி யுடல் பெருக்கும்
வரம் பெறவே யொன்பதிலே உயிர்தான் வந்து
மறைஞான முண்டாமுச் சிவழி மூடும்
நிரம்பவே தசமாதம் சென்றா விந்த
நெருப்பொடு வாயு மிஞ்சிக் கவிழும் தானே"

"தானடா சிரந் திரும்பிப் பிறந்த பிள்ளை

தனக்குப் பிரம சிருஷ்டிநூ றாண்டு தன்னில்
ஏனடா வாலையது வீரைந் தாகும்
இருபதுதா னாகுமட்டும் வளரும் பிள்ளை
நானடா வொளிபோகும் முப்ப தாண்டில்
நாற்பதுக்கு எழகு போம் நாடிபாரு
வேனடா ஐம்பதாம் வயதுதன்னில்
விரைந்துபிரு திவியிலப்பு மேவும் பாரே"

ஏழாம் மாதம் -

"ஏழுக்கும் நரம்பு தானே,
நரம்புதானே எழுபத்தீராயிரந்தான்நாடி"

என அகத்தியர் வல்லாதியும்

"திங்கள் ஏழில்தான் வருங் குணங்கள் கேளே
நரம்புட னாடிசந்து நண்ணிய குடல்கள் கொப்பூழ்
பரந்தகால் கரங்களுண்டாம்"

எனத் தன்வந்திரி நாடியும்

"மருவியே யேழாந் திங்கள் மயிரெலும்பு நரம்பாம்
தாகுமே சடமொடு சலமலங்கள் தயங்கியதோர்
தாதுவொரு மூச்சுண்டாமே"

என யூகிமுனியும் (ஜனனக் கூறு)

"திங்களங்கேழு தன்னிற் செறிமயிர் நரம்பு நாடி
தங்கிய கொப்பூழ் சந்து - குடலுமுண்டாம்"

எனப் பரராசசேகர நூலும் கூறுகின்றது.

எழுபத்தீராயிரம் நரம்புகளும், நாடிகளும் இம்மாதத்தில் பூர்த்தியாகும் என்று யாவரும், மயிர் எலும்புகள் யாவும் பூரணமாகின்றன என யூகிமுனியும், பரராசசேகரமும் கூறுகின்றன. மலசலங்கள் கழிக்கும் துவாரங்கள் ஆறாம் மாதமே தோன்றுமென மற்றவர்கள் கூற, யூகிமுனி மட்டும் இம்மாதம் உண்டாவதாகவும் மூச்சுவிடப்பயன்படும் கருவிகளும் உண்டாகுமெனவும் சொல்கிறார். தன்வந்திரியாரோ நரம்புகளுடன் நாடியும் குடல்கள், கொப்பூழ், அகன்ற கால், கைகள் முதலியனவும் உண்டாகும் எனக்கூறுகின்றார்.

எட்டாம் மாதம் -

"நாடி எட்டாந் திங்களுக்கு மயிருண்டாகும்
உரம்பவே தாய் புசிக்கு மன்னரசம்
உச்சி வழித் தானிறங்கி யுடல் பெருக்கும்"

என்பது முன்குறிப்பிட்ட அகத்தியர் வல்லாதியிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அதன்படி எட்டாம் மாதம் மயிர் உண்டாகும். "தாய் உண்ட அன்னரசம் சிசுவுக்கு உச்சி வழியாகச் சென்று அதன் உடலை பெருக்கச் செய்யும்" இக்கூற்று நவீன மருத்துவம் ஏற்றுக்கொள்ளாத ஒன்றாகும். ஆனால் தாய்கொண்ட உணவுப் பொருள் ஜீரணிக்கப்பட்டு அன்னரசமாய் மாறி சிசுவுக்கு அனுப்பப்படுகிறது எனக் கூறப்பட்டதே தவிர, இரத்தம் செல்லுவதாகக் கூறப்படவில்லையாகையால் யாம் நவீன மருத்துவத்துடன் ஒப்பிட முடியாது என்பது இவற்றிலிருந்து புலப்படுகிறது.

இவை ஒருபுறமிருக்க அன்னரசம் சிசுவுக்கு உச்சியூடாக உட்செல்லுகிறது என்ற கூற்றை ஆராயும்போது, கீழ்க்கண்ட சான்றுகள் தெளிவை ஏற்படுத்துகின்றன.

"காமப்பால் விழுந்த வழி சிரசினாலே
கை முறையாய்த் தாயுண்ட அன்னஞ் செல்லும்"

இவற்றிலிருந்து காமப்பால் விழுந்த வழியென்று கூறும்போது, விந்து பாய்ந்த வழியாகிய தலையின் வழியாக என்றேனும் அல்லது விந்து பாய்ந்த வழியாகவும் பொருள் கொள்ளலாம். அவ்வாறு இருப்பின்இது எட்டாம் மாதத்தில் நடக்கக்கூடிய நிகழ்வு இல்லையெனலாம். இவற்றை ஆரம்ப காலத்துக்குக் கொண்டு போக வேண்டும். ஏன் எட்டாம் மாதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள் என்பது தெளிவாகவில்லை. இது மேலும் ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

ஒன்பதாம் மாதம் -

"ஒன்பதிலே உயிர்தான் வந்து
மறைஞான முண்டாகு முச்சிவழி மூடும்"

என அகத்தியர் வல்லாதி கூறுகின்றது. ஒன்பதாம் மாதம்

உயிர் வருகின்றதென்று கூறப்படுவதால், அதற்கு முன் உயிர் இல்லையா? என்ற கேள்வி எழலாம். அதற்கு முன் உயிர் உண்டு. ஆனால் அப்பொழுது வெளிப்படின் உயிர் வாழ்தல் அரிது. ஏழாம் மாதத்துக்கு முன் வெளிப்படின் கடினமுயற்சியால் உயிர்வாழச் செய்யலாம். எட்டாம் மாதம் பிறக்கும் பிள்ளையும் அதிககவன முயற்சியால் வாழச்செய்யலாம் என்பதனை நவீன மருத்துவம் நிரூபிக்கின்றது. ஒன்பதாம் மாதம் பிறக்கும் குழந்தையை அதிக முயற்சியின்றியே வளர்க்கலாம். இக்காரணங்களினால் "உயிர்தான் வந்து" என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

இவ்விடத்தில் யூகிமுனியின் கூற்றாகிய "ஒன்பதிலே யறிவு தோன்றி" என்பதும், தன்வந்திரியின் பாடல்மூலம் "தன்னிலுணர்ச்சியுமறிவு முண்டாம்" என்பதும் கவனிக்கத்தக்கது. ஆகையால் அகத்தியர் வல்லாதியில் முன்குறிப்பிட்ட உயிர் என்பது அறிவு அல்லது உணர்வு என்பதனைக் குறிக்கின்றது எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

நவீன மருத்துவத்தில் சிசுவானது ஏழு மாதங்களுக்கு முன் (28 வாரங்கள்) வெளிவருமானால் உயிர் அற்ற நிலையென்றும் கூறியிருப்பதால் ஏழாம் மாதத்திலேயே சிசுவுக்கு உயிர் வருவதாகக் கருதலாம். இமமாதத்தில் "உச்சிவழி மூடும்" என்பது கபால எலும்புகளின் வளர்ச்சியைக் குறிக்கின்றது. ஆனால் நவீன மருத்துவத்தில் பிறந்த சிசுவினுடைய கபால எலும்புகள் பொருந்துவதை அதாவது முன் உச்சிக்குழி, பின்உச்சிக்குழி ஆகிய இரண்டும் முறையே பதினெட்டு மாதங்கள், ஆறு கிழமைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

இம்மாதத்தில் கருப்பையில் சிசுவானது இருக்கும் தன்மைபற்றி யூகிமுனி கூறும்போது

"ஒன்பதிலே யறிவு தோன்றிப் பிறப்பித்தோன்
தனை நினைந்து தவமே செய்து
கூச்சுண்டாம் கும்பிட்ட அருள்தா வென்று
கொடிய பத்தாம் திங்கள் குரு பார்வை யாமே"

என்கிறார்.

ஒன்பதாம் மாதத்திலே அறிவு தோன்றிப் பிறப்பித்தோன் என்றும் தன்வந்திரி தம்பிரான்தனை நினைந்து தவமுறு நிலையாய் நின்று எனக்கூறுவதாலும் குழவி கருப்பையில் என்னமாதிரி அமைந்திருக்கும் அல்லது அமர்ந்திருக்கவேண்டும் என்பதை உணரலாம். அதன் நிலை "தவம் உறு நிலை" ஆகும். அதாவது தலை வணங்கி கண்கள் மூடிக் கைகளைக் கூப்பி அல்லது கைகட்டி, மார்புமுன் வைத்து கால்களை மடக்கியிருப்பதாகும்.

பத்தாம் மாதம் -
முன் கூறப்பட்ட அகத்தியர் வல்லாதியின் படி

"தச மாதங் சென்றாலிந்த
நெருப்பொடு வாயு மிஞ்சிக் கவிழ்ந்து தானே
தானடா சிரந்திருப்பிப் பிறந்த பிள்ளை"

இவ்வாறு கூறப்படுகின்றது. இக்கருத்தையே தன்வந்திரியும் பின்வருமாறு

"சீர் பெறு மபான வாயு சிரமது கீழதாகப்
பார்தனில் கொணர்ந்து தள்ளும்"

என்கிறார்.

பத்தாம் மாதம் தீயும் வாயுவும் அதிகரித்து அபானவாயுவின் சக்தியால் தலை கீழாகத் திரும்பி, யோனி வழியாகக் குழவி சிரம் திரும்பி உதிக்குமென்பது தெரிகிறது.
இதனைத் திருமூலர்

"திங்கள் பத்தாகில் தேயுவொடு வாயு சேர்ந்
தங்கி மலர்த்தி யமளியாய்க் கீழ் நோக்கிப்
பொங்கிப் பிறந்தநாள் புகழ்வார் வெறு வீணர்
தங்கிச் செனிக்கையிற் றானோயு முற்றதே"

என்கிறார்.

இதனிலிருந்து பத்தாம் மாதத்தில் தேயுவும், வாயுவும் சேர்ந்து (அபானன்) கீழே நோக்கிச் சிசு பிறப்பதாகக் கூறப்படுகின்றது. இது பற்றி பரராசசேகரம் கூறுகையில்

"பத்தாம் திங்களீசனா ரருளினாலே
சென்னிதான் கீழதாகச் சிறந்திடு மபான வாயு"

என்பது மேலே கூறியதை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

**கரு உற்பத்தியில் ஆண், பெண் தோற்றமாகும் விதம்**

இது பற்றித் திருமூலர்

"ஆண்மிகி லாணாகும், பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகிற் றரணி முழுதாளும்
மாண்வச மிக்கிடின் மாய்ந்தது மில்லையே"

என்கிறார்.

ஆண், பெண் கூடும்போது ஆணுக்குப் பெண் மீது அதிக விருப்பம் ஏற்படில் உண்டாகும் கரு ஆணாகவும், பெண்ணுக்கு ஆண்மீது மிக்க விருப்பம் ஏற்படில் உண்டாகும் கரு பெண்ணாகவும், இரண்டும் சமம் ஆகில் அலியாகவும் பிறக்குமென்பதும் கருத்தாகும்.

இதுபற்றி கோ. துரைராசா குறிப்பிடும்போது ஆண் பெண்ணுடன் கூடி விந்து வெளிப்படுகின்ற சமயம் சரம் என்னும் உயிர்க்காலின் (பிராண வாயுவின்) இயக்கமானது வலப்பக்க மூக்குத்துளையாகிய பிங்கலையில் இயங்கினால் ஆண்பிள்ளையாகவும், இடமூக்கு துளையாகிய இடகலையில் இயங்கினால் பெண்பிள்ளையாகக் கரு உருப்பெறும் என்கிறார்.

**இனிச் சமயநூல்களில் கருஉற்பத்தி பற்றி கவனிப்போம்.**

சைவசமயப் பத்தாம் திருமுறையாகப் போற்றும் திருமூலநாயனார் அருளிய திருமந்திரமாலை எனப்பெயர் பெற்ற திருமந்திரம் என்னும் நூலில் நாற்பத்தொரு பாடல்கள் (451 - 491) கரு உற்பத்தி பற்றி விளக்குகின்றன. அது பற்றி இங்கு முழுமையாக குறிப்பிடுவது அரிதாகும்.

**திருவாசகத்தில் கரு உற்பத்திக் கொள்கை**

திருவாசகத்தில் போற்றித்திருஅகவலில் பன்னிரண்டாவது அடியிலிருந்து இருபத்தைந்தாவது அடிவரையும் கரு உற்பத்தி

பற்றிக் கூறியிருப்பதைக் காணலாம்.

"ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒரு மதி தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயிரிடைப் பிழைத்தும்

என்பன அவ்வரிகள்.

இவற்றில் முதலாவதாக் கூறும் சுக்கிலமும், சுரோணிதமும் யோனினுள் ஒன்று சேரும்போது உண்டாகின்ற வினைகளிலிருந்து பிழைத்தும் கிருமித் தொல்லைகளிலிருந்து பிழைத்தும் இதனை யாழ்ப்பாண நூலான பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானம் என்ற நூலில் கெர்ப்பக்கிருமி நோய் இருப்பின் கருத்தரிக்காது என்றும் அதற்குரிய சிகிச்சை முறைகளையும் கூறப்பட்டிருப்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

முதல் திங்கள் - கருவானது தான்றிக் காயளவு திரண்டு வரும் பருமனிலிருந்து பிழைத்தும்

இரண்டு திங்களில் - அங்கு நிலைபெறுவதிலிருந்து பிழைத்தும்

மூன்று திங்களில் - தாயின் சுரோணித ஊற்றத்திலிருந்து பிழைத்தும்

நான்கு திங்களில் - கருப்பை வாயில் சுருங்குவதால் உண்டாகும் இருளிலிருந்து பிழைத்தும்

ஐந்து திங்களில் - கருப்பம் சிதைவுறாது பிழைத்தும்

ஆறு திங்களில் - கருப்பை விரிதலில் உண்டாகும் பரிச உணர்வு நெருக்கத்தில் பிழைத்தும்

ஏழாம் திங்களில் - பிண்டம் கீழ் நோக்குதலில் வழுவாது தப்பியும்
எட்டாம் திங்களில் - உண்டாகும் இடையூறுகளிலிருந்து தப்பியும்
ஒன்பதாம் திங்களில் - வரும் துன்பங்களின்று பிழைத்தும்
பத்தாம் திங்களில் - தாயுடன் தானும் அனுபவிக்கும் துன்பக் கடலிலிருந்து பிழைத்தும்

இப்பிறப்பு எய்தலாயிற்று எனும் கருத்தினை மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். இதனிலிருந்து கரு வளர்ச்சிபற்றி உடலியங்கியல் அறிவு பெற்றிருந்தனர் என்பதற்கு ஒரு சான்றாக அமைகின்றது.

இவற்றைவிட பட்டினத்தடிகள் அருளிய உடற்கூற்று வண்ணம் என்ற பகுதியில் கரு உற்பத்தி பற்றிக் கூறப்பட்டுள்ளவை குறிக்கத்தக்கது.

"ஒருமட மாது மொரு வனுமாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
யுணர்வு கலங்கி வொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்து

பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமட மி தென்று
பார்வை மெய் வாய் செவி கால்கை களென்ற

உருவமுமாகி யுயிர் வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளு மறிந்து"

இவற்றைப் பார்க்கும் போது ஒருவனும் ஒருத்தியும் இன்ப சுகத்தை அனுபவிக்கும் போது உணர்வு கலங்கி விந்து வெளியேறி சுரோணிதத்துடன் ஒன்றுசேர்ந்து அதனில் ஒரு மிகவும் நுண்ணிய பாகம் சுரோணிதத்துள் புகுந்து திரண்டு கருவுண்டாகி பஞ்ச

இந்திரியங்கள் உருவாகி மாதம் ஒன்பதில் சிசுவுக்கு உயிர் உண்டாகி பெண்ணின் வயிறு பெருத்து இறுதியில் சிசுவானது பூமிக்கு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய இத்தனை சான்றுகளும் எவ்வித அறிவியல் சாதனங்களும் இல்லாத மிகத் தொண்மையான காலத்திலேயே விந்தையான முறையில் கருவுற்றிருப்பது பற்றி மிகத்தெளிவான அறிவு பெற்றிருந்தனர் என்பதை விளக்குகின்றன.

சீக்கை விளைந்தது செய்வினை முட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டு போய்க்
காக்கை கும்பலி காட்டிய வாறே

- திருமூலர் -

## 2.14. சித்தர்களின் மணிமகுடமாகிய முப்பு

முப்பு என்பது செயற்கைப் பொருள். இதனைச் சித்த மருத்துவத்தின் **மணிமகுடம்** என்று போற்றிப் புகழ்கின்றனர். இதனைப் பயன்படுத்திப் பற்பல பற்பம், செந்தூரம், சுண்ணம் ஆகியவற்றை மிகவும் வீரியம் பெற்றனவையாகச் செய்யலாம். இது மற்றெந்த மருத்துவத்திலும் கூறாததும், சித்த மருத்துவத்தில் மட்டுமே உள்ளதுமான ஒரு தனிப்பெரும் செல்வமாகும். இக்கலையைச் சரிவர அறிந்து கொள்வதற்கு சிவராஜயோகமென்னும் பயிற்சியில் சித்தி பெற்றிருத்தல் அவசியமென்று வற்புறுத்துகின்றனர்.

முப்புவை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

1. வைத்திய முப்பு
2. வாத முப்பு
3. ஜால முப்பு

சித்தர் கையேடு என்னும் தொகுப்பு நூலில் முப்புவை நான்கு வகையாகப் பிரிக்கின்றனர்.

அவை

1. வைத்திய முப்பு
2. வாத முப்பு
3. யோக முப்பு
4. ஞான முப்பு

முதலாவதாகக் கூறப்படுகின்ற வைத்திய முப்பு மருந்துகள் தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. இதனால் மருந்துகளின் வீரியத்தைப் பல மடங்கு அதிகரிக்கச் செய்யலாம். இதனை ஊக்குவிப்புப் பொருள் (Catalytic Agent) என்றும் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக கட்டு, களங்கு, சுண்ணம் ஆகியவற்றைக் கூறலாம் .

இரண்டாவதாக் கூறப்படும் வாத முப்பு இரச வாதத்துக்கு உபயோகப்படுத்துவது கீழ்வகையான உலோகங்களை உயர்தர உலோகங்களாக மாற்றும் தன்மையையே இது குறிக்கின்றது.

எடுத்துக்காட்டாக செம்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக மாற்றும் வல்லமையைக் கூறலாம்.

மூன்றவதாக கூறப்படும் ஜால முப்பு மந்திர தந்திரங்களைச் செய்ய உதவுகின்றது. சித்தர் கையேட்டில் மூன்றாவதாகவும், நான்காவதாகவும் குறிப்பிடும் யோக முப்பு, ஞான முப்பு அனைத்தையும் யோக மார்க்கத்துக்கும், ஞான மார்க்கத்துக்கும் பயன்படுத்துவதாகக் கருதலாம்.

இவற்றில் முதலாவதாக கூறப்படும் வைத்திய முப்புப் பற்றியே கூடுதலகச் சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஒரு வித்தையை அறிவது அதை நன்முறையில் பயன்படுத்துவதற்காகவேயாகும். அந்த வித்தையை நல்ல நோக்கங்களுக்காக உபயோகப்படுத்த வேண்டும். உதாரணமாக ஒரு சிறிய கத்தியை எடுத்துக் கொண்டால் அதனால் காய்கறிகளை வெட்டலாம். அதே கத்தியால் ஒருவனைக்குத்தியும் கொல்லலாம். இன்னுமொரு இடத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்யமுற்படுபவனையும் அதே கத்தியால் கயிற்றை வெட்டி காப்பாற்றலாம். இந்த மூன்று செயல்பாடுகளையும் எடுத்துப் பரிசீலித்துப் பார்க்கையில் முதலாவது உணவுக்கும் பயன்படுத்துவதுவதற்காக காய்கறிகளை வெட்டுவதும், அடுத்தது ஒருவனைக் கொலை செய்வதற்காகவும், இறுதியானது ஒருவனைக் காப்பாற்றுவதற்காகவும் செய்யப்படும் செயல்களாக அமைகின்றன. இவற்றுக்கு ஒரே கத்தி பயன்படுகின்றது. ஆனால் மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. இவற்றிலிருந்து எந்த வித்தையைக் கற்றுக்கொண்டாலும் வித்தையைக் கற்றுக்கொள்பவன் பக்குவமுடையவனாக இருக்கவேண்டும். இதனாலேயே அட்டமாசித்திகளைப் பெறுபவனுக்கும் இயமநியமங்களை வற்புறுத்துகின்றனர். இவற்றினாலேயே பக்குவமடையாதார் கையில் இது சிக்காதவாறு இதனை மறைபொருள் என்றும் கூறியிருக்கிறார்களோ என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே இக்கலையைக் கற்கும் ஒருவன் சிவராஜ யோகமென்னும் பயிற்சியில் சித்தி பெற்றிருத்தல் அவசியமெனக்

கூறப்பட்டுள்ளது.

முப்பு என்பதற்கு மூன்று உப்புக்களின் கூட்டு என்றும் அவை பூநீறு, கல்லுப்பு, வெடியுப்பு என்றும் அவற்றைச் சூரியன், சந்திரன், தீ என்பதற்கு ஒப்பிடலாமென்று டாக்டர் அ. சண்முகவேலன் கூறுகின்றார்.

**முப்பின் அடிப்படைத் தத்துவம்.**

சிவம், சக்தி என்னும் பெயர்களால் அழைக்கப்படும் இரு வகைச் சக்திகளின் சேர்க்கையே உலகம் பொருள்கள் உருவாவதற்கும், அவற்றின் இயக்கத்துக்கும் அடிப்படையாகவுள்ளது என்பது தத்துவார்த்த உண்மையாகும்.

சூரியனுடைய சக்தியால் உலகத்தில் பல நிகழ்ச்சிகளும், மாற்றங்களும் ஏற்படுகின்றன. இதனைத் தாவரங்களிலும், பிராணிகளிலும் கவனிக்கலாம். இதேபோல் பூரண சந்திரனின் நிலவால் கடல் கொந்தளிப்பதையும் காணலாம். இவற்றைச் சிவன் சக்திக்கு ஒப்பிடுகின்றனர். சிவன், சக்தியால் உண்டாகும் செயல்களையொட்டி இவற்றை முறையே விகடனசக்தி (கூறுபடுத்தும் சக்தி) என்றும் சங்கடன சக்தி (பிணைக்கும் சக்தி) என்றும் வடநூல் வல்லுனர் குறிப்பிடுகின்றனர். இவ்விருசக்திகளும் எங்கும் நிரம்பி உள்ளனவாயினும் சில இடங்களில், சில காலங்களில் இவற்றில் ஒன்று மற்றொன்றைவிட மிஞ்சியும் காணப்படும். சாதாரணமாக உலகை நிலபாகமென்றும், நீர்ப்பாகமென்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இவ்விரு பாகங்களிலும் இவ்விருசக்திகளும் கலந்து நிரம்பி இருப்பினும் நிலப்பாகத்தின் மேல் புறத்தில் சக்தியே மிகுந்து உள்ளது. ஆயினும் பூமியைத் தோண்டிக் கொண்டு போகும் போது படிப்படியாகச் சிவமெனும் சக்தி அதிகரித்துக் கொண்டே போவதாகவும், கடலில் இச்சக்தியின் அமைப்பு எதிரான முறையில் உள்ளதாகவும், கடலின் மேற்புறத்தில் சிவமென்னும் சக்தியும், அடிப்பாகத்தில் சக்தியின் ஆற்றலும் உண்டெனச் சித்தர்கள் கூறுகின்றார்கள்.

பூமியின் மேற்பாகத்திலிருந்து கிடைக்கும் பூநீறு பற்றி ஆய்வாளர்கள் கூறுமிடத்து களர் நிலங்களில் மாசி முதல் சித்திரையில் முழு நிலவு காலத்தில் பின்னிரவு காலத்தில் பூமியிலிருந்து ஒருவித எரிவாயு தோன்றும் என்றும் அது பூமிக்கு மேலுள்ள தட்பம் காரணமாக விரைவில் திரவ நிலைக்கு மாறி இறுதியில் பூமியின் மேல் உப்பாக உறையுமென்றும், இத்தகைய பூநீற்றை காளாத்தி மலை, மகுடஞ்சாவடி, சிவகங்கை போன்ற இடங்களில் உள்ள களர் நிலங்களில் பெற்றுக் கொள்ளலாமென்பர்.

பூமியில் கிடைக்கும் பூநீறிலிருந்து சக்தியின் கூறு நிரம்பிய ஒரு உப்பைத் தேடலாமென்றும் கடலில் கிடைக்கும் சக்தி நிரம்பிய மற்றொரு உப்பைத் (கல்லுப்பு) தேடலாமென்றும், இவ்விரண்டையும் ஒன்று சேர்ப்பதால் மற்றுமோர் உப்பு கிடைகப்பெறுமென்றும் மேற்கூறிய மூவகை உப்புக்களைக் குறிப்பிட்ட முறையிலும், அளவிலும் சேர்த்து ஒரு தனி உப்பு உண்டாக்கப்படும். இதுவே **"முப்பு"** எனப்படும்.

மேற்கூறிய முப்பு, மருந்துத் தயாரிப்பில் ஊக்குவிப்பாகவும் (Catalyst), நெருப்புக்கு உருகிக் கரைந்து போகாமலும், அல்லது ஆவியாக வெளியேறாமலும் தடுக்கின்றது எனவும், இதற்கு எடுத்துக்காட்டாக இரசம், கெந்தகம், சின்னம்பர், பாடாணங்கள் போன்றவற்றைக் கட்டும் போது இதனுடைய முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாமென்றும் சித்தமருத்துவ ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். மேலும் முப்புப்பற்றிக் கூறுகையில் இது ஒரு உலகளாவிய உப்பு (An Universal Salt) என்றும் இதன் மகிமையை

"முப்பு தொட்டுக் கற்பமுண்டு அறியாதார்க்கு
எப்போதும் காலன் எமன்"

என்றும்

"பூதம் அஞ்சினால் உதித்த பூரணம்"

என்றும் கூறுகின்றனர்.

மேலும் முப்புப்பற்றி நந்தி ஞானம் என்ற நூல் குறிப்பிடுகையில்

“முப்பைக் கண்டார் மூப்பையகன்றார்
முப்பைக் கண்டார் மொய்வினை அற்றார்
முப்பைக் கண்டார் மோதச முற்றார்
முப்பைக் கண்டார் மொழி பரனாமே”

இவ்வாறு இது கற்ப மருந்தாகச் சிறப்பித்து கூறப்படுகின்றது.

முப்புத் தயாரிப்பதற்குத் தேவையான பூநீறு என்ற பொருள் பற்றி முன்னர் குறிப்பிடப்பட்டது. இந்த பூநீறு அண்டத்திலிருந்து வந்து நிலத்தில் படிவதால் அதனை அண்டக்கல்லு என்றும் கூறுகின்றனர். இதனை ஒரு சுண்ணாம்புச் சத்துள்ள பொருள் என்றும் (Certain species of limestones) கருதுவதுண்டு. இந்தப் பூநீறை எடுத்துச் சுத்தி செய்து அதற்கு வீரியத்தைக் கூட்டவேண்டும். பொதுவாகச் சுத்தி வெய்யும் போது அதனுடைய நஞ்சுத்தன்மை நீங்குவதோடு வீரியமும் அதிகரிக்கும் எனலாம். சுத்தி செய்வதற்கு கல்ப மூலிகைகளின் சாறும், அமுரியும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவ்விடத்தில் அமுரி என்பது புனித நீரையே குறிக்கின்றது. நூல்களில் அமுரி என்பதற்குப் புனிதநீர் என்பதை ஏழுகடல் சந்திக்கும் நீர் என்றும் இதனை அமிர்தம் என்றும் குறிப்பிடுகினறனர்.

யூகிமுனி அமுரிபற்றி குறிப்பிடுகையில்

“தானேதான் **xx அமுரியென்று** மூத்திரத்தை விட்டு
தாட்டிகமாய்ச் சொன்னார்கள் பெரியோர் தாமும்
கானேதான் பொய்பேசும் மாண்பர் தம்மைக்
கட்டியே படித்தாக்கால் பாவமில்லை
வானேதான் **x மூத்திரந்தான்** சமுத்திர நீராம்
வகையாகத் பார்த்தாக்கால் தோணும் தோணும்
ஊனிட்டுச் செய்தாகால் பாவம், பாவம்
உற்றுணர்ந்து போகாமல் நூலைப்பாரே”

என்கிறார்.

**xx** = அமுரியென்ற சமுத்திரத்தை விட்டு

**x** = சமுத்திரந்தான் சமுத்திர நீராம்

இதனிலிருந்து அமுரியென்பது சமுத்திர நீர் என்று புலானகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் திருமால் பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுக்க முற்பட்டனர் என்பது இந்தக் கற்ப மருந்தாகிய முப்புத்தானோ என்றும் இதனையே அமிர்தம் என்று குறிப்பிட்டார்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணச் சித்த மருத்துவ நூலான சுதேச வைத்திய அவுடதத்திரட்டு என்னும் நூலில் உள்ள ஒரு பாடலை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

"சீரியரிருவரும் சிறந்த மூவரும்
வாரிய **கடலமு துண்ட மாயரும்**
கூரிய ரொருவருங் கொடிய காயரும்
நேரிய ரெண்மரும் நெருப்போ டொக்குமே"

இதன் பொருள்

சீரியரிருவர் - நற்சீரகம், கருஞ்சீரகம்
சிறந்த மூவர் - வேர்க்கொம்பு (சுக்கு), மிளகு, திற்பலி

**கடலமுண்ட மாயர் - உப்பு**

கூரியர் - உள்ளி (கூரியரை ஓமம் என்றுஞ் சொல்லுபவரும் உண்டு)

காயர் - பெருங்காயம் என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட எட்டுச்சரக்குகள் கொண்ட சூரணத்தை அட்டசூரணம் என்றும் வாய்வுக்குச் சிறந்தமையால் அதன் வீரியம் உஸ்னமாகவிருப்பதால் நெருப்போடு (அக்கினி) ஒப்பிடுகின்றனர்.

இந்த அமுரி பற்றித் திருமூலர்

"வீர மருந் தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்திஅருள் செய்தான்
ஆதி மருந் தென்றறிவார் அகலிடம்
சோதி மருந்திது சொல்ல வொண்ணாதே"

என்கிறார்.

இவற்றிலிருந்து அது ஒரு கற்ப மருந்தென்றும், யோகத்தின் அடிப்படை என்றும் கூறுகின்றார்.

பொதுவாக அமுரி என்பதற்கு சிறுநீர் என்றும் சித்தமருத்துவ நூல்களில் குழந்தைகளின் சிறுநீர், பசுவின் சிறுநீர் ஆகியனவற்றின் பயன்பாடு பற்றிக் குறிப்புகள் உண்டு எனவும் அறியக் கிடக்கின்றது.

அமுரி என்பதற்கு வாழைமரச்சாறு என்ற ஒரு பொருளும் உண்டெனவும் இதற்குக் கந்தர்நாடி எனும் குறிப்பு சான்று தருகின்றது. (தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற தேசிய சித்த மருத்துவக் கருத்தரங்கு மூலம் அறிய வருகின்றது.)

அமுரி உப்பைப்பற்றி டாக்டர் க. வெங்கடேசன் குறிப்பிடுகையில் சித்தமருத்துவத்தில் குழந்தைகளின் சிறுநீர் மருந்துக்கு உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளது என்றும் சிறுநீர் மருத்துவம் (Urine Therapy) பற்றிய சில நூல்கள் வெளிவந்துள்ளன என்பதையும் அறியத்தருகின்றார்.

இதுபற்றி சிக்காக்கோவில் நடைபெற்ற ஆய்வுகளில் மனிதனின் சிறுநீரிலிருந்து யூரோகைனஸ் (Urokinase) என்னும் உப்பினை பிரித்து எடுத்து அதனை மாரடைப்பு நோயினைத் தீர்க்கும் முறைகளாகப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் மிருகங்களின் சிறுநீரையும் மருந்தாகச் சித்த மருத்துவர்கள் உபயோகித்துப் பயன் கண்டுள்ளனர் எனலாம். மருந்துப் பொருட்களைச் சுத்தி செய்வதற்கும் பசுவின் சிறுநீரைப் பயன்படுத்துவதையும் காணமுடியும். எடுத்துக்காட்டாக மண்டூரம், அப்பிரகம் ஆகியவற்றின் சுத்திமுறைகளைக் கூறலாம்.

பூநீறைச் சமாதி உப்பு என்றும் சில நூல்கள் குறிப்பிடுகின்றன.

முப்பு தயாரிப்பதற்கு இரண்டாவதாகக் குறிப்பிட்ட கல்லுப்பு கடலில் இருந்து எடுக்கப்படுகின்றது. இதனை அனாதி உப்பு என்றும்

கூறலாம். இது உப்புக்களில் மிகவும் கடினமான உப்பாகும். ஆவியாகக் கரையாத தன்மை (Non Volatile) உடையது. நீரில் இலகுவில் கரையாத தன்மையுடையது. இதனை

"நீருகுக்கும் நெருப்புக்கும் அசையாத கல்லுப்பு"

என்றும் இக்கல்லுப்பினால் செய்த முப்புப் பற்றி ஏ. சண்முகவேலன்

"உப்பின் கசடது போய் ஊறலது மாறினால்தான்
முப்புச் சுண்ணமாம்"

எனவும் குறிப்பிடுகின்றார்.

முப்புத் தயாரிப்பதற்குக் கூறப்படும் பூநீறு, கல்லுப்பு, வெடியுப்பு ஆகியவற்றை வைப்பாகவும் செய்யலாம்.

இறுதியாக கூறப்பட்ட வெடியுப்பை முறைப்படி சுத்திசெய்த பின்னரே முப்புச் செய்ய உபயோகப்படுத்த வேண்டும்.

மேற்கூறிய முப்பைக் கொண்டு சித்த மருத்துவர்கள் நெருப்புக்கு கட்டுப்படாத பொருள்களைக் கட்டுப்படுத்தியும் உப்பு முதலியவற்றை நெருப்பில் வெடிக்காமலும், எரிந்து போகாமலும், கரைந்து போகாமலும் கட்டுப்படுத்தி, கட்டு, களங்கு போன்ற மருந்துகளை உருவாக்கித் தீராத கொடிய நோய்களைத் தீர்க்கின்றார்கள்.

இந்த மருந்து செய்முறைகள் சித்த மருத்துவத்திலேயே சிறந்து விளங்குகின்றன. ஆயுள் வேத மருத்துவத்தில் இம்முறைகள் இல்லையென்றே கூறலாம். இதனால்தான் இதனைச் சித்த மருத்துவத்தின் மணிமகுடம் என போற்றுகின்றனர்.

## 2.15. சித்தர்களின் இரச வாதக் கொள்கை

சித்த மருத்துவத்தின் சிறப்பம்சங்களில் இதுவும் ஒன்றாகும். ஆயுள்வேத மருத்துவ முறையில் இல்லாத அனேக மருந்து முறைகள் சித்த மருத்துவத்தில் இரசவாத முறையில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கட்டு, களங்கு ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

இது வேதியியல் எனவும் கூறப்படும். வேதை + இயல் ஆகிய சொற்கள் சேர்ந்து வேதியியல் ஆகின. இதனை ஆங்கிலத்தில் அல்கமி (Alchemy) என்றும், இரச வாதக்கலையை (Alchemical Process) என்றும் கூறலாம். இதனைத் தமிழ் மருத்துவ நூல்களில் இரச வாதம், வகாரவித்தை, வாதம, வேதிப்பு எனப் பல பெயர்களால் குறிக்கின்றனர்.

வேதை என்பது மாறுபாடு செய்தல் எனும் பொருள் பெறுவதால், பொருளின் பண்புகளை மாற்றி மக்கள், மற்றும் உயிரினங்களுக்குப் பயன் விளையச் செய்யும் மருத்துவ முறையாகும்.

இந்த இரச வாதக் கலையை அண்மையில் வாழ்ந்த பெரிய சித்தராகிய தாயுமான அடிகள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

> "வெந்தழலி லிரதம்வைத் தைந்து லோகத்தையும்
> வேதித்து விற்றுண்ணலாம்"

இரசவாதம் பற்றி மிகப்பழமையான குறிப்பை திருமூலரின் திருமந்திரத்தில் காணலாம். "வேதகம்" என்று இதனைக் குறிக்கின்றார்.

> "செம்பு பொன்னாகுஞ் சிவாயநம வென்னிற்"

எனவும்

> "கறுத்த இரும்பே கனகம தானான்
> மறித்திடும்பாகா வகையது போல"

எனவும்

இவ்வாறு செம்பு, இரும்பு ஆகியவற்றைப் பொன்னாக்கும் இரசவாதக்கலை பற்றி மேலும் அறிய முடிகின்றது.

இத்தகைய வித்தைகளில் சித்தர்கள் சித்தி பெற்றவர்கள் என்பது அவர்கள் நூல் வாயிலாகத் தெரிகின்றது. சித்தர்கள் இந்த இரசவாத வித்தையை உபயோகித்துப் பணம் சமபாதித்தாக அவர்களின் எந்த வரலாற்றிலும் குறிப்புகளில்லை. அவர்கள் தீராத நோய் என்று கூறப்பெற்ற குட்டம், புற்று, நீரிழிவு போன்ற நோய்களுக்குச் சிறந்த பலனைக் கொடுக்கக் கூடிய கட்டு, களங்கு, சுண்ணம், பற்பம், செந்தூரம் போன்ற மருந்துகளை உருவாக்கி மக்களுக்கு நோயைத் தீர்த்துள்ளனர்.

சாதாரணமாகத் தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு போன்ற உலோகங்கள் சூட்டினால் உருகும் தன்மையும், எரித்து நீறுதலும், வயிற்றில் உள்ள செரிப்பு நீரில் கரையாத தன்மையுடையதாகவும் நஞ்சுத்தன்மையுடையதாகவும் உள்ளன. இந்த இரசவாதக் கலையால் நெருப்புக்குப் புகையாதவாறு தடுத்தும், அதன் இயற்கைக் குணங்கள் கெடாதவாறும், வயிற்றில் உள்ள செரிப்பு நீரினால் செரித்து உடலில் உள்ள தாதுக்களில் சேருவதாகவும், உலோகத்தின் நஞ்சுத் தன்மைகளை அகற்றச் செய்வதற்கும் இக்கலை பயன்படுத்தப்படுகின்றது.

இதேபோல் உப்பு வகைகள் நீரில் கரைதலும், நெருப்பில் இட்டால் சட சடவென ஒலியுடன் தூளாகும் தன்மையும் உடையவை. இதனை நீரில் கரையாமல் செய்தலும், நெருப்புக்குப் புகையாமலும் இருப்பதற்கும் இந்த இரசவாதக்கலை பயன்படுத்தப்படுகின்றது.

இக்கலை சித்தர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாக இருந்ததை அறியமுடிகிறது. அவர்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கமற்றவர்களாகவும், பக்குவமடைந்த ஆன்மீக வாதிகளாகவும் இருப்பதினாலும், இத்தகைய கலைகள் அவர்களுக்குச் சித்தி

பெற்றுள்ளன. இதன் உண்மையை அறியாத சிலர் இக்கலை பற்றி அறிவதற்குப் பல முயற்றிகள் எடுத்தும் பலன் கிடைக்காமல் அலைந்து திரிந்துள்ளனர் எனச்சித்தர்களே கூறியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக

"அளகேசன் நிகரான அம்பொன் மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்
நெடுநாளிருந்த பேரும் நிலையாகவே இன்னும்
காய கல்பம் தேடி நெஞ்சு புண்ணாவர்"

(தாயுமானவர் பாடல்)

என்றும்

"வாதம் செய்வேன் வெள்ளியும்பொன் மாற்றுயர்ந்த
தங்கமும்
போதவே குருமுடிக்கப் பொன் பணங்கள் தா வெனச்
சாதனை செய் தெத்திச் சொத்து தந்தத்தைக்
கவர்ந்துமே
காத தூரம் ஓடிச் செல்வர் காண்பதுவும்
அருமையே"

என்றும் இவ்வாறு பக்குவமடையாதவர்கள் இரசவாதக்கலை பற்றி அறிவதற்கு எடுக்கும் முயற்சிகள் பற்றிச் சித்தர்கள் கூறியுள்ளதைக் காணலாம்.

மருந்துகள் தயாரிக்கப் பயன்படும் சில உலோகங்கள் முறைதவறிச் செய்தால் அவை இல்லாமலோ அல்லது எடை குறைந்தோ போகலாம். இதற்கு எடுத்துக்காட்டாகத் துத்தநாகம் (Zinc), காரீயம் (Lead) ஆகியன நெருப்புக்குப் புகைந்து எடை குறைந்து அல்லது இல்லாமலோ போய்விடும் தன்மை வாய்ந்தது.

இவற்றை இரசவாதக்கலையால் நெருப்புக்குப் புகையாமலும், எடை குறையாமலும் செய்யலாம். இத்தகைய தன்மையான பொருள்கள் அனேகம் உள்ளன. உதாரணமாகக் கந்தகம், தாளகம், வெடியுப்பு, கற்பூரம், பச்சைக்கற்பூரம் ஆகியவற்றைக் கூறலாம். இவற்றில் வெடியுப்பு (Potassium nitrate)

என்னும் பொருள் நெருப்புக்கு வெடித்து பொசுங்கி விடும் தன்மை வாய்ந்துள்ளது. இதனை நெருப்புக்குப் புகையாதவாறு புடமிட்டு வெடியுப்புச் சுண்ணம் செய்யும் முறை சித்த மருத்துவத்தில் மட்டுமே சிறப்பாகவுள்ளது. இதனை இந்திய மத்திய அரசினால் வெளியிடப்பட்ட முக்கிய நூலொன்றில் காணமுடியும்.

இந்த வெடியுப்புச் சுண்ணம் சரியாக நீறிவிட்டது என்பதற்கான பரிசோதனை முறைகளையும் சித்தர்கள் கூறத் தவறவில்லை. அகத்தியர் அமுதகலை ஞானத்தில்

"சுண்ணமது நீறினால்
மஞ்சளிலே சிவக்க வேணும்"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் வெடியுப்பு ஜெயநீர் என்னும் ஒரு திரவ மருந்தை வெடியுப்பிலிருந்து வடித்து எடுக்கின்றார்கள். இதனைக் கொண்டு மற்றும் அரும்பெரும் சித்தமருந்துகளை உருவாக்குகின்றனர்.

**வெடியுப்புச் செயநீர் தயாரிக்கும் முறை**

பழப் புளியையும் வெடியுப்பையும் சம அளவில் எடுத்து நன்கு கலந்து உரலில் இட்டுக் கவனமாக இடித்து வருகையில் (வெடிக்கவல்லது) மெழுகுபதம் வரும். அப்போது அதனை எடுத்துச் சிறுவில்லைகளாகத் தட்டி உலரவிடவும். அதன் பின்னர் உலர்ந்த வில்லைகளை மண்அகலில் இட்டு அடுப்பேற்றி எரிக்கவும்.

இவ்விதம் எரித்துக்கிடைத்த சாம்பலை ஒரு பீங்கானில் அல்லது கண்ணாடிப்பாத்திரத்திலிட்டுச் சற்றுச் சரிந்த நிலையில் வடியும் படி இரவு முழுவதும் திறந்து வைக்கவும். மறுநாள் காலையில் பாத்திரத்தில் சேர்ந்திருக்கும் திரவத்தை வடித்து எடுக்கவும். இதேபோல் தினமும் இரவு வேளையில் வைத்துக் காலையில் "செயநீரை" எடுத்துச் சேர்த்துக்கொள்ளவும். (இதற்குத பனிகாலம் சிறந்தது) சிலர் மண்ணில் புதைத்து வைத்தும் எடுக்கின்றனர்.

மேற்குறிப்பிட்டது போல் முப்புவையும் மருந்துகளின் வீரியத்தைக் கூட்டுவதற்கு ஊக்குவிப்பாக (Catalyst) மருந்துகளுடன் சேர்தது தயாரிக்கின்றனர்.

மருந்து தயாரிப்பதில் சித்தமருத்துவக் கோட்பாட்டின்படி அதனை ஐந்து பிரிவாகச் சித்தர்கள் பிரித்துள்ளனர். அவையாவன.

1. ஏக மூலிகைப் பிரயோகம்
2. மாரணப் பிரயோகம்
3. திராவகப் பிரயோகம்
4. செயநீர்ப் பிரயோகம்
5. முப்புச் சுண்ணம் பிரயோகம்

### 1. ஏக மூலிகைப் பிரயோகம்

சில சரக்குகளை ஐம்பூதக் கூட்டுறவின் மூலம் முறைப்படி சேர்த்து மருந்தாக முடித்துப் பயன்படுத்துவதாகும்.

### 2. மாரணப் பிரயோகம்

இது ஒரு சரக்கின் சத்துரு (பகை) மித்துரு (நட்பு) சரக்குகளை அறிந்து மருந்துகளைத் தயாரித்தலாகும். இக்கால அறிவியல் கருத்தின் மூலம் நேரெதிர் (Chemical incompatible) குணமுடைய இரு பொருட்கள் ஒன்றாகி ஒரு கூட்டுப்பொருளையுண்டாக்கும். அக்கூட்டுப்பொருளுக்கு இரண்டு மூலப்பொருள்களின் குணமே இருக்காது. இதனை நட்புப் பொருள்கள் என்று சித்தமருத்துவம் குறிக்கும். உலோக தாதுப்பொருள்களைச் செந்துாரமாக்க பகைப்பொருள்களையும் (Compatible drugs) அவற்றின் வலிமையை மிகைப்படுத்த நட்புப்பொருட்களையும் (In-compatible drugs) பயன்படுத்தினர்.

நட்பு, பகைச் சரக்குகளுக்கு எடுத்துக்காட்டாக வெடியுப்புக்கு நட்புச்ரக்கு சீனாக்காரம், இந்துப்பு, பாடாணங்கள் ஆகியவற்றைக் கூறலாம். பக்கச் சரக்காக ஈயம், துருசு, அயம், செம்பு, காந்தம், கந்தகம் ஆகியவற்றைக் கூறலாம்.

இப்படியாக ஒவ்வொரு சரக்குக்கும் நட்பு, பகைச் சரக்குகளை சித்தர்கள் கூறியுள்ளனர்.

இவற்றைச் சித்தமருத்துவ நூல்களில் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

"ஒரு சரக்கைப் பகைச்சரக்கால் மடித்து
நட்புச்சரக்கால் உயிர்ப்பித்தலாகும்"

இவ்வகைச் செய்கையால் ஒரு பொருளின் உருவத்தை (அணுக்களின் கட்டுக்கோப்பை) மாற்றிப் பின் உண்டான மருந்துக்கு முதற் பொருளின் நட்புச் சரக்கைக் கொடுத்து உரங்கொடுத்தலாகும்.

இச்செயல்முறைகளுக்கு முன்குறிப்பிட்ட செயநீர் உபயோகித்தனர். எடுத்துக்காட்டாக தாளகத்தைச் செந்தூரமாக்குவதற்கு வெடியுப்புச் செயநீரை உபயோகப்படுத்தினர்.

### 3. திராவகப் பிரயோகம்

இது சில உப்புக்களை ஐம்பூத முறையையறிந்து அளவுப்படி கூட்டித் திராவகப் பானையில் இட்டு அடுப்பின் மேல் ஏற்றி காய்ச்சித் திராவகம் இறக்கிக் கொள்ளல். (Distillation) இவ்வாறு இறக்கிய திராவகத்தைக் கொண்டு சரக்குகளை மடியவைத்துப் பற்ப, செந்தூர, சுண்ணங்களாகச் செய்துகொள்வதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக சங்கத்திராவகத்தைக் கூறலாம்.

### 4. செயநீர்ப் பிரயோகம்

சில சரக்குகளை முறைப்படி சேர்த்து அவற்றை நீர் வடிவாக்கி அவ்வகைச் செயநீரின் உதவியால் நெருப்புக்குப் புகைந்தோடும் சரக்குகளாகிய உபரசபாடாணங்களை ஓடா வண்ணம் தடுப்பதற்குப் பயன்படுத்துவதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக முதல்செய்முறை குறிப்பிட்ட வெடியுப்புச் செயநீரைக் கூறலாம்.

### 5. முப்புப் பிரயோகம்

இதனில் மூன்று உப்புக்களையும் குறிப்பிட்டுள்ளனர். முக்கியமாகப் பூநீறு என்னும் ஓர் உப்பைச் சுண்ணவடிவமாக்கி

உபயோகிக்கும் முறையைக் கூறுகின்றனர். இதன் விபரத்தை முப்பு என்ற தலையங்கத்தின் கீழ் விபரமாகக் காணலாம்.

சித்தர்கள் மருந்துகளைத் தயாரிப்பதற்கு மருந்துப் பொருள்களை அமிலத்தன்மை, காரத்தன்மையுடையதாகவும் பிரித்துள்ளனர்.

| காரத்தன்மையுடைய பொருட்கள் (Alkaline substance) | அமிலத்தன்மையுடைய பொருட்கள் (Acid substance) |
|---|---|
| இரசம் | கெந்தகம் |
| வெடியுப்பு | சீனாக்காரம் |
| கற்பூரம் | துருசு |
| காந்தம் | இந்துப்பு |
| தங்கம் | வினாகிரி |
| வெங்காரம் | |

மேற்கூறிய அட்டவணையில் இரசத்துக்கு காரப்பொருள் என்றும், கெந்தகத்தை அமிலப்பொருள் எனவும் இவையிரண்டையும் நட்புச்சரக்குகள் என்பதையும் இதேபோல் வெடியுப்பு, சீனாக்காரம் ஆகியனவும் நட்புச்சரக்குகள் எனஅறிந்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட அமில, காரத்தன்மையைப் பொறுத்து தயாரிக்கப்படும் மருந்துகள் அதற்கேற்ப செய்கைகளைக் கொடுக்கின்றது. எடுத்துக்காட்டாக இந்துப்பு அமிலத்தன்மையாக விருந்தாலும் மருந்து தயாரித்தன் பின் விரணங்களை ஆற்றும் தன்மையுடையதாக அமைவது அது மருந்து தயாரித்ததின் பின் அமிலத்தன்மையை விட்டுக் காரத்தன்மையாக மாறியதே காரணமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக குணபாடம் பகுதி II, III யில் உள்ள தேங்காய்ச் சாரத்தைக் கூறலாம். இதனை ஆய்வு செய்து விரணமாற்றிச் செய்கை (Anti Ulcer Activity) உண்டென ஆய்வு நூலில் நிருபிக்கப்பட்டுள்ளது. இதே போல் அகத்தியர் செந்தூரம் 300 எனும் நூலில் உள்ள நாக செந்தூரம் சென்னை

மருத்துவக் கல்லூரியில் ஆய்வுக்கு எடுத்து விரணமாற்றிச் செய்கை (Anti Ulcer Activity) உண்டென நிரூபிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

சமய நூல்களிலும் இரசவாதக்கலை பற்றிக் காணலாம். எடுத்துக்காட்டாக திருப்புகழிலும் இரசவாதக் கலை பற்றிய குறிப்புகள் உண்டென்பதை நவீன சித்த மருத்துவ ஆய்வாளர்கள் தமது ஆய்வு நூல்களில் கூறுகின்றனர்.

அவை அருணகிரிநாத சுவாமிகளின் சித்து வகுப்பு 80 என்ற நூலில் இருப்பதாகவும் ஆனால் அப்பாடல்களுக்குச் சரியாக ஒருவரும் உரை எழுதவில்லையெனவும் அறிய முடிகிறது.

"சுண்ணமது நீறினால்
மஞ்சளிலே சிவக்க வேணும்"
- அகத்தியர் அமுத கலைஞானம் -

## 2.16. சித்தர்களின் காயகற்ப முறைகள்

தமிழ் மருத்துவ முறைகளில் கற்ப மருந்துகள் சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டு உலகத்திற்குத் தரப்பட்டுள்ளது.

காயம் - உடம்பு

கற்பம் - அழியாமை

எனப் பொருள்படும்.

கற்பம் என்பது உடம்பினை நோய் அணுகாதவாறு நன்னிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணிகளையும் நீக்கும் தன்மை வாய்ந்தது. சித்தமருத்துவத்தின் சிகிச்சை முறைகளை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

1. காப்பு
2. அழிப்பு
3. நிரைப்பு

காப்பு என்பது உடம்பை நோய் அணுகாதவாறு பாதுகாத்தல் எனலாம் (Prevention). இவற்றை காயகற்பத்தின் கீழும் அடக்கலாம்.

அழிப்பு என்பது நோய்க்கிருமிகளை அழித்து நோயிலிருந்து உடம்பைப் பாதுகாத்தல் எனலாம்.

நிரைப்பு என்பது உடம்பில் எந்த சத்துக் குறைவாக இருக்கின்றதோ அவற்றை அறிந்து மருந்தாக வழங்கி உடம்பை நோய் அணுகாதவாறு தேற்றி பாதுகாத்தல் ஆகும். எடுத்துக்காட்டாக ஒருவருக்கு இரும்பு, கல்சியம் சத்துக்கள் குறைவாக இருப்பின் அவற்றினை மருந்தாக கொடுத்து அக்குறைவினால் ஏற்படும் நோய்களை வராமல் தடுக்கலாம்.

உடம்பின் மேன்மையை உணர்ந்தவர்கள் சித்தர்கள் இவர்கள் நரை, திரை, மூப்பு, பிணி அறியா நல்லுடம்பு பெற்றோர். உடலுக்கு உறுதியளிக்கும் நல்ல பொருட்களை அறிந்து அவற்றை மருந்தாகக் கொடுத்து பொய் எனும் உடலை மெய் என்று நிலைக்கச் செய்தவர்கள் சித்தர்கள். சித்தமுறையில் உடலை நன்முறையில் காப்பது காயகற்பம் எனப்படும். இது எண்வகை சித்திகளை அடைவதற்கு ஏதுவாகும். காயகற்ப மருந்துகளை யாழ்ப்பாணத்து பண்டைய வைத்தியர்கள் நடைமருந்து

என்றும் அழைப்பர். நல்ல பழக்கவழக்கங்கள், நல்ல உணவுமுறைகள், மூச்சுப்பயிற்சி ஆகியனவற்றையும் காயகற்பத்தின் கீழ் அடக்கலாம். மனிதன் குடும்பவாழ்விலும், துறவறவாழ்விலும் தன் உடம்மைப் பேணுதல் அவசியம். இதனை திருமூலர் திருமந்திரத்தில்

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”

என்கிறார்.

உடம்பைக் காப்பது கற்பம். இது உடம்பைக் கல்லைப்போல் ஆக்கும். கல்லினால் செய்த சிலை பன்னெடுங்காலம் ஆகினும் அழியாது. நரை, திரை, மூப்பு பிணி இவற்றை அடையாதவாறு கற்பமான உடலும் இக்கேடுகளை அடைவதில்லை. கற்பத்தை உண்டால் காயம் அழியாது என்று திருமூலர் கூறுகின்றார்.

ஒரு நோய் ஏற்பட்டு உடம்பு பலவீனம் அடைந்திருந்தால், உதாரணமாக நெருப்புக் காய்ச்சல் (அவியற்சுரம்) ஏற்பட்டால் நோய் குணமடைந்த பின்பும் உடல் மெலிந்தும் தலைமுடி உதிர்வு ஏற்படலாம். இத்தகைய தாக்கங்களை தடுத்து உடம்புக்குத் தென்பைக் கொடுப்பதற்கு கொடுக்கப்படும் மருந்தையே கற்ப மருந்து எனக்கூறலாம். இத்தகைய நோயின் பின் ஏற்படும் தாக்கங்களை அந்நோயாளியிலிருந்து தடுப்பதற்கு கொடுக்கும் மருந்துகளை நடைமருந்தெனக் கூறுவர்.

இத்தகைய கற்ப மருந்துகளுக்கு எடுத்துக்காட்டாக கீழ்வரும் மருந்துகளைக் குறிப்பிடலாம்.

1. அயபிருங்கராஜக் கற்பம்
2. அயஜம்பீரக் கற்பம்
3. இருநெல்லிக் கற்பம்
4. பாவணைக் கடுக்காய்
5. தங்க பஸ்பம்
6. பூரணச் சந்தோரதயம்

சீவப்பொருட் கற்பமாக

1. காய்ச்சாத பசுவின் பால் (தாரோட்டம்)
2. காய்ச்சிய பசுவின் பால்
3. இந்திரகோபப் பூச்சி

கற்பம் பொது, சிறப்பு என இருவகைப்படும்.

## பொது கற்பம்

பொதுக்கற்பம் என்று கூறும்பொழுது உடலைக் காத்து மேனிக்கு எளிலையும் பலத்தையும் தந்து நரை, திரை, மூப்பு ஆகியன வராமல் தடுக்கவல்லது. இவற்றை உடம்பைத் தேற்றும் மருந்துகள் என பொதுவாகக் கூறலாம். உதாரணமாக இவற்றுக்கு நெல்லிக்காய் லேகியத்தைக் குறிப்பிடலாம்.

பொதுக்கற்ப மூலிகைகள் (General Rejuvenating Herbs)

1. இஞ்சி
2. அழுக்கிரா
3. பொன்னாங்காணி
4. மணத்தக்காளி
5. கற்றாழை
6. கரிசாலை
7. வேம்பு
8. பிரண்டை

## சிறப்புக் கற்பம்

சிறப்புக்கற்பம் என்பது உடலில் உள்ள மண்டலங்களுக்கு (Systems) போசாக்கைக் கொடுத்து அவற்றை நன்னிலையில் இயங்கச் செய்தல். உதாரணமாக சுவாச மண்டலத்தில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அவற்றை வராதவாறு தடுத்து சுவாச மண்டலத்தைப் பலப்படுத்தும் மருந்துகளையோ பயிற்சிகளையோ சிறப்புக் கற்பத்தின் கீழ் அடக்கலாம். இவற்றுக்கென மூலிகைகளையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். அது மட்டுமல்லாது தாது, சீவப்பொருட்கள், மருந்துகள் மேலும் உடலைக் காக்கும் யோகாசனப் பயிற்சிகளும் பிராணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சியும் யோகம், முப்பு ஆகியனவற்றையும் குறிப்பிடலாம். சிறப்புக் கற்பத்துக்கு மூலிகைகளாக தூதுவேளை, துளசி, மணத்தக்காளி ஆகியனவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சிறப்புக்கற்ப மூலிகைகள் (Special Rejuvenating Herbs)

1. கடுக்காய்
2. நெல்லி
3. எலுமிச்சம்பழம்
4. நன்னாரி
5. துளசி
6. வில்வை
7. கீழ்காய் நெல்லி
8. சேராங்கொட்டை
9. வெள்ளெருக்கு
10. நொச்சி

தேரையர் யமக வெண்பா எனும் நூலில் கீழ்க்காணும் பொருட்கள் காயகற்பம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| எருக்கு | அழிஞ்சில் |
| சீதேவியார் செய்களிநீர் | இஞ்சி |
| கீழ்காய்நெல்லி | சுரை |
| கஞ்சா | கடுக்காய் |
| நாணல் | சீரகம் |
| ஆலம்பால் | புளியாரை |
| வெண்நொச்சி | மூக்கிரட்டை |
| குப்பைமேனி | தூதுவேளை |
| பொன்னாங்காணி | சேராங்கொட்டை |
| வேம்பு | பனை |
| தேற்றாங்கொட்டை | கற்றாழை |
| ஓரிதழ் தாமரை | துளசி |
| மணத்தக்காளி | வில்வம் |
| விளா | கோரைக்கிழங்கு |
| அமுக்கிராய்க்கிழங்கு | சிறுகீரை |
| உருளைக்கிழங்கு | நன்னாரி |
| உத்தாமானி | ஆயில்பட்டை |
| களிப்பிரண்டை | எலுமிச்சம்பழம் |
| தாமரை | பிரமதண்டு |

இவற்றில் பொதுகற்பத்திலும் சிறப்புக்கற்பத்திலும் சில மூலிகைகள் குறிப்பிடுவதைக் காணலாம். இவற்றை மருத்துவர்கள்

கற்பங்கள் உள்மருந்தாக மட்டுமன்றி வெளிப்பூச்சு, முழுக்கு முதலிய வெளியாட்சியாகவும் பயன்படுத்துவது உண்டு.

## 2.17. எண்வகைத் தேர்வுகளில் ஒன்றான நாடி பார்த்தல் (Pulse)

எண்வகைத் தேர்வு முறையில் நாடி ஒரு பிரதான அங்கமாகும். நாடி என்னும் சொல்லுக்கு **தாது, வாக்கியம்** என்பன பொருளாகும். சோதிடத்துக்கு வாக்கியத்தையும், மருத்துவத்துக்கு தாதுவையும் பொருளாக எடுப்பது ஏற்புடையதாகும்.

நாடி என்பதற்கு வாத பித்த ஐயங்களைக் குறிக்கும் தாதுவென டாக்டர் ம. சண்முகவேலு குறிப்பிடுகின்றார். தாது என்றால் ஆதி எனவும் மூலம் எனவும் பொருள்படும். தாது என்னும் சொல் உயிர்த்தாது, உடல்தாதுக்களையும் குறிக்கும். உயிர்த்தாதுவை ஆதி சிவ பரம் பொருளுக்குச் சமானமாகவும், மூலப் பிரகிருதிக்குச் சமானமாகவும் கருதுகிறபடியால் "ஆதி" என்றும் "மூலம்" என்றும் கூறலாம். அதுவே "சீவாத்மா" என்னும் பெயர் பெற்றதென கூறப்பட்டது.

சுருங்கக் கூறின் நாடியைக் குறிக்கும் தாது என்பது உடலில் உயிர் தரித்திருப்பதற்க்குக் காரணமான சக்தி எதுவோ அதுவே தாது அல்லது நாடி எனப்படும். உடல் ஸ்தூல பஞ்சபூதம் என்றும், உயிர் சூக்குமம் என்றும், உடலுக்கு ஆதாரம் உயிர் என்றும், உயிருக்கு ஆதாரம் உயிர்த்தாது என்றும் கூறப்படுகின்றது. எனவே உடலில் உயிர் தரித்திருந்து இயங்கச் செய்யும் சக்தி எதுவோ அதுவே உயிர்த்தாது எனவும் அதுவே சிவதாது, சீவன், ஆன்மா, சீவசக்தி, சீவாத்மா, ஆன்ம நாடி, ஆத்ம சக்தி, குருநாடி எனப் பல பெயர்களால் வழங்கப்படும். உயிர்த்தாது என்பது ஒரே சீவசத்தியேயொழிய வேறில்லை யென்பதைக் கீழ்வரும் மேற்கோள்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"உரு பொருள் தாங்குமுடலு முயிரும்
உடற் காதார மொன் பஞ்ச பூதக்
பஞ்ஞீகரணப் பான்மையா மெனவும்

உயிர் காதார முயிர் தா தெனவும்
முப்பிரிவாகி முக் குணமணுகி
உடலையும் முயிரையும் மோம்பிக் காத்து
வருமென முதுமுறை வகுக்குந் துணிபே"

என்பதினாலும்.

"தரு நாடிதசநாடி திறமாய் நிற்கும்
தாக்கு முடலுயிராக நிற்கும் பாரே"

என்பதினாலும்

"காரப்பா உடலுக்குளுயிராய் நின்ற
கருவான குருநாடி ஒன்றுகானே"

என்பதிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

மேற் குறிப்பிட்ட மேற் கோள் பாடலில் சீவசக்தி மூன்று பிரிவுகளை அடைந்து மூன்று குணங்களைப் பெற்று உடலையும், உயிரையும் பாதுகாத்து வளர்த்து வருகின்றது.

மேற்கூறும் முப்பிரிவுகளும் முக் குணங்களையும் முறையே வளி, அழல், ஐயம் என மூன்று பிரிவுகளாகவும் அவற்றால் பிரதிபலிக்கும் வாயு, தேயு, அப்பு, பூதங்களின் செயல்களை முக்குணங்கள் எனவும் கூறலாம்.

இவற்றைவிட முக்குணங்கள் என்பதனைச் சத்துவ, இரசோ, தாமச குணங்களாகவும் பொருள் கொள்ளலாமென்றும் கூறுவரும் உளர்.

உயிர்த்தாதுவாகிய சீவாத்மாவைச் சிவனுக்குச் சமமாகக் கீழ்க்கண்டவாறு திருமூலர் கூறுகிறார்.

"சீவனென்னச் சிவனென்ன வேறில்லை"

நாடி என்னும் சொல் தச நாடிகளையும் குறிக்கும். இதனைத் திருமூலர் கீழ்க் கண்டவாறு

"நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலில் ஒடுங்கியிருந்திடுங்
கூடிய காமங் குளிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே"

எனக் கூறுகின்றார்.

இதுபற்றி யூகி முனிவர் கூறும்போது

"...........................................................................................
தெருக்கின்ற தச நாடிச் செயலையெல்லாம்
செப்புகின்றேன் தெளிவாகச் சிறந்து கேளே"

"சிறந்த இட பிங்கலையுஞ் சுழிமுனை யினோடு
சிறப்பான காந்தாரியத்திச் சிங்கு வையாம்
பிறந்த தலம் புகுடனோடு குகுதன்றானும்
பேரான சங்கிணியும் வயிரவன் தான்
திறந்தவை பத்துந்தான் தசநாடி யாகும்"

என்கிறார்.

இதனில் நாடி என்னும் போது தச நாடிகளான இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிங்குலை, அலம்புருடன், குகுதன், சங்கினி, வைரவன் ஆகியவற்றைக் குறிக்கும்.

மேலும் யூகிமுனி தொடர்ந்து கூறுகையில்

"...........................................................................................
திரி மூன்று நாளையினி லொடுங்கும் பாரு
மறந்தடை பிங்கலையுஞ் சுழிமுனை மூன்றும்
வாதத்தில் ஓடுக்கமென வகுக்கலாமே"

மேற்கூறிய பத்து நாடிகளில் இடகலை, பிங்கலை, சுழிமுனையாகிய மூன்றும் வாத நாடியில் ஒடுங்குமெனலாம். மேலும் கூறுகையில்

“அகுக்கவே காந்தாரி யத்திசிங் குவையாம்
அலம்புருட னிதி நாலும் பித்தத்தின் கூறு”

மிகுதியானவற்றில் காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன் ஆகிய நான்கும் பித்தத்தின் கூறாகும். மேலும் கூறுகையில்

“ஆமேதான் குகுதன்சங் குனிவை ரவனும்
அரிதான சிலேட்டுமத்தில் அடங்கும் பாரு”

மிகுதியான குகுதன், சங்குனி, வைரவன் ஆகிய மூன்றும் சேத்துமத்தின் கூறாகுமெனக் குறிப்பிடுகின்றார்.

வைத்திய வல்லாதியின் பதினெண் சித்தர்கள் நாடி எனும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

1. இடைகலை : வலக்கால் பெருவிரலில் நின்று கத்தரிக்கோல் போல மாறலாக இடமூக்கைப் பற்றி நிற்பது.
2. பிங்கலை : இடக்காற் பெருவிரலில் நின்று கத்தரிக்கோல் போல மாறலாக வலமூக்கைப் பற்றி நிற்பது.
3. சுழுமுனை : மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் நடு நாடியாய்ச் சிரசளவு முட்டிநிற்பது.
4. சிகுவை : உண்ணாக்கில் நின்று சோறு, தண்ணீர் இவைகளை விழுங்கப் பண்ணுவது.
5. புருடன் : வலக்கண்ணளவாய் நிற்பது.
6. காந்தாரி : இடக்கண்ணளவாய் நிற்பது.
7. அத்தி : வலக்காதளவாய் நிற்பது.
8. அலம்புடை : இடக்காதளவாய் நிற்பது.
9. சங்குனி : குறியின் அளவாய் நிற்பது.
10. குகு : அபானத்தளவாய் நிற்பது.

குறிப்பு - யூகிமுனி புருடன் என்ற நாடியை வைரவன் என்கிறார். சில நூல்களில் குகுவை குரு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை இரண்டும் ஒன்றே எனக்கருதல் வேண்டும்.

சித்தர்கள் நாடிபற்றிக் கூறும்போது இன்னொரு கோணத்தில் துடிக்கின்ற நாடிமட்டுமல்ல, நாடுதலே நாடி என்றும் கூறுகின்றனர்.

இதனை

“நாடி யென்றால் நாடியல்ல நரம்பில் தானே
நலமாகத் துடிக்கின்ற துடிதானல்ல
நாடியென்றால் வாத பித்த சிலேற்பனமு மல்ல
நாடி எழுபத் தீராயிரந் தானல்ல
நாடியென்றால் அண்ட பகி ரண்ட மெல்லாம்
நாடி எழுவகைத் தோற்றத் துள்ளாய் நின்ற
நாடியது ஆராய்ந்து பார்த்தாரானால்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவதே”

எனப்பதினெண்சித்தர் சதகநாடி என்னும் நூல் புலப்படுத்துகின்றது.

இவ்வாறு வாத, பித்த, சிலேற்பனமும் எழுபத்தீராயிரம் நரம்புகளும் நாடியல்லவென்றும், எழுவகைத் தோற்றம் ஈறாக அண்டமெல்லாம் ஆராய்ந்து **நாடுவதே நாடி**யென்றும் தத்துவரீதியாக கூறப்பட்டிருப்பதைக் காணலாம். சைவ சித்தாந்த அடிப்படையில் நாடி பற்றிய விளக்கம் இதனை அடுத்து நாடித்தத்துவம் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய கருத்தையே திருவள்ளுவரும்

“நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்”

கூறுகின்றார்.

நோயினைப்பற்றிப் பூரண அறிவுடன் ஆராய்ந்து நோய் உண்டாவதற்குரிய காரணத்தை அறிந்து அதனைத் தீர்க்கும் வழிவகைகளைச் செய்வதெனக் கூறுகின்றார்.

மருத்துவனின் மதிநுட்பம் பற்றிக் கூறுகையில் நாடி என்பதின் பொருளையும் கீழ்க் கண்டவாறு சித்தர் கையேடு எனும் நூல் கூறுகிறது.

> "குண நாடி நோயறிந்து கொண்டு பிணியாளர்
> குண நாடி ஞாபகமுட் கொண்டு - நிணரா
> யத்து தணிய மடைவவிழ்ந்த மீயு
> மதியர் வயித்தியரா வர்"

இதனிலிருந்து பிணியாளர் குணமறிந்து நோயின் தன்மையை நாடி அறிந்து ஞாபக சக்தியுடன் உள்ளத்திலிருத்தி வைத்துக் கொண்டு அந் நோய் தணிதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்து நல்ல பயனைப் பெறக்கூடிய மதி நுட்பம் உடையவனே, மருத்துவன் என்பது இப் பாடலின் பொருள்.

மேற் குறிப்பிட்ட பாடல்களிலிருந்து தமனியில் துடிக்கின்ற நாடி (Pulse) மட்டும்தான் நாடியல்ல வென்பது தெளிவாகின்றது. பொது மக்கள் மத்தியில் சில மருத்துவர்கள் நாடி பார்ப்பதில் சிறந்தவர்கள் என மதிக்கப்படுகின்றனர். அவர்கள் தங்கள் ஆன்ம சக்தியைக் கொண்டும், மருத்துவப் புலமையைக் கொண்டும் அத்துடன் நாடித் துடிப்பையும் பார்த்து நோயை நிதானிக்கின்றனர். ஆனால் அவர்கள் நாடித் துடிப்பை மட்டும் கொண்டே சகலதையும் அறிந்து கொள்வதாகக் கருதுவது தவறாகும். ஆகையால் நாடி என்பது நோய்நாடல், அல்லது நோயை நாடி வருதல் என்பது ஏற்புடையதாகும். இதனைப் பு. மு வேணுகோபால் "இன்றைய நாளில் மனித உடலில் இயங்கும் குருதி நாடித் துடிப்பை நாடி என்று கூறுகின்றார்கள். ஆனால் சித்தர்கள் கூறிய நாடி இலக்கணம் முன் சொன்ன கூற்றுக்கு முரன்பட்டுள்ளது" என உறுதிப்படுத்துகின்றனர்.

இனி நாடி என்ற துடிப்புப் (Pulse) பற்றிக் கவனிப்போம். இதயம் சுருங்கி விரிதல் காரணமாக நாடிகளின் சுவர்கள் ஒழுங்காக

நீண்டு சுருங்குகின்றன. நாடிச் சுவரின் சுருக்க விரிவுகள் பெருநாடியில் ஆரம்பித்து சிறுநாடிகள் வரை செல்கின்றன. இதனையே நாடித்துடிப்பு என்கிறோம். எனவே நாடிகளில் செல்லும் குருதி குதித்தாற் போன்று துடிப்புடன் செல்கின்றது. இதனை நீரில் ஏற்படுகின்ற அலைகளுக்கு ஒப்பிடலாம். நாடிகளில் குருதி செல்லும் அழுத்தம் இதயத்துக்கு அண்மையில் கூடியும், இதயத்துக்கு அப்பால் தூரத்துக்குச் செல்லச் செல்ல வேகம் குறைந்து கொண்டே போகும். இவ் அழுத்தம் குருதி செல்லும் குருதிக் குழாயின் குறுக்களவைப் (விட்டம்) பொறுத்தும் மாறுதல் அடையும்.

இத்தகைய முறையில் குருதி ஓடிக் கொண்டிருக்கும் போது ஏற்படுகின்ற நாடி அலைகளை (Pulse Wave) உடம்பில் பல இடங்களில் காணக்கூடியதாக விருக்கும். அவ்வாறிருந்தும் மருத்துவரால் பரீட்சித்து எளிதில் அறியக் கூடிய இடங்களாக எட்டு இடங்களை நவீன மருத்துவம் கூறுகின்றது.

அவையாவன

1. Radial - மணிக்கட்டு
2. Brachial - மேல்க்கை
3. Carotid - கண்டம் (கழுத்து)
4. Femoral - தொடையிடுக்கு
5. Popliteal - முழங்காலுக்குப் பின்பக்கம்
6. Post - Tibial - கணுக்காலின் உட்பக்கம்
7. Dorsalis Pedis - பெருவிரல் (கால்)
8. Temporal - கன்னச்சுழி

இவை இவ்வாறு இருப்பினும் மணிக்கட்டு நாடியையே மருத்துவர்கள் பரீட்சித்து வருவது வழக்கமாகவுள்ளது. நாடித்துடிப்பை உடலில் எந்தெந்த இடங்களில் காணலாம் என்பதனைத் திருமூலர் கூறும் போது

> "தாது முறைகேள் தனித் தகுதிச் சந்தோடு
> ஒதற காமியம் உந்தி நெடு மார்பு
> காது நெடு மூக்கு கண்டங் கரம் புருவம்
> போதுறும் உச்சி புகழ் பத்தும் பார்த்திட"

எனக் குறிப்பிடுகின்றார்.

நாடியைப் பார்க்கும் இடங்களாக

1. குதிச் சந்து
2. காமியம் (மர்மஸ்தானம்)
3. உந்தி
4. மார்பு
5. காது
6. மூக்கு
7. கண்டம் (கழுத்து)
8. கரம்
9. புருவம்
10. உச்சி

ஆகிய பத்தும் தந்துள்ளார். எனினும் கரமே எளிதில் அறியக் கூடியதாக விருப்பதால் பெரும்பாலும் கரமே நாடிக்குரிய இடமாகக் கொள்ளப்படுகின்றது.

மேற் குறிப்பிட்ட பாடலில் முதலாவது அடியில் "தாது முறை கேள்" என்பது நாடியைத் தாது எனத் திருமூலா சுட்டியுள்ளதைக் காணலாம்.

நாடி பார்க்கும் இடங்களைப் பற்றிப் பிரமமுனி குறிப்பிடும் போது

"கூர்த்திடவே கன்னமது சுழியிற்தானும்
குறிப்பான கைகளிலும் மர்ம ஸ்தானந் தன்னில்
சார்ந்திடவே கணுக்காலினுட்புறத்தில்
சார்வாகப் பெருவிரற் கால் மேலதாக
சேர்ந்திடவே நாடி தனையுப யோகிக்கக்
தெளிவாக மாந்தருக்குச் செப்பலாச்சு
பேர்ந்திடவே சகலருங் கரதினாடி
பேசினார் பிரமமுனி பேசினாரே"

எனக் கூறுகின்றார்.

நாடி பார்க்கம் இடங்களாக

1. கன்னச் சுழி
2. கைகள்
3. மர்மஸ்தானம்
4. கணுக்காலின் உட்புறம்
5. பெருவிரலுக்கு மேல் (கால்)

ஆகிய இடங்களில் நாடியைப் பார்க்கலாமென்றும் சகலருக்கும் கரத்தில் பார்ப்பது இலகுவெனவும் பிரமமுனி குறிப்பிடுகிறார்.

மேலே கூறப்பட்ட பாடல்களிலிருந்து பொதுவாகக் கரத்தில் சகலரும் நாடி பார்ப்பது இலகு என்பதை அறியலாம்.

**நாடிபார்க்கும் முறை**

நாடிபார்க்கும் முறைபற்றி நோய்நாடல் நூல் குறிப்பிடுகையில்

பார்க்கவே கைபிடித்து நாடி தன்னைப்
பார்த்திடவே நெட்டையது வாங்கிப் பின்னுஞ்
சேர்க்கவே மணிகட்டு மேலதாகச்
சிறப்புடனே நாடிதன்னை விரலாற்காண
தீர்க்கவே யழுத்திப் பின் தளர்த்தியேதான்
திறமுடனே விரல்களையும் மாறிமாறி
ஆர்க்கவே நாடிதன்னைப் பார்ப்பாயானால்
அப்பனே நாடி நடை தெரியும் தானே"

நாடி பார்க்க ஆரம்பிக்கும் போது நோயாளி வைத்தியசாலைக்கு வந்தவுடன் பார்க்கக்கூடாது. அதே போல் குருதி அமுக்கத்தைப் பார்க்கும் போதும் இம் முறையே பின்பற்ற வேண்டும். ஏனெனில் நோயாளி நடந்து வைத்தியசாலைக்கு வந்திருப்பின் உடனே நாடி நடை அல்லது குருதி அமுக்கம் கூடிக்காணப்படலாம். ஆகையால் நோயாளியை ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் ஆறுதலாக இருக்கச் செய்து பின்னர் நாடியையோ குருதி அமுக்கத்தையோ பார்க்கலாம்.

மேற்குறிப்பிட்ட பாடலில் நாடிப் பரிசோதனையை ஆரம்பிக்கும் போது கையைப்பிடித்து உருவி நெட்டை வாங்கி மணிக்கட்டுக்கு ஓர் அங்குலம் மேற்பக்கமாகத் தள்ளி மருத்துவன்

தனது விரல்களால்ப் பிடித்து, அழுத்தியும், தளர்த்தியும் மூன்று விரல்களையும் மாறி மாறி பார்ப்போமானால் நாடி நடை தெரியும் எனக் கூறப்பட்டுள்ளது.

**நாடி நடை மூலம் முத்தோடங்களை அறிதல்**

இது பற்றித் பதினெண் சித்தர்கள் நாடி நூலில்

"கரிமுகனடியை வாழ்த்திக் கைதனில் நாடி பார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒரு விரலோடில் வாதமுயர் நடுவிரலிற் பித்தம்
திரு விரல் மூன்றி லோடில் சேத்தும நாடி தானே"

என அகத்தியர் குறிப்பிடுகின்றார்.

மேற் குறிப்பிட்ட முறைப்படி நாடி பார்க்கும் போது ஆள்காட்டி விரலாகிய முதல் விரலில் உணர்த்துவது வாதம் எனவும், நடு விரலில் உணர்த்துவது பித்தம் எனவும், மோதிர (பௌத்திர) விரலில் உணர்த்துவது கபம் எனவும் அறிந்து கொள்ள வேண்டும்.

இதே கருத்தை திருமூலரும்

"குறியாய் வலக் கரம் குவிந்த பெருவிரல்
வறியாயதன் கீழ் வைத்திடு மூவிரல்
பிரிவாய் மேலேறிப் பெலத்ததுவா தமாம்
அறிவாய் நடு விரலமர்ந்த பித்தமே"

எனவும்

"பித்தத்தின் கீழே புரண்டதைய மாம்
உற்றுற்றுப் பார்க்கவோர் நரம்பே யோடிடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளாம் போல் வழங்கும் நரம்பிதே"

எனவும் குறிப்பிடுகின்றார். இதனிலும் வலக்கரத்தில் பெருவிரலுக்குக் கீழ் மூன்று விரல்களை வைத்து முறைப்படி பார்க்கும் போது முதல் விரல் வாதத்தையும், நடு விரல் பித்தத்தையும், மற்றைய விரல் ஐயத்தையும் அறியும் என்கிறார்.

**நாடி பார்த்தலின் கால அளவு (மாத்திரை)**

இது பற்றித் திருமூலர்

"வழங்கிய வாதம் மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தம் தன்னிலவரைவாசி
அழகுங் கபந்தா னடங்கியே காலோடில்
பிழங்கிய சீவற்கு பிச கொன்று மில்லையே"

எனக் கூறுகின்றார்.

அதாவது வாதத்துக்கு ஒரு மாத்திரையும், பித்தத்துக்கு அரை மாத்திரையும், கபத்துக்கு கால் மாத்திரையும் எனக் கூறப்பட்டுள்ளதை அறியலாம்.

இதே கருத்தையே கண்ணுச் சாமியமும்

"மெய்யளவு வாத மொன்று
மேல் பித்த மோரரையாம்
ஐயங்கா லென்றே அறி"

கூறுகின்றது.

ஒரு மாத்திரையென்பது ஒரு கைநொடி அல்லது கண் இமைக்கும் கால அளவு எனச் சிலரது அபிப்பிராயமாக விருப்பினும், சித்த மருத்துவ நூல்களை ஆராயும் கால் மாத்திரையென்றால் நாடியின் துடிப்பு ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் உயரம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவு எதுவோ அதுவே நாடி நடையின் மாத்திரையளவைக் குறிக்குமென டாக்டர் ம. சண்முகவேலு கூறுகின்றார்.

**ஆடவர், மகளிர்க்கு நாடி பார்க்கும் முறை**

இது பற்றித் பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் கூறுகையில்

"தானெனவுலகத்துள்ளே தங்கிய நாடி பார்க்கில்
வானெனுமின்னே கேளாய் வரும் புலன் சொல்லக் கேளு
நானெனும் புருடற்கெல்லா நாடிதான் வலக்கையாகும்
தேனெனு மடவார்க் கெல்லாந் திடம் பெற விடக்கை சித்தே"

எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட பாடலிலுள்ள கீழ் இரு அடிகளையும் எடுத்து வைத்தியசாகர சங்கிரகம் கூறுவதாகச் சித்த மருத்துவ நோய்நாடல் நோய் முதனாடல் திரட்டு (முதல் பாகம்) என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இது பற்றிக் கண்ணுச்சாமியம் குறிப்பிடுகையில்

"செப்பவாண் மக்களுக்குச்
சேர வலக்கையாகும்
ஒப்ப விரிவையர்க் கோதவிடம்"

இவ்வாறு கூறப்படுகின்றது.

இது பற்றிப் பரிபூரண நாடி குறிப்பிடுகையில்

1. "கேளப்பா புருடருக்கு வலது கையைக்
கிருபையுடன்கான் பிடித்து நெட்டை வாங்கி
........................................................................................"

2. "பார்க்கவே பெண்டுகளுக்கிடது பக்கம்"

எனக் கூறுகிறது.

இவற்றைவிட குணவாகட நாடி என்ற நூலில்

"மருவிடு நோயினாடி மதித்திடில்
வலக்கை மைந்தர்க்கு
அரிவையர்க் கிடக்கை தன்னில்
அழுத்தியே சுட்டிக் காட்டும்"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய மேற்கோள்கள் அனைத்தையும் பார்க்கம் போது ஆண்களுக்கு வலக்கையிலும், பெண்களுக்கு இடக்கையிலும் நாடி பார்க்க வேண்டுமென்பதனை அறிந்து கொள்ளலாம்.

ஆண்களுக்கு வலது கரமும், பெண்களுக்கு இடது கரமும் நாடி பார்க்க வேண்டுமெனக் கூறிய காரணம் என்னவெனின் நாடிக் கூர்மமானது பெண்களுக்கு மேல் நோக்கியும் ஆண்களுக்கு கீழ் நோக்கியும் இருப்பதினாலேயே வென்று டாக்டர் ம. சண்முகவேலு கூறுகின்றார்.


இவற்றை நவீன மருத்துவத்துடன் உப்பிட்டால் இது பிரிமன்தகட்டினையே Diaphragm குறிக்கின்றது எனத் தெரிகின்றது. பிரிமன்தகடு பெண்களுக்கு மேல் நோக்கியும், ஆண்களுக்கு கீழ் நோக்கியும் இருப்பதனை அறியலாம். இதனால் பெண்களுக்கு மேல் மூச்சும் (Thoracic Respiration) ஆண்களுக்கு கீழ்மூச்சும் (Abdominal Respiration) கூடுதலாகத் தெரியக் கூடியதாயிருப்பதைக் காணலாம். இவற்றுடன் நாடி நடையையும் வலது, இடதையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது இடகலை, பிங்கலையாகிய தச நாடிகளின் பங்கும் இவ்விடத்தில் பங்குபற்றி ஏதும் மாற்றத்தை உண்டாக்குகின்றதோ என எண்ணத்தோன்றுகின்றது. இவற்றை மேலும் ஆராய்ந்து தெளிவு பெறுவது அவசியமானதாகும்.

**நாடி நடைகளின் நடை (Arterial Pulse Wave)**


இங்கு நவீன முறைக் கருவியால் குருதி நாடியின் துடிப்பைக் குறியாக வரையப்பட்டு சித்த மருத்துவ கோட்பாட்டில் கூறிய வாத, பித்த, கப நாடிகளை ஓர் அளவு முடிந்த வரை ஒப்பீடு செய்து தரப்பட்டுள்ளது.

நவீன முறையில் கூறப்படும் நாடி நடை (Normal Pulse Wave)

**சாதாரண நாடி நடை அலைகள்**




**ஓர் அலையின் அமைப்பு**





a - Primary Wave
c - Pre - Dicrotic Wave
d - Dicrotic Wave
D - Dicrotic Notch
e - Post - Dicrotic Wave

வாத, பித்த, கப நாடிகளின் சலனக்குறிப்பு




மாத்திரையைக் குறிக்கும் படம்




வ வ$_1$ வ$_2$ என்ற கோடு வாத நாடியின் சலனத்தைக் காட்டுகின்றது. இவ் வாத எழுச்சியை இதயக் கமலத்தின் குவிதலாகிய ஆக்கத் தொழிலை உணர்த்துகின்றது.

பி$_1$ பி$_2$ க என்ற கோடு வாதத்தை அடுத்து நடக்கும் பித்த நாடியின் சலனம் குவிந்த இருதயக் கமலத்தை முன்னிருந்த நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தல் செய்கையைப் புரிந்து விரியச் செய்கிறது. குவிதலிலிருந்து விரிதல் தொழிலாகிய காத்தல் தொழிலைச் செயலாற்றுகிறது. பித்த நாடி விரிதல் தொழிலைச் செய்யாவிடில் இருதயம் குவிந்தவாறேயிருக்கும். க. க$_1$ வ என்ற கோடு பித்தத்தை அடுத்துக் கப சலனத்தைக் காட்டும் இருதயக் குவிதலிலும் விரிதலிலும் ஏற்பட்ட அதிர்ச்சியை மறைத்து ஓய்வு செய்கையைப் புரிந்து பாதுகாக்கின்றது. நோயுற்ற போது அழித்தல் செய்கையைச் செய்கிறது.

எனவே வாதநாடி வாத எழுச்சியைத் தோற்றுவிப்பதற்கு உயர எழும்பி கீழே தாவுவது போன்ற நடையினையுடைய பிராணிகளின் நடையை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். பித்தநாடி வாத நாடியின் எழுச்சிச் சலனத்திலிருந்து மீட்சியடைவதால் ஊருவது போன்ற நடையை உடைய பிராணிகளின் நடைக்கு ஒப்பிட்டுள்ளனர்.

கபநாடி வாத எழுச்சியையும், பித்த எழுச்சியையும், பித்த மீட்சியையும் மறைத்து ஓய்வு கொடுப்பதாலும் அசைந்து அசைந்து சலனமுறுவதாலும் அசைந்து நடக்கின்ற பறவையின் நடைக்கு ஒப்பிட்டனர்.

மேற் சொன்னவைகள் அனுபவத்திலும் அறிவியல் ரீதியாகவும் பொருத்தமாக விருக்கிறது என பேராசிரியர் பு. மு வேணுகோபால் குறிப்பிடுகின்றார்.

**பிராணிகளின் நடைக்கு நாடி நடையை ஒப்பிடுதல்**

நாடி நடைபற்றித் தேரையர்

"அன்ன மயில் குயின்மா வாண்டலையூ ரோதியுள்
யன்ன மயில் குயின்மா வாண்டலையா - தன்ன
மயில்
வித்தகரை யாவாயுள் வேதயரா மேனையர் செய்
வித்தகரை யாவரிது மெய்"

எனக் கூறுகின்றார்.

வாத நாடியின் நடை அன்னம், மயில், குயில் என்னும் இவைகளின் நடைக்கும், பித்த நாடியின் நடை வண்டு சுழல்வதற்க்கும், கோழி நடப்பதற்க்கும், எறும் ஊர்வதற்கும்

சேத்தும நாடியின் நடை ஓணான் ஓட்டத்திற்க்கும், கருடன் வட்டமிடுவதற்க்கும் ஈ பறப்பதற்கும் ஒப்பாகுமாவதால், இவ் விபரங்களை எவ்வாறு அறிவதென்று மயங்காமல் நுண்ணறிவினால்

ஆராய்ந்து தெளிந்தவர்களே வைத்தியர்களாவார்கள். மற்றையவர்கள் பெரு வெள்ளத்தின் முன் கட்டிய மண் கரைக்கு ஒப்பானவாகள் எனவும் கூறுகின்றனர்.

**மூன்று நாடிகளும் நடக்கும் காலம்**

“காலையில் வாதநாடி கடிகையிற் பத்தாம்
பாலையாம் பித்தநாடி பகருச்சி பத்தாகும்
மாலையாம் சேத்துமநாடி மதிப்புடன் பத்தாகும்
வாலையாம் மனோன் மணிக்கு வகுத்ததுமே
தொகுத்ததாமே”

காலை ஆறுமணி முதல் பத்து மணி வரையில் வாதத்துக்கு அரசு காலமாதலால் வாத மிகுதியையும், காலை பத்து மணி முதல் பகல் இரண்டு மணி வரையில் பித்த அரசு காலமாதயால் பித்த மிகுதியையும், பகல் இரண்டு மணி முதல் மாலை ஆறுமணி வரை கபத்துக்கு அரசு காலமாதயால் கப மிகுதியையும் குறிக்கும். அதே போல் இரவில் முதல் பத்துக் கடிகைவாதமும், அதற்க்குப் பின் பத்துக் கடிகைபித்தமும், அதற்க்குப் பின் சூரியோதையம் வரையில் கபமும் நடக்கும். இவற்றிலிருந்து ஒரு தாதுவின் அரசு காலம் நான்கு மணித்தியாலம் (பத்துக் கடிகை) எனக் கணிக்கலாம். (கடிகை = நாழிகை = 24 நிமிடங்கள்)

இதே கருத்தை தேரையரும் -

“வைகறையை நண்பகலை மாலையைமே லேலவுயிர்
வைகறையை பித்தமுயிர் மாறி முன்போர்
வைகறையை
மாட முறை கொல் வழிமூ நரம்பினடை
மாட முறை கொல் சொலிய மன்”

எனக் கூறுகின்றார்.

இப் பாடலின் பொருள் முன்னைய பாடலைப் போலவே ஒரு நாளை பத்து நாழிகை கொண்ட ஆறு பிரிவுகளாக பிரித்து

தோடங்களையும் வகுத்து அதற்கேற்ப நாடி நடைகளையும் தந்துள்ளமையை காணக் கூடியதாகவுள்ளது.

இவற்றை விட எந்தெந்த மாதங்களில் எந்தெந்த நேரங்களில் நாடியைத் தெளிவாகக் காணலாம் என்பதையும் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

**பூத நாடி**

இதனைப் பஞ்சநாடி அல்லது பஞ்சபூத நாடி எனவும் சில நூல்கள் கூறுகின்றன.

இது பற்றி இரத்தினச் சுருக்கம் என்னும் நூல் பின்வருமாறு

“போகுமப்பா வாதமென்ற நாடி யொன்றாய்
புகழாக தனித்து நின்றால் பூதநாடி
ஆகுமப்பா அரணை வால் போல் துடித்துக் காணும்”

எனக் கூறியிருப்பதுடன், இதே கருத்தையே பரிபூரண நாடி என்ற நூலில் கீழ் கண்டவாறு

“சாற்றுவேன் பெருவிரலிற் பூத நாடி
தோற்றுகின்ற சிறு விரல் தான் பூத நாடி”

எனக் குறிப்பிட்டிருப்பதையும் காணலாம்.

மேற் குறிப்பிட்டமேற்கோள்களின் படி வாத, பித்த, கப நாடிகளுக்கு முன்னும், பின்னுமாக உணரப்படும் நாடிகளுக்குப் பூத நாடி எனப் பெயர். அவ்வாறாக உணரப்பெற்றால் பூத நாடி பெரு விரலிளேனும், சிறு விரலிளேனும் அல்லது இரண்டு விரல்களிலும் உணரப்படுபவைகளை பூத நாடி எனக் கூறலாம்.

மேலும் பூத நாடி பற்றி வைத்திய சாகர சங்கிரகம் என்னும் நூல்

"தூண்டிடவே பெருவிரல்தான் பூத நாடி
தொந்தமாம் ஆள் தூண்டி வாத மென்க
அண்டிடவே நடுவிரல்தான் பித்த நாடி
அணிவிரல் பௌத்திரந்தான் சேத்தும நாடி
பூண்டிடவே சிறுவிரல்தான் பூதநாடி
பூட்டினார் குருநாடியைந்து கோர்வை
நீண்டிடவே யிப்பின்னல் யார்தான் காண்பார்
நிறைந்த பரிபூரணத்தோர் காண் பார்தாமே"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் பெருவிரலிலும், சிறுவிரலிலும் பூத நாடி என்பதைக் காணலாம்.

மேலும் இது பற்றி வால்மீகர் நூல் குறிப்பிடும் போது

"ஐவிரலைந்து நாடியது
செய்யும் வகையைக் கேளீர்
மெய் விர லொன்று வாத மொழி
விர லொன்று பித்தம்
நெய் நடு விரலிலே சிலேத்துமம்
நேர் விரல் பூத நாடி
மைசிறு விரலே சொன்ன பூத நாடி
வகுத்தனர் வால் மீகர்தானே"

என முன்னர் கூறப்பட்ட கருத்தினை வலியுறுத்துவதாகவுள்ளது.

இவ்வாறு மூன்று உயிர்த்தாது நாடிகளும் பிரத்தியேகமாக பூத நாடியும் உள்ளவர்களுக்குச் சுகச்சன்னி மார்க்கமாகும். அவன் சாகான், காய சித்தி அடைவான் எனப் புகழ்ந்து பேசுவார்கள். ஆகவே யோகவல்லுனர்கள் காய சித்தி அடைந்ததென்ற அறி குறியைப் பூத நாடி புலப்பத்தும்.

பூத நாடி நடக்கும்போது காயசித்தன் சமாதி நிலையை அடைவான். பூதநாடி நடக்கின்ற காலத்தில் சித்தர்கள் சமாதி

நிலைக்கு ஏற்ற சமய மென்ற பேருறக்க நிலையைச் சாதிக்க முயல்வார்கள் எனப் பேராசிரியர் பு. மு வேணுகோபால் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

**குருநாடி**

சிலர் வாத நாடியையே குருநாடி என்பர். சிலர் எல்லா நாடிகள் தோறும் ஊடுருவிப் பாய்ந்து அவைகளுக்கு இயக்கத் தன்மையைக் கொடுப்பதைக் குருநாடி என்பர். மேலும் குருநாடி பற்றிக் அடுத்துவரும் நாடித்தத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்பட்டுள்ளது.

**மரணநாடி அல்லது அசாத்தியநாடி**

மரணக் குறிகளையும் அசாத்தியநாடி பற்றியும் அகத்தியர் குறிப்பிடுகையில் -

"சேத்துமத்தில் சேத்துமந் திமிர்தமாயறிவுஞ்
சொன்னோம்
ஆத்மா நல்லதல்ல அழிவது மெய் கண்டாயே
கூற்றுவன் வந்திடுவ தாருங் குறுவழி வட்டங்
கொள்ளும்
சாத்திரமறிந்து சொன்னோம் யாத்திரை நாடிதானே"

எனக் கூறுகின்றார்.

ஐயநாடி தனித்து இரு மடங்கு ஓங்கி நின்று வாதமும் பித்தமும் அடங்கிவிட்டால் மரணம் நிச்சயமாம்.

இது பற்றித் திருமூலர்

"பித்தமடங்கி னாற்பேசாத போய்விடு
எத்திய வையம் எழுந்திடிற் கிட்டாதே
எத்திய வாத மெழும் பின் மருந்து செய்
எத்திய மூன்றினியல்பை யறிந்திடே"

எனக் கூறுகிறார்.

பித்தம் அடங்கினாலும், ஐய நாடி மட்டும் தனித்து மீறி நடந்தாலும் மருத்துவம் செய்வதில் பலன் இல்லை. வாதம் எழும்பின் மருந்து கொடுக்கலாம் என்கிறார்.

மேலும் கண்ணுச் சாமியம் என்ற நூலில்

"கண்ட பித்தந் தானடங்கக் காட்டு மருந்தினால்
கொண்ட பயினில்லை குற்றமோ - டண்டு கபம்
ஓடப் பரிகார மோதுவதில்லைத் தெரிய
தேடவாத மோடிற் செய்"

என்றும் கூறப்பட்டுள்ளது.

பித்தம் அடங்கினால் மருந்தினால் எந்தப் பயனும் இல்லை. அதேபோல் கபம் ஓங்கி ஓடினால் எந்த மருத்துவமும் சொல்வதற்கில்லை. வாதம் ஓடினால் மருத்துவம் செய்யலாம் என்பது இப் பாடலின் பொருள்.

சேத்துமமான கோழையே இறுதியில் இறப்பை உண்டாக்குகின்ற தென்றும் அதனைச் "சீக்கை" என்று திருமூலர் குறிக்கின்றார்.

"சீக்கை விளைந்தது செய்வினை முட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டு போய்க்
காக்கை கும்பவி காட்டிய வாறே"

கூறுகின்றார்.

சித்த மருத்துவக் கோட்பாட்டுக்கமைய உயிர்த்தாதுவின் காலம் பற்றிக் டாக்டர் பு. மு. வேணுகோபால் குறிப்பிடுகையில் ஐயமானது மனிதனின் வயோதிபக் காலத்தில் அழிவைக் கொடுக்கின்றது என்கிறார். இக் கூற்றை மேலே கூறப்பட்ட திருமூலரின் பாடல் உறுதிசெய்கிறது.

## 2.18. சித்தர்கள் கூறும் நாடி பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள்

இன்றைய நாளில் நாடி என்று கூறும்போது மனித உடலில் இயங்குகின்ற குருதிநாடித் துடிப்பையே (Pulse) கருதக்கூடியதாகவுள்ளது. சித்தர்கள் கூறும் நாடி என்பதில் சில தத்துவக்கருத்துக்கள் பொதிந்துள்ளதை இங்கு பார்ப்போம்.

உயிரினங்களுக்கெல்லாம் அறிகுறியாக அவற்றின் சலனம் இன்றியமையாததாக இருக்கின்றது. உயிரினங்களுக்கு சலனம் இல்லையேல் உடலில் உயிர் உறங்கிக் கிடக்கின்றது என்பது விளக்கமாகும். எப்பொருளிலும் உயிர் உண்டு ஆனால் அது இருக்கும் நிலையின் தன்மை வேறுபட்டது.

பொதுவாக உயிர் ஐந்து நிலையில் இயங்குவதாகக் கருதப்படுகின்றது.

1. சாக்கிரம் - நனவுநிலை
2. கனவு - மயக்கநிலை
3. உறக்கம் - ஒடுக்கம் - புலன்களில் செயலற்று உறங்குதல்
4. துரியம் - யோகநிலையில் உயிர் உறங்குதல்
5. துரியாதீதம் - உடல் உயிர்மயமாதல்

மேற்குறிப்பிட்ட ஐந்து நிலையைத் திருமூலர் -

"ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னாங்கிற் கண்டங்கனா வென்பர்
பொய்க் கண்டிலாத புருடனிதயஞ் சுழுமுனை
மெய்கண்ட வன்னூதி யாகுந் துரியமே"

பொதுவாகச் சாக்கிரம், கனவுநிலையில் உயிர் சலனமுறும்பொழுது உடல் வாழ்கின்றது என்கிறோம். உறக்கம் அல்லது ஒடுக்கநிலையில் மரணம் அல்லது உடலில் இருந்து உயிர் ஏகிவிட்டது என்கிறோம். இது ஒரு சாதாரண மனிதனின் நடக்கும் செயலாகும்.

பண்டைய காலத்தில் சித்தர்கள் தமது உடலில் இருக்கும்படியான உயிரை உறக்கஅவத்தை அடையவிடாமல் துரியம், துரியாதீதம் என்ற அவத்தைகளுக்கு மேலும் உயிரை உட்படுத்தி உடலை உயிர் மயமாக்கிச் சிவத்தை அடையச்செய்தார்கள். அந்நிலையில்தான் உருவப்பொருளாகிய சடம் உயிராக மாறுகின்றது. ஆகையால் துரியம், துரியாதீதம் ஆகிய நிலைகளில் உயிர் சலனமடையும்போது உடல் உயிர்மயமாகி அருவமாகிறது எனலாம். இதனை முத்தி என்றும் கூறலாம்.

ஆகவே உயிரினங்களின் உடலில் உயிர் சாக்கிரம், கனவு, உறக்கம் என்ற அவத்தைகளோடு இயங்குகிறதா? அல்லது உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டதா? என்று நாடி பார்ப்பதுதான் "**நாடி**"எனப்பட்டது. சுருங்கக்கூறின் உயிரின் அல்லது ஆன்மாவின் (ஜீவாத்மா) சலனம்தான் நாடி எனப்பட்டது.


இவ்வாறு சலனத்தோடு இயங்கும் உயிரானது தொண்ணூற்றாறு தத்துவங்களுடன் ஒழுங்காக இயங்கிவருகையில் (சாக்கிரம் கனவுநிலையில்) தொண்ணூற்றாறு தத்துவங்கள் ஏதும் மாறுபாடடையின் உயிரானது சாக்கிரம், கனவுநிலையை விட்டு ஒடுங்க ஆரம்பிக்கும் நிலையே "**நோய்**" எனப்படும். ஆகவே ஆன்மா என்ன நிலையில் சுகதேகிக்கும் நோயாளிக்கும் இருக்கின்றதென்பதை ஆராய்வதுதான் நாடி என மருத்துவநோக்கில் கூறலாம்.

உறக்கநிலையினை உயிர் அடைந்துவிட்டால் உயிர் அழிந்துவிடும் அந்தநிலையை அடையவொட்டாமல் யோகநெறி மூலம் துரியம், துரியாதீதம் நிலைகளில் உயிரைச் சலனப்படுத்தி உடலை உயிர்மயமாக்குவதே "**சித்தர்கள்நெறி**" ஆகும். உடல் என்பது கண்ணுக்குப் புலனாகும் வடிவம் (**பொருள்**) இதனை **Matter** எனும் ஆங்கில அறிவியற் சொல்லால் அழைக்கலாம். உயிர் என்பது கண்ணுக்குப் புலனாகாத **சக்தி**. இதனை **Energy** என்று அறிவியற் சொல்லால் குறிக்கலாம்.

சாக்கிரம், கனவுநிலையில் உயிர் இயங்கும்போது Matter உருவாகின்றது. உறக்கநிலையில் உடல் அழிந்து உயிர் ஒடுங்குகின்றது. துரியம், துரியாதீதம் நிலையில் உடல் (Matter) அருவமாகி உயிருடன் (Energy) இணைந்துவிடுகின்றது. உடலை உயிர் மயமாக்குவதே சித்தர் நெறியாகும்.

சாதாரணமாக யோகநெறி அறியாதவர்களுக்கு உயிரின் சலனம் உறக்கநிலையோடு முடிவடைகின்றது. யோகிகற்கு துரியம், துரியாதீதம் நிலைகளை அடையமுடியும். துரியநிலை சென்றடைந்தவர்களுக்கு நோய் போன்ற துன்பங்கள் வரா. துரியாதீத நிலையில் உடல் உயிர் மயமாகின்றது.

மேற்கூறிய காரணங்களால் உயிர் மயமான உடலை அக்கினியில் எரிக்காமல் சமாதியில் வைக்கின்றார்கள் எனக்கருதலாம். அவர்களின் உயிர் அங்கு சலனமடைந்த வண்ணம் அருள்பாலித்துக்கொண்டு ஆலயமாக விளங்குகின்றதே இதன் தத்துவக்கருத்தாகும்.



# உசாத் துணை நூல்கள்

01. Dr. பொன்.இராமநாதன், சித்தமருத்துவத்துறையில் கலாநிதிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்களகத்துக்கு உயர் பட்டப்படிப்புகள் பீடத்தூடாக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு - 2004

02. Dr. இரா.மாணிக்கவாசகம், நம்நாட்டுச் சித்தர்கள், அன்னை அபிராமி அருள் வெளியீடு, இரண்டாம் பதிப்பு - 1982.

03. மே.வீ.வேணுகோபாலபிள்ளை, (ப.ஆ.) சித்தர்ஞானக் கோவை.

04. மதுரைத் தமிழ்ச்சங்க பேரகராதி, இ.மா.கோபாலகிருஷ்ணகோன் பதிப்பு பாகம் 1.

05. வைத்தியர் ஐ.பொன்னையாபிள்ளை, சுதேச வைத்திய ஔடதத் திரட்டு - 1932.

06. சாமி சிதம்பரநார், சித்தர் கண்டவிஞ்ஞானமும் தத்துவமும், சென்னை - 1963.

07. பேராசிரியை சே.பிரேமா, இந்திய மருத்துவ முறைகளில் சித்தமருத்துவத்தின் பங்கு, ஆய்வுக்கட்டுரை, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்களகம் - 2000.

08. Dr. க.வெங்கடேசன், தமிழ் நூற்களில் மருத்துவக்கலை ஓர் ஆய்வு, ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்களகம் - 1981.

09. Dr. பி.கேசவப்பிள்ளை, சித்தர் காப்பியம் - 1982.

10. Dr. க.சு.உத்தமராயன், தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்தமருத்துவ வரலாறும் - 1978.

11. அபிதான சிந்தாமணி - 1981.

12. சி.பாலசுப்பிரமணியம், தமிழ் இலக்கிய வரலாறு, 33ஆம் பதிப்பு - 2001

13. செல்வி. இரா.நளினிகாந்தம், சித்தர்பாடலில் மருத்துவ அறிவியல், முனைவர்பட்டத்திற்கான ஆய்வேடு, தமிழ் பல்கலைக்களகம், தஞ்சாவூர் - 1999.

14. திருமந்திரம், பத்தாம் திருமுறை

15. S.P. இராமச்சந்திரன், சித்தர்கள் வரலாறு - 1999.

16. கி.லக்ஷ்மணன், இந்திய தத்துவஞானம், 6ஆம் பதிப்பு - 2000.

17. ஆத்மஜோதி நா.முத்தையா, ஈழத்துச் சித்தர்கள்

18. Dr.A.Shanmugavelan, Sddhar's Science of Longevity and Kalpa Medicine of india, Sccond edition - 1992.

19. K.A.Neelakanda Sasthiri, The Culture and History of Tamils - 1964.

20. M.Srinivasa Iyengar, Tamil studies

21. N.Kandasamypillai, History of Siddha medicine



ஸ்ரீ சாயி பிறின்டேர்ஸ் - கொக்குவில். T.P: 021 4590244.
(நந்தாவில் அம்மன் கோவில் முன்பாக)